# ஜகத்குருவின்
# சொல்லமுதம்



சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள்

# ஜகத்குருவின்
# சொல்லமுதம்

சிருங்கேரி ஜகத்குரு
ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளின் அருளியது

---

*ஜகத்குருவின் பதில்கள், தெளிவுரைகள்*
*மற்றும் கட்டுரைகள்*

---

Centre for Brahmavidya
Chennai 600032

**Book Title:**
*Jagadguruvin Sollamudam*

**Published by:**
Centre for Brahmavidya
SVK Towers, 8th Floor
A25, Industrial Estate, Guindy
Chennai 600032
**Email**: contact@centreforbrahmavidya.org
**Website**: www.centreforbrahmavidya.org

© **Centre for Brahmavidya**
All rights reserved

**Ebook** - First Edition : 2020

For free distribution only

# ஸமர்ப்பணம்



**"உந்தன் தாளில் மனதை நிலைக்கச் செய்வாய்"**

சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தை 35வது பீடாதிபதியாக அலங்கரித்த
ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளின் பாதகமலங்களில்
இப்புத்தகம் பக்தியுடன் ஸமர்ப்பிக்கப்படுகிறது

# வந்தனம்



சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தை 36வது பீடாதிபதியாகத் தற்போது
அலங்கரித்துவரும் ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகளுக்கும்,
ஜகத்குரு ஸ்ரீ விதுசேகரபாரதீ ஸ்வாமிகளுக்கும் எமது வந்தனங்கள்

# சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீஅபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள்

நாள்: 1935ம் ஆண்டு டிசம்பர் 14ம் தேதி. இடம்: சிருங்கேரி - தென்னிந்தியாவிலுள்ள ஒரு சிறு கிராமம். இரவு நேரம். சில்லெனப் பனி பொழிந்து கொண்டிருக்கிறது. முழு கிராமமும் அயர்ந்து உறங்கிக் கொண்டிருக்கிறது. அதே சமயம் இளந்துறவியொருவர் துங்கைநதிக் கரையிலுள்ள தமது ஆசிரமத்தில் சற்றும் சலனமில்லாமல் தியானத்தில் ஆழ்ந்துள்ளார். அவர் சுவாசித்துக் கொண்டிருக்கிறாரா என்பது கூடத் தெரியவில்லை. அவரது ஆழ்ந்த மௌனம் ஒரு விவரிக்கவொண்ணா அமைதியைப் பரப்பிக் கொண்டிருக்கிறது. அவருடைய ரூபம் மிகுந்த தேஜஸ்ஸுடன் ஒளிர்ந்து கொண்டிருக்கிறது. பல மணிநேரங்கள் கடந்து விட்டதையும் உணராது, அந்த யோகி எல்லையற்ற பரம் பொருளில் ஆழ்ந்துள்ளார். சாஸ்திரங்கள் இந்த நிலையை யோகத்தின் சிகரமான நிர்விகல்ப ஸமாதி என்று பறை சாற்றுகின்றன. சில நாட்களாக அவரது நிர்விகல்ப ஸமாதி நிலையின் தாக்கம் எந்த அளவிற்குச் சென்றுவிட்டது என்றால் வெளியுலகத்தைப் பற்றிய கவனம் கூடத் தற்போது அவருக்கு இல்லை. தான் உணவு உட்கொண்டோமா இல்லையா என்பது கூட அவருக்குத் தெரிவதில்லை. அவரது ஆஹ்னிகத்தை எப்பொழுதும் போல முழு ஈடுபாட்டுடன் இன்று மாலை அவரால் செய்ய இயலவில்லை. அவரது மனம் அந்த அளவிற்கு ஸமாதி நிலையின் பேரின்பத்தில் மூழ்கி விட்டிருக்கிறது. உணவு உட்கொள்வதில் மனம் செல்லாததால் இன்று இரவு உபவாசம் தான். தற்போது தமது அறைக்குச் சென்றுள்ள அவர் மீண்டும் நிர்விகல்ப ஸமாதியில் ஆழ்ந்துவிட்டார். இரவு ஏறக்குறைய முடிந்துவிட்டது. ஆனால், அந்த யோகி ஸமாதியிலிருந்து எழுந்திருப்பார் என்பதற்கு எந்த அறிகுறியும் தெரியவில்லை.

வலுக்கட்டாயமாக எழுப்பப்பட்டாலொழிய, இனி இந்த யோகி தனது உடல் இறக்கும் வரை பரம்பொருளில் ஒன்றியவாறு நிர்விகல்ப ஸமாதி நிலையிலேயே தான் இருப்பார் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. யோகியின் நிலை இவ்வாறிருக்கும் அதே சமயத்தில் இறைவனின் விருப்பம் வேறாக இருக்கிறது என்று தெரிகிறது. இரவு முடிவதற்குள் ஒரு தெய்வீக உந்துதலால் அந்த யோகியினுடைய குருநாதர் அவரது அறைக்குள் வந்து அவரை ஸமாதியிலிருந்து எழுப்பும் நோக்கத்தில் அவருக்கு அருகில் பிரணவ மந்திரத்தைப் பலமாக உச்சரிக்கிறார். மெதுவாக யோகியினுடைய நெஞ்சு விரிந்து மூச்சுக் காற்றைக் சற்றே உள்ளிழுக்கிறது. கண்கள் சிறிது திறக்கின்றன. குருவின் கட்டளைக்கிணங்க தனது மனம்

மீண்டும் ஸமாதியில் ஆழ்ந்துவிடாதபடி அவ்விளம் யோகி அதைத் தடுத்து நிறுத்துகிறார்.

மறுநாள் குருநாதர் அந்த யோகியிடம், "உங்களது மனம் மேலும் மேலும் நிர்விகல்ப ஸமாதியிலேயே ஆழ்ந்து கொண்டிருப்பதை நான் அறிவேன். உங்களுடைய ஸமாதியின் நிலை மிக ஆழமாகப் போய்விட்டது என்பதை நேற்றிரவு இறைவன் எனக்குத் தெளிவாகத் தெரியப்படுத்தினான். வலுக் கட்டாயமாக எழுப்பப்பட்டாலொழிய, இவ்வுடல் மறையும் வரை நீங்கள் ஸமாதியில் தான் இருப்பீர்கள். பரம்பொருளில் நீங்கள் ஒன்றி விட்டதால் 'ஸமாதி தேவை' என்ற நிலைக்கு நீங்கள் அப்பாற்பட்டுப் போய்விட்டீர்கள். உங்களது ஸமாதியையும் மனம் அந்தர்முகமாகச் செல்வதையும் முயற்சி செய்து தடுத்துக் கொள்ளுங்கள்" என்று உபதேசித்தார்.

யோகவாஸிஷ்டத்தில் ஆறாவது மற்றும் ஏழாவது ஞான பூமிகைகள் பின்வருமாறு விளக்கப்படுகின்றன. "ஆறாவதான (பதார்த்தபாவனா எனப்படும் பொருட்களற்ற) நிலையில், அருகிலிருக்கும் மற்றவர்கள் எழுப்பினால்தான் ஒருவன் நிர்விகல்ப ஸமாதியிலிருந்து எழுகிறான். அத்தகைய யோகி 'ப்ரஹ்மவித்வரீயான்' (ப்ரஹ்மத்தை அறிந்தவர்களில் மிக உயர்ந்தவன்) என அழைக்கப்படுகிறான்... ஏழாவது நிலையான துரீய நிலையை அடைந்த யோகி தானாகவோ, அல்லது மற்றவர்களின் முயற்சிகளினாலேயோ ஒரு பொழுதும் எழுவது இல்லை. இத்தகைய யோகி 'ப்ரஹ்மவித்வரிஷ்ட:' (ப்ரஹ்மத்தை அறிந்தவர்களில் தலை சிறந்தவன்) எனப்படுகிறான்."

இவ்வாறு யோகத்தினுடைய உத்தம நிலையாம் நிர்விகல்ப சமாதியில் பரம்பொருளில் நிலைபெற்றிருந்த இந்த மாபெரும் யோகி வேறு யாருமில்லை. சிருங்கேரி சாரதா பீடத்தின் 35வது ஜகத்குரு சங்கராச்சார்யாள் ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளே அவர். அவருடைய குருநாதர் வைராக்கிய சக்ரவர்த்தியாகவும், தலைசிறந்த ஜீவன்முக்தராகவும் விளங்கிய ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் ஆவார். ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் 1917ம் ஆண்டு நவம்பர் மாதம் 13ம் தேதி பெங்களூரு நகரத்தில் பிறந்தார். அவருடைய உபநயனம் 1930ம் ஆண்டு மே மாதம் 4ம் தேதியன்று நடைபெற்றது. அவர் 1931ம் ஆண்டு மே மாதம் 22ம் தேதியன்று இவ்வுலக வாழ்வைத் துறந்து ஸன்யாசம் பெற்றுக் கொண்டார். ஸன்யாசம் பெற்றுக்கொண்ட நாள் முதலாகவே குரு மற்றும் இறைவனுடைய நேரடி வழிகாட்டுதலுடன் அவர் தீவிரமான ஆன்மிகப் பயிற்சிகளில் ஈடுபட்டு வந்தார். அவை 1935ம் ஆண்டு டிசம்பர் 12ம் தேதி ஆத்ம ஞானத்திலும் ஜீவன் முக்தியிலும் முடிவுற்றன. ஜகத்குருநாதர்

*ஸ்ரீ சாரதா பீடத்தின் பீடாதிபதியாக 35 ஆண்டுகள் (1954-1989) அலங்கரித்து வந்தார். இந்தக் காலகட்டத்தில் பாரத தேசத்தில் பலமுறை யாத்திரை செய்து தர்மத்தையும் ஆத்ம தத்துவத்தையும் ஜனங்களுக்கு உபதேசித்த அவர், மக்களுக்குப் பயன்படும் வண்ணம் பல்வேறு தர்ம காரியங்களை நிறைவேற்றினார். குருநாதர் 1989ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21ம் தேதி அன்று மஹாஸமாதி அடைந்தார்.*

*அப்பழுக்கற்ற நடத்தை, சீரிய பண்புகள், தீவிர வைராக்யம், ஆழ்ந்த இறை மற்றும் குரு பக்தி, வேதாந்தத்தில் புலமை, ஆத்ம தியானம் மற்றும் ஜீவன்முக்தி ஆகிய இவையனைத்தையும் தன்னகத்தே ஒருங்கே வாய்க்கப் பெற்றிருந்த குருநாதர், ஞானமடைந்த முனிவர்களைப் பற்றி சாஸ்திரங்களில் கூறப்படும் வாக்கியங்களுக்கு ஒரு வாழும் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார். மிகுந்த கருணையுடனும் எவ்வித பாரபட்சமுமின்றி எல்லோரும் அணுகும் வண்ணம் எளியவராக விளங்கினார் குருநாதர். தன்னை நாடி வந்த ஆயிரக்கணக்கான பக்தர்களுடைய துயரங்களைத் துடைத்து, இன்பத்தை அளித்து அவர்களை அனுக்கிரஹித்தார்.*

*இப் புத்தகத்தில் சிஷ்யர்களின் கேள்விகளுக்கு ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அளித்த பதில்கள், ஜகத்குருவின் தெளிவுரைகள் மற்றும் கட்டுரைகள் இடம் பெற்றிருக்கின்றன. ஜகத்குருவின் விளக்கங்கள் மிகத் தெளிவாகவும் ஆணித்தரமாகவும் இருப்பதோடு மட்டுமின்றி அவருடைய ஆத்ம ஞானம், யோகத்தில் திறமை, சாஸ்திரங்களில் தன்னிகரற்ற புலமை ஆகியவற்றையும் பறை சாற்றுகின்றன. குருநாதரின் சொல்லமுதம் பிறவிப் பிணியை வேருடன் அழிக்கும் அருளமுதம் என்பதில் ஐயமொன்றுமில்லை.*

*திருமதி. சுஜாதா ஸ்ரீதர் இப்புத்தகத்தில் உள்ள உரையாடற் பகுதியைத் தமிழாக்கம் செய்தல், பிழைகளைத் திருத்துதல் போன்ற பணிகளைச் சிரத்தையுடன் செய்தார். செல்வி. இரா. சுகன்யா தட்டச்சு மற்றும் புத்தக வடிவமைப்புப் பணியை செவ்வனே மேற்கொண்டார். திரு. கோ. பார்த்தசாரதி புத்தகத்தின் அட்டையை அழகுற வடிவமைத்தார். சுதர்சன் கிராபிக்ஸ் நிறுவனத்தின் திரு. சுப்பிரமணியன் அவர்கள் புத்தகத்தை நேர்த்தியாக அச்சிட்டார். இவர்கள் அனைவருக்கும் எங்களது நன்றி.*

*இவண்,*


சென்னை
12. 02. 2020

Vidyashankar Krishnan  K. Suresh Chandar
Dr. H. N. Shankar  Dr. Meenakshi Lakshmanan

Trustees, **Centre for Brahmavidya**

# பொருளடக்கம்

## பகுதி 1 - ஜகத்குருவின் பதில்கள்


| | | |
|---|---|---|
| 1. | குரு | 9 |
| 2. | இறைவன் | 14 |
| 3. | உருவமுள்ள இறைவனின் பூஜை | 18 |
| 4. | மானஸிக பூஜை | 19 |
| 5. | கங்கை | 20 |
| 6. | வேதங்கள் | 22 |
| 7. | உடலினின்றும் ஆத்மாவின் வேறுபட்ட தன்மை | 28 |
| 8. | மறுபிறவி | 30 |
| 9. | விதியும் முயற்சியும் | 32 |
| 10. | தர்மம் | 36 |
| 11. | அஹிம்சை | 44 |
| 12. | ஆசைகளை வேருடன் களைவது | 46 |
| 13. | கோபத்தை அடக்கியாளுதல் | 47 |
| 14. | கர்ம யோகம் | 48 |
| 15. | பக்தி | 53 |
| 16. | வேதாந்த சாஸ்திரங்களை படித்தல் | 59 |
| 17. | பிரஹ்மசர்யம் | 61 |
| 18. | ஸந்யாஸி | 64 |
| 19. | மனதை அடக்குதல் | 67 |
| 20. | தியானம் | 71 |
| 21. | நிர்விகல்ப ஸமாதி | 77 |
| 22. | நாதானுஸந்தானம் | 82 |
| 23. | லம்பிகா யோகம் | 84 |
| 24. | குண்டலினி | 87 |
| 25. | அமனஸ்க யோகம் | 90 |
| 26. | மாயை | 93 |

27. விழிப்பு நிலையும் ஸ்வப்ன நிலையும் 98
28. பந்தத்தின் ஸ்வரூபம் 103
29. மோட்சத்திற்குக் காரணம் 105
30. அத்வைத நூல்களில் பலவிதமான கருத்துக்கள் 106
31. ஞானி 107

பகுதி 2 – ஜகத்குருவின் தெளிவுரைகள்

1. எண்பெருங்குணங்கள் 113
2. பக்தியின் மூன்று நிலைகள் 118
3. சரணடை, அருள் பெறு 120
4. பக்தியெனும் அமுதம் 122
5. பகவத் கீதையின் அடிப்படைக் கோட்பாடுகள் 127
6. உண்மையான அத்வைதிகளும் போலிகளும் 130
7. பரம்பொருளைப் பற்றிய விசாரணைக்கு வேண்டிய தகுதிகள் 132
8. எல்லாத் தீமைக்கும் எது மூலம்? 136
9. அசுத்த வாஸனைகள் மூன்று 140
10. இறைவன் பிரபஞ்சத்தின் காரணம் 145
11. இறைவன் பாரபட்சமுள்ளவனல்லன், கொடியவனுமல்லன் 148
12. பிரம்மம் பிரபஞ்சமாக முற்றிலும் மாறுவதில்லை 152
13. மிக உயர்ந்த ரகசியம் 155
14. சுயம்பிரகாசமான சுத்த சைதன்யமே ஆத்மா 157
15. ஞானிகளுக்கு மறுபிறவி உண்டா? 161

பகுதி 3 – ஜகத்குருவின் கட்டுரைகள்

1. இறைவனின் வழிபாடு 167
2. சாஸ்திரம் தேவை என்பதற்கான நிரூபணம் 177
3. ஆத்ம விஞ்ஞானம் 185

# பகுதி 1

---

## ஜகத்குருவின் பதில்கள்

*இப்பகுதியில் ஜகத்குருவிடம் சிஷ்யர்கள் கேட்ட பல கேள்விகளும் அதற்கான பதில்களும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. உரையாடல்களில் பல தமிழிலும் மீதமுள்ளவை ஹிந்தி மற்றும் கன்னடத்திலும் நிகழ்ந்தவை. ஹிந்தி மற்றும் கன்னடத்தில் இருந்தவை தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன. ஜகத்குரு பல சாஸ்திரப் பகுதிகளை சமஸ்கிருதத்தில் கூறியிருந்தார்கள். இவற்றிற்கான தமிழ் மொழியாக்கம் பதில்களுக்குள்ளே கொடுக்கப்பட்டிருக்கின்றன. சான்றாதாரங்கள் அடிக்குறிப்புகளாகத் தரப்பட்டிருக்கின்றன. உரையாடல்கள் 31 தலைப்புகளில் உள்ளன. முந்தைய வெளியீட்டில் இல்லாத பதில்களும் புதிதாகச் சேர்க்கப்பட்டு உரையாடல்களின் வரிசைக் கிரமத்திலும் தொகுப்பிலும் சில மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இவையனைத்தும் ஜகத்குருவின் உரையாடல்களை முன்பு தொகுத்த சீடராலேயே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. பல விதமான தியான முறைகள், ஸமாதி (தியானத்தின் மிக உயர்ந்த நிலை), ஞானம் மற்றும் ஜீவன்முக்தி (வாழும்போதே முக்தி) ஆகிய தலைப்புகளில் ஜகத்குரு அளித்துள்ள பதில்கள் அவருடைய நேரடியான அனுபவத்தைப் பறைசாற்றுகின்றன என்பதை உணரமுடிகிறது.*

---

# *1. குரு*

சிஷ்யன்: மோட்சத்தை விரும்புபவனுக்கு குரு ஒருவர் அவசியமா?

*ஜகத்குரு: மிகவும் அவசியம்.*

சி: குருவுக்கு இருக்க வேண்டிய முக்கியமான லக்ஷணம் என்ன?

*ஜ: குருவானவர் தத்துவத்தை அறிந்த ஞானியாகவும் சிஷ்யனுடைய நன்மையை விரும்புபவராகவும் இருக்க வேண்டும்.*

சி: இக்காலத்தில் பலரும் தாங்கள் மஹான்கள் என்பது போல நடந்து கொள்கிறார்களே! இவ்வாறாக இருக்கும் போது உண்மையான குருவை எவ்வாறு கண்டறிவது?

*ஜ: மஹான்களைக் கண்டறிவது என்பதற்காக விதிமுறைகள் எவையும் இல்லை. நாம் மிகுந்த சிரத்தையுடன் இருந்தால், ஈச்வரனே ஸத்குருவை அடைவதற்கான வழியைக் காட்டுவான். யாரை நாம் குருவாகக் கருதுகிறோமோ அவர் ஞானியாகவும் மேலும் நமது நன்மையை விரும்புபவராகவும் இருக்கின்றாரா என நாமே பார்த்துக்கொள்ளலாம். ஒருவரை ஞானியா என்று தீர்மானிப்பது கடினமானாலும், கீதையில் உள்ள ஞானியின் வர்ணனையை ஓரளவுக்கு நாம் பயன்படுத்தலாம். ஆனால், இவ்வாறு செய்யும்போது ஞானிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக அவை கூறப்படவில்லை என்பதை நாம் ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும்.*

சி: குருவைப்பற்றி சிஷ்யனின் மனோபாவனை எவ்வாறிருக்க வேண்டும்?

*ஜ: குருவும், ஆத்மாவும், ஈச்வரனும் வேறு என்று கருதக் கூடாது. "ஈச்வரன், குரு, ஆத்மா என்று பல வடிவங்களாகத் திகழ்பவருக்கு வந்தனங்கள்."[1] சிஷ்யன் எப்பொழுதும் குருவின் கட்டளையின் படியே நடந்துகொள்ள வேண்டும். மற்றவர்கள் வேறுவிதமாகக் கூறினாலும், அவன் குருவின் கட்டளைகளையே முடிவாகக் கருத வேண்டும்.*

சி: ஞானமடையாதவர், மற்றொருவருக்கு ஆத்ம ஞானத்தை உண்டாக்க முடியுமா?

*ஜ: "ஆத்மாவை அறியாதவன் உபதேசித்தால், மிகவும் ஆராய்ந்தாலும் ஆத்மாவை அறிந்து கொள்ள முடியாது. ஆத்மாவை அறிந்த குரு உபதேசம் செய்தால் ஒருவன் மோட்சத்தை அடைகிறான்".[2]*

---

[1] *மானஸோல்லாஸ: 1.30*

[2] *கடோபநிஷத் 1.2.8*

சி: ஆன்மிக வாழ்வில் ஈடுபாடுள்ளவன் தனது குருவையோ அல்லது ஈச்வரனையோ பிறர் நிந்திப்பதைக் கேட்டுக்கொண்டிருப்பது தவறா?

*ஜ: ஆம்.*

சி: அச்சூழ்நிலையில் அவன் என்ன செய்ய வேண்டும்?

*ஜ: நித்தனை செய்பவன் யுக்தியை ஒப்புக் கொள்பவனாக இருந்தால் அவனிடம் அவ்வாறு நிந்தனை செய்ய வேண்டாம் என்று கூறலாம். அப்படியில்லாவிட்டால் அவ்விடத்திலிருந்து அவன் விலகிச் சென்று விடவேண்டும்.*

சி: குருவை அடைவதிலும், ஆன்மிக வாழ்க்கை வாழ்வதிலும் விருப்பமுள்ள ஒருவன் குருவை அடைவதற்கு முன்பு ஆன்மிகப் பயிற்சிகளைச் செய்ய விரும்பினால் என்ன செய்யலாம்?

*ஜ: மனதால் ஈச்வரனைப் பூஜை செய்யலாம். இவ்வாறு பூஜை செய்ய நியமங்கள் ஏதுமில்லை. ம்ருத்யுஞ்ஜய மானஸ பூஜா ஸ்தோத்ரம், சிவ மானஸ பூஜா ஸ்தோத்ரம் முதலியவைகளில் இவ்வாறு செய்யும் பூஜை முறை பற்றித் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. ஒருவன் செய்யும் அனைத்துச் செயல்களின் பலன்களையும் இறைவனுக்கு அர்ப்பணித்து இறைபக்தியை வளர்ப்பது நலம். விவேகம் மூலமாகத் தீவிரமான வைராக்யத்தைப் பெறவேண்டும். ஈச்வரனிடம் சிரத்தையுடன் செய்யும் பிரார்த்தனை சக்தி வாய்ந்து. அது ஒருவன் ஸத்குருவை அடையும் படிச் செய்கிறது.*

சி: எந்த வயதில் ஆன்மிகப் பயிற்சிகளைத் தொடங்க வேண்டும்?

*ஜ: எவ்வளவு சீக்கிரத்தில் ஆரம்பிக்கின்றோமோ அவ்வளவு நல்லது. பிரஹ்லாதனும், துருவனும் ஆன்மிக சாதனைகளைத் தொடங்கும் போது சிறுவர்களாகத்தானே இருந்தார்கள்?*

சி: உலக வாழ்வில் ஈடுபாடுள்ளவனுக்குக் குருவின் உபதேசம் தேவையா?

*ஜ: வியாதியால் பாதிக்கப்பட்டவனுக்கு வைத்தியர் தேவைதானே?*

சி: ஆம்.

*ஜ: லௌகிக வாழ்வில் சுகத்தை ஒருவன் விரும்புகிறானே, அவன் விரும்பிய அளவிற்கு இன்பம் கிடைக்கிறதா? இல்லையே. அந்த இன்பத்தைப் பெறுவதற்கும், ஒருவர் வழிகாட்டுவதாக இருந்தால் அவரை நாடுவது புத்திசாலித்தனம் அல்லவா? தத்துவத்தை அறிந்து கொண்டவரின் ஆசிகளுக்கு மிகுந்த சக்தியிருக்கிறது. ஆகையால் எவ்வாறு வாழ விரும்பினாலும் ஒரு மஹானின் அருளும் உபதேசமும் பெறுவது நல்லது.*

சி: சிலர் குருவின் ஆக்ஞையின்படி நடந்து கொள்ளவேண்டும் என்று விரும்பினாலும் எப்போதும் அவ்வாறு நடந்து கொள்வதில்லை. வேறு விதமாக நடந்து கொண்டால் இன்பம் பெறலாம் என்ற தவறான கருத்தும் அவர்களுக்கு இருக்கிறது. இம்மாதிரி எண்ணங்களை எவ்வாறு தடுப்பது?

ஜ: *லௌகிகமாக வாழ்பவனுக்கு ஒரு மஹானைப் பற்றி "இவருக்கு என்னைக் காட்டிலும் அறிவு அதிகமாக இருக்கிறது" என்ற எண்ணம் உண்டா, இல்லையா?*

சி: அவசியம் இருக்குமே.

ஜ: *குருவானவர் சிஷ்யனின் நன்மையையும் கஷ்டங்களையும் கருத்தில் கொண்டிருப்பார் அல்லவா?*

சி: ஆம்.

ஜ: *குரு நம் நன்மையைக் கருதுகிறார். நம்மைக்காட்டிலும் அவருக்கு அறிவு அதிகம். நம் கஷ்டங்களையும் புரிந்து கொண்டிருக்கிறார். இப்படிப்பட்டவர் நமக்கு ஏதாவது உபதேசம் கொடுத்தால் அது நமது நன்மைக்காகத் தானேயிருக்கும்? இதுபோன்ற எண்ணத்தை மனதில் உறுதிப்படுத்திக் கொண்டால், அவன் குருவின் உத்தரவின்படி நடந்து கொள்வான். அவர் கட்டளைப்படி நடப்பதில் அவனுக்கு கஷ்டங்கள் ஏற்பட்டாலும் "அவர் சொற்படி நடந்தால்தான் எனக்கு நல்லது" என்று நினைக்க வேண்டும். அப்பொழுது தடுமாற்றங்கள் நின்றுவிடும்.*

சி: சிலருக்குத் தன் மனதிலுள்ள கஷ்டங்களை குருவிடம் சொல்லத் தயக்கமாக இருக்கிறது. அதனால், அவர் உபதேசித்தபடி நடப்பதற்குக் கடினமாக இருந்தால், அவர்களுக்கு 'குரு என் நன்மைக்காகவே இந்த உபதேசத்தைக் கொடுத்துள்ளார். ஆனால் அதன்படி நடப்பதில் சில கஷ்டங்கள் இருக்கின்றனவே. எனது சக்தியும் மிகக் குறைவாக இருக்கிறதே. இந்த உபதேசத்தின்படி எப்படிப் பின்பற்றுவது?' என்ற சந்தேகங்கள் வருகின்றன.

ஜ: *ஒரு வைத்தியரிடம் செல்லும்போது ஒருவன் தன் வியாதியைப் பற்றி அவரிடம் மறைத்தால் அது முட்டாள்தனமாக இல்லையா? அதைப் போலவே, நாம் குருவிடம் செல்லும்போது நமது கஷ்டங்களைத் தயக்கமில்லாமல் கூற வேண்டும். அது நம் கடமை. நாம் அவ்வாறு செய்யாவிட்டாலும், குரு தத்துவத்தை அறிந்தவராதலால் அவரின் வாக்கு ஈச்வரனின் விருப்பத்தை ஒத்தே தான் இருக்கும். இப்படியிருக்கும் போது அவர் எதைக் கூறினாலும் நமக்கு அது பொருத்தமாகத்தான் இருக்கும். அவருடைய உத்தரவின்படி நடக்க*

*நமக்கு சாமர்த்தியம் இல்லாவிட்டாலும், அதுவும் அவரது அனுக்ரஹத்தினால் நமக்கு கிடைக்கும். உத்தமமான சிஷ்யன், குருவின் ஆக்ஞையின்படி நடந்து கொள்வானே தவிர, அதைப்பற்றி "என்னால் அவர் கூறியதைப் போலச் செய்ய முடியுமா? முடியாதா? வேறு ஏதாவது வழியை மேற்கொள்ளலாமா?" இம்மாதிரியான யோசனைகளுக்கு இடமே கொடுக்கமாட்டான். குருவின் கட்டளையின்படி நாம் நடந்து கொண்டோமென்றால், நமக்குச் சொந்த புத்தியில்லை என்று அர்த்தம் இல்லை. நமது நன்மைக்காக நம்மைக் காட்டிலும் உத்தமமான ஒரு சக்தியிடம் நாம் சரண் அடைந்திருக்கிறோம் என்றுதான் பொருள்.*

சி: குருவின் அருளிருந்தால் ஒரு மஹாபாவியும் ஆன்மிக வாழ்க்கையில் முன்னேற்றமடைய முடியுமா?

ஜ: *இறைவன் மற்றும் குருவின் அருள் கிடைத்தால் எப்படிப்பட்டவனும் முன்னேற்றமடையலாம். ஆனால், உயர்ந்த ஒரு மஹானின் அனுக்ரஹத்தின் சக்தியினாலேயே வாழ்க்கையில் முன்னேற்றமடைந்து விடலாம் என்று நினைத்து, நாம் கவனக்குறைவாக இருந்துவிடக்கூடாது.*

சி: சிலர் பல தவறுகள் செய்திருந்தாலும் அவர்களுக்கு மஹான்களின் அனுக்ரஹம் கிடைக்கிறது. மற்ற சிலர் அவ்வளவு தவறு செய்யாமல் இருந்திருக்கலாம். ஆனாலும் அவர்களுக்கு அதைப்போன்று அருள் கிடைப்பதில்லை. மஹான்களுக்குப் பாரபட்சம் கிடையாது. இருப்பினும், இம்மாதிரி வித்தியாசங்கள் ஏன் ஏற்படுகின்றன?

ஜ: *காரியத்தைக் கண்டு காரணம் என்னவாக இருந்திருக்கும் என்று சிந்திக்க வேண்டும். ஒருவன் மற்றவனைக் காட்டிலும் பாவம் அதிகம் செய்தவனாக இருக்கிறான். ஆயினும் அவனுக்கு மஹான்களின் அனுக்ரஹம் விசேஷமாகக் கிடைப்பதை நாம் பார்க்கலாம். இதற்கு ஏதாவது காரணமிருக்க வேண்டும். அது என்னவாயிருக்கும்? அந்தப் பாவியின் இப்பிறவி வாழ்க்கையைச் சிந்தித்துப் பார்த்தால் காரணம் கிடைக்காமல் போகலாம். அவ்வளவு மட்டும் ஆராய்ந்தால் போதாது. அவனுடைய முற்பிறவியில் அவன் விசேஷமான நல்ல காரியங்களைச் செய்திருக்கலாம். அதனால் தான் அவன் இப்பிறவில் மஹான்களின் கருணைக்கு ஆளாகிறான். எனவே ஒருவன் இப்போது நல்ல தார்மிகமாக வாழ்க்கை நடத்தவில்லை என்றாலும் அவனுக்கு இப்போது அனுக்ரஹம் கிடைக்கிறதென்பதால், அவன் முற்பிறவியில் புண்ணியம் செய்திருக்கிறான் என்று நாம் அனுமானம் செய்து கொள்ளலாம். இவ்வாறு ஆராய்வதை நிறுத்தி விட்டு, ஒரு மஹான் என்பவர் பாரபட்சமாக நடந்து கொள்கிறார் என நாம் முடிவுக்கு*

வருவது தவறு. ஒரு ஜீவன்முக்தருக்கு (வாழும்போதே முக்தியடைந்தவர்) அடைவதற்கு ஒன்றுமில்லை. ''இவன் எனக்கு வேண்டியவன், ஆகவே இவனுக்கு அருள்புரிய வேண்டும். இவன் வேண்டாதவன், ஆகவே இவனுக்கு கிருபை செய்ய வேண்டாம்'' என்றெல்லாம் அவர் நினைக்கமாட்டார். ஒருவனுக்கு அனுக்ரஹம் செய்தாலும், செய்யாவிட்டாலும் மஹான்களுக்கு அதனால் பயன் ஒன்றுமில்லை. ஏனென்றால், அவர்கள் அடைய வேண்டியதை அடைந்தவர்கள்.

சி: ஒருவன் முற்பிறவியில் செய்த புண்ணியத்தால்தான் பகவானின் அருளைப் பெறுகிறானென்றால் அருளும் புண்ணியத்தால் வாங்கப்படும் பொருள் போலல்லவா ஆகிவிடும்**?**

ஜ: ஒரு தீபத்தின் ஒளி சுற்றியுள்ள இடங்களில் விழுகிறது. ஒருவன் அந்த ஒளியை உபயோகப்படுத்திச் சாஸ்திரங்களைப் படிக்கலாம். மற்றொருவன் அதில் கவனம் செலுத்தாமல் உறங்கலாம். இதேபோல் மஹான்கள் எப்போதும் அருள் புரிந்து கொண்டே இருக்கிறார்கள். ஒவ்வொருவனும், தனது மனநிலையைப் பொறுத்தே பயனடைவான். ஒருவன் குளத்திற்குப் பெரிய குடத்தைக் கொண்டு சென்றால், அதிக அளவு நீர் எடுத்து வரலாம். சிறிய குடத்தைக் கொண்டு செல்பவனுக்கு, நீர் குறைவாகவே கிடைக்கிறது என்பதால் குளத்திற்குக் குடமே ஓர் அளவு என்று கூறமுடியாது. இதைப்போலவே ஒருவன் முற்பிறவியில் புண்ணியம் செய்திருந்தால் அவனுக்கு ஒரு மஹானின் நல்ல சேர்க்கை கிடைக்கலாம். ஆயினும் அவன் அதை முழுவதுமாக உபயோகிக்காமலும் இருக்கலாம். மற்றவனுக்கு அவ்வளவு சந்தர்ப்பம் கிடைக்காவிட்டாலும் கிடைத்த சந்தர்ப்பத்தை முடிந்த அளவிற்கு உபயோகப்படுத்திக் கொள்வதன் மூலம் சிறிது காலத்தில் மஹானின் அனுக்ரஹத்திற்கு விசேஷமான பாத்திரமுமாகலாம்.

சி: குருவானவர், சிஷ்யனுக்குத் தன் பாதுகையை அருளியிருந்தால், அப்பாதுகையை அந்த சிஷ்யன் எவ்வாறு பூஜிக்க வேண்டும்**?**

ஜ: அவனது குருவிடம் எவ்வளவு மரியாதையைக் காட்டுவானோ அதே மரியாதையைப் பாதுகையிடம் காட்ட வேண்டும். முழு சிரத்தையுடன் பாதுகையை தினமும் வணங்கிப் பாதுகையின் மேல் சந்தனமும், புஷ்பமும் வைக்க வேண்டும். தினந்தோறும் பாதுகைக்கு அபிஷேகம் செய்வது ஒருவகையில் நல்லது என்றிருந்தாலும், அந்தப் பாதுகை மரத்தால் இருக்கும் பட்சத்தில், சிஷ்யனும் அந்தப் பாதுகை தன்னிடம் நீண்டகாலம் இருக்க வேண்டுமென்று விரும்பும் பட்சத்தில், தினந்தோறும் அப்பாதுகைக்கு அபிஷேகம் செய்வது எவ்வளவு சரி என்பதை அவனே தீர்மானம் செய்து கொள்ளலாம். குருவின்

பாதுகையைச் சிரத்தையுடன் வணங்கினாலோ, குருவின் பாதுகையிடம் பக்தியுடன் பிரார்த்தித்தாலோ, குருவிடமே நேரடியாக அவ்வாறு செய்த பலன் கிடைக்கும். ஆதலால் பாதுகை விஷயத்தில் ஒருபோதும் கவனக்குறைவாக இருக்கக் கூடாது.

சி: குருவின் பாதுகையின் மேல் தியானம் செய்ய வேண்டுமென்று ஒரு சிஷ்யன் கருதினால் எவ்வாறு செய்யலாம்?

ஜ: குரு பாதுகையை அணிந்துள்ளார் என்று கருதிப் பாதுகையுடன் கூடியதாக அவர் பாதங்களைத் தியானிக்கலாம்.

சி: குருவின் ஸந்நிதியில் சிஷ்யன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?

ஜ: சிஷ்யன் குருவிடம் பணிவுடன் நடந்துகொள்ள வேண்டும். சந்தர்ப்பம் கிடைக்கும் போது, அவரது அனுமதியைப் பெற்று, அவருக்குச் சேவை செய்து வரவேண்டும். மனதில் ஏதாவது சந்தேகம் ஏற்பட்டால் அவர் வேறு காரியங்களில் ஈடுபடாதிருக்கும் நேரத்தில் அதற்கு விளக்கம் கேட்கலாம். அவரிடம் பாடம் கற்றுக் கொள்வது பெரும் பாக்கியம் என்று கருதி பாடத்தில் மிகுந்த சிரத்தை வைத்துக் கொள்ள வேண்டும். அவர் தரும் உபதேசங்களை எப்பொழுதும் மனதில் வைத்துக்கொண்டு, அதன்படி வாழ்க்கை நடத்த வேண்டும்.

## 2. இறைவன்

சி: ஈச்வரனைப் பார்க்க முடியாததால் சிலர் உண்மையில் ஈச்வரன் இருக்கிறானா, இல்லையா எனச் சந்தேகமடைகிறார்கள். அவர்களின் மனதில் சிரத்தையை உண்டாக்குவதற்காக இறைவன் எப்படியாவது தான் இருப்பதை அவர்களுக்குக் காட்ட முடியாதா?

ஜ: இறைவனே ஒரு சிக்கலில் மாட்டிக் கொண்டிருக்கிறான் போலிருக்கிறது. அவன் ஒருவனுக்குக் காட்சியளிக்க விரும்பினால், ஏதோ ஓர் உருவம் பெற்றுக்கொள்ள வேண்டும். அப்படி ஓர் உருவத்தைக் காண்கையில், சந்தேகம் கொள்பவன், 'உனக்கு உருவம் இருக்கிறது. அதனால் நீ எல்லா இடத்திலும் இல்லை. நீ இறைவனாக இருக்க முடியாது' என்று கூறலாம். அதேசமயம், இறைவன் ஓர் உருவத்தை ஏற்று தரிசனம் தராமலிருந்தால், சந்தேகமுள்ளவர்களில், வேறு சிலர், 'நாம் இறைவனைக் காண முடிவதில்லை. எனவே இறைவன் இல்லை' என்று கூறலாம். ஆக, இறைவன் உருவத்தைப் பெற்றாலும், பெறாவிட்டாலும் சிலர் ஈச்வரன் இருப்பதை நம்ப மாட்டார்கள். இச்சூழ்நிலையில் இறைவன் என்ன தான் செய்ய முடியும்?

*உலகம் பலவிதமாக இருக்கிறது. நாஸ்திகர்களின் கோஷ்டியும் இங்கு உண்டு. மக்களிடம் இறைவனின் விஷயத்தில் சிரத்தையை உண்டாக்கி, அதை மேலும் வளர்க்கலாம். ஆனால், பலாத்காரமாக ஒருவனின் மனதில் சிரத்தையை உண்டாக்க முயற்சி செய்வதில் பிரயோஜனமில்லை. யுத்திகளைக் கூறலாம். பல பக்தர்களின் உண்மையான அனுபவங்களை எடுத்துக் காட்டலாம். பல அபூர்வமான உண்மை நிகழ்ச்சிகளையும், உதாரணங்களையும் கொடுக்கலாம். சாஸ்திரங்களில் உள்ளதையும் கூறலாம். ஆனாலும் இறைவன் இருக்கிறான் என்று ஒருவன் நம்பாவிட்டால் யார் தான் என்ன செய்ய முடியும்?*

சி: இறைவனைப் பக்தன் காண முடியுமா**?**

ஜ: *உருவத்துடன் காணலாமா என்று கேட்கிறாயா?*

சி: ஆம்**.**

ஜ: *இறைவனுக்கு உருவம் இல்லாவிட்டாலும் பக்தர்களுக்காக அவன் உருவத்தைப் பெற்றுக்கொள்ளலாம். ஆதலால் அளவில்லாத பக்தி இருந்தால் இறைவன் பெற்றுக்கொண்ட உருவத்தை நிச்சயமாக நாம் பார்க்கலாம். இங்கு சந்தேகத்திற்கிடமில்லை.*

சி: இறைவன் பெற்றுக் கொண்ட உருவத்தை வெறும் மனதால் பார்க்க முடியும் என்று சொல்கிறீர்களா, அல்லது கண்களாலும் காணமுடியும் என்று சொல்கிறீர்களா**?**

ஜ: *இரண்டு வகையிலும் காட்சியளிப்பதற்கு இறைவன் சாமர்த்தியம் உள்ளவன்.*

சி: அதாவது இறைவனைப் பார்க்கலாம், இறைவனிடம் பேசலாம், இறைவனைத் தொடலாம் என்பதையா ஜகத்குரு கூறுகிறார்கள்**?**

ஜ: *ஆம். அவ்வளவு தூய பக்தியிருந்தால் இறைவன் நிச்சயம் காட்சி தருவார். காட்சியளித்தால் அவனிடம் ஏன் பேச முடியாது?*

சி: கலியுகத்திலுமா இவ்வாறு செய்யலாம்**?**

ஜ: *இறைவனைப் பக்தியுள்ளவன் காண்பதற்கும் கலியுகத்திற்கும் என்ன சம்பந்தம்?*

சி: யார் இறைவனின் தரிசனத்தைப் பெறலாம்**?**

ஜ: *யார் இறைவனைத் தவிர வேறொன்றையும் விரும்பவில்லையோ அவன் இறைவனைக் காணலாம். அளவில்லாத பக்தி இறைவனை நம்மிடம் வரும்படிச் செய்கிறது.*

சி: இறைவனது விஷயத்தில் ஒருவனுக்கு ஏற்பட்ட அனுபவம் உண்மையா இல்லையா என்பதை ஒருவன் எவ்வாறு அறிய முடியும்?

ஜ: *எவனுக்கு உண்மையான அனுபவம் ஏற்பட்டிருக்கிறதோ அவனுக்கு இதுபோன்ற சந்தேகம் ஏற்படாது.*

சி: மற்றவர்கள் ''அவனுடைய அனுபவம் சித்தப் பிரமையினாலோ தனக்குத் தானே ஏமாற்றிக் கொண்டதாலோ இருக்கலாம்'' என்று கருதலாமே?

ஜ: *மற்றவர்கள் ஏற்றுக் கொண்டாலும், ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் எவனுக்கு அனுபவம் ஏற்பட்டிருக்கிறதோ, அவனுக்கு என்ன நஷ்டம்? மற்றவர்கள் ஒப்புக்கொள்வதோ, ஒப்புக் கொள்ளாமலிருப்பதோ, அவனை ஒருவகையிலும் பாதிப்பதில்லை. இப்படியிருந்தாலும் உன் கேள்விக்குச் சற்று நேரடியான பதிலைக் கூறுகிறேன். இறைவன் பக்தனுக்குக் காட்சியளிக்கும்போது பக்தனிடம் பழமோ, மற்ற பொருட்களோ கொடுத்துவிட்டுப் போகிறான் என்று வைத்துக் கொள்வோம். இறைவன் மறைந்த பிறகும் பழம் சிஷ்யனிடமிருந்தால் அவ்வனுபவம் உண்மையானது என்று அறிந்து கொள்ளலாம். இதுபோன்ற அனுபவம் பக்தனுடைய மனநிலையை மாற்றிவிடும். அனுபவம் சற்று நேரத்திற்கே இருந்தாலும் அதன் தாக்கம் நீண்ட காலம் இருக்கிறது. மேலும் இறைவனின் விஷயத்தில் அனுபவம் பெற்றுக் கொண்டவர்கள் மற்றவர்களையும் நல்வழியில் திருப்புவதற்குச் சாமர்த்தியம் உள்ளவர்களாக ஆகிவிடுகிறார்கள்.*

*இறைவனின் அனுபவம் பெற்ற ஒருவன் நல்ல ஆரோக்கியத்துடனும், மனநிலையுடனும் இருக்கிறான், அவன் ஏன் தனக்கு அனுபவம் வந்தது போல பொய்க் கற்பனைகளைச் செய்துகொள்ள வேண்டும்?*

*ஒருவன் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ள வேண்டுமென்றால், எப்போது வேண்டுமானாலும் ஏமாற்றிக் கொள்ளலாம். ஒருவனுக்கு இவ்வாறான விசேஷமான இறை அனுபவங்கள் எப்போது வேண்டு-மானாலும் கிடைக்காது. இம்மாதிரி ஆராய்வதன் மூலமாக உண்மையான அனுபவத்திற்கும், தன்னை தானே ஏமாற்றிக் கொள்வதற்கும் உள்ள வித்யாசத்தைக் காணலாம்.*

சி: இவ்வுலகில் இவ்வளவு துன்பங்கள் எதற்காக இருக்கின்றன? இவ்வுலகை இறைவன் படைத்ததால் துன்பங்களுக்கு அவன் காரணமாக மாட்டானா?

ஜ: *ஒருவன் தனது செயல்களால்தான் துன்பங்களை அனுபவிக்கிறான். ஒருவனது செயல்கள் பலனளித்தே தீர வேண்டும். முற்பிறவியில்*

*செய்த கர்மா பலனளிப்பதால் ஒருவன் இப்பிறவியில் துன்பங்களை அனுபவிக்கிறான். மனிதர்களுக்குச் சாஸ்திரங்களின் கட்டளையைப் பின்பற்றி வாழவோ, சாஸ்திரங்களின் கட்டளையை மீறுவதற்கோ சுதந்திரம் இருப்பதால், இறைவன் துன்பங்களுக்குக் காரணம் என்று சொல்வது தவறு; மனிதன் தன் செயல்களின் பயனாகப் புண்ணியத்தையோ, பாவத்தையோ அடைகிறான். அந்த செயல்களின் பலன்களை இறைவன் அளிக்கிறான். அவ்வளவு தான்.*

*முற்பிறவியில் செய்த பாவம்தான் நமக்கு இப்பிறவியில் துன்பம் உண்டாக்குகிறது எனச்சொன்னால் முற்பிறவியில் ஒருவன் துன்பம் அனுபவித்ததற்ககுக் காரணம் என்னவென்று கேட்கலாம். இதற்கு பதில் ‘அதற்கும் முற்பிறவியில் செய்த பாவ கர்மா (செயல்கள்)’ என்பதே. ஸம்ஸாரம் (பிறப்பு-இறப்பு சக்கரம்) ஆரம்பமில்லாததால், நாம் ஒருவிதமான கர்மாவும் செய்யாமல் வாழ்க்கையை ஆரம்பித்த போது இருந்த முதல் பிறவி எது எனக் கேட்பது சரியாகாது. முன் கல்பத்தில் இருந்ததை ஒவ்வொரு கல்பத்தைப் படைக்கும் போதும் வெளிப்படுத்துகிறானே தவிர, இறைவன் தானே புதிதாக ஒன்றையும் உண்டாக்குவதில்லை.*

**சி:** இறைவன் நடந்ததையும், நடப்பதையும், நடக்கப் போவதையும் அறிந்தவனென்று கூறப்பட்டுள்ளது. இறைவன் மனிதர்களுக்கு வருங்காலத்தில் என்ன நடக்கும் என்று தெரிந்து கொண்டவனாய் இருந்தால் மக்கள் என்ன செய்வார்கள் என்பதும் இப்போதே தீர்மானமாகியிருக்க வேண்டும். அப்படியெனில் விதிக்கே மனிதன் முழுவதும் கட்டுப்பட்டவனாக இருக்கிறான் என்றல்லவா ஆகிறது? அப்படியானால் அவன் செய்யும் செயல்களுக்கு அவன் பொறுப்பாளி–யாக முடியாது என ஆகிவிடும். விதியின் கட்டளைப்படி நடக்காமல் அதை மீறி நடந்து கொள்ளலாமென்றால் இறைவனால் நடக்கப் போவதைத் தீர்மானிக்க முடியாது என்று ஆகும். அப்படியானால் இறைவன் எல்லாவற்றையும் அறிந்தவனென்று எப்படிக் கூறுவது?

*ஜ: உண்மையில் உலகம் மாயையால் ஏற்பட்டிருக்கிறது. இறைவன் மாயையை ஆள்பவன். இந்தக் கோணத்தில் பார்த்தோமேயானால், “எல்லாமே இறைவனது விருப்பப்படியே நடைபெறுகிறது. அவனது விருப்பம்தான் மனிதர்களின் சொந்த இச்சையைப் போலும், விதியைப் போலும் தெரிகிறது” என்று கருதலாம். இவ்வாறு கருதினால் இறைவன் எல்லாவற்றையும் அறிந்து கொண்டவன், மேலும் விதியின்படியே எல்லாம் நடைபெற வேண்டியதுமில்லை என்ற இரண்டையும் குழப்பமில்லாமல் புரிந்து கொள்ளலாம்.*

ஒருவன் தன் பரிட்சைக்காகப் படிக்கவேயில்லை என்று வைத்துக் கொள்வோம். அப்படிப்பட்டவன் தேர்வில் வெற்றி பெறமாட்டான் என்பதை நிச்சயமாகக் கூற முடியாதா? இதுபோல் ஒருவன் கூற முடியும் என்பதால் மாணாக்கனுக்கு, தேர்வுக்கு முன்னர் படிக்கவோ அல்லது படிக்காமலிருப்பதற்கோ சுதந்திரம் இல்லை என்று கூற முடியுமா? நிச்சயம் முடியாது. அதேபோல் இறைவன் தான் படைத்தது அனைத்தையும் நன்கு அறிந்து கொண்டிருக்கிறானென்று கருதுகையில், இறைவன் அனைத்தையும் அறிந்தவன் என்று சொல்லப்படுவதையும், விதி மட்டுமே அனைத்தையும் தீர்மானிக்காது என்பதையும் புரிந்து கொள்ள முடியும்.

## *3. உருவமுள்ள இறைவனின் பூஜை*

வெ *(வெளிநாட்டவர்):* இந்துக்கள் பல தெய்வங்களைப் பூஜிப்பதுண்டா**?**

*ஜ:* அனைத்துப் படைப்பின் ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகியவற்றிற்குக் காரணமான, உருவமற்ற ஒரே இறைவன்தான் இருக்கிறான் என்று நாம் கருதுகிறோம். ஆனால் அந்த இறைவன் தனது பக்தர்களை அருள்வதற்காகப் பலவித உருவங்களைப் பெற்றுக்கொள்கிறான். எந்தப் பெயருடனும், உருவத்துடனும் பக்தர்கள் இறைவனை விரும்புகிறார்களோ அவ்வகையில் அவனை ஆராதிக்கிறார்கள். இந்திரன் போன்ற பெயர்களை நீங்கள் கேட்டிருக்கலாம். இவைகள் புண்ணியம் செய்த ஜீவன் வெவ்வேறு சமயங்களில் அடையும் பதவிகள். முன்பு கூறப்பட்ட இறைவனுடன் இது போன்ற பதவிகளையும் சேர்த்து நாம் குழப்பிக் கொள்ளக் கூடாது.

வெ: சிலைகளைப் பூஜிப்பது பற்றி ஜகத்குரு சற்றுக் கூறுவார்களா**?**

*ஜ:* நாம் வெறும் கற்களை பூஜிப்பதில்லை. வெறும் கல்லை நாம் பூஜிப்பதாக இருந்தால் உருவத்தைப் பார்த்துக் ‘கல்லே!’ என்றே கூறுவோம். ‘இறைவா!’ என்று இல்லை. மூர்த்திகளில் இறைவன் இருக்கின்றான் என்று கருதி மூர்த்திகளை, நம் ஆராதனைக்குத் துணையாக வைத்துக்கொண்டு இறைவனைப் பூஜிக்கிறோம். மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்யும் கும்பாபிஷேகத்தாலும், பூஜை செய்பவர்களின் சிரத்தையாலும், தவத்தாலும் சில மூர்த்திகளின் விசேஷத்தாலும் கோவில்களில் இருக்கும் மூர்த்திகளில் விசேஷமாக தெய்வ ஸாந்நித்யம் ஏற்படுகிறது. இறைவன் உருவமற்றவனா-னாலும் தன் கருணையால் பக்தர்களுக்குக் காட்சியளிக்கச் சக்தியுள்ளவனாக இருக்கிறான். அவ்வாறு செய்யவும் செய்கிறான்.

வெ: ஜகத்குரு பூஜை செய்யும்போது சிவலிங்கத்தின் மீது நீர், பால் போன்றவைகளை ஊற்றுவதைப் பார்த்தேன். அதன் தாத்பர்யம் என்ன?

ஜ: *பூஜை செய்யும் போது இறைவனை நாம் வழிபடுகிறோம். நீங்கள் பார்த்ததுபோல் அபிஷேகத்தின் மூலமாக நாம் இறைவனைக் குளிப்பாட்டுகிறோம். அதற்குப் பிறகு அவனைத் துடைக்கிறோம். பிறகு அவனை உணவு அருந்தச் செய்கிறோம். அளவற்ற, உருவமற்ற இறைவனுக்கு எதுவும் தேவைப்படாவிட்டாலும் நமது பக்தி, நாம் அவனை ஒரு உருவச்சிலையில் கண்டு பூஜிக்கும்படிச் செய்கிறது. உங்களுக்குப் பழக்கமுள்ள வார்த்தைகளில் கூற வேண்டுமெனில் அபிஷேகம் என்பது இறைவனுக்கு நாம் கொடுக்கும் ''ஷவர் பாத்''.*

## *4. மானஸிக பூஜை*

சி: சிலருக்கு, பூஜை செய்ய வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. ஆனால் அதைச் செய்யச் சரியான வாய்ப்பில்லை. தியானத்திலேயே காலத்தைக் கழிக்கலாம் என்றால் அவர்களால் சரிவரத் தியானம் செய்ய முடியவில்லை. இப்படிப்பட்டவர்கள் மனதை ஒருநிலைப்படுத்த என்ன செய்யலாம்?

ஜ: *அவர்கள் மானஸிக பூஜையைச் செய்யலாமே.*

சி: மானஸிக பூஜை என்றால் என்ன?

ஜ: *மானஸிக பூஜை என்றால் மனதால் செய்யப்படும் இறைவனின் பூஜை என்று பொருள். சாமான்யமாகப் பூஜை செய்வதற்குப் புஷ்பம், தூபம், தீபம் போன்றவை தேவைப்படுகிறது. எவ்வாறு வெளிப் பூஜையில் நாம் செய்வோமோ, அந்த உபசாரங்களை மனதாலேயே கற்பனை செய்து, இறைவன் வந்துள்ளான் என்று கருதி எல்லாவித-மான உபசாரங்களும் செய்தால், அதுவே மானஸிக பூஜையாகும்.*

சி: மானஸிக பூஜை எப்படிச் செய்வது?

ஜ: *'இறைவன் நம்முன் வந்திருக்கிறான், அவனை நாம் வரவேற்க வேண்டும், அவனுக்கு ஓர் ஆஸனம் தர வேண்டும்' எனக்கருதி அவனை வரவேற்று ஓர் ஆஸனத்தைக் கொடுப்போம். அவன் ஆஸனத்தில் அமர்ந்த பிறகு நாம் அவன் கை கால்களை அலம்பி, ஆசமனம் செய்வதற்கு சுத்தமான ஜலத்தைத் தருவோம். அவன் அதை ஏற்றுக் கொள்வான். மேலும் அவனுக்கு ஸ்நானம் செய்து வைப்போம். இதுபோல் நாம் மனதாலேயே எல்லாவற்றையும் செய்து*

*கொண்டே போகலாம். இவைகளை எல்லாம் அவன் ஏற்றுக் கொள்கிறான் எனக் கருதிச் செய்யலாம்.*

சி: இறைவனது உருவம் மானஸிக பூஜை செய்கையில் நிலையாக நிற்காவிட்டால் என்ன செய்வது**?**

ஜ: *மானஸிக பூஜை செய்யும் பொழுது ஒருவன் தன்னுடைய இஷ்ட தேவதையின் சித்திரத்தை எதிரில் வைத்துக் கொள்ளலாம். அதைக் கவனித்தவாறு கண்களைத் திறந்து சிறிது நேரம் செய்யலாம். சற்று நேரம் கழிந்த பிறகு கண்களை மூடி, இறைவன் அங்கே நம் முன் அமர்ந்திருக்கிறான் என பாவித்து பூஜையைத் தொடரலாம். பிறகும் முடியவில்லையென்றால், மற்றொரு முறை கண்களைத் திறந்து பூஜையைத் தொடரலாம்.*

சி: மானஸிக பூஜை செய்வதற்கு ஏதாவது நியமம் இருக்கிறதா**?**

ஜ: *மானஸிக பூஜை செய்வதற்கு எந்த விதமான நியமமும் இல்லை. எந்நேரத்திலும் செய்யலாம். எந்த முறையில் வேண்டுமானாலும் செய்யலாம். இறைவனை மானஸிகமாகப் பூஜை செய்தால் விசேஷ பலனுண்டு, மனதும் புனிதமாகும். அவனுடைய அருளையும் பெறலாம். மானஸிக பூஜையைத் தெரிந்து கொள்வதற்கு சிவ மானஸ பூஜை அல்லது ம்ருத்யுஞ்ஜய மானஸ பூஜா ஸ்தோத்ரம் போன்ற ஸ்தோத்ரங்களைப் பார்த்தால், அதைப் பற்றிப் புரிந்து கொள்ளலாம்.*

சி: மானஸிக பூஜையை இன்னார்தான் செய்ய வேண்டும் என்ற தகுதி வேறுபாடுகள் உள்ளனவா**?**

ஜ: *மானஸிக பூஜையை எல்லோரும் செய்யலாம். இவன் செய்யலாம், அவன் செய்யக்கூடாது என்று கிடையாது.*

சி: மானஸிக பூஜையை எவ்வளவு நேரத்திற்குச் செய்ய வேண்டும்**?**

ஜ: *எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் செய்யலாம். மானஸிக பூஜை செய்வது பழக்கத்திற்கு வரும் வரையில், நீண்டகாலம் அமருவது என்பது சற்றுக் கடினமாயிருக்கலாம். பழகப் பழக ஒருவனுக்கு இதில் ஏற்படும் ஆனந்தம் அதிகரிக்கும்.*

## *5. கங்கை*

சி: கங்கை ஒருவனின் பாவங்களைப் போக்குகிறது என்ற நம்பிக்கை உள்ளது**.** உண்மையாகவே அவ்வாறு செய்கிறதா**?**

ஜ: *ஆம். அதுபற்றிச் சந்தேகமேன்?*

சி: அப்படி ஒருவனின் பாவங்களைக் கங்கை போக்கிவிடும் என்றால், எந்தப் பாவத்தை வேண்டுமானாலும் செய்துவிட்டு அதற்குப் பிறகு கங்கையில் ஸ்நானம் செய்து அதைப் போக்கிக் கொள்ளலாமே!

ஜ: *கங்கையில் செய்த ஸ்நானம் அறியாமையால் செய்த பாவங்களைப் போக்கிவிடும். மேலும், அறிந்து எப்போதாவது செய்யப்பட்ட எந்தப் பாவங்களுக்காக வருந்துகிறோமோ அந்தப் பாவங்களையும் போக்கி விடும். 'கங்கையில் ஸ்நானம் செய்து பாவங்களைப் போக்கிக் கொள்வேன்' என்ற எண்ணத்தோடு வேண்டுமென்றே செய்யப்பட்ட பாவங்களிலிருந்து கங்கை விடுதலை தருவாள் என்று எதிர்பார்ப்பது நியாயமில்லை. இவ்வாறு கூறுவதால் கங்கையின் மஹிமையைப் பற்றிச் சற்றும் சந்தேகப்பட வேண்டாம். கோடிக்கணக்கான மக்கள் வெகுதூரம் பிரயாணம் செய்து 'கங்கை என்னைப் புனிதமாக்குவாள்' என்று தீவிர சிரத்தையுடன் செல்கிறார்கள். இறைவன் அவர்களுடைய சிரத்தையை வீணாக்குவதற்கு விரும்பமாட்டான்.*

*இது சம்பந்தமாக ஒரு கதையும் சொல்வதுண்டு. பார்வதி ஒரு சமயம் பரமசிவனிடம் 'எல்லோருடைய பாவங்களையும் கங்கை நீக்கி விடுவாளா' எனக் கேட்டாளாம். அதற்குப் பதிலளிக்கும் வகையில், பார்வதியை அழைத்துக் கொண்டு சிவன் ஒரு கிழவர் வேடம் பூண்டு வந்தாராம். தான் கங்கையில் மூழ்குவதாக நடிப்பதாயும், தன்னைக் காப்பாற்ற அங்கு வருவோர் போவோரை உதவ வேண்டுமாறும் அவர் பார்வதியிடம் கூறினார்.*

*மாறுவேடத்திலிருந்த பார்வதியும், ஆற்றில் (மூழ்கியவாறு நடிக்கும்) தன் கணவனைக் காக்க யாரேனும் வருவார்களா எனக் கூக்குரலிட்டாள். மக்கள் உதவுவதற்காக அங்கு வந்தனர். அன்னை அவர்களை நிறுத்தி 'யாருக்குச் சிறிதும் பாவம் இல்லையோ அவரே என் கணவரைத் தொடலாம்' எனக்கூறினாள். வந்தவர்களில் ஒருவர் மட்டும் சற்றும் தயங்காமல் ஆற்றில் குதித்து, நீந்திச் சென்று அவரைக் காப்பாற்றினார். சிவன் அறிவுறுத்தியவாறு பார்வதி ஆச்சர்யத்துடன், அவரை நோக்கி, 'உங்களுக்குப் பாவங்களே இல்லையா?' என்று வினவ, 'நான் உங்கள் கணவரைக் காப்பாற்றும் முன், கங்கையில் மூழ்கித்தானே சென்றேன். எனவே அப்பொழுதே என் பாவங்கள் போய்விட்டன' என்று சொன்னாராம். பார்வதியிடம் பரமசிவன், 'இவரைப் போன்று சிரத்தையிருந்தால் பாவங்கள் எல்லாம் போய்விடும் என்பதில் என்ன சந்தேகம் இருக்கமுடியும்?' என்று பதிலுரைத்தார். கங்கையின் மஹிமை அத்தகையது.*

# 6. வேதங்கள்

**சி: வேதங்கள் ஆரம்பம் இல்லாதவை என்று சொல்வதுண்டு. அப்படியா?**

*ஜ: ஆம், அவை பரம்பொருளின் மூச்சுக்காற்றைப் போல விளங்குகின்றன.*

**சி: சிலர் 'வேதங்கள் பல ஆயிரம் வருடங்களுக்கு முன் ஆரியர்களால் இயற்றப்பட்டன. மேலும் உபநிஷத்துக்கள் அதற்குப் பின் இயற்றப் பட்டன' என்று கூறுகிறார்கள். இந்தக் கருத்தை ஒப்புக் கொள்வதில் ஏதாவது தவறு இருக்கிறதா?**

*ஜ: இந்த அபிப்பிராயம் எங்களுக்குச் சம்மதமில்லை. வேதங்களுக்குப் பிறகுதான் உபநிஷத்துக்கள் இயற்றப்பட்டன என்று வைத்துக் கொண்டோமெனில், இப்போது எல்லா இடங்களிலும் தைத்திரீய உபநிஷத், தைத்திரீய ஆரண்யகத்தின் 7வது, 8வது, மற்றும் 9வது பிரச்னங்களாக இருக்கிறது என்று ஏன் கருதப்பட வேண்டும்? தைத்திரீய உபநிஷத் ஏதோ ஓர் ஊரில் வேதங்கள் இயற்றப்பட்ட பின்பு எழுதப்பட்டது என்று வைத்துக் கொண்டால், அதை எல்லா மக்களும் ஏன் வேதத்தின் பகுதியாகக் கருத வேண்டும்? மேலும் வேதத்தின் அதே பகுதிக்குச் சேர்ந்தது என்றும் ஏன் ஒப்புக்கொள்ள வேண்டும்?*

*வேதம் பல வருடங்களுக்கு முன்பு இயற்றப்பட்டது என்று வைத்துக் கொள்வோம். அவற்றை இயற்றியவர்கள் சிரத்தையுடன் இருந்தார்களா, அல்லது மற்றவர்களை ஏமாற்ற வேண்டும் என்ற ஒரே நோக்குடன் இருந்தார்களா? எந்தெந்த யாகங்களைச் செய்தால், ஸ்வர்க்கத்தைப் பெறமுடியும் என்று வேதங்களில் கூறப்பட்டுள்ளன. இவ்விஷயத்தை நாம் சாஸ்திரங்கள் மூலமாகத்தான் தெரிந்துகொள்ள வேண்டும். ஆதலால் வேதத்தை இயற்றியவர்கள் நேர்மையானர்கள் என்று வைத்துக் கொண்டால், ஸ்வர்க்கத்தைத் தரும் யாகங்களைப் பற்றித் தமது சொந்தக் கருத்துகளையே அவர்கள் எழுதியிருக்க முடியாது. அவர்கள் சிரத்தை இல்லாதவர்களாக இருந்தால், இந்த யாகங்களைத் தாங்களே எதற்காகப் பல வருடங்கள் செய்து வந்திருக்கவேண்டும்?*

*சம்பிரதாயத்தின்படி வேதத்தைக் கற்றுக் கொடுப்பவர்கள் வேதத்தை உச்சரிக்கும்போது அக்ஷரத்திலேயோ, ஸ்வரத்திலேயோ ஒருவிதமான தவறும் ஏற்படக் கூடாது என்கிற விஷயத்தில் மிகவும் தீவிரமாக இருப்பார்கள். அவர்கள் ஏன் அவ்வளவு தீவிரமாக இருக்கிறார்கள்? ஏனென்றால், அவர்களுக்கு வேதத்தைக் கற்றுக் கொடுத்தவர்கள் 'அக்ஷரம் மற்றும் அதன் ஸ்வரங்கள் மிகவும் முக்கியமானவை. அவற்றில் பிழை நேரக்கூடாது. அவ்வாறு நேர்ந்தால் நன்மை ஏற்படாது'*

என்று கூறியுள்ளனர். இவ்வாறு வேதத்தைப் படிக்கும் மாணாக்கன், அவனுடைய குரு, அவருடைய குரு என விசாரித்துக் கொண்டே போனால், வேதத்தை இயற்றியவர்கள் என்று யாராவது இருந்திருந்தால் அவர்களுக்கும் 'ஸ்வரம் மற்றும் அக்ஷரங்கள் மிகவும் முக்கியமானவை' என்ற நம்பிக்கையே இருந்திருக்கும் என்று தீர்மானம் செய்யலாம். ஸ்வரமில்லாமல் வேதத்தைக் கற்றுக் கொள்வது சுலபமாய் இருந்த போதிலும், 'ஸ்வரங்களைத் தவறாக உச்சரிக்கக் கூடாது; சரியாகச் சொல்ல வேண்டும்' என்று அவர்கள் ஏன் உறுதியுடன் இருந்தார்கள்? வேதம் புனிதமானது. அதை உச்சரிப்பதில் தவறொன்றும் ஏற்பட்டு விடக் கூடாது என்று தெரிந்திருந்ததால் தானே அவர்கள் உறுதியுடன் இருந்து தத்தம் சிஷ்யர்களுக்குக் கட்டளை ஏற்படுத்தி-யிருப்பார்கள்? 'வேதத்தை இயற்றியவர்கள்' என்று யாராவது இருந்திருந்தால், தாம் இயற்றிய புத்தகத்தை மிகவும் புனிதமானது என்று தாமே கருதுவதற்கு அவகாசமில்லை. ஆகையால், மனிதர்கள் வேதங்களை இயற்றியிருக்க முடியாது.

இராமாயணம் பல வருடங்களுக்கு முன்பு இயற்றப்பட்டதென்று பண்டிதர்கள்கூட ஒப்புக் கொள்கிறார்கள். அயோத்தியைச் சேர்ந்த இராமர் வேதத்தை அறிந்தவர் என நாம் காண்கிறோம். இராமனைப் போல, இலங்கையை ஆண்ட இராவணனும் வேதத்தை அறிந்தவன் என்று தெரிந்து கொள்கிறோம். அவ்வளவு வருடங்களுக்கு முன்பு வேதம் எப்படி இவ்வளவு தூரத்திற்குப் பரவியிருக்க முடியும்? ஒரே ஒரு சாகையைக் கற்றுக் கொள்வதற்கே பல வருடங்களாகின்றன. பழைய காலத்தில் புத்தகங்களை உபயோகப்படுத்தாமல் தான் வேதத்தை அத்யயனம் செய்து கொண்டு வந்தார்கள். அவ்வளவு தூரம் பரவியிருக்க வேண்டுமென்றால், வேதத்தை எல்லோரும் புனிதம் என்று திடமாகக் கருதி ஒரே மாதிரியான வகையில் மனப்பாடம் செய்து கொண்டு வந்திருந்தால்தான் அதே வகையில் அது தொடர்ந்து வந்திருக்க முடியும்.

சிலர், வேதங்கள் பல வருடங்களுக்கு முன்பு, ஆதிகால மனிதனால் இயற்றப்பட்டன என்று கூறுகிறார்கள். அப்படியென்றால் வேத மந்திரங்களுக்கு இவ்வளவு சக்தியும் பலமும் எப்படி இருக்கின்றன? பல வியாதிகள், வைத்தியர்களால் குணப்படுத்த முடியாது என்று இருந்தாலும் வேத மந்திரங்கள் மூலமாகக் குணமாகின்றன. இம்மாதிரி சம்பவங்களை பலர் கண்டிருக்கிறார்கள். வேதங்கள் பண்டைக் காலத்தில் இயற்றப்பட்ட சாமான்ய புத்தகங்கள் என்றால், இம்மாதிரி சக்தி வந்திருக்காது. ஆதலால், நாம் வேதத்தைப் பரம்பொருளால் உபதேசிக்கப்பட்டது என்றே நிச்சயமாகக் கருதுகிறோம்.

சி: இப்படி இருந்தால் பல மந்திரங்களுக்குப் பல ரிஷிகள் இருக்கிறார்கள் என்று எப்படிக் கூற முடியும்? ஏனென்றால், ரிஷிகள் மந்திரங்களை இயற்றி இருந்தால், அவர்கள்தானே மந்திரங்களுக்கு ஆசிரியர்கள் ஆவார்கள்?

*ஜ: அந்தந்த மந்திரங்களுடன் சம்பந்தப்பட்ட ரிஷிகள் அவைகளை உண்டாக்கியவர்கள் இல்லை. இறைவனிடமிருந்து, மந்திரங்களுடைய ஸாரத்தை உணர்ந்து ரிஷிகள் அதை உலகிற்கு தெரியப்படுத்தினார்கள். அவர்கள் தாமாகவே மந்திரங்களை உண்டாக்கவில்லை. பிரம்மா வேதத்தை, உலகத்தை ஸ்ருஷ்டி செய்யும்போதே உபதேசம் செய்தார். அதன்பின், கலியுகத்து ஜனங்களின் குறைந்த அறிவாற்றலை மனதில் கொண்டு, பகவானின் அவதாரமாகிய வேதவியாசர், வேதங்களை நெறிமுறைப்படுத்திக் கொடுத்தார்.*

சி: வேதத்தில் நாம் பல கதைகளைக் காண்கிறோம். இவைகள் உண்மையில் வரலாற்று நிகழ்ச்சிகளா?

*ஜ: இல்லை. இவைகள் உண்மையாக நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றிய வர்ணனை அல்ல. பரம்பொருளின் மூச்சுக்காற்றைப் போலிருக்கும் வேதத்திற்கு ஆரம்பமேயில்லை. ஆகவே அவை உண்மையாக நடந்த வரலாற்று நிகழ்வுகளின் பதிவுகள் அல்ல. உதாராணத்திற்கு, ப்ருஹதாரண்யக உபநிஷத்தில், யாக்ஞவல்க்யருக்கும், ஜனகருக்கும் நடந்த ஒரு உரையாடலைப் பற்றி இருக்கிறது. அது ஏதோ ஒரு காலத்தில் வாழ்ந்த மனிதர்களிடையே நடந்த உரையாடல் இல்லை. இதுபோன்று உண்மையாகவே ஒரு சம்பவம் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் இதுதான் உபநிஷத்தில் வர்ணிக்கப்பட்டு இருக்கிறதென்று கூற முடியாது. வேதத்தில் உள்ள கதைகள் ஒரு விஷயத்தை நமக்கு நன்கு புரியும்படி செய்வதற்காகத்தான் இருக்கிறது.*

சி: 'நீண்ட காலத்திற்கு முன்பு, பரிணாம வளர்ச்சியின் மூலம் மனிதன் படிப்படியாக உருவானான். அவனுடைய அறிவு இன்றைய மனிதனின் அறிவுபோல் வளர்ச்சியை அடைந்திருக்கவில்லை. அவன் பழமையான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தான். சில காலம் சென்ற பிறகு அவனது அறிவும் தற்போதுள்ளது போல் வளர்ச்சியை அடைந்திருக்கலாம். அதற்குப் பிறகு பகவான் வேதத்தை உபதேசம் செய்திருக்கலாம்'. இம்மாதிரி கருதுவதில் ஏதேனும் தவறிருக்கிறதா?

இந்த வகையில் கருதினால் நாம் தொல்லுயிரியலாளர்களுடைய கண்டுபிடிப்புகளுக்கு எதிர்மாறான கருத்தை வைத்துக் கொள்ளாதவர்களாகவும் இருக்கலாம். அதேசமயம் வேதமும்

**இறைவனால் உபதேசிக்கப்பட்டது என்றும் கருதலாம். இதைப்பற்றி ஜகத்குரு என்ன கூறுகிறார்கள்?**

*ஜ: இது சரி வராது. ஏனென்றால், எப்போது பகவான் மனிதனை உண்டாக்கினானோ, அப்பொழுதே வேதத்தையும் உபதேசித்திருக்க வேண்டும். கீதையில் கிருஷ்ண பரமாத்மா இவ்வாறு கூறியுள்ளார் "முன்பு யக்ஞங்களுடன் பிரஜைகளையும் ஸ்ருஷ்டி செய்து பிரஜாபதி கூறினார்."[1] யக்ஞங்கள் வேதத்தை அடிப்படையாகக் கொண்டவை. யக்ஞத்தைச் செய்ய வேண்டுமானால், அதற்கு முன்பு வேதங்கள் இருந்திருக்க வேண்டும். ஆகவே இதிலிருந்து வேதத்தையும் உலகத்தை ஸ்ருஷ்டித்த சமயத்திலேயே இறைவன் உபதேசித்தான் என்று நமக்குத் தெரிகிறது. இதை நாம் ஒப்புக் கொள்ளாவிட்டால் நமக்கு எந்த ஒரு கேள்விக்கும் பொருத்தமான பதில் கிடைக்காது. ஆதிமனிதன் வேதத்திற்கு முன்பு வாழ்ந்திருந்தானேயானால், அவனுக்கு தர்மம் அதர்மம் என்பதே தெரியாமல் இருந்திருக்க வேண்டும். தர்மம் மற்றும் அதர்மத்தின் கோட்பாடுகள் இறைவனால் அவனுக்குத் தெரியப்படுத்தப்படவில்லை என்ற நிலையில், அவன் எதைச் செய்திருந்தாலும், அது அவனுக்கு, 'எல்லாம் நல்ல பலன்கள் அல்லது எல்லாம் தீய பலன்கள்' என்பதாகவே தந்திருக்க வேண்டும். அவன் செய்த எல்லா காரியங்களும் நல்ல பலனையே தந்தன என்ற கூற்றை ஆராய்ந்தால், 'வேதம் வருவதற்கு முன் ஒருவன் எது செய்திருந்தாலும் நல்ல பலன் கிடைத்தது. ஆனால் வேதம் வந்தபின் அவனுடைய செயல்களுக்குக் கெட்ட பலன்களும் கிடைக்கலாம்' என்றல்லவா முடிவு வரும்? இது நியாயமா? ஆகவே வேதம் உண்டாவதற்கு முன் ஒருவனுக்கு எப்போதும் நல்ல பலன்களே இருந்தால், நரகமே செல்லத் தேவையில்லையென்றும், வேதம் தோன்றிய பின்னர் ஒருவனுக்கு நரகம் செல்லவும் வாய்ப்பிருக்கிறது என்றும் சொன்னால் அதை ஒப்புக்கொள்ள முடியுமா? அதேபோல் வேதம் தோன்றும் முன் எல்லாமே தீய பலன்களாகவே தந்தன என்ற கூற்றை எடுத்துக் கொண்டாலும் அதுவும் நியாயமில்லை.*

*ஆகவே எப்போது பகவான் உலகத்தைப் படைத்தானோ, அப்போதே அவன் வேதத்தையும் உபதேசித்திருக்க வேண்டும். அதாவது தர்ம, அதர்ம விஷயங்களில் உபதேசம் பெற வழியிருந்திருக்க வேண்டும். இந்த உபதேசங்களையே நாம் வேதத்தில் காண்கிறோம். ஆதலால் முதலில் மனிதன் படைக்கப்பட்டு, பிறகுதான் வேதம் வந்தது என்பதும் சற்றும் சரியில்லை.*

---

[1] *பகவத் கீதை 3.10*

சி: பல்லாயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்னதாக டைனாஸர் என்ற விலங்கினம் உலகில் ஆதிக்கம் செலுத்திக்கொண்டிருந்தது என்பதை நிலைநாட்டும் வகையில் விஞ்ஞானிகளுக்கு கணக்கற்ற புதைப் படிவங்கள் கிடைத்துள்ளன. மேலும், அதற்கு வெகு காலத்திற்குப் பின், இக்கால மனிதர்களைப் போலல்லாமல், குறைந்த மூளை வளர்ச்சியுடன், மனிதர்களைப் போன்று விளங்கும் உயிரினங்கள் வாழ்ந்தன என்று புதைபடிவங்களும் மற்ற ஆதாரங்களும் உறுதிப் படுத்துகின்றன. வேதங்களின் பாரம்பரியமான கருத்துக்களை பேணுவதற்காக, புதைபடிவங்கள் மற்றும் இது போன்ற சான்றுகளை, வலுக்கட்டாயமாகப் புறக்கணிக்க வேண்டுமா என்ன**?** அல்லது, புதைபடிவங்கள் முதலியனவற்றை ஏற்றுக் கொண்டு, யுக்திகளை உபயோகித்து, ஏதாவது விதத்தில் நமது பாரம்பரிய கருத்துக்களையும் ஆதரிக்க வழி உள்ளதா**?**

ஜ: *புதைபடிவங்கள் போன்றவற்றை அலட்சியப்படுத்தத் தேவையில்லை. ஓர் உதாரணத்தைக் கொண்டு இதற்குச் சமாதானம் சொல்லாம். ஒரு கனவு காண்கிறாய் என்று வைத்துக்கொள்வோம். அங்கு நீ ஒரு பத்துவயது சிறுவனாய் இருப்பதாகக் காண்கிறாய் என்றால், அதற்கு முன்பு குழந்தையாக இருந்திருக்க வேண்டுமல்லவா?*

சி: ஆம்.

ஜ: *கனவானது நீ இரண்டு வயதுக் குழந்தையாய் இருந்த நிலைமையில் இருந்து ஆரம்பித்ததா?*

சி: இல்லை, கனவு திடீரென்று நான் பத்து வயதுச் சிறுவனாய் இருப்பதிலிருந்துதான் தொடங்குகிறது.

ஜ: *அதாவது கனவில் நீ முதலில் சிறிய பையனாக இருந்திருக்க வேண்டும் என்று கூறுவது பொருத்தமாயிருப்பது போலிருந்தாலும் உண்மையில் அந்த நிலைமை இருந்திருக்கவில்லை. சரிதானே?*

சி: ஆம்.

ஜ: *காலத்தை அங்கு, பின்னால் இழுப்பது பொருத்தமாக இல்லை. எப்படி ஒரு கனவு திடீரென்று தொடங்குகிறதோ அதேபோல் (கனவைப் போல்) இவ்வுலகமும் திடீரென்று உண்டாகி விட்டது என்பது பாரம்பரிய கருத்து. வேதத்தில் இது கூறப்பட்டுள்ளது. சூரியன் உதயமாகும் பொழுதே எவ்வாறு வெளிச்சம் நொடிப் பொழுதில் எல்லா இடங்களிலும் பரவுகின்றதோ, அதுபோலவே ஸ்ருஷ்டியும் நொடிப் பொழுதில் உண்டாயிற்று என்று ருக் வேதத்தின் நாஸதீய சூக்தத்தின் ஐந்தாவது மந்திரத்தினுடைய வேத பாஷ்யத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*இதை வைத்துப் பார்த்தோமென்றால், மனிதர்கள் நன்கு வளர்ச்சியடைந்த மூளையுடனேயே தோன்றினார்கள் என்பது சாத்தியமே. நான் உனக்குக் கொடுத்திருக்கும் விளக்கம், சமாதானம் ஒன்றின் ஒரு சிறு அம்சம் மட்டுமே. இதைப்போல பல்வேறு விதமான சமாதானங்களையும் கொடுக்கலாம்.*

**சி:** வேதங்களைக் குருமுகமாகத்தான் கற்றுக்கொள்ள வேண்டுமா**?** டேப் ரிக்கார்டர் மூலம் நாமாகவே கற்றுக்கொள்ளக்கூடாதா**?**

*ஜ: வேதங்களை குருமுகமாகத்தான் கற்றுக்கொள்ள வேண்டும். அதனால்தான் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. "வேதத்தை மனப்பாடம் செய்து கற்பது என்பது, குருவால் மனப்பாடம் செய்து கற்கபதை முன்னர் கொண்டது."[1] ஒரு டேப் ரிக்கார்டர் மூலம் வேத அத்யயனம் செய்து கொண்டால், அது வேத அத்யயனம் என்றே ஆகாது. பொதுவாக, ஒரு கிளி ஒருவனை "இங்கே வா" என்று கூப்பிட்டால், அவன் அதற்கு மதிப்புக் கொடுத்து அதனிடம் செல்ல மாட்டான். மாறாக, அதே வார்த்தைகளால் இன்னொரு மனிதன் அவனைக் கூப்பிட்டால், அவன் கட்டாயம் செல்வான். அதாவது வேறுபாடு என்பது வார்த்தைகளில் இல்லை. அவற்றைச் சொல்பவனில் தான் உண்டு. அதேபோல் வேதாத்யயனம் என்பது குரு சொல்லக் கேட்டு, அதை சிஷ்யன் மீண்டும் உச்சரிப்பதே தவிர, டேப்ரிக்கார்டர் முதலியவற்றின் மூலம் கற்பது வேதமாகாது. வேத மந்திரங்களைக் கூறிய பலனையும் அது தராது. குரு சொல்லக் கேட்ட வேதத்திற்கு இருக்கும் சக்தியும், தெய்வீகத் தன்மையும் பதிவு செய்யப்பட்ட குரலுக்குக் கிடையாது.*

**சி:** சிவ பூஜையின் பொழுது ருத்ர–ப்ரச்னம் ஜபிக்கப்படுகிறது**.** இதைப் போன்ற வேதமந்திரங்களின் மகத்துவத்தைப் பற்றி நிறையக் கூறப்பட்டுள்ளன**.** இருப்பினும், ருத்ரத்தின் சில பாகங்களில் லௌகிக விஷயங்களுக்காக வேண்டிப் பிரார்த்தனைகள் இருக்கின்றனவே**?**

*ஜ: அதனால் என்ன?*

**சி:** மோட்சத்தை மட்டும் விரும்புபவனுக்கு அவ்விஷயங்களில் விருப்பம் இல்லாமல் இருந்தாலும், அவனும் அம்மந்திரங்களை ஜபிக்கலாமா**?**

*ஜ: ருத்ரத்தை ஸந்யாஸிகளும் ஜபிக்கலாம் என்றுதான் சாஸ்திரம் கூறுகிறது. ஸந்யாஸிகள் லௌகிகப் பொருட்களை விரும்பக் கூடாதென்பது அனைவரும் அறிந்ததே.*

---

[1] *ஸ்லோகவார்திகம் - 1.1.7.366*

சி: அப்படியென்றால் அவர்கள் எவ்வாறு ருத்ரத்தை ஜபிக்க அனுமதிக்கப் படுகிறார்கள்?

*ஜ: எப்பொழுதெல்லாம் ஒருவன் வேத மந்திரங்களை ஜபிக்கிறானோ, அப்போதெல்லாம் அதில் கூறப்பட்டுள்ள பொருட்களை அவன் விரும்புகிறான் என்று அர்த்தமில்லை. ருத்ரம் போன்ற மந்திரங்கள் மிகவும் புனிதமானவை. அவைகள் மூலமாகப் பிரார்திக்கப்பட்ட விஷயங்களில் நாட்டமில்லாத போது, ஒருவனுக்கு மனத்தூய்மையும், ஈச்வரனின் அனுக்கிரஹமும் கிடைக்கும். மேலும், ஒருவன் இவைகளை ஜபிக்கிறான் என்பதற்காகவே, அதில் கூறப்பட்ட பொருட்கள் அவன் மீது வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படமாட்டாது. ஆகவே ஸந்யாஸிகளும் நிச்சயமாக ருத்ரத்தை ஜபிக்கலாம். அதன் மூலமாக இறைவனின் அனுக்கிரஹம், மனத்தூய்மை, மற்றும் பரம்பொருளைப் பற்றிய ஞானத்தையும் பெறலாம்.*

## *7. உடலினின்றும் ஆத்மாவின் வேறுபட்ட தன்மை*

சி: ஜடப்பொருள்களே சைதன்யத்தின் உற்பத்தி ஸ்தானம் என்று பல விஞ்ஞானிகள் நிலை நிறுத்துகின்றனர். உயிரணுவைப் போலவோ அல்லது மூளையைப் போலவோ, ஜடப்பொருட்களின் பகுதிகள் ஒன்று சேர்ந்து ஒரு குறிப்பிட்ட வடிவை அடையும் பொழுது, அதிலிருந்து சைதன்யம் வெளிப்படுகிறது என்பதே அவர்கள் கருத்து. இது போன்ற கருத்து தவறா?

*ஜ: இவ்வாறு கூறுவது பண்டைக்கால சார்வாகர்களின் கருத்தைப் போன்று இருக்கிறது. இது சரியல்ல. எதனால் விஞ்ஞானிகள், ‘ஜடப் பொருளிலிருந்துதான் சைதன்யம் தோன்றுகிறது. சைதன்யம் என்னும் தனி வஸ்து இல்லை’ என்று சொல்கிறார்கள்?*

சி: ஏனெனில், உடலோ, உயிரணுக்களோ, மூளையோ இருக்குமிடத்தில் தான் சைதன்யம் தெரிகிறது. அவை இல்லாத இடங்களில் நமக்குச் சைதன்யம் தெரிவதில்லை.

*ஜ: இதுபோன்ற யுக்தி பொருத்தமாக இருக்காது. உதாரணம் ஒன்றைப் பார்ப்போம். ஒளியிருக்கும் பொழுதுதான், பொருள் தெரிகிறது. ஒளி இல்லாவிட்டால் பொருள் தெரிவதில்லை. இருப்பினும், பொருள் தெரிவது என்பது ஒளியின் குணம் அல்ல. அதைப் போலவே, உடம்பு அல்லது மூளை இருக்கும் இடத்தில் சைதன்யம் தெரிகிறது. அவை இல்லாத இடத்தில் சைதன்யம் தெரிவதில்லை. இருப்பினும், சைதன்யத்தை உடலினது தன்மையாகவோ அல்லது மூளையின்*

தன்மையாகவோ கூற முடியாது. நிலவுக்குச் சுயமாகப் பிரகாசிக்கும் தன்மை கிடையாது. இருப்பினும் இரவில் சூரியனின் வெளிச்சம் நிலவில் பிர்திபலிப்பதை நாம் பார்க்கிறோம். நிலவைப் போன்று, உடலுக்கோ அல்லது மூளைக்கோ இயல்பாகவே சைதன்யத்தின் பிரகாசம் கிடையாது. ஆனால், அவை சைதன்யத்தை விசேஷமாக வெளிப்படுத்தும் கருவியாக (ஊடகமாக) இயங்குகிறது. ஒளிவீசும் சூரியனைப் போல, சைதன்யத்திற்கு, உடலினின்றும் அல்லது மூளையினின்றும் வேறான தனித்தன்மை வாய்ந்த (எதையும் சார்ந்திராத) இருப்பு உள்ளது.

சாஸ்திரம் என்பது ஓர் உத்தமமான பிரமாணமாகும் (சரியான அறிவுக்கான சாதனம்). நமது யுக்திகளைக் கொண்டு ஒரு தீர்மானமான முடிவுக்கு வரமுடியாது. ஒன்றை நாம் சரியென்று யுக்தியின் துணையுடன் அறுதியிட்டுக் காண்பித்ததை, மிகுந்த புத்திசாலியான மற்றொருவன், அதற்கு நேர்மாறாக வாதிடுவான் எனில், நாம் முன்னர் சரி என்று எதை நினைத்தோமோ, அதைத் தவறு என்று ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கும். நாம் எந்த வாதத்தின் அடிப்படையில் நமது மனதை மாற்றிக் கொண்டோமோ, வேறொரு வாதத்தின் மூலம், அதை வேறொருவன் தவறு என்று நிரூபித்துவிடலாம். இதனால், தர்க்கத்திற்கு முடிவே கிடையாது. வேதங்களை அடிப்படையாகக் கொண்ட யுக்திதான் தீர்மானமானதும், நாம் நாடத்தக்கதும் கூட. வேதங்கள் இறைவனால் உபதேசிக்கப்பட்டவை, எனவே குறைபாடுகள் எதுவும் இல்லாதவை. ஆகவே நாம் அவைகளை ஒதுக்கிவிட முடியாது. சைதன்யம் என்கிற ஆத்மா, உடலினின்றும் வேறானது என்பதை வேதங்கள் மிகத்தெளிவாக அறியப்படுத்துகின்றன. எனவே நாம் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். சுத்த சைதன்யமே ஆத்மா, என்ற ஞானிகளின் பிரத்யட்ச அனுபவம், சாஸ்திரங்களின் கூற்றுக்கேற்பவே உள்ளன. ஆத்மா புலன்களுக்கு அப்பாற்பட்டதாலும், செயல்பாடற்று, தோற்றமற்று இருப்பதாலும், மேலும் அதைக் கண்டறிய முயலும் விஞ்ஞானிகளுடைய உண்மை ஸ்வரூபமாகவே இருப்பதாலும், அது அறிவியல் ஆராய்ச்சியின் எல்லைக்கு அப்பாற்பட்டது என்பதே வாஸ்தவமாகும். எனவே, இவை மூலமாக ஆத்மாவின் இருப்பை மறுப்பது என்ற கேள்விக்கே இடமில்லை.

ஜடப்பொருளிலிருந்துதான் சைதன்யம் உண்டாயிற்று என்பதை ஒரு விஞ்ஞானியால் நிரூபிக்க முடியுமா? முடியாது. இதுவரை எவராலும் முடியவில்லை. ஏனெனில் ஒரு விஞ்ஞானி அவனது ஆராய்ச்சிக் கூடத்தில் ஓர் உயிரை உண்டாக்கியதாகக் கூறுகிறான் என வைத்துக் கொள்வோம். முதலிலேயே அவன் உபயோகப்படுத்தும் பொருளில்

செயல்படாத நிலையில், வெளித் தெரியாமல் சைதன்யம் இருந்திருக்கவில்லை என்றும், அது பின்னர் வெளிப்பட்டிருக்கலாம் என்றும் எப்படி நிரூபிக்க முடியும்? அதை நிரூபிக்கவே முடியாது. அதே போல், சைதன்யம் ஜடப்பொருள்களிலிருந்து தோன்றுகிறது என்பதை அவனால் தீர்மானமாக நிரூபணம் செய்ய முடியாது. ஆகையால் அவன் கூற்றை ஆதரிக்கத் தேவியேயில்லை.

விஞ்ஞானத்தினால் நமக்குப் பல பிரயோஜனங்கள் இருக்கின்றன. அதைப் பற்றிச் சந்தேகமே இல்லை. எனினும் விஞ்ஞானத்திற்குப் பெரும் மதிப்பு இருக்கிறது என்பதிற்காக, 'சைதன்யம் ஜடப் பொருளை மட்டும் அடிப்படையாகக் கொண்டது' என்பது நன்கு நிரூபிக்கப்பட்ட ஒன்று என்றோ அது ஏற்றுக் கொள்ளத் தகுதியானது என்று கூறும் சில விஞ்ஞானிகளின் கருத்து ஏற்புடையதல்ல. எப்படியானாலும், பொருள்முதல் வாதத்தை (materialism) அறிவியல் தன் அடிப்படையிலேயே ஏற்றுக்கொள்கிறது என்பது உண்மை அல்ல.

பல பெரிய விஞ்ஞானிகள் ஆஸ்திகர்களாய் இருந்தார்கள், இப்போதும் இருக்கிறார்கள் என்பதே உண்மை. எனவே, அறிவியலை விசுவாசமாக ஆதரிக்கிறோம் என்பதற்காக 'சைதன்யம் ஜடப் பொருளினின்றும் வேறுபட்டது' என்பதை மறுக்க வேண்டிய அவசியமில்லை.

ஆத்மா உடலினின்றும் வேறுபட்டது என்பதை நமது சாஸ்திரங்கள் வகுத்துரைக்கின்றன. மேலும் அதற்காக கணக்கற்ற காரணங்களையும் கொடுத்து தெளிவுபடுத்துகின்றன. எனவே இவ்விஷயத்தில், எந்தவித சந்தேகத்திற்கோ அல்லது தவறான கருத்திற்கோ இடம் கொடுக்கக் கூடாது.

## 8. மறுபிறவி

சி: சாஸ்திரங்கள் மறுபிறவி இருக்கிறது என்று கூறுகின்றன. இதற்கு ஏதாவது யுக்திகளும் இருக்கின்றனவா?

ஜ: ஆம். பல விதமான யுக்திகள் இருக்கின்றன. உலகத்தில் ஒருவன் துன்பப்படுகிறான், மற்றொருவன் சந்தோஷமாக வாழ்கிறான். இதற்குக் காரணமென்ன? இந்தப் பிறவியில் செய்த கர்மங்களின் காரணமாக பலனில்லாவிட்டாலும் சிலர் துன்பமும், வேறு சிலர் இன்பமும் அடையக் காரணம் என்ன? சிறு குழந்தைகளிடத்தும் இது போன்ற நிலை இருப்பதை பார்க்கிறோம். இதற்கெல்லாம் பதில் கூறுவதற்கு, மறுபிறவி என்று ஒன்று இருப்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். சென்ற பிறவியில் நாம் செய்த பாவச்செயல்களின் விளைவாகவே

நாம் துன்பங்களையும், புண்ணியச் செயல்களின் பலனாக நாம் இன்பங்களையும் தற்போது அனுபவிக்கிறோம் என்று கூறுவதே பொருத்தமாக இருக்கும்.

மேலும் சில மக்கள் தமது முற்பிறவியைப் பற்றிய ஞாபகங்கள் பெற்றிருக்கிறார்கள். விஞ்ஞானிகளும் இது விஷயமாக ஆராய்ச்சி செய்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். முற்பிறவியை ஞாபகம் செய்து கொண்ட சிலர், சில நிகழ்ச்சிகளையும் சில காட்சிகளையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவைகள் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. நமக்கு அனுபவம் ஒன்று இல்லாமலிருந்தால், தற்போது ஞாபகம் என்பது எப்படி வரும்? இதுபோன்ற நினைவுகள் மறுபிறவி இருப்பதை ஊர்ஜிதப்படுத்துகின்றன.

நமது சாஸ்திரங்கள், சில நோய்கள் நீங்க சில பிராயச்சித்தங்களைக் கூறுகின்றன. அப்பிராயச்சித்தங்களைச் செய்தால், அவ்வியாதிகள் தீர்ந்து விடுகின்றன. முற்பிறவியில் செய்த பாவச் செயல்களுக்கான பிராயச்சித்தங்கள், மறுபிறவி என்பதே இல்லாமலிருந்தால் எப்படி இப்பிறவியில் ஏற்படும் வியாதியைப் போக்க முடியும்? நம்பிக்கை மட்டும் வியாதியை குணப்படுதுகிறது என்று கூறினால் பிராயச்சித்தங்களை நம்பிக்கையோடு செய்தாலும் அவற்றை அறியாமையினால் தவறான வழியில் செய்தால் அவை ஏன் பலனளிப்பதில்லை என்பதை நம்மால் விளக்க முடியாது.

சில குழந்தைகள், தம் சிறுவயதிலேயே சில சாமர்த்தியங்களைக் காட்டுகின்றன. இப்பிறவியிலேயே அச்சிறு வயதிற்குள், அவ்வளவு சாமர்த்தியங்களையும் அவை பெற்றுக் கொண்டிருக்க முடியாது. குழந்தையின் தந்தை, தாத்தா முதலியவர்களிடத்தும் அவ்விதமான திறனை நாம் காணாமலிருக்கலாம். இதிலிருந்து, குழந்தை முற்பிறவியில், அச்சாமர்த்தியங்களைக் கொண்டிருக்க வேண்டும். இம்மாதிரியான குழந்தைகளின் ஆற்றல் மறுபிறவி உண்டென்பதற்குச் சான்றாக அமைகிறது.

மறுபிறவியை நாம் ஒப்புக்கொள்ளாவிட்டால், இறைவன் பாரபட்சமாக நடந்துகொள்கிறான் என்று முடிவுக்குத்தான் வரவேண்டும். ‘இறைவன் ஒரு சிலருக்கு இன்பத்தையும் வேறு சிலருக்குக்குத் துன்பத்தையும் அளிக்கிறான். மேலும் இறைவனுக்குக் கருணையே கிடையாது. ஏனெனில் ஜனங்கள் துன்பத்தை அனுபவிக்கிறார்கள்’. இம்மாதிரி இறைவனுக்குக் குறைபாடுகள் உள்ளதாக யாரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். மறுபிறவியையே ஒப்புக்கொள்வர்.

*பிறந்த குழந்தைக்கு யாரும் ஒன்றும் சொல்லிக் கொடுக்காமல் இருந்தாலும் தானாகவே தாயின் பாலைக் குடிக்கிறது. ஏனெனில், தாய்ப்பாலிலிருந்து திருப்தி கிடைக்கும் என்ற அறிவு அக்குழந்தைக்கு இருந்திருக்க வேண்டும். பிரயோஜனம் என்பது இல்லாமல், முட்டாள் கூட ஒரு செயலில் ஈடுபடமாட்டான். தாய்ப்பாலைக் குடிக்க முயற்சி செய்யும் குழந்தைக்கும் அதிலிருந்து திருப்தியுண்டு என்ற அறிவு இருந்திருக்க வேண்டும். அந்த அறிவு இப்பிறவியில் ஏற்பட்டிருக்க முடியாது. ஏனென்றால், இதற்கு முன்னர் அக்குழந்தை இப்பிறவியில் தாய்ப்பாலைக் குடிக்கவில்லை. ஆகவே குழந்தை முற்பிறவியில்தான் அந்த அறிவை அடைந்திருக்க வேண்டும். இதுவும் முற்பிறவி இருப்பதைக் காட்டுகிறது.*

*மறுபிறவியை ஒப்புக் கொள்ளாமலிருந்தால், மனிதன் இறந்த பின் அவன் எப்போதும் ஸ்வர்க்கத்திலோ, அல்லது நரகத்திலோ வாழ்வான் என்று கூற வேண்டி வரும். இது சரியாகுமா? ஏனெனில், எதற்கு ஆரம்பமிருக்குமோ அதற்கு முடிவுமிருக்கும். ஆகவே ஸ்வர்க்கத்தில் போய் வாழ்வதற்கு ஒரு ஆரம்பம் இருக்கையில் முடிவும் இருந்தே தீர வேண்டும்.*

*மேலும், ஒருவிதமான பாவமோ புண்ணியமோ செய்யாத ஒரு குழந்தை இறந்தபின் எங்கு செல்லும் என்ற கேள்வி எழும். இதற்குப் பதிலாக 'நரகம்' என்று சொன்னால், செய்யாத குற்றங்களுக்கு அது தண்டனை அனுபவிக்க வேண்டும் எனப்பொருள் வரும். 'ஸ்வர்க்கமே செல்லும்' என்றால், செய்யாத புண்ணியங்களுக்காகப் அதற்குப் பலன் கிடைக்கிறது என்று பொருள் வரும். எனவே நாம் மறுபிறவியை ஒப்புக்கொள்ளவில்லை எனில் இது போன்ற பைத்தியக்காரத்தனமான முடிவுதான் கிடைக்கும். நான் மேற்கூறியவை, சில காரணங்களே. மேலும் பல காரணங்கள் உள்ளன. அத்தகைய யுக்திகளாலும் மறு பிறவியென்பது உண்டு என்று நாம் தெரிந்துகொள்ளலாம்.*

## *9. விதியும் முயற்சியும்*

சி: விதியை வெல்வதற்கு ஒருவனிடம் சக்தியிருக்கிறதா**?** இதை நான் கேட்பதற்குக் காரணம் என்னவென்றால் சாஸ்திரத்தில் ஒரு பக்கம் 'விதியை வெல்லலாம்' என்று காண்கிறோம்**.** உதாரணத்திற்கு யோக வாஸிஷ்டத்தில், ''வாஸனைகள் என்னும் ஆறு, நல்ல மற்றும் தீய பாதைகளில் ஓடுகிறது**.** முயற்சி மற்றும் பௌருஷத்தால் ஒருவன்

அதை நல்ல பாதையில் வழிநடத்த வேண்டும்."[1] என்று நாம் காண்கிறோம். இது, விதியைக் காட்டிலும் முயற்சிக்கு அதிக பலமிருக்கிறது என்பதைக் காட்டுகிறது.

மற்றொரு பக்கம், "எது விதிக்கப்படவில்லையோ, அது நடைபெறாது. எது விதிக்கப்பட்டு இருக்கிறதோ, அது நடைபெறாமல் போகாது."[2] என்றும் நாம் காண்கிறோம். ஆகவே, எனது சந்தேகத்தை ஜகத்குரு தெளிவுபடுத்துவார்களா?

*ஜ: முதலாவதாக, 'பிராரப்தம்' என்றால் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். அது பலனளிக்கும் முறையையும் சேர்த்து அதன் இயக்கத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். முற்பிறவிகளில் செய்த எந்த கர்மாக்கள் தற்போது பலனைத் தருகின்றனவோ, இவைதான் இப்பிறவிக்கு நேர்க் காரணமாக இருக்கின்றன. இதையே நாம் பிராரப்தம் என்கிறோம். பிராரப்தமானது வலுக்கட்டாயமாக ஒருவனை நல்வழியிலோ, தீயவழியிலோ தள்ளி விடுவதில்லை. அவை விருப்பு, வெறுப்பு என்ற வாஸனைகளை மனதில் கிளப்பிவிட்டு, படிப்படியாக இழுத்துச் செல்கின்றன. அதனால்தான் கிருஷ்ண பரமாத்மா, "ஞானிகள் உள்பட அனைவரும், அவரவர் குணாதசியத்திற்கு ஏற்றவாறே நடக்கின்றனர். சுபாவம் மக்களை பலவந்தப்படுத்துகிறது. கட்டுப்பாட்டால் என்ன செய்ய முடியும்?"[3] இவ்வாறு கூறியுள்ளார்.*

*இச்சுலோகத்தின் விளக்கவுரையின் போது சங்கரர் ஓர் எதிர்க் கேள்வியைத் தானே கிளப்புகிறார். அது என்னவென்றால் 'இதுபோல் ஒவ்வொருவனும் தன் ஸ்வபாவம் போல் செயல்களைச் செய்வான் என்றால் சாஸ்திரங்களுக்கே இடமில்லை. இப்படியிருக்கும் போது சாஸ்திரங்களில், 'நல்வழியில் நட' என்று கூறுப்படுவதனால் என்ன பிரயோஜனம்?' இம்மாதிரி கேள்வியை அவரே எழுப்பி, இது தவறு என்று கூறி, "விருப்பு வெறுப்புகள் ஒவ்வொரு இந்திரியத்தினுடைய விஷயத்திலேயும் அமைந்துள்ளன. (ஒருவனும்) அவற்றின் (விருப்பு வெறுப்புகளின்) வசத்தை அடையக்கூடாது. ஏனெனில், அவை இவனுக்கு விரோதிகள்"[4], என்ற சுலோகத்தை உதாரணமாகக் காட்டுகிறார்.*

*இதிலிருந்து விருப்பு வெறுப்புகளை வென்றால் நாம் அவைகளின் வசம் விழமாட்டோம் என்று தெரிகிறது. ஆகவே, சாஸ்திரங்களை*

---

[1] *யோக வாஸிஷ்டம் 2.9.30*

[2] *பஞ்சதசீ 7.168*

[3] *பகவத்கீதை 3.33*

[4] *பகவத்கீதை 3.34*

ஆதாரமாகக்கொண்டு விருப்பு வெறுப்புகளை நாம் விட்டுவிட்டால், எப்போதும் நல்வழியிலேயே செல்வோம். 'பிராரப்தத்தை வெல்ல முடியுமா?' என்று நீ கேட்டாயே, அதற்கு 'நிச்சயமாக வெல்லலாம்' என்பதே பதிலாகும். பிராரப்தத்தை வெல்ல முடியாது என்றால் மனிதனை அவன் செய்த செயல்களுக்குப் பொறுப்பாளி என்று கூற முடியாது. ஏனென்றால், அவன் அப்படித் தான் செய்யவேண்டியதாக இருந்தது என்று கூறிவிடலாம்.

முன்பு செய்யப்பட்ட எக்கர்மா இப்போது பலனளிக்குமோ அதுவே பிராரப்தம் என்று நான் கூறினேன். அது முற்பிறவியில் செய்த நம் முயற்சிகளினால் ஏற்பட்ட கர்மா. ஆதலால் முயற்சியைக் காட்டிலும் அதிக பலமுள்ளதாக பிராரப்தம் என்றுமே இருக்கமுடியாது. ஒருவன் முன் செய்த செயல்களின் வழியை இப்பிறவியில் முயற்சியால் மாற்றலாம். ஆனால் முற்பிறவிக் கர்மாவின் வாஸனை மிக அதிகமாக இருந்தால் அதை மாற்ற நாம் மிகவும் அதிகமாக முயற்சி செய்ய வேண்டியிருக்கலாம். இது பெரும்பாலான விஷயங்களிலும் உண்மை. ஒருவனுடைய சுதந்திரம் முழுமையானதல்ல என்பதென்னவோ நிச்சயம்.

இதற்கு உதாரணமாக தூணில் கட்டப்பட்டிருக்கும் ஒரு பசு மாட்டை எடுத்துக் கொள்ளலாம். கட்டப்பட்டிருக்கும் கயிறு எவ்வளவு நீளமோ, அது வரை பசுமாடு சுதந்திரமாகச் சுற்றலாம். ஆனால் அதைத் தாண்டிச் செல்லமுடியாது. அதேபோல் நாட்டின் விதியும், மற்றவர்களின் சுதந்திரமும், நமது முற்பிறவிக் கர்மாக்களும் நமது சுதந்திரத்திற்கு ஒரு எல்லையை வைக்கின்றன.

ஒரு மனிதன் ஓரிடம் செல்வதற்காக ஒரு ரயில் வண்டியில் ஏறிச் செல்லலாம். ஆனால், அவ்வண்டி விபத்துக்கு ஆளாகலாம். அதே போல் ஒருவன் சில சமயங்களில் தேர்வில் நன்கு எழுதியிருந்தாலும் வரவேண்டிய மதிப்பெண் வராமலிருக்கலாம். இதையெல்லாம் கண்டு வருத்தத்திற்கு இடம் கொடுக்கக்கூடாது.

ஆன்மிக வாழ்வில் ஏறக்குறைய எதையும் முயற்சியால் அடையலாம். பிராரப்தத்தின் வசப்படி ஒருவன் க்ரஹஸ்தனாக இருக்க வேண்டும் என்றிருக்கலாம். ஆனால், குருவின் ஆசிகளாலும், முயற்சியாலும் அவன் பிரஹ்மசர்ய வாழ்க்கையை கடைபிடித்து மேலும் ஸந்யாஸ வாழ்வும் பெறலாம். முன்வினைகளை அனுபவித்துத்தான் தீர வேண்டுமென்றாலும், பிராரப்தத்தின் சக்தியை இறைவனருளால் மிகவும் குறைத்து விடலாம். ஜபம், ஹோமம், தியானம், பூஜை, நல்லோர்களின் சேர்க்கை போன்றவைகளால் பிராரப்தத்தின் கெட்ட பலனை அதிக அளவிற்குக் குறைத்துவிடலாம்.

சி: ஒருவனின் ஜாதகத்தின்படி 80 வயது இருப்பான் என்று இருந்தால் அதற்கு முன் இறக்க மாட்டான் என்று அர்த்தமா? அதேபோல் இளமையிலேயே ஒருவன் இறக்க வேண்டுமென்று இருந்தால், அவன் அவ்வயதுக்கு மேல் உயிர் வாழ மாட்டானா?

ஜ: *ஜாதகத்தில் கணித்ததைவிட ஒருவன் நீண்ட காலம் அல்லது குறுகிய காலம் வாழ சாத்தியம் உள்ளது.*

சி: ஜாதகத்தைத் தவறாக குறித்ததனாலோ அல்லது ஒழுங்காகப் படிக்காததனாலோ தான் இவ்வாறு ஏற்படுமா?

ஜ: *இல்லையே.*

சி: அப்படியென்றால் 'ஜாதகத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு கூறப்பட்டதெல்லாம் பிரயோஜனமில்லை. மேலும் கைரேகையைப் படிப்பதிலும் அர்த்தமில்லை. ஆகவே ஜோதிஷ சாஸ்திரத்திற்கே பிரயோஜனமில்லை' என்பதா ஜகத்குருவின் கருத்து?

ஜ: *இல்லையே.*

சி: ஜகத்குரு சற்று விளக்கம் கூறுவார்களா?

ஜ: *ஜாதகம் ஒருவன் முற்பிறவியில் செய்த கர்மாவின் பலனைக் காட்டுகிறது. இந்தப் பிறவியில் நமது பிரயத்தினத்தின் மூலம் அதை நிச்சயமாக மாற்றிவிடலாம். இறைவனின் அருளைப் பெற்றால் மார்க்கண்டேயனைப் போல நாமும் வாழ வேண்டிய காலத்திற்கும் மேல் அதிகமாக வாழலாம். அதேபோல் கெட்ட வழியில் சென்று உடல்நலத்திற்குக் கெடுதல் செய்துகொண்டு வாழவேண்டிய காலங்கூட வாழாமல் மரணமடையலாம். மேலும் ஜோஸ்யர்களும் 'இம்மாதிரி செய்தால் பிராரப்த கர்மாவின் பலன் குறையும்' என்று கூறுவதை நாம் பார்த்திருக்கிறோம். ஜாதகத்தின் படியே தான் நடக்க வேண்டுமெனில், பிராயச்சித்தங்களுக்கு என்ன பிரயோஜனம்? ஆதலால் முயற்சியால் விதியை வெல்லலாமென்பதும் தீர்மானம்தான். ஜாதகத்தைக் கண்டு ஒருவனும் பயப்பட வேண்டிய தேவையில்லை. அது வரப்போகும் விஷயங்களுக்கு ஒரு முன் அறிவிப்பாக மட்டுமே இருக்கிறது. விதி நமக்கு எதிராக இருந்தால்கூட, நாம் நிச்சயமாக அதை மாற்ற முடியும். அதுமட்டுமின்றி, விதி அனுகூலமாகவும் இருக்கக்கூடும் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். அப்படியிருக்கும் பட்சத்தில், நமது முயற்சிகள் உடனடியாக பலனைத் தந்துவிடும்.*

# *10. தர்மம்*

**சி: எது தர்மம் எது அதர்மம் என்று எவ்வாறு தீர்மானம் செய்வது?**

*ஜ: சாஸ்திரங்களில் 'இதைச் செய்' என்று எது சொல்லப்படுகிறதோ அது தர்மமாகும். 'இதைச் செய்யாதே' என்று எது சொல்லப்படுகிறதோ, அது அதர்மமாகும். தர்மத்தை எவ்வாறு தீர்மானம் செய்ய வேண்டும் என்பதற்கு மனு கூறுகிறார்: "வேதம், வேதத்தைக் கொண்டு இயற்றப்பட்ட ஸ்ம்ருதி புத்தகங்கள், மஹான்களின் ஆசாரம், நம் மனச்சாட்சியின் திருப்தி ஆகிய இவை நான்கும் தர்மத்தின் லக்ஷணமாக இருக்கின்றன."[1] அனைத்துத் தர்மத்திற்கும் மூல காரணம் வேதமாகும். வேதத்தை ஆதாரமாகக் கொண்டதால் ஸ்ம்ருதியும் பிரமாணமாகும் (சரியான அறிவுக்கான சாதனம்). பரம்பரை ஆசாரம் (பரம்பரை வழக்கங்கள்) மற்றுமொரு பிரமாணமாகும். இது எல்லாவற்றையும் தவிர நம் ஆத்ம திருப்தியும் பிரமாணமாகும். இவையனைத்தும் எது தர்மம் எது அதர்மம் என்று தீர்மானம் செய்ய நமக்கு உதவுகின்றன.*

**சி: ஒரு செயல் ஒரு சூழ்நிலையில் தர்மமாகவும், அதே செயல் மற்றொரு சூழ்நிலையில் அதர்மமாகவும் இருக்க முடியுமா?**

*ஜ: இருக்கமுடியும். இதற்கு நாம் சாஸ்திரங்களையே நாடி முடிவு செய்ய வேண்டும். வெறும் யுக்திகளைக் கொண்டு தீர்மானம் செய்ய இயலாது. ஒரு வீட்டில் திருடிய ஒருவன், கைது செய்யப்பட்டால் 'நான் ஒரு பணக்காரனுடைய வீட்டிலிருந்துதான் திருடினேன். அதனால் அவனுக்கும் ஒருவித துன்பமுமிருக்காது. அதிகமான நஷ்டமுமில்லை. எனக்கோ அதனால் உணவு கிடைக்கப் பெற்றது. ஆதலால் இவ்வாறு திருடியதால் என்ன தவறு' என்று வாதாடலாம். இதை நீதிபதி ஏற்றுக் கொள்வாரா? மாட்டார். ஏனென்றால், அது சட்டப் புத்தகத்தில் எழுதப்பட்டதற்கு நேர்மாறானது. ஆதலால் அவனுக்குத் தண்டனை அளிக்கத்தான் செய்வார். அதேபோல், வேதத்தில் எது சரி என்று சொல்லப்பட்டிருக்கிறதோ, அதுதான் தர்மமாகும், எது தவறென்று சொல்லப்பட்டிருக்கிறதோ அது அதர்மமாகும். வெறும் வாதத்தை மட்டுமே கொண்டு தர்மத்தை நாமே தீர்மானம் செய்துகொள்ள முடியாது.*

**சி: நம்மை அறியாமல் செய்த தவறுக்கு நமக்கு பாவம் உண்டாகுமா?**

*ஜ: நமக்கு அதைச் செய்யும் போது தவறென்று தெரியாமலிருந்தால் அவ்வளவு பாவம் கிடையாது. அறியாமையால் செய்யும் தவறுகளால்*

---

*[1] மனு ஸ்ம்ருதி 2.12*

*உண்டாகும் பாவம், அவரவர் ஸ்வதர்மத்தை கடைபிடிப்பதன் மூலமாகவே நாசமடைகின்றது. அதற்கென விசேஷ பிராயச்சித்தம் செய்யத்தேவையில்லை. ஈச்வரனிடம் செய்யும் பிரார்த்தனைகளே இத்தவறுகளால் விளையும் பாவங்களைப் போக்க வல்லவை. ஆனால் ஒருவனுக்கு ஒன்று தவறு என்று தெரிந்து கொள்ள வாய்ப்பிருந்தும் வேண்டுமென்றே தெரிந்து கொள்ளாமல் இருந்தான் என்றால், நிச்சயமாக பாவம் வந்து சேரும். ஒருவன் ஓரளவிற்காவது எது சரி, எது தவறு எனத் தெரிந்துகொள்ள முயற்சி செய்ய வேண்டும்.*

**சி: எல்லோருக்கும் சமமாக ஒரே தர்மம் இருந்தால் சௌகர்யமாக இருக்காதா? ஒருவனுக்கு ஒன்று தர்மம், மற்றவனுக்கு இன்னொன்று தர்மம் என்பது தேவையா?**

*ஜ: உதாரணத்திற்கு, ஒரு கூட்டத்தில் எல்லோருக்கும் ஒரே அளவு சட்டைகளை கொடுத்து அணியச் சொன்னால் அணிந்து கொள்ள முடியுமா? இப்படிச் ஓர் உத்தரவு பிறப்பித்தால், அது சரியாக இருக்குமா? இருக்காது. அவரவர்க்குப் பொருந்துவது போல், வெவ்வேறு அளவு உள்ள சட்டைகளையே அணிந்து கொள்வதற்குக் கொடுக்கவேண்டும். அதுபோலவே, அவரவரது அதிகாரத்திற்கேற்ப மக்களுக்கு வெவ்வேறு விதமான தர்மங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இதனால் சில வேறுபாடுகள் இருந்தாலும், சாமான்ய தர்மங்களைப் பொறுத்த வரையில் அவை அனைவருக்கும் பொதுவானவைதான்.*

**சி: சாமான்ய தர்மம் என்றால் என்ன?**

*ஜ: மனுவே இதற்கு விளக்கமளித்துள்ளார், "அஹிம்சை, உண்மை பேசுதல், திருடாமலிருத்தல், சுத்தமாக இருப்பது, இந்திரியங்களை அடக்குவது, ஆகியவை அனைவருக்கும் பொதுவான சாமான்ய தர்மங்கள் என்று மனு கூறியுள்ளார்."[1]*

*ஒருவன் மனதாலும் மற்றொருவனுக்குக் கஷ்டத்தை நினைக்கக் கூடாது. அப்படி நினைத்தாலே அது அஹிம்சைக்கு புறம்பானது. அடித்தால் தான் ஹிம்சை என்று அர்த்தமில்லை.*

*அடுத்தது ஸத்யம். எதைச் சொன்னால் ஒருவனுக்குக் கஷ்டம் உண்டாகாதோ, எது உள்ளவாறே இருக்குமோ அதுதான் ஸத்யமாகும். உண்மை பேசினாலும், மற்றவர்களுக்குத் துன்பமுண்டாகும் வகையில் பேசினால் இது சரியானதல்ல. சிலர் கேட்பதற்கு இனிமையாய் இருப்பதைப் பேசினாலும், அது பொய்யென்றால், அதுவும் உண்மை*

---

*[1] மனு ஸ்ம்ருதி 10.63*

என்ற வகைக்குச் சேராது. ஆகவே உண்மை என்பது மற்றவர்களின் நன்மைக்காகவும் மேலும் அது உள்ளபடியேயும் இருக்க வேண்டும்.

அடுத்தது அஸ்தேயம் - மற்றவரின் பொருளைத் திருடமாலிருப்பது அஸ்தேயம் எனப்படும். திருடக் கூடாதென்றால் மனதாலும் பிறர் பொருளை விரும்பக் கூடாது, 'எவனிடம் எது இருக்கிறதோ, அது அவனிடமே இருக்கட்டும். நம்மிடத்தில் இருப்பதைப் பிறருக்குக் கொடுப்போம்' என்ற எண்ணம் வேண்டும்.

'சௌசம்' என்பது தூய்மை. இது இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று உடல் தூய்மை. குளிப்பது, புனிதமான ஆடைகளைத் தரிப்பது போன்றவை. இரண்டாவது மனத்தூய்மை. ஆடைகள் நன்றாக இருக்கலாம். ஆனால், உள் மனம் தூய்மையாக இல்லாவிட்டால், உண்மையான சௌசத்தை அடைய முடியாது.

அடுத்தது 'இந்த்ரிய நிக்ரஹம்'. ஒரு பொருளைப் பார்த்தாலோ, ஓர் ஓசையைக் கேட்டாலோ மனது அதை நோக்கி ஈர்க்கப்படலாம். ஆனால், அதைப் போகவிடாமல் தடுப்பதுதான் இந்த்ரிய நிக்ரஹம். இந்திரியங்கள் அல்லது புலன்களின் அடக்கமே இந்த்ரிய நிக்ரஹம் என்று கூறப்படுகிறது.

மேற்சொல்லப்பட்ட தர்மங்கள் அனைவருக்கும் சமம்.

சி: சாமான்ய தர்மத்தை கடைபிடிப்பதால் ஏதாவது பலனிருக்கின்றதா?

ஜ: தர்மதைக் கடைப்பிடிப்பதால் நல்ல பலன்களை அவசியம் காணலாம். ஆகவே மனிதனாய்ப் பிறந்த எல்லோரும் தர்மத்தை அவசியம் கடைப்பிடிக்க வேண்டும்.

சி: எவ்வளவோ மனிதர்கள் அதர்மத்தைச் செய்வதை நாம் காண்கிறோம். ஆனால் தற்போது அவர்கள் நன்மை அடைந்து கொண்டிருப்பதையும் காண்கிறோம். இதற்குக் காரணம் முற்பிறவியில் செய்த கர்மாவென்று சொல்லலாம். ஆனால் அவர்கள் செய்யும் அதர்மம் அவர்களுக்குப் பலனளிப்பதாகவே தெரியவில்லையே!

ஜ: செய்த அதர்மம் பலன் தருவதேயில்லை என்று சொல்வது தவறு. அது பலன் தரும். ஆனால், சிறிது காலத்திற்குப் பிறகு தரும். இறைவனுக்குக் கருணை அதிகம். ஒருவன் திருந்துவதற்குச் சந்தர்ப்பம் தருகிறான். அப்படியும் திருந்தாவிட்டால் தண்டிக்கிறான். இதனை மனு பின்வரும் சுலோகங்களில் கூறியுள்ளார். "செய்யப்பட்ட அதர்மம் பால் கறப்பதற்குத் தயாராயிருக்கும் பசுவைப் போல் உடனடியாகப் பலனளிப்பதில்லை. ஆனால் நிலத்தில் தெளிக்கப்பட்ட விதைகளைப் போல் கிரமமாகப் பலனளித்து அதர்மம் செய்தவனை

*அடியோடு அழிக்கிறது.”[1] “துரோகம் போன்ற அதர்மத்தினால் ஒருவன் நன்மை அடைந்தவன் போலிருக்கிறான், செல்வமெல்லாம் பெற்றுச் செழிப்பான வாழ்வை அடைகிறான், எதிரிகளை வெல்கிறான். ஆனால் அவன் கடைசியில் அடியோடு அழிவடைகிறான்”[2]*

சி: தர்மத்தைக் கடைபிடிப்பது மிகவும் கடினமாக இருந்தால் என்ன செய்வது**?**

ஜ: *எவ்வளவு சிரமமிருந்தாலும் மனதை அதர்மம் பக்கம் போகவிடக் கூடாது. முயற்சி செய்தாவது தர்மத்தைக் கடைபிடிக்க வேண்டும். ஏனென்றால், தர்மம் இப்பொழுதோ அல்லது பிறகோ பலனளித்து நமக்கு நன்மையைக் கொடுக்கும். நாம் இறந்த பிறகு நம் உடலை விட்டுவிட்டு நம் உறவினர்கள் சென்று விடுவார்கள். அதற்குப் பின்னும் நம்முடன் வருவது நாம் செய்த தர்மும் அதர்மமுமாகும். எனவே பரலோகத்திலும், மறுபிறவியிலும் நம்மைக் காப்பது தர்மம் தான். தர்மத்தைக் காப்பாற்றுபவன் என்றும் கைவிடப்படமாட்டான். ஆதலால்தான், “தர்மத்தைக் காப்பாற்றுபவனை, தர்மம் காப்பாற்றுகிறது”[3] என்று சொல்லப்பட்டுள்ளது. இது மிகவும் சத்தியமானது. இப்போது பலன் தெரியாவிட்டாலும் பின்னர் பலன் அவசியமிருக்கும். மேலும் தர்மத்தின்படி நடப்பது நம் கடமை. “இறைவன் நமக்கு அனைத்து வசதிகளையும் நன்மைகளையும் அளித்திருக்கிறானே! தாய் வயிற்றில் எவ்விதமான உதவியில்லாத சமயத்திலும் என்னைக் காப்பாற்றினானே! அவனுக்கு நான் நன்றி உள்ளவனாக இருக்க வேண்டாமா?” என்று கருதியாவது ஒருவன் இறைவனின் மூச்சுக்காற்றான வேதத்தில் உள்ள உபதேசத்தின்படி நடக்க வேண்டும். அதுவே தர்மம். இந்தக் கண்ணோட்டத்துடனாவது தர்மத்தை ஒருவன் அனுசரிக்க வேண்டும்.*

சி: யாகம் போன்றவற்றைச் செய்வதற்கு நிறைய செல்வம் தேவைப் படுகிறது**.** இப்படியிருக்கையில் ஏழையானவனுக்கு தர்மத்தைச் செய்ய என்ன வாய்ப்பு இருக்கிறது**?**

ஜ: *சாஸ்திரங்களில் ஒருவனுக்கு எவ்வளவு சக்தி இருக்கிறதோ, அதற்கு ஏற்றாற்போல் தர்மத்தைப் பின்பற்ற வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது. தர்மத்தைச் செய்ய நிறையச் செல்வமுள்ளவன் ஒரு ஆலயத்தைக் கட்டலாம். ஒருவனுக்குச் செல்வமில்லை எனில், அவன் செல்வந்தர்கள் கட்டிய கோயிலுக்குச் சென்று கடவுளின் ஸந்நிதியில் நமஸ்காரம்*

---

[1] *மனு ஸ்ம்ருதி 4.172*

[2] *மனு ஸ்ம்ருதி 4.174*

[3] *மகாபாரதம் 3.31.7*

செய்து புண்ணியம் சம்பாதிக்கலாம். ஆகவே, இரண்டு விதமான மக்களுக்கும் தர்மம் செய்யச் சமமான வாய்ப்பு இருக்கிறது. அது எவ்விதமான தர்மம் என்பதில்தான் வேறுபாடு. பணமில்லாதவன் ஒருவன் ஒரு ரூபாய் தானம் செய்தால், அவனுக்கு உத்தமமான பலன் கிடைக்கும். ஆனால், இலட்சரூபாய் உள்ள செல்வந்தன் தானும் எட்டணாவோ, ஒரு ரூபாயோ தானம் செய்கிறேன் என்று சொன்னால், அவனுக்கு அந்த அளவிற்குப் பலன் கிடைக்காது.

**சி:** **நாம் உலகில் சிலரைப் பார்க்கிறோம். அவர்கள் அனுஷ்டானம் முதலியவற்றை மேற்கொண்டிருக்கிறார்கள். ஆனால் மற்றவர்களைத் துன்புறுத்துகிறார்கள். இப்படி செய்தால் இது தர்மமா?**

ஜ: இல்லை. சாஸ்திரத்திலேயே, “நான் பாதிச் சுலோகத்திலேயே கோடிக்கணக்கான புத்தகங்களில் சொல்லப்பட்டதைத் தெரிவிக்கிறேன். பிறருக்கு உதவுவது புண்ணியமாகும், பிறரைத் துன்புறுத்துவது பாவமாகும்”[1] என்று கூறப்பட்டுள்ளது.

ஆதலால் மற்றவனுக்கு ஒருவன் துன்பம் உண்டாக்கிக்கொண்டிருந்தால், அது நிச்சயம் பாவத்தையே தரும். ஆனால் ஒருவன், தான் தர்மத்தைக் கடைபிடிக்கவில்லை என்றால் தான், மற்றவர்கள் சந்தோஷமாக இருப்பார்கள் என்பதற்காக தர்மத்தை பின்பற்றவில்லை என்றால், அது சரியல்ல. ஏனென்றால் ‘ஒருவனுக்கு துன்பம் உண்டாகாமல் தர்மம் செய்யவேண்டும் எனச் சாஸ்திரம் சொல்லுகிறதே’ என்று அவன் கூறலாம். ஆனால் ‘ஒருவனுக்கும்’ என்பது ‘எந்த நல்ல மனிதனுக்கும்’ என்ற பொருளில் இங்கு வருகிறது. நாம் செய்யும் பகவத் பூஜை நாஸ்திகன் ஒருவனுக்குப் பிடிக்காமல் இருக்கலாம். அக்காரணத்திற்காக நாம் பூஜையை விடக்கூடாது. செய்துகொண்டே போகலாம். அவனையும் வீணாகத் திட்டாமல் இருந்து விடலாம். இவ்வாறு நடந்து கொள்வதே சரி.

**சி:** **லௌகிகச் சட்டங்களுக்குக் கட்டுப்படாமல் இருப்பதால் பாவம் வருவதில்லை. ஆதலால் ஆன்மிக வாழ்வில் ஈடுபாடுள்ளவன் லௌகிகச் சட்டங்களில் கவனம் செலுத்துவது தேவையா?**

ஜ: சாஸ்திர சட்டங்களைப் போல் உலகச்சட்டங்களையும் சிரத்தையுடன் பின்பற்ற வேண்டும். நமது நன்மைக்காகவே உலகச் சட்டங்களை நாம் ஏற்படுத்துகிறோம். ஆதலால் அவைகளுக்குக் கட்டுப்படாமல் இருப்பது புத்திசாலித்தனமாகாது.

---

[1] *நித்ய நீதி 34*

**சி: உலகச் சட்டங்களுக்குக் கட்டுப்படாமல் இருப்பதால் பாவம் எப்படி ஏற்படும்?**

ஜ: *பாவம் ஏற்படாமல் இருக்கலாம். ஆனால் உலகச் சட்டங்களை மீறினால் அதற்கு தகுந்தவாறு உலகத் தண்டனை கிடைக்கும். உதாரணத்திற்கு வாகனம் ஓட்டும் பொழுது சாலையின் இடது பக்கத்தில் செல்ல வேண்டும் என்ற சட்டம் இருக்கிறது. இதை மீறி நாம் நடந்தால், அதுவே ஒரு விபத்தை ஏற்படுத்தும். அவ்வாறு நடப்பதே ஒரு தண்டனை வடிவாகவிருக்கிறதே!*

**சி: காலத்தின் போக்கினால் சாஸ்திரங்களின் சொற்படி நடப்பது தற்போது கடினமாயிருக்கிறது. எனவே காலங்களுக்கு ஏற்ப சாஸ்திரங்களில் சற்று மாறுதல் உண்டாக்க முடியுமா?**

ஜ: *நாம் எதையும் குறுகிய கண்ணோட்டத்துடன் பார்க்கக்கூடாது. பல மக்கள் லஞ்சம் வாங்குவதைப் பார்க்கிறோமே, இதற்காக லஞ்சம் வாங்குவது சரி என்று ஒரு சட்டம் இயற்றி விட முடியுமா? இப்படிச் செய்வது அதை மேலும் வலுவடையத்தான் செய்யும். அதேபோல் சாஸ்திரங்கள் விஷயத்திலும் மாறுதல் வேண்டும் என்று எண்ணக் கூடாது. காலங்களின் தன்மையைப் பொருத்தே சாஸ்திரங்கள் இருக்கின்றன. ஆதலால்தான் அவைகளிலேயே 'எந்த அளவிற்குச் சாத்தியமோ அந்த அளவிற்குக் கடைபிடி' என்று கட்டளை உள்ளது. ஆதலால் நாமும் இப்போதிருக்கும் சூழ்நிலையில் நமக்கு எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்கு மேற்கொள்ள வேண்டும். ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா, "இந்த தர்மத்தைச் சிறிது பயிற்சி செய்தாலும் அது பெரும் பயத்தில் இருந்தும் காப்பாற்றும்"[1] என்று கூறியிருக்கிறார். ஆகவே சாஸ்திரங்களையே மாற்ற முயற்சிப்பது என்று கூறுவது எவ்வாறு நியாயமாகும்?*

*இதை தவிர சாஸ்திரங்களை மாற்றுபவருக்கு, நடந்தது, நடப்பது, நடக்கப்போவது இவை மூன்றைப் பற்றியும் தெரிந்திருக்க வேண்டும். கர்மா எப்படிப் பலனளிக்கும் என்பது தெரியாமலிருந்தால் எப்படி நாம் சாஸ்திரங்களின் கட்டளைகளை மாற்ற முடியும்? அறவே முடியாது. ஏனென்றால், 'ஒரு காரியத்தை இப்போது கஷ்டமானாலும் செய், பின்னால் நல்ல பலனடையவாய்' என்று நிச்சயமாகக் கூற நம்மால் இயலாது. நமக்கு அதற்கான தகுதி இல்லை. அடுத்த பிறவியில் நடக்கப் போவது என்ன என்பதும் நமக்குத் தெரியாது, முற்பிறவியில் நடந்ததும் தெரியாது. ஆதலால் முக்காலமும் தெரிந்த*

---

[1] *பகவத் கீதை 2.40*

*ஸர்வக்ஞன்தான் எது சரி, எது தவறு என்பதைக் கூற முடியும். நமக்கு அதுபோல் அறிவு இல்லாததால் சாஸ்திரங்களை மாற்ற நமக்குத் தகுதி இல்லை.*

சி: அதிருத்ரம், ஸஹஸ்ரசண்டி போன்ற பல யாகங்கள் பல இடங்களில் நடைபெறுகின்றன. யாகங்களுக்குப் பணம் செலவழிகிறது. இந்தப் பணத்தை இவ்வாறு விரையமாக்காமல் அடித்தட்டு மக்களின் முன்னேற்றத்திற்கு உபயோகிப் படுத்தினால், அவர்கள் நன்மை அடைவர் என்று சிலர் யாகத்தைப் பற்றி எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். இது சரியா?

ஜ: *யாகத்திற்காக நாம் செலவழிப்பது, ஜனங்கள் லௌகிகப் பொருட்கள் வாங்க செலவழிப்பதில் ஒரு சிறு அற்பமான பகுதிகூட ஆகாது. இதற்கு என்ன ஆட்சேபணை இருக்க முடியும்? யாகத்தின் மூலம் இறைவன் திருப்தியுற்று அவன் கருணையோடு நாம் செலவிட்ட பொருட்களைக் காட்டிலும் பலமடங்கு அதிக பலன்களைப் பொழிகிறான்.*

*உதாரணமாக, இறைவன் அதிருத்ர யாகத்தினால் திருப்தியடைந்து தக்க காலங்களில் வேண்டிய அளவு மழையைப் பொழிவிக்கிறான். ஆதலால் யாகங்களை வீண் செலவு என்று கூற முடியாது. விதைகளை நாம் நிலத்தில் இட்டால் பின் நல்ல விளைச்சல் கிடைக்கும். இதை விடுத்து விதைகளை வீணாகப் போடுகிறோமே, அப்படியே சாப்பிடலாமே என்று கூறுவது பொருத்தமா? விதைகளை வயலில் இட்டால்தான் தானியங்கள் கிடைக்கும். அது போலவே யாகங்கள் விலை மதிப்பற்ற பலன்களை அளிக்கின்றன. சாஸ்திரங்களும் எவ்வளவிற்கு ஒருவனுக்குச் சாமர்த்தியம் உண்டோ, அவ்வளவிற்கு ஒருவன் யாகத்தைச் செய்ய வேண்டுமென்று கூறுவதிலிருந்து மிகவும் செலவாகும் ஒரு யாகத்தை ஒரு ஏழை செய்ய வேண்டும் என்று சாஸ்திரம் கூறவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். ஆதலால் நாம் யாகத்தில் செலவழிப்பது நமது நன்மைக்காவே. அதை வீண் செலவாகக் கருதுவது தவறு.*

சி: இந்து மதத்தில் ஒவ்வொருவனும் தனது நன்மைக்காக என்ன செய்ய வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. பிறருக்கென்று ஒன்றும் செய்வது போல் இல்லையே. இவ்விஷயத்தில் ஆசார்யாளின் கருத்து என்ன?

ஜ: *அப்படிச் சொல்வது தவறு. மோட்சத்தை அடைவதற்கு மனத்தூய்மை மிக அவசியம் என்று சாஸ்திரம் கூறுகிறது. மனதைத் தூய்மைப் படுத்தக் கருணை மிகவும் தேவை என்று சொல்லப்பட்டிருக்கிறது.*

கருணை என்றால் மற்றவனுக்கு ஏற்பட்ட துன்பத்தைக் கண்டு பொறுக்காமல் அதைத் தீர்க்க முனைவதுதானே? ஆகையால், நமது சாஸ்திரத்தில் மற்றவர்களுக்கு உதவுவதைப் பற்றிச் சொல்லவில்லை எனக்கூறுவது தவறு. நாம் அஹங்காரத்தை விட்டுவிட வேண்டும், எல்லோரையும் சமமாகக் கருதவேண்டுமென்றும் நமது சாஸ்திரம் எப்போதும் கூறுகிறது.

பகவானுடைய அவதாரங்களைப் பற்றி நம்முடைய இதிஹாசங்களிலும், புராணங்களிலும் கூறப்பட்டுள்ளது. பகவான் எதற்காகப் பலமுறை அவதாரம் எடுத்தான்? அவனுக்கு ஏதாவது தேவையா? இல்லையே. அவன் மக்களின் நன்மைக்காகத் தான் அவதாரங்களை எடுத்துக்கொண்டான். ராமாவதாரத்தின்போதும், கிருஷ்ணாவதாரத்தின்போதும் அன்பைப் பொழிந்து அவன் காட்டிய வழியில் போவதையே லக்ஷியமாகக் கருதுகிறோம்.

எப்படிப்பட்ட பக்தன் தனக்கு மிகவும் பிரியமானவன் என்று பகவான் கீதையில் குறிப்பிட்டுள்ளார். அதில், "எவன், ஒருவன் விஷயத்திலும் துவேஷம் வைத்துக்கொள்வது இல்லையோ, எல்லோரிடத்தும் மித்ர பாவத்துடனும் கருணையுடனும், பற்றுதலும் அஹங்காரமும் இல்லாமல், சுகத்திலும் துக்கத்திலும் சமமாக இருக்கிறானோ, எவன் எல்லோரையும் மன்னிக்கிறானோ, திருப்தியுடனும் மனவடக்கத்துடனும் இருக்கின்றானோ, மேற்கொண்டு திடமான தீர்மானத்துடன் இருக்கின்றானோ, எவனது புத்தியும் மனமும் என்னிடத்திலேயே இருக்கின்றனவோ அப்படிப்பட்ட பக்தன் எனக்கு மிகவும் பிரியமானவன்"[1] என்று வருகிறது.

எவன் விஷயத்திலும் வெறுப்பு இருக்கக் கூடாது. கருணையுடனும், தோழமையுடனும் இருக்க வேண்டும் என்று உபதேசிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய பிரார்த்தனையும், "உலகங்களில் அனைவரும் சுகமாக வாழட்டும்"[2] என்பதுதான். நண்பன், எதிரி என்ற வேறுபாடே கிடையாது. எல்லோரின் நன்மைக்காகவே நமது பிரார்த்தனை இருக்கிறது.

சாஸ்திரங்களில் கூறியபடி முக்தியை அடைந்த ஞானிகளுக்கு எந்த விதமான பந்தமும் கிடையாது. அவர்களுக்கு உலகம் வெறும் தோற்றமே. இருப்பினும் அவர்கள் கருணை நிரம்பியவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் இவ்வுலகத்தில் வாழ்வதன் மூலமே, உலகிற்கு மிகுந்த நன்மை பயக்கிறார்கள். அவர்களைப் போல் நாமும் நடந்து கொள்ள வேண்டும் என்பதே நமது இலட்சியம்.

---

[1] பகவத் கீதை 12.13-14
[2] ஸ்ரீமத் ராமாயணம் பாராயண ஸமாபன ஸ்லோகம் 1

# *11. அஹிம்சை*

சி: அஹிம்சை சாஸ்திரங்களில் எல்லாவற்றிற்கும் மேலான தர்மமாக உபதேசிக்கப்பட்டிருப்பதால், எப்போதும் எந்தச் சூழ்நிலையிலும் அதைக் கடைபிடிக்க வேண்டுமா?

ஜ: *சாஸ்திரங்களில் விரதங்கள், மஹா விரதங்கள் என்று இரு வகைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. மஹாவிரதமென்பது அனைத்து சமயங்களிலும் எந்தச் சூழ்நிலையிலும் அனுஷ்டிக்கப்பட வேண்டியது. சாமான்ய விரதங்களை, கால நியமங்களும், சூழ்நிலை நியமங்களும் பார்த்து அனுஸரிக்க முடியும். ஸந்யாஸிகள் அஹிம்சையை மஹா விரதமாக அனுஸரிக்க வேண்டும். மற்ற அனைவருக்கும் அஹிம்சை என்பது சாதாரண விரதமாக இருக்கலாம். கருணை இல்லாதவன் மனிதனே இல்லை. துயறுற்றவர்களிடம் அனைவரும் அவசியம் கருணை காட்ட வேண்டும்.*

சி: சில பூச்சிகளை நம்மை அறியாமல் கொன்று விடுகிறோம். இவ்வாறு இருக்கும்போது நாம் எவ்வாறு அஹிம்சையைக் கடைபிடிப்பவர்கள் என்றாவோம்?

ஜ: *வேண்டுமென்றே பிறருக்கு துன்பம் விளைவிக்கக்கூடாது என்று விரதமாகக் கடைப்பிடிக்கப்படும் அஹிம்சையைப் பற்றித்தான் நான் இப்போது பேசினேன். மனதால் ஒருவருக்குத் துன்பம் தரவேண்டும் என நினைத்தாலும் அதுவும் அஹிம்சையைக் கடைப்பிடிக்காதது போல் தானாகும்.*

சி: அஹிம்சை என்பதற்காக, ஒரு தேளோ, பாம்போ ஒருவனை துன்புறுத்த வந்தால், அதையும் ஒருவன் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமா?

ஜ: *இல்லை. அப்பாம்பையோ, தேளையோ விலக்கி விடலாமே!*

சி: அப்படிச் செய்தால் அஹிம்சைக்கு விரோதமாக நடந்து கொண்டது போலாகாதா?

ஜ: *இல்லை. ஏனென்றால், ஒருவன் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவே அவ்வாறு செய்தானே தவிர வீணாக ஹிம்சை செய்யவில்லை.*

சி: ஒருவன் மிகவும் சாதுவாக இருந்து விட்டானானால் மற்ற மனிதர்கள் இதைப் பயன்படுத்தி அவனை ஏமாற்றமாட்டார்களா? அவனுக்குப் பல விதமாகத் துன்பம் கொடுக்கமாட்டார்களா?

ஜ: *வ்யவஹாரங்களில், மிகவும் சாதுவாக இருந்துவர வேண்டும் என்று கூறவில்லை. ஒரு ஸந்யாஸி எல்லாவற்றையும் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்பதென்னவோ உண்மைதான். ஆனால் லௌகிக*

*வாழ்வில் ஈடுபட்டுள்ளவனுக்கு, தேவைக்கேற்றார்போல் மென்மையாக இருந்தால் மட்டுமே போதுமானது.*

**சி:** ஒருவன் எனக்கு வீணாகத் துன்பம் கொடுத்தாலோ அல்லது வெறுப்பு உண்டாகக்கவோ செய்தால், நான் என்ன செய்ய வேண்டும்**?**

*ஜ: ஒருவன் மனதில் முழுமையான அமைதியுடன் இருந்து கொண்டு, சற்று எதிர்ப்பது போலவோ அல்லது கோபம் வந்தாற்போலவோ ஒருவன் நடிக்கலாம். ஆனால் தன்னையே இழக்கச்செய்துவிடும் கோபத்திற்கு மனதில் சிறிதளவும் இடம் கொடுக்கக்கூடாது. இப்படி நான் சொல்வதிலிருந்து எப்போதும் கோபம் வருவதைப்போல் நடித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று பொருளில்லை. முடிந்தளவிற்கு பொறுத்துக் கொண்டு, அளவுக்கு மேல் போனால் கோபம் வந்ததைப் போல் நடிக்கலாம். அவ்வளவுதான்.*

*பின்வரும் கேள்விகள், இராணுவத்தில் பணிபுரிந்த ஒரு போர் வீரனால் கேட்கப்பட்டவை:*

**சி:** பலர் இறக்கக் காரணமாய் இருந்ததால் நான் பாவத்திற்கு ஆளாவேனா**?**

*ஜ: இல்லை.*

**சி:** கொல்வது கூடாதல்லவா**?**

*ஜ: நீ ஒருவனை உனது வெறுப்பினால் கொன்றாயா?*

**சி:** இல்லை**.**

*ஜ: நீ உன் கடமையைத் தான் செய்தாய். உனக்கு இடப்பட்ட உத்தரவின்படி நடந்து கொண்டாய். நாட்டுக்காக அச்செயல் புரிந்தாய், உனக்காக அல்ல, அப்படித்தானே?*

**சி:** ஆம்**.**

*ஜ: அதனால்தான் அப்பாவம் உன்னைச் சேராது என்று கூறினேன். நீ வெறுப்பினாலோ, உனது சொந்த நன்மைக்காகவோ ஒருவனைக் கொன்றிருந்தால், உனக்குப் பாவம் நிச்சயமாக வந்திருக்கும். ஆனால் நீ நாட்டுக்காக உன் கடமையைச் செய்தாய்.*

*இதைத்தான் கிருஷ்ணர், கீதையில் அர்ஜுனனை நோக்கி, "நேர்மை-யான முறையில் போர் புரியும் க்ஷத்ரியனுக்கு புண்ணியம் சேருமேயன்றி, பாவம் இல்லை." என்று கூறியுள்ளார். நீங்களெல்லாம் பகவான் கூறியவாறு க்ஷத்ரிய ஸ்தானத்தில் அல்லவா இருக்கிறீர்கள்!*

# *12. ஆசைகளை வேருடன் களைவது*

சி: பலருக்கு ஆன்மிக வாழ்வில் ஈடுபட வேண்டும் என்ற எண்ணம் இருந்து, அவர்கள் ஆசையை வெல்ல வேண்டும் என முயற்சி செய்கிறார்கள். ஆனால், ஆசைகள் மீண்டும் மீண்டும் வந்து கொண்டிருக்கின்றன. இதற்குக் காரணம் என்ன?

ஜ: *ஆசையை அடக்குவதற்கு முதலாவதாக 'நாம் ஆசையை வெல்ல வேண்டும்' என்ற எண்ணம் தீவிரமாக இருக்க வேண்டும். ஒரு பிரஹ்மசாரிக்கு 'மதியத்தில் தூங்க வேண்டாம்' என்று அறிவுரை கூறலாம். அவனுக்கே அவ்வறிவுரையைப் பின்பற்ற வேண்டும் என்ற திடமான எண்ணம் இல்லாவிடில், சற்று நாட்களுக்குத் தூங்காமல் இருப்பான். பிறகு சோர்வாக இருக்கும் மற்றொரு நாளில், தூங்கினால் என்ன தவறு என்று அவனுக்குத் தோன்றும். ஆகவே, ஆன்மிக வாழ்வில் நாட்டமுள்ளவன், முதலில் ஆசையை வெல்ல வேண்டும் என்பதில் உறுதியாக இருக்க வேண்டும். சிலர் விவேகத்திற்கு இடம் கொடுக்காமல் இருப்பார்கள். ஆனாலும் ஆசை போக வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். ஆசைகள் அகலாமல் வைராக்யம் நிலையாக இல்லாததே இதற்குக் காரணம். ஏன்? அதை உண்டாக்கும் விவேகம் இல்லை. விவேகத்திலிருந்து வைராக்யம் பிறக்கிறது. வைராக்யம் ஆழமாக வேரூன்றி இருந்துவிட்டால், ஆசைகளை முற்றிலுமாக வென்றுவிடலாம். ஆன்மிக வாழ்விற்குரிய ஸாதனைகளைச் செய்து கொண்டிருக்க வேண்டும். முதலில் அவைகளில் ருசியில்லாமல் இருக்கலாம். அதற்காக அவைகளை நாம் விட்டு விட்டால் ஆசைகள் எப்படி அடங்கும்? கர்மயோகம், மானஸிக பூஜை, இறைச்சிந்தனை போன்றவற்றை எப்பொழுதும் செய்துவர வேண்டும். தியானமும் செய்தால் மிக நல்லது. சாஸ்திரங்களைப் படிப்பது மிகவும் அவசியம்.*

சி: சில சமயங்களில் ஆசைகள் அடங்கி, அவைகளை வென்று விட்டது போல் தோன்றி, எழாமல் இருக்கலாம். ஆனால், திடீரென ஆசைகள் வந்து விடுகின்றனவே, இதற்கு ஏதாவது காரணமிருக்கிறதா?

ஜ: *ஓர் உதாரணம் கூறுகிறேன். ஒரு ஸ்ப்ரிங் இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம் அதன் ஒரு முனையை சுவற்றில் பொறுத்தி விட்டு, மற்றொரு முனையை நாம் பிடித்து இழுத்துக் கொண்டே போனால், அந்த ஸ்ப்ரிங்கும் நெகிழ்ந்து நீளம் கொடுக்கும். எப்போது இழுப்பதை நாம் விடுவோமோ, உடனே அது பின்னிழுத்துக்கொண்டு பழைய அளவுக்கே திரும்பி விடும். மனம் என்கிற ஸ்ப்ரிங்கை உலகம் என்கிற சுவரில் கட்டி விட்டோமானால் ஆன்மிக முயற்சியால், அந்த ஸ்ப்ரிங்கை இழுத்துக் கொண்டே போனாலும், விட்டு விட்டால் அது*

பழைய நிலைமைக்கே போய்விடும். சிலர் ஓர் ஆசை வந்தால், 'இதற்கு இப்போது இடம் கொடுக்கக் கூடாது' என்று எண்ணி அதனை அடக்கி விடுவார்கள். இப்படிச் செய்தால், அந்த ஆசை உள்ளேயே ஒடுங்கி இருக்கும். அதற்குப் பிறகு தக்க தருணத்தில் திடீரென்று மேலே வந்துவிடும். அந்த ஆசையின் தன்மையைப் புரிந்து கொண்டு, அது நமக்குத் தீங்கு விளைவிக்கக்கூடியது என்பதைப் புரிந்துகொண்டபின், அதை வேருடன் களைந்தெடுக்க வழி தேட வேண்டும். ஆசையின் வேர்களை வெட்டிய பின் அது, திடீரென எழுவதற்கு வாய்ப்பில்லை. ஆசையை வெல்வதற்கு ஒருவன் முயன்றாலும், அது கடினமாக இருக்கிறதெனில் அவனுக்கு ஸத்ஸங்கம் (நல்லவர்களின் சேர்க்கை) மிக அவசியம். மஹான்களின் ஸந்நிதியில், பயபக்தியுடன் அவரை நாடுபவருடைய மனது அமைதி அடையும். மிகுந்த ஈடுபாடுடன் அடிக்கடி சாஸ்திரங்களைப் படிக்க வேண்டும். சாஸ்திரங்கள், 'லௌகிகப் பொருட்களால் நமக்கு இன்பம் இல்லை' என்பதை தெரியப்படுத்துகின்றன. சாஸ்திரத்தில் நமக்கு நம்பிக்கை இருந்தாலும் அது பூரணமாக இருப்பதில்லை. ஆதலால் சில சமயங்களில், 'இந்த போகத்தை அனுபவித்தால் என்ன?' என்ற தவறான எண்ணம் ஏற்படலாம். இந்த எண்ணத்தைப் போக்க மீண்டும் மீண்டும் சாஸ்திரங்களைப் படிப்பது முக்கியமானது.

## 13. கோபத்தை அடக்கியாளுதல்

சி: **கோபத்தை எப்படி வெல்வது?**

ஜ: 'இதனால் எனக்கு எவ்வித பிரயோஜனமும் இருக்கப் போவதில்லை. மற்றொருவன் என்னைத் திட்டுகிறான். அதனால் எனக்கு ஏதாவது நஷ்டம் ஏற்படுகிறதா? ஒன்றும் இல்லையே! ஆதலால் நான் ஏன் கோபத்திற்கு இடம் கொடுக்க வேண்டும்?', இவ்வாறு நினைத்து வந்தால் காலப்போக்கில் கோபம் அடங்கிவிடும்.

சி: **இவ்வாறு நினைப்பது மட்டும் போதுமா?**

ஜ: இல்லை, மேற்கொண்டும் யோசிக்க வேண்டும். 'இப்போது நான் கோபத்தினால் ஒருவனைத் திட்டிவிட்டேன் என்றால், நான் அவன் மீது எனது ஆளுமையைச் செலுத்திவிட்டதாகத் தோன்றலாம். உண்மையில் நான் என் கோபத்திற்கு அடிமையாகிவிட்டேனல்லவா? ஓர் எதிரியை வெல்லச் சென்று விட்டு, இன்னொரு பெரிய எதிரியால் வெல்லப்பட்டு விட்டேன். கோபம் என் புத்தியைக் கெடுத்துவிடுகிறது. எதை நான் செய்யக் கூடாதோ அதைச் செய்யத் தூண்டுகிறது. இக்கோபத்திற்கு நான் ஏன் அடிமையாக வேண்டும்? ஒருவனைத்

*திட்டியதால் ஏற்படும் திருப்தியைவிட, கோபத்தை அடக்கியதால் நன்மையும் திருப்தியும் அதிகமாகக் கிடைக்கும்', என்று சிந்திக்க வேண்டும். கோபம் வருவதற்கு முன்பே சற்றுக் கவனத்துடன் பார்த்தால் கோபம் வருகிறது என்பது தெரிந்து விடும். இதைத் தெரிந்து கொண்டால் அது வருவதற்கு முன்பே அதை அடக்க முயற்சி செய்யலாம். இம்மாதிரித் தெரிந்த மறுகணமே பாதிக் கோபம் அடங்கிவிடும். ஆனால் பலருக்கும் கோபம் வந்த பிறகே தெரிகிறது. அவர்களும் கோபம் வருவதற்கு முன்னதாகவே அதை உணரப் பழகலாம்.*

சி: கோபத்தினால் ஆன்மிக வாழ்விற்கு இடையூறுகள் ஏற்படுமா?

ஜ: *ஆம். காமம், கோபம், லோபம், இவை மூன்றையும் கீதையில் பகவான் நரகத்தின் வாயில்கள் என்று கூறியிருக்கிறார். கோபம் வந்தவன், தான் என்ன செய்கிறான் என்பதை யோசிக்க மாட்டான். விபரீதமான செயல்களைச் செய்து விடுகிறான். ஆதலால் அவனுக்குப் பாவம் ஏற்படுகிறது. பாவம் மூலமாக கோபம் ஒருவனை நாசமாக்கி விடுகிறது. ஆதலால் கோபத்திற்கு இடம் கொடுக்கக் கூடாது.*

சி: கோபத்திற்கு இடம் கொடுக்கக் கூடாதென்றால், தனக்குக் கீழே பணிபுரிபவர்களிடம் கண்டிப்பாக இருக்க முடியாது என்று அர்த்தமா?

ஜ: *கட்டளைகளை எங்கு கொடுக்க வேண்டுமோ அங்கு கொடுக்க வேண்டும். அப்படியில்லாவிட்டால் அலுவலகங்களில் காரியங்கள் நடக்காது. கோபத்திற்கு இடமளிக்கக் கூடாதென்று சொன்னால், மனதில்,'இவனை நான் துன்புறுத்த வேண்டும். பழிவாங்க வேண்டும்' என்ற எண்ணங்களுக்கு இடம் கொடுக்கக்கூடாது என்பதேயாகும். முதலில் கட்டளைகளைச் சாந்தமாகச் சொல்ல வேண்டும். அவ்வாறு நடக்காவிட்டால், கண்டிப்பாக 'இப்படித்தான் நடக்க வேண்டும்' என்று சொல்லலாம். ஆனால் மனதில் கோபத்திற்கு இடம் கொடுத்து, ஒருவன் தன் மன அமைதியை கெடுத்துக் கொள்ளக் கூடாது.*

## *14. கர்ம யோகம்*

சி: ஆன்மிக வாழ்வில் கர்மாவின் பங்கு எவ்விதத்தில் இருக்கிறது?

ஜ: *கர்மாவை அதன் பலன்களில் பற்றுதலில்லாமல் இறைவனுக்காகச் செய்தால் மனத்தூய்மை ஏற்படுகிறது.*

சி: ஒருவனுக்குப் பலன்களில் பற்றுதல் இல்லாவிட்டால் அவன் செயல்களை ஒழுங்காகச் திறம்படச் செய்ய மாட்டானல்லவா? எப்போது வெற்றி,

தோல்விகளில் ஒருவனுக்கு நாட்டமில்லையோ, அப்போது தனக்கு சாமர்த்தியம் உள்ள அளவிற்குக் (அதிகபட்ச அளவிற்கு) காரியங்களைச் செய்யமாட்டான். அப்படித்தானே யுக்திக்குப் பொருத்தமாக இருக்கிறது?

ஜ: *இல்லவே இல்லை. எவனுக்குப் பற்றுதலேயில்லையோ அவன் செயல்களை ஒழுங்காகச் செய்வான். ஏனென்றால், அவன் தனது கடமையை இறைவனுக்கு அர்ப்பணமாகச் செய்கிறான். எந்தப் பக்தனாவது இறைவனுக்குத் தகாததை அர்ப்பணிக்க விரும்புவானா? மாட்டான். கர்மயோகம் செய்பவன் தீய செயல்களில் ஈடுபடமாட்டான். மேலும் எல்லாச் செயல்களையும் இறைவனுக்கே அர்ப்பணிப்பான். அவன் மேல் உள்ள பக்தியினால் தன்னால் முடிந்த அளவுக்குத் திறமையுடன் செயலாற்றுவான். இதற்கு நேர்மாறாக, செயல்களின் பலன்களில் பற்றுதலுள்ளவன் பலன்களின் மீதுள்ள எதிர்பார்ப்புகளினால் சோர்ந்து போவான்.*

சி: இவ்விஷயத்தை சாஸ்திரத்திலும் கூறியிருக்கிறார்களா?

ஜ: *ஆம், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா, "பற்றுதல் மற்றும் அஹங்காரம் இல்லாமல், தீர்மானத்துடனும், உற்சாகத்துடனும் இருந்து வெற்றியிலும் தோல்வியிலும் ஒருநிலை மனதுடையவன் ஸாத்விகமாகச் செய்பவன் என்று அழைக்கப்படுகின்றான்"[1] என்று கூறுகிறார்.*

சி: ஒருவன் எல்லாச் செயல்களையும் இறைவனுக்கு அர்ப்பணிப்பதன் மூலம் அக்காரியங்கள் வெற்றிகரமாக நடைபெறும் என நினைத்துச் செய்வானேயானால், அவன் கர்மயோகத்தை அனுஷ்டிக்கிறான் என்று அர்த்தமாகுமா?

ஜ: *இல்லை, ஏனெனில் அவன் உண்மையில் காரியத்தின் பலனில் பற்றை விடவில்லை.*

சி: கர்மயோகத்தின் அனுஷ்டானத்தை எது கடினமாக்குகிறது?

ஜ: *பொருட்களில் இருக்கும் பற்றுதலும் இறைவனிடம் வேண்டிய அளவு பக்தியில்லாமல் இருப்பதும் கர்மயோகத்தை ஒருவன் பயிற்சி செய்வதைக் கடினமாக்குகின்றன. பலனை அர்ப்பணித்தேன் என்று பற்றுதலிருப்பவன் கூறினாலும் உண்மையில் அவ்வாறு அவன் செய்திருக்க முடியாது. அதில் ஆசை வைத்திருப்பான். இறைவனிடம் விசேஷமாக பக்தியில்லாவிட்டால், 'அனைத்தையும் அர்ப்பணம் செய்யவேண்டும், அது என் கடமை' என்று தோன்றாது. இவைகள் முழுமனதோடு கர்மயோகம் செய்வதை மேலும் கடினமாக்குகிறது.*

---

[1] *பகவத் கீதை 18.26*

சி: பலனில் பற்றில்லாமல் இருந்தாலே போதுமா? அல்லது இறைவனிடம் எல்லாக் கர்மாக்களையும் பிரத்யேகமாக அர்ப்பணிக்க வேண்டுமா?

*ஜ: கர்மயோகம் என்று ஆக வேண்டுமெனில் அனைத்தையும் இறைவனுக்கு அர்ப்பணித்தேயாக வேண்டும்.*

சி: பலன்களின் மீதுள்ள அதீதமான பற்றுதலே ஒரு தடையாக இருக்கும் என்பதையும், அதற்கு நேர்மாறாகக் கர்மயோகத்தில் ஈடுபடுபவன் தன் கடமைகளை நன்கு சரிவரச் செய்வான் என்பதற்கும் ஜகத்குரு ஏதாவது உதாரணம் கூறுவார்களா?

*ஜ: ஒரு பரிட்சையை ஒருவன் எழுதுகிறானென்று வைத்துக் கொள்வோம். மேலும் அவனுக்கு அதில் வெற்றி பெற வேண்டும் என்று மிகுந்த ஆசையும் இருக்கிறது. அவன் அன்றைய பரிட்சையை சரியாக எழுதாவிட்டால் என்ன ஏற்படும்? கவலை ஏற்பட்டு அதன் காரணமாக அடுத்த நாள் பரிட்சையையும் நன்கு எழுத மாட்டான். ஏனென்றால், சென்ற பரிட்சையை சரியாக எழுதவில்லையே என்று தொடந்து கவலைப்பட்டுக் கொண்டிருந்ததே அதற்குக் காரணம். அதற்கு நேர் மாறாக, பற்றுதல் இல்லாதவன், முழுமனதுடன் அடுத்த பரிட்சைக்குத் தன்னைத் தயார் படுத்திக் கொள்வான். கவலையே இல்லாது படிப்பதால், அவன் செயல்களில் நன்கு ஈடுபாடு வைத்துக் கொள்வான். மேலும், ஒருவன், ஒரு செயலில் தனக்கு விருப்பம் இல்லாததால் நன்கு செய்யாமல் போய் விடலாம். ஆதலால், கர்மயோகத்தைக் கடைபிடிப்பவன் 'ஈச்வரனுக்காக இதைச் செய்கிறேன். ஆதலால் என் கடமையாகவாவது கருதி நான் சிரத்தையுடன் செய்ய வேண்டும்' என்ற எண்ணத்துடன் தனது செயலில் நன்கு கவனம் செலுத்துவான். ஏதோ ஒரு கேள்விக்கு அவனால் சரியாக பதிலளிக்க இயலவில்லை என்றாலும், பதட்டமடைந்து சோர்ந்து போக மாட்டான்.*

சி: கர்ம யோகம் செய்வதற்கு யாருக்கெல்லாம் தகுதி இருக்கிறது?

*ஜ: எல்லோரும் கர்மயோகத்தை அனுஷ்டிக்கலாம். கர்மயோகத்தை அனுஷ்டித்தால் மனம் மிகவும் தூய்மையடைகிறது. மேலும் இறைபக்தி ஆழமாகிறது. சுத்தமான மனதில்தான் ஞானோதயம் ஏற்படும். ஆகையால் எல்லோரும், எப்போதும் கர்மயோகத்தை அனுஷ்டித்து வரவேண்டும். அப்படிச் செய்தால் அனைவரும் நன்மை பெறலாம்.*

சி: இறைவனிடம் செயல்களின் பலன்களை மட்டும் அர்ப்பணம் செய்தால் போதுமா? அல்லது செயல்களையே அர்ப்பணம் செய்ய வேண்டுமா?

*ஜ: செயல்களையே அர்ப்பணம் செய்வது என்பது சாலச் சிறந்தது. அது முடியாவிட்டால் பலன்களையாவது அர்ப்பணம் செய்ய வேண்டும்.*

*கிருஷ்ண பரமாத்மா கீதையில் இதுபோன்று படிப்படியாக உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்லும் எளிய நடைமுறைகளைப் பற்றிக் கூறியுள்ளார்: "உன் மனதை என்னிடமே வை, உன் புத்தியை என்னிடமே வை. இப்படிச் செய்தால் என்னிடமே வாழ்வாய். இதைப்பற்றிச் சந்தேகம் வேண்டாம்."[1] "இவ்வாறு என்னிடத்திலேயே மனதை வைக்க முடியவில்லையெனில் மீண்டும் மீண்டும் பயிற்சி செய்து என்னை அடைவதற்கு முயற்சி செய்."[2] "பயிற்சி செய்ய முடியவில்லையென்றால், எல்லாவற்றையும் எனக்காகவே செய். எனக்காகவே காரியங்களைச் செய்தாலும் ஸித்தியை அடைவாய்."[3] "இதுவும் செய்ய முடியவில்லை என்றால் என்னிடமே அடைக்கலம் அடைந்து அனைத்துச் செயல்களின் பலன்களைக் கட்டுப்பாடுள்ள மனதுடன் அர்ப்பணம் செய்."[4]*

**சி: ஒருவன் கர்மயோகத்தில் ஈடுபட்டுள்ளானென்றால் அவன் செயல்களை அதிகமாகச் செய்வானா?**

*ஜ: அப்படித் தேவையில்லை. செயல்களை ஆறு விதமாகப் பிரிக்கலாம். அவை: 1.நித்ய கர்மா, 2.நைமித்திக கர்மா, 3.காம்ய கர்மா, 4.நிஷித்த கர்மா, 5.உபாஸனா கர்மா, 6.பிராயச்சித்த கர்மா என்பவையாகும். முன்பே தீர்மானிக்கப்பட்டவாறு எந்தக் கர்மா பொருத்தமான காலத்தில் மீண்டும் மீண்டும் வருமோ அது நித்ய கர்மாவாகும். நைமித்திக கர்மாவின் காலம், ஒரு நிச்சயமான நியமத்திற்குக் கட்டுப்பட்டதல்ல. கிரஹணத்தின்போது செய்யப்பட வேண்டிய சில கர்மாக்கள் இதற்கு உதாரணம். நித்ய மற்றும் நைமித்திக கர்மாக்கள் சாஸ்திரங்களால் நியமிக்கப்பட்டுள்ளன. அவைகளைச் செய்யாவிடில் பாவம் வந்துச் சேரும். அடுத்ததாக, ஒருவன் ஆசையுடன் ஒன்றை அடைவதற்காகச் செய்யும் கர்மா, காம்ய கர்மா ஆகும். சாஸ்திரத்தில், இவைகளைச் செய்ய வேண்டும் என்று கூறப்படவில்லை, ஒருவன் தனது ஆசையினால் தான் இவைகளைச் செய்கிறான். எக்கர்மா செய்யப்படக் கூடாது என்று சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கிறதோ அது நிஷித்த கர்மாவாகும். அடுத்ததாக உபாஸனை சம்பந்தப்பட்ட கர்மாக்கள் உபாஸனா கர்மாவின் கோஷ்டிக்குச் சேர்கின்றன. எதன் மூலமாக, பாவம் நாசமடையுமோ அது பிராயச்சித்த கர்மா எனப்படும். இந்த ஆறுவகைகளைச் சுருக்கி நித்ய, நைமித்திக, காம்ய, நிஷித்த கர்மாக்கள் என்று நான்கு வகையாகக் கூறலாம். இவற்றில்*

[1] பகவத் கீதை 12.8
[2] பகவத் கீதை 12.9
[3] பகவத் கீதை 12.10
[4] பகவத் கீதை 12.11

*நிஷித்த கர்மாவை ஒருபோதும் ஒருவன் மேற்கொள்ளக்கூடாது. காம்ய கர்மாவை முடிந்த அளவிற்கு விட்டுவிட வேண்டும். அதனால் நித்ய, நைமித்திக கர்மாக்களைச் செய்தே தீர வேண்டும். கர்ம யோகம் செய்பவன் எல்லாவித கர்மாக்களிலும் ஈடுபடமாட்டான். தேவையான செயல்களைப் பற்றுதலின்றி செய்வான். அடிப்படையில் அவன் நித்ய கர்மா மற்றும் நைமித்திக கர்மாக்களில் ஈடுபாடு கொண்டிருப்பான்.*

சி: இறைவனின் அருளைப் பெறுவற்காக ஒருவன் கர்மாக்களை இறைவனிடம் அர்ப்பணிக்கிறான். இந்நிலைமையில் அவனுக்கு பலனில் பற்றுதல் இல்லை என்று எப்படிச் சொல்ல முடியும்? 'இறைவனின் அருள்' என்பதின்மேல் அவனுக்குப் பற்றுள்ளதே. அது கிடைக்க வேண்டும் என்னும் குறிக்கோளுடன் அல்லவா அவன் செயலைச் செய்கிறான்?

ஜ: *ஒரு விதத்தில் பார்த்தால் நீ சொல்வது சரிதான். ஆனால், லௌகிகப் பலன்களில் ஆசை வைப்பதைவிட இறைவனிடம் ஆசை வைத்தால் ஒருவிதமான பந்தமும் ஏற்படாது. அதுபோல் இறைவனிடம் பற்று வைத்துக் கொண்டால், அது பந்தத்திலிருந்துதான் நம்மை நீக்கும். ஆனால், உத்தமமான கர்மயோகம் என்பது இறைவனின் அருளைக் கூட விரும்பி செய்யப்படுவதில்லை. 'இறைவனுக்கு அர்பணிப்பது என் கடமை' என்றுக் கருதிச் செய்வதேயாகும். இதையே சங்கர பகவத் பாதாள் கீதா பாஷ்யத்தில், "'கடவுள் எனக்கு அனுகூலமாக அனுக்ரஹம் செய்யட்டும்' என்கிற பற்றைக்கூட விட்டுவிட்டு, ஈச்வரனுக்காக மட்டுமே காரியங்களைச் செய்"[1] என்று கூறியுள்ளார்.*

சி: ஒருவன் கர்மயோகம் பயிற்சி செய்து கொண்டிருக்கையில், தான் முன்னேற்றம் அடைந்துள்ளானா என எவ்வாறு தெரிந்துகொள்ளலாம்?

ஜ: *பலனில் பற்றுதலில்லாமல் இருக்கவேண்டும் என்று சொன்னேன். ஒருவன் கர்மயோகம் செய்வதில் முன்னேறியுள்ளானா இல்லையா எனத் தான் தெரிந்துகொள்ள ஆசைப்படுவதுதான் பலனில் பற்று இல்லாமல் இருப்பதா? ஆயினும், ஒருவனுக்கு, 'நான் ஆன்மிக வழியில் நன்கு முன்னேறிக் கொண்டிருக்கிறேனா?', என்ற சந்தேகம் ஏற்படுமாயின், அவன் தன் மனது புனிதமாயிருக்கிறதா, அமைதியாக இருக்கிறானா, கவலையேதுமில்லாமல் அனைத்துச் செயல்களையும் இறைவனுக்கு அர்ப்பணமாக செய்து கொண்டிருக்கின்றனா என்று பார்த்துக்கொள்ளலாம். அதுவே ஒருவனுக்கு அவன் கர்மயோகத்தை நன்கு செய்கிறானா என்று காட்டிவிடும்.*

---

*[1] பகவத் கீதை பாஷ்யம் 2.48*

# *15. பக்தி*

சி: சிலர் பஜனை செய்வதைப் பக்தி என்று சொல்கிறார்கள். மற்ற சிலர் நித்ய கர்மாவைச் செய்வதைத்தான் பக்தி என்று சொல்கிறார்கள். இதில் உண்மையான பக்தி எது ஆகும்?

ஜ: *ஆதிசங்கர பகவத்பாதாள் விவேகசூடாமணியில் "மோட்சத்தை அடையக் கூடிய ஸாதனங்களில் பக்திதான் தலைசிறந்தது"[1] என்று கூறுகிறார். பக்தியென்றால் என்ன என்றும் அவர் கூறியுள்ளார். தன்னுடைய ஸ்வரூபத்தை ஆழ்ந்து தியானிப்பதே பக்தி என்கிறார். இதுவே உத்தமமான பக்தியின் லஷணம். ஆனால், இம்மாதிரியான உத்தமமான பக்தியை எல்லோராலும் கடைப்பிடிக்க முடியாது. எனவே அவர்களுக்குச் சற்றே எளிமையான வகையான பக்தியைக் கூறவேண்டும். மதுஸூதன சரஸ்வதி அவர்கள் விளக்கம் கூறும்போது பக்தி மூன்று வகையாக இருக்கிறதென்று சொல்லியிருக்கிறார். முதல் வகை "நான் இறைவனுக்குச் சேர்ந்தவன்" என்று கருதுவது. இரண்டாவது வகை "இறைவன் எனக்குச் சேர்ந்தவன்" என்று எண்ணுவது. இதற்கு உதாரணம் யசோதை கிருஷ்ணரிடம் காட்டிய அன்பே ஆகும். இறைவனிடத்தில் அதிகமான அன்பு வைத்தால் "இறைவன் எனக்குச் சேர்ந்தவன்" என்ற எண்ணம் ஏற்படலாம். அதைக் காட்டிலும் உத்தமமானது "நானேதான் அந்தப் பரம்பொருள்" என்று அறிவதேயாகும்.*

சி: 'நானேதான் பரம்பொருள்' என்பதை எப்படிப் பக்தியென்று கூறலாம்?

ஜ: *சாமான்யமான பக்தன் இறைவனைக் காட்டிலும் தான் வேறானவன் என்பதை ஒத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறான். ஆனால், உத்தம பக்தன் அந்த பிரிவைக் கூடத் தாங்கிக் கொள்ள முடியாமல் "நான் என் இறைவனோடு ஒன்றிணைய வேண்டும்" என்று விரும்புகிறான். இறுதியில் அந்த ஞானத்தையும் பெற்றுக் கொள்கிறான். ஆகவே அதை உத்தம பக்தியென்று சொல்லத்தான் வேண்டும். கிருஷ்ணர் ஒரு ஞானியைத்தான் மிகச் சிறந்த பக்தன் என்று கருதுவதாகக் கூறியிருக்கிறார்.*

சி: சாமான்யமான மக்கள் எவ்வாறு பக்தி செலுத்த வேண்டும்?

ஜ: *எதுவரையில் 'உடல்தான் நான்' என்ற எண்ணம் இருக்குமோ அது வரை, தன்னை இறைவனுடைய சேவகனாகக் கருதுவதே உத்தமம். அவ்வாறிருப்பவன் இறைவனிடமிருந்து ஒன்றையும் விரும்பமாட்டான்.*

---

[1] *விவேக சூடாமணி 32*

இறைவனின் சேவை செய்வதையே தன் கடமை என்று கருதுவான். பிரஹ்லாதனுக்கு பகவான், 'நான் உனக்கு ஏதாவது வரம் தருவேன்' எனக் கூறியபொழுது பிரஹ்லாதன் "எவனுக்கு இறைவனிடமிருந்து ஏதாவது வேண்டுமோ அவன் சேவகனில்லை, வியாபாரி"[1] என்று பதிலளித்தான்.

**சி: அப்படியென்றால் பஜனை செய்வதைப் பக்தியென்று கருதுவது தவறா?**

ஜ: தவறில்லை, அதுவும் பக்திதான். நாரதர் பக்தியைப் பற்றிக் கூறும் பொழுது, "பக்தி என்பது இறைவனின் மீதுள்ள பேரன்பு"[2] என்று கூறுகிறார். இறைவனிடம் எவ்விதமான அன்பைக் காட்டினாலும் அதெல்லாம் பக்தி என்ற கோஷ்டிக்குத்தான் சேரும்.

சங்கர பகவத்பாதாள் சிவானந்தலஹரியில் "எப்படி ஓர் அழிஞ்சில் மரத்தின் விதை அம்மரத்திடம் செல்கிறதோ, எப்படி ஓர் இரும்புத் துண்டு காந்தத்திடம் செல்கிறதோ, எப்படி ஒரு பதிவிரதையான பெண்மணி தனது கணவனின் மீது அபிமானம் வைத்திருக்கிறாளோ, எவ்வாறு ஒரு கொடி மரத்தைச் சுற்றிக் கொள்கிறதோ, எவ்வாறு ஓர் ஆறு கடலைச் சென்றடைகிறதோ, அதேபோல் மனதின் எண்ணங்கள் இறைவனின் பாதாரவிந்தங்களில் நிலைத்திருக்குமானால் அதற்குப் பக்தி என்று பெயர்"[3] என்று கூறுகிறார்.

இங்கு கொடுக்கப்பட்ட முதல் உதாரணம், அழிஞ்சில் மரத்தின் விதை அம்மரத்துடன் தன்னைச் சேர்த்துக் கொள்வதேயாகும். இதைப் போலவே, பக்தியின் முதல் நிலையில், பக்தன் தன் மனதை ஈச்வரனை நோக்கித் திருப்புகிறான். இரண்டாவது உதாரணம் ஒரு இரும்புத் துண்டு காந்தத்தை நோக்கிச் செல்வது. முதல் நிலையில் பக்தன் ஏதாவது முயற்சி செய்ய வேண்டியிருக்கிறது. இரண்டாவதில் பக்தனின் மனம் இறைவனை நோக்கி இயற்கையாகவே செல்கிறது. இறைவனைப் பற்றி நினைத்துக் கொண்டேயிருந்தால் மனம் தானாக அவனிடம் செல்லும். உதாரணத்தில் காந்தம் எவ்வாறு இரும்பை இழுத்துக்கொள்கிறதோ, அதேபோல் இறைவன் பக்தனை தனது பக்கம் இழுத்துக் கொள்வான். மூன்றாவது உதாரணம் ஒரு சிறந்த மனைவியைப் பற்றியது. மனைவி கணவனை நேசிக்கிறாள். பதிலுக்கு அவன் அவளை நேசிக்கிறான். அதைப்போலவே பக்தனும் இறைவனும் ஒருவரையொருவர் நேசிக்கிறார்கள். இவர்களிடையே உள்ள அன்பு பரஸ்பரமானது. மரத்தைச் சுற்றிப் படரும் கொடியே நான்காவது

[1] பாகவத புராணம் 7.10.4
[2] நாரத பக்தி ஸூத்ரம் 1.2
[3] சிவானந்தலஹரீ 61

*உதாரணம். மரத்தைக் கொடி சுற்றிக் கொண்டிருந்தால் அம்மரத்திற்கே ஓர் அழகு ஏற்படும். அதேபோல் பக்தனின் தீவிரமான பக்தி இறைவனின் மேன்மையை உயர்ச் செய்கிறது. இறுதியில், ஓடும் ஆறு கடலுடன் போய்ச் சேர்வது, பக்தியின் உச்ச நிலையைக் குறிக்கிறது. எப்படி ஒரு நதி கடலில் போய்ச் சேர்ந்தவுடன், 'இது நதி' என்று கூற முடியாதோ, அதேபோல் இறைவனிடம் அளவுகடந்த பக்தி கொண்டவன் அதிலேயே ஐக்கியமாகி விடுகிறான். அதுதான் உத்தமமான பக்தியாகும். இவ்வாறு பக்திக்கு வெவ்வேறு நிலைகள் இருக்கின்றன. ஆகவே பஜனை செய்வதும் பக்தியே ஆகும்.*

சி: சிலர் பஜனை செய்தால் போதும், நித்ய கர்மா ஏன் செய்யவேண்டும் என்று கேட்கிறார்கள். இது சரியா?

ஜ: *இல்லை. நித்ய கர்மாவைச் சரிவரச் செய்து வருவதே சிறந்த பக்தி. உதாரணத்திற்கு ஒரு யஜமானும் அவனுக்கு ஒரு வேலையாளும் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அந்த வேலைக்காரன், யஜமானன் சொல்லும் வேலையையே செய்யாமல் வெறுமென யஜமானனைப் போற்றிக் கொண்டிருந்தால் அவனிடம், யஜமானனுக்குத் திருப்தி ஏற்படுமா? இல்லை. இறைவன் தான் இங்கு நமக்கு யஜமானன். அவன் வேதம் மூலமாகவும் ஸ்ம்ருதி மூலமாகவும், நாம் எப்படி வாழவேண்டும் என்று கூறியிருக்கிறான். அந்த கட்டளைகளைப் புறக்கணித்துவிட்டு வெறுமென அவனைப் போற்றிக் கொண்டேயிருந்தால், அது எவ்வாறு இறைவனை மகிழ்விக்கும்? ஆகையால் நாம் நித்ய கர்மாவைச் செய்துவர வேண்டும். அதைத் தவிர பஜனை முதலியவற்றைத் தாராளமாகச் செய்து வரலாம்.*

சி: இறைவனிடம் நம் பக்தியை எவ்வாறு வளர்ப்பது?

ஜ: *நமக்கு ஒரு விஷயத்தில் எப்படிப் பற்று ஏற்படுகிறது? அதைப்பற்றி நல்லவிதமாக நினைத்துக் கொண்டேயிருந்தால் அவ்விஷயத்தில் பற்று ஏற்படும். மீண்டும் மீண்டும் ஒரு செயல் முக்கியமானது என்று நினைத்து வந்தால் அதில் பற்றுதல் ஏற்படுகிறது. அதேபோல் இறைவனிடமும், 'இவன் உத்தமமானவன், இவனைச் சிந்திப்பதில் அளவற்ற இன்பம் இருக்கிறது' என்று நினைத்துக்கொண்டு வந்தால் பக்தி நன்கு நிலைத்திருக்கும்.*

சி: பக்தன் எதற்காக இறைவன் விஷயத்தில் பக்தி வைத்துக்கொள்ள வேண்டும்?

ஜ: *நம்மிடம் இருக்கும் அனைத்தும் இறைவனால் நமக்கு அருளப் பட்டது. ஆதலால் நாம் அவனுக்கு நன்றியுள்ளவர்களாக இருக்க*

*வேண்டும். அவன் நமக்கு லௌகிக நன்மைகளையும், ஆன்மிக சாதனைகளையும் அளிக்கிறான். எனவே நாம் அவனிடம் பற்றுக் கொள்ள வேண்டும். சாமான்யமாகப் பார்த்தால் இப்படிக் காரணம் கூறலாம். ஆனால் உயர்வானது எதுவென்றால், இறைவனிடம் பக்தி வைப்பது தனது கடமை எனக் கருதி இறைவன் விஷயத்தில் பக்தி வைப்பதேயாகும். இறைவனிடம் செலுத்தும் பக்தி இயற்கையாகவே வரவேண்டும். அதுதான் உண்மையான பக்தியாகும். அது எந்தக் காரணத்தையும் சார்ந்து இருக்காது. ஈச்வரன் மிகவும் பிரியமானவன். ஆதலால் பக்தனின் மனது தானாகவே அவனிடம் செல்கிறது. அவ்வளவுதான்.*

சி: ஒருவனுக்கு தன் இஷ்ட தெய்வத்தின் மீது அதிகமாக ப்ரீதி இருந்தால், மற்ற தெய்வங்களிடம் அவ்வளவு ப்ரீதி இருக்காது என்பது ஸகஜம். சிவனையே விரும்பும் ஒருவன் விஷ்ணுவின் பேரில் துவேஷம் வைத்துக் கொள்ளலாமா?

*ஜ: துவேஷம் வைத்துக் கொள்வது நல்லதுமில்லை, சாஸ்திரத்திற்கு அதில் சம்மதமுமில்லை. உருவமே இல்லாத கடவுள், பக்தனுக்கு அருள் புரியத்தான் உருவம் பெற்றுக்கொள்கிறான். இறைவனுக்கு என்று ஒரு உருவமும் கிடையாது. பக்தன் எப்படி விரும்புகிறானோ, அப்படி இறைவன் காட்சியளிக்கிறான். ஆகவே இறைவன் விஷயத்தில் "சிவன் வேறு விஷ்ணு வேறு" என்பது போல் வித்தியாசம் பார்ப்பது தவறு. ஒருவனின் மனதில் அவனது இஷ்டமான தேவதையிடம் ப்ரீதியிருந்தாலும் மற்ற தேவதைகளைத் துச்சம் என்று அவன் கருதக்கூடாது.*

சி: பக்தி மார்கத்திற்குக் ஏதாவது தனிச்சிறப்பு உள்ளதா?

*ஜ: எல்லோரும் பக்தி மார்கத்தில் ஈடுபடலாம். அதற்கு எந்த ஒரு நியமமும் கிடையாது. மேலும், பக்தி செய்வதும் எளிது. ஒருவனுக்கு இயற்கையாகவே ப்ரீதி என்ற ஒன்று இருக்கும். அதை இறைவனிடம் திருப்பிவிட்டால் பக்தியாகிவிடும். தவிர ஞான மார்க்கம் மூலமாகவோ, தியானத்தின் மூலமாகவோ ஒருவன் ஸித்தியடைய வேண்டுமெனில், அதைச் செய்யும் போது பல கஷ்டங்களைச் சந்திக்க நேரிடும். ஓரளவுக்கு முன்னேற்றம் அடைந்த பிறகுதான் அவன் மிகுந்த இன்பத்தை அனுபவிப்பான். ஆனால் பக்தி அப்படியில்லை. பக்தி மார்க்கத்தில் செல்லும் பொழுதே மிகுந்த இன்பமிருக்கும். இந்த மார்க்கத்தில் முதலிலிருந்தே இன்பமிருக்கும். பக்தியின் பலன் வடிவாக பக்தியே இருக்கும். இதுவும் ஒரு விசேஷம்.*

**சி: சில தடவை ஸ்தோத்ரங்களைப் பாரயாணம் செய்யும் பொழுது ஏதாவது தவறுகள் ஏற்படலாம். தவறுகளைப் பாராயணம் செய்பவன் கவனிக்காமல் இருந்திருக்கலாம். இது மிகவும் தவறானதா?**

*ஜ: ஸ்தோத்ரத்தின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டு பாராயணம் செய்வது என்றும் சிறந்தது. அர்த்தத்தை தெரிந்து கொள்வது, மனதை ஒருமுகப்படுத்த உதவும். இருப்பினும், சில சமயங்களில் நம்மை அறியாது தவறுகள் ஏற்பட்டால் அதைப்பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. ஏனெனில், இறைவன் உள்ளத்தில் உள்ளதைத்தான் கவனிக்கிறான், வெளித் தோற்றத்தைக் கண்டு மயங்குவதில்லை.*

*“கல்லாதவன் விஷ்ணாய (‘விஷ்ணுவிற்காக’ என்று தெரிவிப்பதற்கான தவறான பயன்பாடு) என்று கூறுகிறான். கற்றவனோ “விஷ்ணவே” (‘விஷ்ணுவிற்காக’ என்று தெரிவிப்பதற்கான சரியான பயன்பாடு) எனக் கூறுகிறான். இருவரும் புண்ணியத்தையே சம்பாதிக்கின்றனர். விஷ்ணு உள்ளுணர்வையே எடுத்துக் கொள்கிறான்.”*

*பதத்தை உச்சரிக்கத் தெரியாதவன் ‘விஷ்ணவே’ என்பதற்குப் பதிலாக ‘விஷ்ணாய’ என்று கூறலாம். இருவருக்கும் ஒரேவிதமான புண்ணியம்தான் கிடைக்கும். ஏனென்றால் இறைவன் உள்ளிருக்கும் பக்தியைத்தான் பார்க்கிறான். இதை நீலகண்ட தீக்ஷிதர் ஓர் உதாரணம் மூலமாகக் காட்டியுள்ளார். பக்தர்கள் இறைவனுக்கு புஷ்பங்களைச் சமர்பித்து மோட்சத்தை அடைகிறார்கள். மன்மதனும் சிவன் மேல் புஷ்பத்தால் செய்யப்பட்ட பாணத்தைத்தான் விட விரும்பினான். ஆனால், அவரின் தவத்தைக் கெடுக்க வேண்டுமென்ற எண்ணம் கொண்டு, பாணம் விட சித்தமாயிருந்தான். ஆனால் பகவான் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்கு மாறாக அவனை எரித்து விட்டார். பக்தனும், மன்மதனும் ஒரே செயலைத்தான் செய்தார்கள். இருவரும் பகவானின் மேல் புஷ்பம் போடத் தான் சென்றார்கள். ஆனால் பக்தனுக்கு உத்தமமான பலன் கிடைத்தது, மன்மதனோ நாசம் அடைந்தான். ஆகவே எண்ணம்தான் மிகவும் முக்கியமானது.*

**சி: இறைவனிடம் செல்வம் வேண்டும், பரிட்சை நன்கு எழுத வேண்டும் என்றெல்லாம் பிரார்த்தனை செய்வது தவறா?**

*ஜ: பிரார்த்திப்பது தவறில்லை. ஆனால் அது தேவையில்லை. நமக்கு எது நல்லது என்பது இறைவனுக்குத் தெரியும். அவைகளை தருவதற்கான சாமர்த்தியமும் அவனிடம் உண்டு. அவன் கருணையே உருவானவன். அனைத்தையும் அறிந்தவன். ‘நீ என் உள்ளத்தில் இருக்கிறாய். அது போதும். நீ எப்படி வேண்டுமானாலும்*

*நடத்திக்கொள்' என்று அவனிடம் சொல்வதே சிறந்ததாகும்.*

*ஒருவனுக்குக் காமதேனு கிடைத்தால், அதை அவன் உழுவதற்காகப் பயன்படுத்தினால், அதை விவேகமான செயல் என்று சொல்வோமா? இறைவனும் அதேபோல் ஒரு காமதேனுவல்லவா? ஆனாலும் ஆசைள் நிறைவேறுவதற்காக இறைவனைப் பிரார்த்தனை செய்தால், அது தவறென்று சொல்வதற்கில்லை. இதுபோன்ற பிரார்த்தனைகளுக்கும் அவன் செவி சாய்க்கிறான்.*

**சி:** இறைவனுக்கு ஒன்றும் தேவையில்லை**.** ஆயினும், எல்லாவற்றையும் அவனுக்குக் கொடுக்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது**.** இதற்குக் காரணமென்ன**?**

*ஜ: இறைவனுக்கு ஒன்றும் தேவையில்லைதான். ஆனால் அவனுக்கு நம் மனதை அர்ப்பணிக்க வேண்டும் என்று நமக்கு கடமையிருக்கிறதா இல்லையா? நிச்சயமாக இருக்கிறது. ஆதலால் நமது மனத்தை இறைவனிடத்திலே எப்போதும் கொடுக்க வேண்டும். அதாவது இறைவனையே எப்போதும் நினைத்துக் கொண்டிருக்க வேண்டும். பகவான் கிருஷ்ணர், "என்னைச் சிந்தித்து யுத்தத்தில் ஈடுபடு"[1] என்று கூறுவதின் மூலம் எல்லாக் காலங்களிலும் நாம் இறைவனையே சிந்திக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகிறார். மேலும், நாம் இறைவனுக்கு எதை அர்பணித்தாலும் அவன் அவசியம் ஏற்றுக் கொள்வான். பகவானே, "இலை, புஷ்பம், பழம், ஜலம் இவற்றில் எதை பக்தியுடன் நீ தருகிறாயோ அதை ஏற்றுக் கொள்கிறேன்."[2] "எதைச் செய்கிறாயோ, எதைச் சாப்பிடுகிறாயோ, எதை யாகத்தில் தருகிறாயோ, எதைத் தானம் செய்கிறாயோ, எந்த தவத்தைச் செய்கிறாயோ அவை எல்லாவற்றையும் குந்தியின் மகனே! எனக்கு அர்ப்பணமாகச் செய்."[3] என்றும் கூறியுள்ளார்.*

**சி:** சில சமயங்களில் மனக்கவலைகள் போன்றவை நம் மனதை இறைவனிடம் திருப்ப விடாமல், மற்றொரு பக்கம் திருப்பி விடுகின்றன**.** இதற்கு என்ன செய்வது**?**

*ஜ: உண்மையான பக்தனுக்குக் கவலை எதற்காக இருக்க வேண்டும்? ரயிலில் பிரயாணம் செய்யும்போது சுமையைத் தலையில் வைத்துக் கொள்ள வேண்டுமா அல்லது கீழே வைத்துக் கொள்ள வேண்டுமா? தலையில் சுமையை வைத்துக் கொண்டு வந்தால் அவனை முட்டாள்*

---

*[1] பகவத் கீதை 7.7*
*[2] பகவத் கீதை 9.26*
*[3] பகவத் கீதை 9.27*

*என்று நாம் கூறுவோம். இவ்வுலகில் எது நடைபெற்றாலும் அது இறைவனுடைய இச்சையின்படித்தான் நடைபெறுகிறது. இறைவன் நம் நன்மைக்காகவே எதையும் இயற்றுகிறான் என்று கருதிக் கவலையில்லாமல்தானே இருக்க வேண்டும்? நாம் கவலைப்பட்டால் 'இறைவன் நம்மைக் காக்கிறான். நமக்கு எது நல்லதோ அதைத் தருகிறான்' என்பதில் நம்பிக்கையில்லாதது போல்தானே ஆகிறது!*

சி: இதுதான் உண்மை என்று தெரிந்தாலும், சில சமயங்களில் கவலை தானாகவே வருகின்றது. அது எதனால்**?**

*ஜ: பக்தி அந்த அளவிற்குத் தீவிரமாக இல்லை என்று அர்த்தம். அந்தப் பக்தியை வளர்ப்பதற்கும் கவலையை விடுவதற்கும் ஒருவன் முயற்சி செய்யவேண்டும். இறைவனிடம் முழுமைமையாகச் சரணடைந்து விட்டால், ஒருவன் நன்கு சந்தோஷமாக வாழலாமே!*

## *16. வேதாந்த சாஸ்திரங்களைப் படித்தல்*

சி: எதனால் வேதாந்த சாஸ்திரத்தை மிகுந்த ஈடுபாட்டுடன் படிக்க வேண்டும்**?**

*ஜ: ஆன்மிக நாட்டமுள்ள ஒருவனின் சந்தேகங்களைத் தீர்ப்பதற்காகப் படிக்க வேண்டும். சாஸ்திரங்கள் கற்றுத் தருவதைச் சரியாகப் புரிந்து கொள்ளாவிட்டால், நமக்குச் சந்தேகங்கள் எழலாம். ஆகவே மறுபடியும் மறுபடியும் சாஸ்திரங்களைப் படிப்பது இது போன்ற சந்தேகங்களைத் தீர்த்து விடும். மேலும் வேதாந்தத்திலும் உறுதியான நம்பிக்கை ஏற்படும். குரு கற்றுக்கொடுத்ததை வாஸ்தவமாக உணர சாஸ்திர அத்யயனம் வழிவகுக்கிறது. அதுவே சாஸ்திரங்களின் முடிவான நோக்கமாகும்.*

சி: எந்த விதமான புத்தகங்கள் படிக்க வேண்டுமென்பது ஆசார்யாளின் கருத்து**?**

*ஜ: ஆன்மிகத்தில் முன்னேற்றமடைந்தவர்களுக்கு மாண்டூக்ய உபநிஷத் மட்டுமே போதுமானது. அதன் மீது எழுதப்பட்டுள்ள கௌடபாதாசார்ய காரிகையும், பகவத்பாதருடைய பாஷ்யத்தையும் படிக்கலாம். முக்திக உபநிஷத்தில் மாண்டூக்ய உபநிஷத்தைப் பற்றி, "மோட்சத்தில் முனைப்பாக இருப்பவர்களுக்கு, மாண்டூக்யம் மட்டுமே அந்த மோட்சத்தைத் தரப் போதுமானது"[1] என்று கூறப்பட்டுள்ளது.*

*[1] முக்திக உபநிஷத் 1.26*

*யோக வாஸிஷ்டம் அனைவரும் படிக்கத் தக்க ஒரு உன்னதமான நூல். பகவானின் திருவாயிலிருந்து தோன்றிய பகவத் கீதை மிகவும் முக்கியமானது. சங்கரபகவத்பாதரின் படைப்புகள், ஸ்ரீ வித்யாரண்யரின் பஞ்சதசீ போன்றவைகளையும் படிக்கலாம்.*

**சி: எவ்வளவு நாட்களுக்கு ஒருவன் சாஸ்திரத்தை அத்யயனம் செய்து கொண்டிருக்க வேண்டும்?**

*ஜ: பரம்பொருளைப் பற்றிய ஞானம் அடையும்வரை அத்யயனம் செய்ய வேண்டும். அதற்கு பிறகு தேவையில்லை. "எப்படி நெல்லை விரும்புபவன், உமியை எறிந்துவிடுகிறானோ, அதேபோல் முக்தியை விரும்புபவன் சாஸ்திர அத்யயனத்தை விட்டு விட வேண்டும்."[1]*

**சி: பகவத்கீதையில் ஜகத்குருவிற்குப் பிடித்தமான சில சுலோகங்களைக் கூறுவார்களா?**

*ஜ: "எவன், யார் விஷயத்திலும் துவேஷம் வைத்துக்கொள்வதில்லையோ, எல்லோரிடத்தும் மித்ர பாவத்துடனும் கருணையுடனும் இருக்கின்றானோ, எவன் பற்றுதலும் அஹங்காரமும் இல்லாமல் இருக்கின்றானோ, சுகத்திலும் துக்கத்திலும் சமமாக இருக்கிறானோ, எல்லோரையும் மன்னிக்கிறானோ, திருப்தியுடன் இருக்கின்றானோ, மனவடக்கத்துடனும் இருக்கின்றானோ, மேலும் திடமான தீர்மானத்துடன் இருக்கிறானோ, எவனது புத்தியும் மனமும் என்னிடத்திலேயே இருக்கின்றனவோ அப்படிப்பட்ட பக்தன் எனக்கு மிகவும் பிரியமானவன்."[2]*

**சி: இச்சுலோகங்களெல்லாம் ஒரு ஞானியின் இலட்சணங்களையல்லவா குறிக்கின்றன? இப்படியிருக்கும் போது மோட்சத்தை விரும்பு–கிறவனுக்கு இவை பிரயோஜனம் அளிக்குமா?**

*ஜ: ஞானிக்கென்று சொல்லப்பட்ட தன்மைகள் மற்றவர்களை அந்த நிலையை அடையச் செய்யக் காரணமாக இருக்கின்றன என்று சங்கர பகவத்பாதரே தெளிவாகக் கூறியிருக்கிறார். மேலும் பகவானின் உபதேசப்படி அனைவரும் துவேஷமில்லாமல் கருணையுடன் இருப்பார்களேயானால் உலகம் அமைதியுடன் இருக்கும்.*

---

[1] அம்ருதபிந்து உபநிஷத் - I.26

[2] பகவத் கீதை 12.13-14

# *17. பிரஹ்மசர்யம்*

சி: மோட்சத்தையே விரும்புகின்ற ஒருவன் தனது ஆயுள் முழுவதும் பிரஹ்மசர்யத்தைக் கடைபிடிக்க வேண்டும் என்பது தேவையா?

ஜ: *வைராக்யம் கைவரப்பட்டவனாய், மோட்சத்திலேயே ஈடுபாடுள்ள ஒருவனுக்கு, பிரஹ்மசர்யம் மிகவும் அனுகூலமானது. பார்க்கப் போனால், திருமணம் செய்து கொண்டு வாழ்வதென்பது ஒரு பெரிய பந்தமாகும். எவன் ஒருவன் வாழ்நாள் முழுவதும் பிரஹ்மசர்யத்தைக் கடைபிடிக்கிறானோ, அவன் தனது மனதை பரம்பொருளை அறிய மட்டுமே பயன்படுத்தலாம். க்ருஹஸ்தர்களுக்கு (இல்லற வாழ்க்கை வாழ்பவர்கள்) பலவித பொறுப்புகள் இருப்பதால், இது போன்று நடந்து கொள்வது சற்றுக் கடினமானது. மேலும், அவ்வாழ்க்கை, அதிலிருக்கும் இன்பத்தை நோக்கி கவனத்தைத் திசை திருப்பி, ஒருவனை தீவிரமாக அனுஷ்டானம் செய்யவிடாமல் தடைகளை ஏற்படுத்தும்.*

சி: இப்படியிருக்கும்போது சாஸ்திரங்கள் ஏன் திருமண வாழ்க்கையை அனுமதிக்கின்றன?

ஜ: *அனைவரும் மோட்சத்தையே விரும்புவதில்லை. மேலும் சிலருக்கு மட்டுமே ஆயுள் முழுவதும் பிரஹ்மசர்யத்தை கடைபிடிக்கத் தகுதி இருக்கிறது. ஆகவே, மீதமுள்ள மக்களும் நல்வழியில் வாழ்ந்து பரம் பொருளை அடையவேண்டும் என்ற விதத்தில், சாஸ்திரங்கள் திருமண வாழ்வை அனுமதிக்கின்றன. நியமத்துடன் உள்ள க்ருஹஸ்தாச்ரம வாழ்வையே சாஸ்திரங்கள் அனுமதிக்கின்றன.*

சி: ஒருவனுக்கு பிரஜை அல்லது வாரிசு தேவை என்று சாஸ்திரங்களில் பல இடங்களில் கூறப்பட்டிருக்கின்றது. இதற்கு ஜகத்குரு காரணம் கூறுவார்களா?

ஜ: *யாருக்கெல்லாம் மோட்சம் ஒன்றே வேண்டும் என்ற தீவிர விருப்பம் இல்லையோ, மேலும் எவர்களுடைய மனதினில் இன்னும் ஆசைகள் உள்ளனவோ அவர்களுக்காகவே இவ்வாக்கியங்கள் கூறப்பட்டுள்ளன என்பதை சாஸ்திரங்களை ஆழ்ந்து படிப்பவன் அறிந்து கொள்ளலாம். தீவிரமான வைராக்யம் பெற்றுள்ள ஒருவன் திருமண வாழ்க்கையில் ஈடுபடத் தேவையில்லை என்பதை சாஸ்திரங்கள் வாயிலாக நாம் அறியலாம். "என்றைய தினம் தீவிரமான வைராக்யத்தை அடைகிறானோ, அன்றைய தினமே அவன் ஸந்யாஸம் பெற்றுக் கொள்ளட்டும்."[1]*

[1] *ஜாபால உபநிஷத் 4*

*"பிரஹ்மசர்ய ஆச்ரமத்திலிருந்தோ, க்ருஹஸ்த ஆச்ரமத்திலிருந்தோ, வானப்பிரஸ்த ஆச்ரமத்திலிருந்தோ அவன் ஸந்யாஸத்தை மேற்கொள்ளட்டும்"[1] என்றும், "பிரஜைகளை வைத்துக்கொண்டு நாம் என்ன செய்வோம்"[2] என்றும் உபநிஷத்துக்களில் கூறப்பட்டுள்ளன.*

சி: எல்லோரும் பிரஹ்மசர்யத்தை மேற்கொண்டு விட்டால் சமூகம் எவ்வாறு இயங்கும் என்று சிலர் ஆட்சேபணை எழுப்புகிறார்கள். இதுபற்றி ஜகத்குருவின் கருத்து என்ன?

*ஜ: ஆயிரக்கணக்கான ஜனங்களில் ஏதோ ஒருவன்தான் மோட்சத்தை மிகவும் தீவிரமாக விரும்புகிறான். அப்படிப்பட்டவர்களிலும் ஒரு சிலர் தான், தாம் பிரஹ்மசர்ய வாழ்வைக் கடைபிடிக்க வேண்டும் என்று கருதுகிறார்கள். ஆகையால், இந்தக் கேள்விக்கு இடமேயில்லை.*

சி: ஆன்மிகப் பயிற்சிகளை மேற்கொள்வதற்காக பெண்களும் திருமணம் செய்து கொள்ளாமல் இருக்கலாமா?

*ஜ: அவர்கள் ஆன்மிக வாழ்க்கையில் தீவிரமான நாட்டமுள்ளவர்களாக இருந்தால் திருமணம் செய்து கொள்ளத் தேவையில்லை. வாழ்நாள் முழுவதும் திருமணம் செய்து கொள்ளாமல் இருப்பதற்குத் தீர்மானம் செய்வதற்கு முன்னால், இரு விஷயங்களை கவனத்தில் கொள்ள வேண்டும். முதலாவது அவர்களின் மனவடக்கம், இரண்டாவது சூழ்நிலை சரியாக இருக்கிறதா என்று கவனித்துக் கொள்ளுதல்.*

சி: க்ருஹஸ்தர்கள் ஞானத்தைப்பெற்று மோட்சம் அடையமுடியாது என்று ஜகத்குரு கருதுகிறார்களா?

*ஜ: இல்லவேயில்லை. அவர்களும் நிச்சயமாக ஞானமடைந்து மோட்சம் பெறலாம். ஆனால் அவர்களது வழி சற்றுக் கடினமான வழியாகும். திருமணமாகாத ஒரு முமுக்ஷுவானவன் (மோட்சத்தை மட்டுமே விரும்புபவன்), குறிப்பாக ஒரு ஸந்யாஸி, மனச் சஞ்சலங்களை உண்டாக்கும் விஷயங்களிலிருந்து தன்னை விலக்கிக்கொண்டு, மோட்சத்தை அடைவதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு வாழ்க்கையை நடத்தலாம். இப்படியில்லாமல், க்ருஹஸ்தர்கள் குடும்பப் பொறுப்புகளுடன், மோட்சத்திற்கு அனுகூலம் இல்லாத சூழ்நிலைகளையும் எதிர்கொண்டு வாழவேண்டி உள்ளது. ஆயினும், அவர்கள் ஞானம் பெற முடியாது என்று சொல்வது தவறு. ஜனகர் போன்றவர்கள் ஞானிகளாகவே இருந்தார்கள்.*

---

*[1] ஜாபால உபநிஷத் 4*

*[2] ப்ருஹதாரண்யக உபநிஷத் 4.4.22*

சி: நாம் இதிகாஸ புராணங்களில் ரிஷிகளைப் பற்றிப் படிக்கின்றோம். அவர்கள் க்ருஹஸ்தர்களாக இருந்தனர் என்றும் கேள்விப்படுகிறோம். ஆகவே, க்ருஹஸ்தர்களிலும் பலர் ஞானிகளாக இருந்தனர் என்று தானே அர்த்தமாகிறது?

*ஜ: ரிஷி, ஞானி என்ற சொற்கள் ஒரே பொருளைக் குறிக்கும் சொற்கள் கிடையாது. மேலும் நாம் அறிந்த அனைத்து ரிஷிகளும், ஞானிகளாவே இருந்தனர் என்றும் கூறமுடியாது. இதற்கு மேலாக, ஞானிகளாயிருந்த அந்த ரிஷிகள் க்ருஹஸ்தாச்ரமத்தை மேற்கொண்ட பின்னரே ஆத்மஞானம் பெற்றனர், பிரஹ்மசாரியாக இருக்கும் போதே பெறவில்லை என வலியுறுத்திச் சொல்லமுடியாது. மேலும் ரிஷிகள் அனைவரும் திருமணமானவர்கள் அல்ல. சுகர், ஸனகர் போன்றவர்கள் தலைசிறந்த ரிஷிகளென்று அனைவரும் ஒப்புக்கொள்வர். அவர்களெல்லாம் ஞானிகள் என்பதிலும் சிறிதும் சந்தேகமில்லை. ஆனால் அவர்கள் திருமணம் செய்து கொள்ளாத ப்ரஹ்மசாரிகள் என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.*

சி: ஒருவன் நைஷ்டிக பிரஹ்மச்சாரியாக வாழ விரும்புகிறானென்றால், அதற்குத் தகுந்த விரதத்தை எடுத்துக் கொள்வது நல்லதா?

*ஜ: ஒருவன், தான் எடுத்த முடிவில் தீவிரமாக இருந்து, வைராக்யம் இருந்து, காமத்தினால் தாக்கப்படாமலிருந்தால், அம்மாதிரி விரதத்தை அவன் எடுத்துக்கொள்ளலாம். அவ்வாறு எடுத்துக் கொள்ளப்பட்ட விரதம் அவனுக்கு ஆன்மிக பலத்தைக் கொடுக்கும். ஆனால், இது போன்ற விரதங்களை எடுக்கும் முன்பு நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஏனென்றால் நைஷ்டிக பிரஹ்மசர்ய விரதத்திற்குப் பங்கம் ஏற்பட்டால் அது பெரியதொரு பாவமாகும்.*

சி: பிரஹ்மசாரி ஒருவனது மனதில் இழிவான எண்ணங்கள் ஏற்பட்டால், அது அவனது பிரஹ்மசரியத்திற்குப் பங்கம் விளைவிக்கும் என்று ஜகத்குரு கருதுகிறார்களா?

*ஜ: நிச்சயமாகப் பங்கம் விளைவிக்கும். தன்னையறியாமல் ஏதேனும் இழிவான எண்ணம் ஏற்பட்டால் அதுவும் கூட நல்லதல்ல. தெரிந்து கொண்டே இதுபோன்ற எண்ணங்களுக்கு இடங்கொடுத்தால், அது பிரஹ்மசர்யத்திற்குப் பங்கமாகும். அடுத்ததாக, இழிவான கனவுகள் நேரடியாகப் பங்கம் விளைவிக்கும் எனச்சொல்ல முடியாது. ஆனால், ஒருவன் விழிப்பு நிலையில் இருக்கும் போதே ஏதாவது ஒரு கெட்ட எண்ணத்திற்கு இடங்கொடுத்தால் அது இந்த தர்மத்தை மீறியதாகவே கருதப்படும்.*

சி: நைஷ்டிக ப்ரஹ்மசர்ய விரதத்தை சற்றும் பிறழாமல், வெற்றிகரமாகக் கடைபிடிக்க, எவைகளைச் செய்ய வேண்டும், மேலும் எவைகளைத் தவிர்க்க வேண்டும்?

*ஜ: வஞ்சகமான நடத்தை, இழிவான உரையாடல்கள், தீயவர்களின் சேர்க்கை, மனதைக் கெடுக்கும் புத்தகங்கள் போன்றவைகளைத் தவிர்க்க வேண்டும். உடற்பயிற்சி செய்வதை வழக்கமாக்கிக் கொள்வது, நன்மை தரும். ஏனெனில் அது ஆரோக்கியத்தைத் தருவதோடு அல்லாமல், மந்தத்தன்மையயும் போக்குகிறது. பிரஹ்மசர்யம் கடைபிடிக்கும் ஒருவன் தனது வைராக்யத்தைத் தீவிரப்படுத்திக் கொள்ளவேண்டும் என விருப்பமுடையவனாயின், 'எனக்கு பிரஹ்மச்சர்யம் மிகவும் அவசியம். இவ்வுலகிலிருக்கும் எந்தப் பொருளிலிருந்தும் எனக்கு இன்பம் கிடைக்காது' என்பதை மனதில் பசுமரத்தாணிபோல் பதிய வைத்துக்கொள்ள வேண்டும். மேலும் நாம் உட்கொள்ளும் உணவிற்கும் நமது மனநிலையை மாற்றும் சக்தி உண்டு. பிரஹ்மசர்யத்தில் சிரத்தையுள்ளவன் உட்கொள்ளக் கூடாது என்று தடுக்கப்பட்ட உணவு வகைகளைத் தவிர்த்துவிட வேண்டும். வெங்காயம், பூண்டு, மாமிசம், மது, மிகவும் உப்பான, சூடான அல்லது காரமான பண்டம், போன்ற உணவு வகைகளைத் தவிர்க்க வேண்டும். யோகாசனங்கள் மற்றும் பிராணாயாமம் செய்ய வேண்டும்.*

சி: பிரஹ்மசர்யத்தில் உறுதியாக நிலைத்து இருப்பதினால் என்ன பயன்?

*ஜ: எப்போது ஒருவன் பிரஹ்மசர்யத்தில் நன்கு நிலைபெற்றிருப்பானோ அப்போது அவனால் நன்கு தியானம் செய்ய முடியும். ஆன்மிக வாழ்வில் வேகமாக முன்னேறும் வாய்ப்பும் கிடைக்கும். மற்றவர்களையும் அவனால் உயர்ந்த நிலைக்குக் கொண்டுவர முடியும்.*

சி: பற்றற்றவர்களாகவும், காமம் இல்லாதவர்களாகவும் இருந்து நைஷ்டிக பிரஹ்மசர்யத்தைக் கடைப்பிடிக்க விரும்பும் ஆன்மிக ஸாதகர்களுக்கு ஜகத்குருவின் ஆசிகள் உண்டா?

*ஜ: அவர்களுக்கு எனது ஆசிகள் எப்போதுமே உண்டு. அவர்களைப் போல் பலரும் இருந்தால் நான் மகிழ்ச்சியடைவேன்.*

## *18. ஸந்யாஸி*

சி: எந்தச் செயல்களைத் துறக்க வேண்டும்? மேலும் எப்போது துறக்க வேண்டும்?

*ஜ: தேவையில்லாத செயல்களைச் செய்யக்கூடாது. ஆன்மிக வாழ்வில்*

முதலில் ஒருவன் அவனுடைய எல்லாச் செயல்களையும் விட்டுவிட முயற்சி செய்யக்கூடாது. மாறாக அவன் செய்யும் செயல்களை ஈச்வரனுக்கு அர்ப்பணிக்க வேண்டும். இவ்வாறு கர்மயோகத்தின் மூலம் ஒருவனின் மனம் சுத்தம் ஆக ஆக, அவன் மேலும் பற்றற்றவனாகி, அவனுடைய மனம் உள்நோக்கித் திரும்பி, அது தானாகவாகவே செயல்களிலிருந்து விலகிவிடும். இவ்வாறு இருக்கும் பொழுது, அவன் தத்துவத்தை அறிய தீவிரமாக முயல்கிறான். இதுவே அனைத்தையும் துறந்து ஸந்யாஸம் பெறச் சரியான காலம்.

சி: ஞானம் பெற்ற பின் ஸந்யாஸம் எடுத்துக் கொள்ள வேண்டுமா அல்லது அதற்கு முன் எடுத்துக்கொள்ள வேண்டுமா?

ஜ: ஞானம் அடைந்த பிறகு எடுத்துக்கொண்ட ஸந்யாஸத்திற்கு வித்வத் ஸந்யாஸம் எனப்பெயர். ஆனால் ஞானம் அடைவதற்கு முன்பு எடுத்துக்கொள்வது விவிதிசா ஸந்யாஸம் எனப்படும். இவ்விரண்டில் முதலில் சொன்ன வகை சிறந்தது.

சி: எந்த மன நிலைமை ஒருவனை ஸந்யாஸம் பெற்றுக் கொள்வதற்கு தகுதியுள்ளவனாக்குகிறது?

ஜ: உலகத்தை நன்கு பரிட்சை செய்த பிறகு எப்போது ஒருவன் தனக்கு உலகில் ஒரு விதமான நீடித்த இன்பமும் கிடைக்காது என்று தீர்மானித்து, உறுதியுடன் ஆன்மிக வாழ்க்கையில் ஈடுபடுகிறானோ, அதன்பின் எப்போது செயல்களையும், அவற்றை விடுவதைப் பற்றியும், இயல்பாகவே கவலை இல்லாத நிலைக்கு வருவானோ, எப்போது சுக துக்கங்கள் போன்ற நேர்மாறான சூழ்நிலைகளை சமநோக்குடன் எதிர்கொள்வானோ, அப்போது தான் ஸந்யாஸம் பெறத் தகுதியுள்ளவன் ஆகிறான் என்று சொல்லலாம்.

சி: ஒருவன் சிறுவயதிலேயே ஸந்யாஸம் பெற்றுக் கொள்ளலாமா?

ஜ: ஆம், தீவிரமான வைராக்யம் இருந்தால் பெற்றுக்கொள்ளலாம். “எந்த நாளில் ஒருவனுக்கு தீவிரமான வைராக்யம் வருகிறதோ அந்த நாளில் அவன் ஸந்யாஸம் பெற்றுக் கொள்ளட்டும்.”[1]

சி: ஸந்யாஸிகளுக்கு நியமங்கள் இருக்கின்றனவா?

ஜ: ஸந்யாஸம் பெற்று, ஞானத்தை அடையாதவர்களுக்கு நியமங்கள் இருக்கின்றன. ஆனால் ஸந்யாஸம் பெற்றுப் பரம்பொருள் பற்றிய ஞானத்தை அடைந்தவர்களுக்கு ஒரு விதமான நியமமுமில்லை.

---

[1] ஜாபால உபநிஷத் - 4

சி: ஒரு ஸந்யாஸிக்குச் சில நாட்களுக்கு ஆகாரம் கிடைக்கவில்லை என்றால், அவன் ஆகாரம் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டுமா, இல்லாவிட்டால் 'ஆன்மிக வாழ்வு கெட்டாலும் நான் உணவப் பெற முயற்சி செய்யமாட்டேன்' என்று இருக்க வேண்டுமா?

ஜ: *தத்துவத்தை உணர்ந்து ஸந்யாஸியாக இருப்பவன் ஆகாரத்தைப் பற்றியோ மரணத்தைப் பற்றியோ கவலைப்படத் தேவையில்லை. ஆனால் ஞானம் அடையாத ஸந்யாஸி ஒருவனுக்கு ஆகாரம் இல்லாதபோது, அது அவனுடைய ஆன்மிக சாதனைக்கு இடைஞ்சல் கொடுக்கும் என்று அவனுக்குத் தோன்றினால், வேண்டுமெனில் பிக்ஷைக்காகச் (யாசித்து உணவைப் பெறுவது) சற்றே அதிகமாக முயற்சிகள் எடுத்துக் கொள்ளலாம்.*

சி: சாதுர்மாஸ்யம் என்கிற பதத்திற்கு நான்கு மாதங்கள் என்றுதானே அர்த்தம்? ஆனால் தற்போது ஸந்யாஸிகள் ஒரே இடத்தில் இரண்டு மாதங்கள் மட்டும்தானே இருக்கிறார்கள். இது சாஸ்திரங்களினால் அனுமதிக்கப்பட்டுள்ளதா?

ஜ: *ஆம். அனுமதி இருக்கிறது.*

சி: ஸந்யாஸிகள் அஹிம்சையை மஹாவிரதமாக அனுஷ்டிக்க வேண்டுமா?

ஜ: *ஆம். ஸந்யாஸிகள் அனைத்துக் காலங்களிலும் அஹிம்சையை அனுஷ்டிக்க வேண்டும். அவர்களுக்கு அது மஹாவிரதம்.*

சி: ஸந்யாஸிகளுக்கு மற்றவர்களை ஆன்மிகப் பாதையில் வழிநடத்திச் செல்ல வேண்டிய கடமை உள்ளதா?

ஜ: *மோட்சத்தை நோக்கி மற்றவர்களை வழிநடத்திச் செல்ல வேண்டும் என்று ஸந்யாஸிக்கு விதி ஏதும் இல்லை. அவன் தனித்து வாழ்ந்து கொண்டிருந்தாலும் பாதகமில்லை. ஆயினும், தனது கருணையினால் உந்தப்பட்டு, ஞானத்தையடைந்த ஸந்யாஸி ஒருவன் மற்றவர்களுக்கு உபதேசித்தால், அது அந்த சிஷ்யர்களுக்குக் கிடைத்த மிகப்பெரிய பாக்கியமாகும். ஞானமடைந்த ஸந்யாஸிகள் பலர் இவ்வாறு முன்னர் செய்துள்ளனர். பலர் இன்றும் செய்து கொண்டிருக்கிறார்கள்.*

சி: ஞானம் அடைந்தவர்களெல்லாம் முறையாக ஸந்யாஸம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று விதியிருக்கிறதா?

ஜ: *இல்லை. இவர்கள் உலகத்திலேயே இருந்தால்தான் இன்னும் அதிக நன்மை ஏற்படும் என்று இறைவனுக்குத் தோன்றினால், அவர்களை ஸந்யாஸம் அல்லாத ஓர் ஆச்ரமத்திலேயே வைத்திருப்பான். இதற்காக, ஒரு ஞானியாக இருந்துகொண்டு ஸந்யாஸ ஆச்ரமத்தில்*

*வாழ்வதைவிட, க்ருஹஸ்தாச்ரமத்தில் வாழ்வது சிறந்தது என்று நான் கூறவில்லை.*

சி: ஞானமடைந்தவன் எதற்காக ஸந்யாஸத்தை விரும்பப் போகிறான்**?** அல்லது ஸந்யாஸியாவதற்கு முயற்சி செய்யப் போகிறான்**?**

*ஜ: முழுவதுமாக ஞானமடைந்தவன், ஸந்யாஸத்திற்காக ஏங்குகிறான் என்றோ, ஸந்யாஸியாக வேண்டும் என்பதற்காகத் தன்னை வருத்திக் கொள்கிறான் என்றோ கூற முடியாது. செயல்களைச் செய்வதற்கு உந்தப்படாததால் அவன் சிரமமின்றி அவற்றைத் துறந்து விடுகிறான். இவ்வாறு 'வித்வத் ஸந்யாஸி' என்னும் நிலையை அடைந்தவன், ஜீவன்முக்தனாய், ஆனந்தத்தில் அமிழ்ந்த வாழ்வை வாழ்கிறான்.*

## *19. மனதை அடக்குதல்*

சி: மனம் பத்துத் திசைகளில் ஓடுவதால், பல ஜனங்கள் தியானம் செய்வது கடினமாக இருக்கிறது என்று கூறுகிறார்கள்**.** இப்படிப் பட்டவர்கள் தியானம் செய்வதற்கு ஜகத்குரு என்ன உபதேசம் தருவார்கள்**?**

*ஜ: தியானம் என்பது ஒரு ரஹஸ்யம். குருவானவர் சிஷ்யரின் தகுதியை மனதில் வைத்துக் கொன்டே இவ்வித உபதேசத்தை அருள்வார். மனதை அடக்குவது என்பது கடினமானாலும், அதை அடக்கிவிட முடியும்.*

சி: சிலர் மனதை அடக்குவது சாத்தியமேயில்லை என்று கூறுகின்றனர்**.** இவ்விஷயத்தில் ஜகத்குரு என்ன கருத்துத் தெரிவிக்கிறார்கள்**?**

*ஜ: மனதை அடக்குவது இயலாது எனக் கூறும் ஆசாமியிடம் நூறு ரூபாய் நோட்டுகள் அடங்கிய கட்டு ஒன்றைக் கொடு. அதில் எவ்வளவு நோட்டுகள் இருக்கின்றன என்று தவறு வராமல் அவனை எண்ணச் சொல். அவன் அவ்வேலையை முடித்த பிறகு 'எண்ணும்போது உன் மனம் எல்லாத் திசைகளிலும் அலைந்ததா?' என்று கேட்டுப்பார். 'அலையவில்லை' என்றே பதில் கிடைக்கும். தன் சம்பளத்தை வாங்கி எண்ணும்போது ஒருவனின் மனம் அலையுமா? இல்லையே. இதற்கென்ன காரணம்? இக்காரியத்தில் ஒரு விதமான தவறும் ஏற்படக்கூடாது என்கிற எண்ணம்தான். இவ்விதமான பாவனை தியானம் செய்வதிலும் இருந்தால் மனம் ஏன் அலையப் போகிறது? கீதையில் அர்ஜுனன், மனதின் அலையும் தன்மை குறித்து, "கிருஷ்ணா! மனம் மிகவும் சஞ்சலம் வாய்ந்ததாக இருக்கிறது. அது கொந்தளிக்கிறது. பலமுடையதாகவும்,*

பிடிவாதமுள்ளதாகவும் இருக்கிறது. அதை அடக்குவதென்பது, காற்றை அடக்குவதைக் காட்டிலும் கடினமானதென்று நினைக்கிறேன்"[1] என்று கேட்கிறான். அதற்கு கிருஷ்ண பரமாத்மா, "சந்தேகமில்லை, குந்தியின் மகனே! இம்மனதை அடக்குவது கடினம்தான். ஆனால், அதை அப்யாஸம் மூலமாகவும், வைராக்யம் மூலமாகவும் அடக்கலாம்."[2] என்று பதிலளிக்கிறார்.

**சி: அப்யாஸம் (பயிற்சி) என்றால் இங்கு என்ன பொருள்?**

ஜ: *மனதை ஒருமுகப்படுத்த முயற்சி செய்வதே அப்யாஸம் எனப்படும். இந்த அப்யாஸம் என்பது, தியானிக்கப்படும் வஸ்துவின் எண்ணத்தை மனதில் மீண்டும் மீண்டும் தொடர்ந்து சிந்திப்பதை உள்ளடக்கியது.*

**சி: இங்கு வைராக்யம் என்ற சொல் எக்கருத்துடன் கூறப்பட்டுள்ளது?**

ஜ: *எப்போது ஒருவனுக்கு லௌகிக மற்றும் ஸ்வர்க்க இன்பங்களில் பற்றுதல் இல்லையோ அப்போது அவனுக்கு வைராக்யமிருக்கிறது என்று சொல்லலாம். வைராக்யம் ஆன்மிக வாழ்வின் அஸ்திவாரம் போலிருக்கிறது.*

**சி: வைராக்யத்தை எப்படி உண்டாக்குவது?**

ஜ: *வைராக்யம் பலவிதமான வழிகளில் ஏற்படலாம். ஒருவனின் மிகப் பிடித்தமான உறவினர் யாராவது இறந்துவிட்டால், அவனுக்கு இந்த உலகத்தில் ஒன்றுமே வேண்டாம் என அச்சமயத்தில் தோன்றலாம். ஆனால், இதுபோன்ற வைராக்யம் நிலைத்து நிற்காது. ஆன்மிக ரீதியில் இது முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல. அது நிலைத்திருக்க வேண்டுமானால், அது விவேகத்திலிருந்து வந்திருக்க வேண்டும். உதாரணத்திற்கு, நாம் ஸத் (எது என்றும் இருக்கின்றதோ, உண்மையானதோ) என்பதையும், ஸத் அல்லாததையும் பிரித்துப் பார்க்கிறோம். இதுபோன்ற விசாரத்தின் மூலமாக ஏற்படும் வைராக்யம் நிலைத்து நிற்கும். ஸத்-அஸத் விவேகத்தின் மூலமாக வைராக்யம் ஏற்படுவது சற்றுக் கடினமாக இருக்கலாம். மாறாக 'எப்பொருளில் இருந்தும் எனக்கு இன்பமே கிடையாது' என்று எண்ணுவது சுலபமே. இது ஒருவகை கீழ்நிலையான விவேகமாகும். இந்த விவேகம் மூலமாகவும் ஒருவன் வைராக்யத்தை வளர்த்துக் கொள்ளலாம்.*

**சி: பொருட்களிலிருந்து இன்பமே கிடைப்பதில்லை என்று எவ்வாறு கூற**

---

[1] *பகவத் கீதை 6.34*
[2] *பகவத் கீதை 6.35*

முடியும்? ஒரு பொருளைச் சாப்பிட்டாலோ அல்லது ஒரு போகத்தை அனுபவித்தாலோ இன்பம் கிடைக்கிறதே!

ஜ: *இல்லை. நன்கு ஆராய்ந்தோமேயானால் பொருட்களிலிருந்து இன்பம் கிடைப்பதில்லை என்பது புலனாகும். ஒரு பொருள் மற்றொரு பொருளுக்குக் காரணமாக இருக்க வேண்டுமென்றால், அங்கு 'அன்வய வ்யதிரேகங்கள்' நிறைவேற வேண்டும். காரணம் உள்ள போது காரியம் உண்டாவது அன்வயம். காரணம் இல்லாதபோது காரியமும் இல்லாதிருப்பது வ்யதிரேகம். உதாரணத்திற்கு மண் தான் பானைக்குக் காரணமென்று சொல்கிறோம். மண்ணிருந்தால் பானை இருக்கும். இது அன்வயம். மண் இல்லாமல் பானை வராது. இது வ்யதிரேகமாகும். காரிய-காரணங்கள் இருக்க வேண்டுமெனில், அன்வய வ்யதிரேகங்கள் அவசியம் இருக்க வேண்டும். பொருட்கள் காரணமாக, இன்பம் காரியமாக இருக்கவேண்டுமெனச் சொன்னால் இரண்டிற்கும் இடையே அன்வய-வ்யதிரேகங்கள் இருக்க வேண்டும். ஆனால் இங்கு அவை இல்லை. ஆகவே பொருட்கள் இன்பத்திற்குக் காரணமில்லை என்றே தெளிவாகிறது.*

சி: ஜகத்குரு இதற்கு ஒரு உதாரணம் தந்து விளக்குவார்களா?

ஜ: *ஒருவன் ஒரு மிட்டாய் சாப்பிடுகிறான் என்று வைத்துக் கொள்வோம். இப்போது, மிட்டாய் அவனது இன்பத்திற்குக் காரணமா என்று ஆராய்வோம். வியாதி இருக்கும்போது அவனிடம் மிட்டாயைக் கொடுத்தால், அப்போது அது அவனுக்கு இன்பம் தருவதில்லை. ஆகவே மிட்டாய் இருக்கும் போதும் இன்பம் தராமலிருக்கிறது. அதுபோல மிட்டாய் இல்லாத நேரங்களில் கூட, அவன் நன்பர்களுடன் இருந்து கொண்டு, இன்பத்தை அனுபவிக்கலாம். ஆகவே அந்த மிட்டாய் இன்பத்திற்குக் காரணமாக இருக்க முடியாது.*

சி: ஒரு பொருள் இல்லாத சமயத்தில் மற்றொரு பொருளால் நமக்கு இன்பம் கிடைக்கிறது. ஆகவே ஒரே ஒரு பொருள் மட்டும் தனித்துக் காரணமாகாவிட்டாலும், எல்லாப் பொருட்களையும் சேர்த்துப் பார்த்தோமானால் அவை ஏன் இன்பத்திற்கு காரணமாகக் கூடாது?

ஜ: *இதுவும் சரிவராது. ஆழ்ந்த உறக்கத்தின்போது ஒவ்வொருவனும் சந்தோஷத்தை அனுபவிக்கிறான். உறக்கத்திலிருந்து எழுந்தவுடன் 'நான் இன்பமாக நன்கு உறங்கினேன், எனக்கு அப்போது ஒன்றும் தெரியவில்லை' என்கிறான். ஆழ்ந்த உறக்கத்தின் போது எந்தப் பொருளும் இருப்பதில்லை. ஆயினும், ஒருவனுக்கு நிச்சயம் இன்பம் இருக்கிறது. ஆகவே எல்லாப் பொருட்களையும் ஒரு சேரக் கூட்டிப் பார்த்தாலும், அவை இன்பத்திற்குக் காரணம் என்றும் கூற முடியாது.*

அதுமட்டுமல்லாமல், ஒரு பொருள் இல்லையென்றால் இன்பத்தை தருவதற்கு மற்றொரு பொருள் எந்நேரமும் கிடைக்கப்பெறும் என்றும் கூற முடியாது.

சி: பொருட்கள் இன்பத்திற்குக் காரணமில்லை என்றாலும் ஒரு பொருள் கிடைக்கும்போது மனிதனுக்கு எவ்வாறு இன்பம் கிடைக்கிறது?

ஜ: மன அமைதியினால்தான் கிடைக்கிறது. ஒரு பொருளை ஒருவன் விரும்பும்போது அவன் மனதில் ஆசைகள் இருப்பதால், மனது அமைதியாய் இருப்பதில்லை. ஆகவே, அத்தருணத்தில் இன்பம் இருப்பதில்லை. வேண்டிய பொருள் கிடைத்தவுடன் அந்த ஆசை அடங்குகிறது. ஆதலால் மனம் அமைதி பெறுகிறது. அதனால் தான் அவன் இன்பம் அனுபவிக்கிறான். இவ்வாறு நடந்து முடிந்தவுடன் அவனுக்கும் மேலும் ஓர் ஆசை ஏற்பட்டு மனவமைதி போய்விடுகிறது. அதனால் இன்பம் போய்விடுகிறது. வேண்டிய பொருள் கிடைத்ததும் மீண்டும் மனவமைதி பெறுகிறான், பிறகு இன்பம். இப்படியாக இது போய்க்கொண்டிருக்கிறது. சாமான்யமாக, ஒருவன் மனதின் இரண்டு எண்ணங்களுக்கு நடுவே ஓர் இடைவெளி இருக்கிறது என்பதைக் கவனிப்பதில்லை. ஆதலால் ‘அவ்வின்பம் மன அமைதியினால்தான் ஏற்படுகிறது’, என்று அவன் தெரிந்து கொள்வதில்லை. மேலும் பொருட்களே இன்பத்துக்குக் காரணம் என்ற தவறான எண்ணத்திற்கு வேறு ஆளாகிறான்.

சி: ஒருவன், ‘இன்பம் மன அமைதியினால் தான் கிடைக்கும், பொருட்களினால் அல்ல’ என்று தெரிந்து கொண்டால், அதன்மூலம் வைராக்யம் பெறலாமா?

ஜ: ஆம், பெறலாம். ‘பொருட்களிலிருந்து இன்பமில்லை. எனவே அவை பயனற்றவை’, என்பதைத் திரும்பத் திரும்ப கவனித்துக் கொண்டு வந்தால் நிச்சயமாக வைராக்யம் பெறலாம். உதாரணத்திற்குப் பண ஆசையுள்ள ஒருவன், ‘பணத்தைச் சம்பாதிப்பதற்குச் சிரமப்பட்டு உழைக்கவேண்டும். அதை வைத்துக் காப்பாற்றுவதும் கடினம். அது திருடப்பட்டாலோ அல்லது செலவழிந்து போனாலோ, வேதனையைத் தருகிறது. ஆக, பணம் முடிவில் துன்பமே தருகிறது, இன்பத்தை அல்ல’, என்று எண்ணிக்கொள்ள வேண்டும். பெண்களின் மீது ஏற்படும் காமத்தைத் தவிர்க்க ‘இவளது உடல், வெறும் ரத்தமும், மாமிசமும் நிறைந்தது’ என்று கருதலாம். இம்மாதிரி மீண்டும் மீண்டும் சிந்தித்தால், ஆசைகளைச் சமன் படுத்தி விடலாம். வைராக்யம் மனதை நிலையானதாகவும், அமைதியாகவும் மாற்றும். வைராக்யமுள்ள

*மனம்தான் தியானம் செய்வதற்கு ஏற்றது. வைராக்யமுள்ளவன் தியானத்தின் உத்தம நிலையையும் அடையலாம்.*

## *20. தியானம்*

சி: தியானம் என்றால் என்ன**?**

ஜ: *எந்த ஒரு நிலையில் மனம் ஒரே விஷயத்தில் கவனம் செலுத்துமோ அது தியானம் எனப்படும்.*

சி: தியானத்தின் முக்கியப் பயனென்ன**?**

ஜ: *மனதை ஒரு நிலைப்படுத்துவதில் பழக்கமிருந்தால், இறைவனின் பக்கமே மனதைச் செலுத்தி, அவ்வாறு புனிதமடைந்த மனதை அதன் பிறகு, குணமும், ஆகாரமும் இல்லாத ஆத்மாவின் பக்கம் திருப்பி விடலாம். இப்படிச் செய்வதன் மூலம், ஒருவன் தியானத்திலேயே மிக உயர்ந்த நிலையான நிர்விகல்ப ஸமாதியை அடைந்து அங்கு ஆத்ம தத்துவத்தின் அறிவையும் பெறலாம்.*

சி: தியானம் செய்வது மிகுந்த நன்மை பயப்பதானாலும், அதைப் பயிற்சி செய்வது மிகவும் கடினமாக இருப்பது ஏன்**?**

ஜ: *வேறென்ன, மனதை அடக்குவது கடினமாக இருப்பதே காரணம்.*

சி: மனதை எவ்வாறு அடக்குவது**?**

ஜ: *அப்யாஸத்தினாலும், வைராக்யத்தினாலும் மனதை அடக்கலாம் என்று பகவான் கூறியிருக்கிறார்.*

சி: தியானத்திற்குத் தடைகளாக எவையெல்லாம் இருக்கின்றன**?**

ஜ: *நீ தியானம் செய்யும்போது உள்ள தடைகளைப் பற்றிக் கேட்கிறாயா, இல்லை மற்ற சமயங்களில் ஏற்படும் தடைகளைப் பற்றிக் கேட்கிறாயா?*

சி: தியானம் செய்யும் வேளையில் ஒருவன் ஸமாதியை (தியானத்தின் உச்ச நிலை) அடையவிடாமல் தடுக்கும் தடைகளைப் பற்றிக் கேட்கிறேன்**.**

ஜ: *தடைகளில் முதலாவது விக்ஷேபம். அதாவது மனம் கண்ட திசைகளில் ஓடிக்கொண்டிருக்கும். விக்ஷேபமில்லாவிட்டாலும், தூக்கம் போல் மனம் ஒருவித ஜடத்தன்மையை அடைவது இரண்டாவது தடையாகும். விக்ஷேபமில்லாமல் இவ்வாறு இருப்பினும் அதுவும் மோசம் தான். தூக்கம்போல் ஜடத்தன்மை ஏற்பட்டால் ஒருவன் உத்தம நிலையை அடையமாட்டான். ஸகஷாயம் என்ற நிலை மூன்றாவது தடையாகும். இதில் விக்ஷேபமும் இருக்காது, மனம் ஜடமாகவும் இருக்காது. ஒரு*

விதமான இன்பம் இருந்தாலும் ஆசையின் விதை அழிவதில்லை. மேலும், அந்நிலை ஸமாதியைப் போலிருக்காது. ஒருவன் கவனத்தோடு இந்த நிலையையும் தாண்டிச் செல்ல வேண்டும். கௌடபாதர், “தூக்கத்தில் மனம் இருந்தால், அதை எழுப்ப வேண்டும். பொருட்களில் விக்ஷேபம் அடைந்தால், அதை அமைதிப்படுத்த வேண்டும். ஆசையின் வேருடனிருந்தால் அதைத் தெரிந்துகொள்ள வேண்டும். சமநிலையில் இருந்தால் அதை அசையாமல் விட்டுவிட வேண்டும்”[1] என்று கூறுகிறார்.

சி: விக்ஷேபத்திலிருந்து மனதை எப்படி அடக்குவது?

ஜ: நாம் எதைத் தியானம் செய்யவேண்டுமோ அதன் மேலேயே மனதை மீண்டும் மீண்டும் திருப்ப வேண்டும். வைராக்யம் அதிகம் ஆக ஆக இந்த விக்ஷேபம் குறைந்து கொண்டு வரும். தியானம் செய்யும் வேளையில் தியானம்தான் அவசியம் என்று பாவித்துச் செய்ய வேண்டும். தியானம் செய்யக்கூடிய ரூபமோ, சப்தமோ அங்கு உண்மையாகவே இருக்கிறது என்று பாவனை செய்து கொண்டால், அது தியானத்திற்கு உதவியாக இருக்கும்.

சி: மனமானது ஜடமான நிலையை அடைந்து அதனால் பாதிக்கப்பட்டால் அதற்கு என்ன செய்யவேண்டும்?

ஜ: கவனித்துப் பார்த்தால் மனம் தற்போது ஜடமாகிக் கொண்டிருக்கிறது, தூக்கத்தின் பக்கம் செல்கிறது, என ஒருவன் தெரிந்து கொள்ளலாம். அப்படித் தெரியும் வேளையில், முயற்சி செய்து, மனதை விழிக்கச் செய்தும், ஒருமுகப்படுத்தியும், மனம் தூக்கம்போல் இருப்பதை தவிர்க்கலாம். இதற்காகச் செய்கின்ற ஜபத்தை, இன்னும் தீவிரமாகச் செய்து கொண்டு வரலாம். அவ்வாறு செய்தால் மனம் மீண்டும் விழிப்பு நிலைக்கு திரும்பிவிடும். என்ன செய்தாலும் மனம் ஜடத் தன்மையான லயத்திற்கே சென்று கொண்டிருந்தால், சற்று நேரம் எழுந்து நடந்து விட்டு மீண்டும் தியானத்திற்கு அமரலாம். சில சமயங்களில் வலுக்கட்டாயமாக மனதை தியானத்தில் ஈடுபடுத்தக் கூடாது. சோர்வாக இருந்தால், சற்று நேரத்திற்கு இடைவெளி கொடுத்த பிறகே தியானத்தில் அமர வேண்டும். மனம் சோம்பேறித்-தனம் காரணமாக முக்கால்வாசி நேரங்களிலும் தியானத்தில் ஈடுபடுவ-தில்லை என்றால், அப்போது அதை அவசியம் ஈடுபடச் செய்து பழகிக்கொள்ள வேண்டும்.

சி: தியானம் செய்யும்போது ஜபம் செய்வது தேவையா?

[1] கௌடபாத காரிகை - 3.44

ஜ: ஸகுண உபாஸனை செய்யும் போது முதன்முதலில் ஓரளவுக்கு ஜபம் செய்வது தேவை என்றே சொல்லலாம். மனதை அமைதியாக்க ஜபம் பெரிதும் உதவுகிறது. மனமானது தியானம் செய்யப்படும் ரூபத்தில் எப்போது ஒன்றி விட்டதோ அப்போது ஜபம் தானாகவே நின்று விடும். எனவே நாமாகவே ஜபத்தை நிறுத்தத் தேவையில்லை.

சி: ஒரு ரூபத்தின் மேல் எவ்வாறு தியானம் செய்வது?

ஜ: நுட்பங்கள் மாறுபடும். ஒவ்வொருவருக்கும் தனித் தனியாகத்தான் தியானம் உபதேசிக்கப்பட வேண்டும். எல்லோருக்கும் ஒரே போல் நியமங்களைக் கூற முடியாது. நீ கேட்டதற்காக ஒரு முறையைச் சொல்கிறேன். ஒருவனது இஷ்ட தேவதையை அவன் தன் உள்ளத்தில் தாமரையில் அமர்ந்து இருப்பதாகத் தியானித்து வரலாம். அந்த ரூபத்தைப் பார்ப்பதோ, அல்லது அந்த ரூபத்திலேயே கவனம் செலுத்துவதோ கடினமானால், அந்த இஷ்ட தேவதையின் சித்திரத்தை உதவிக்கு வைத்துக் கொள்ளலாம். அப்படத்தையே நோக்கியவாறு சிறிது நேரம் ஜபம் செய்து கொண்டிருக்க வேண்டும். அதற்குப் பிறகு கண்களைச் சற்றே மூடி படத்திலுள்ள தேவதையை அங்கு வாஸ்தவமாகப் பார்ப்பதாக எண்ணித் தியானம் செய்ய முயல வேண்டும். சற்று நேரம் வரை மனம் அசையாமல் நிற்கலாம். ஆனால் மனம் அலைய ஆரம்பித்து விட்டது என்றால் கண்களைத் திறந்து மீண்டும் அச்சித்திரத்தைப் பார்த்துக் கொள்ளலாம். பிறகு மீண்டும் கண்களைச் சற்றே மூடி தியானம் செய்ய வேண்டும். இதேபோல் முயற்சி செய்து கொண்டு போனால், அத்தேவதையின் உருவம் படத்தைப் பார்க்காமலேயே மனதில் நின்றுவிடும். இங்கு நான் சொன்னது தியானத்தின் ஒரு வழிமுறை. சப்தத்தின் மீதும் தியானம் செய்வது மற்றொரு வகை. பதஞ்சலி மஹரிஷி தனது யோக சூத்திரத்தில் சில பொதுவான விதிமுறைகளை இவ்வாறு கூறியுள்ளார்.“அனுமதிக்கப்பட்ட மற்றும் பிடித்த பொருளில் தியானம் செய்து கொள்ளலாம்”[1] குருவானவர், தனது சிஷ்யனுக்கு எது சரி என்று தீர்மானித்து அதற்கேற்ப உபதேசிப்பார்.

சி: உடல் நலம் சரியில்லாத சமயங்களில் தியானம் செய்வது நல்லதா?

ஜ: அது உடல்நிலையைப் பொறுத்தது. தியானத்தில் உயர்ந்த நிலையை அடைந்தவர்களால் எப்போது வேண்டுமானாலும், தியானத்தைச் செய்யமுடியும். ஆனால், தியானப் பயிற்சி செய்து கொண்டிருக்கும் நிலையில் உள்ளவர்களால், தமது உடல் நலமாக இருக்கும்போது

[1] யோக சூத்திரம் 1.39

*தான் தியானம் செய்ய முடியும். தியானத்தின் பயிற்சியை எவ்வளவு செய்கிறோமோ அவ்வளவுக்கு நல்லது. அதற்காக மனதிற்குச் சிரமம் உண்டாகும் வகையில் செய்யக்கூடாது. தியானம் செய்வதில் நிபுணர்களாய் இருப்பவர்கள், மணிக்கணக்காகக் கூடச் செய்யலாம். ஆனால் தியானமே வராதவன் தானும் ஆறு மணிநேரம் அமர்கிறேன் என்றால், அது கடைசியில் அவனுக்கு வெறுப்பைத் தான் தரும். மேலும் தலைவலியோ வேறு வலியோ உண்டாக்கக்கூடும்.*

சி: நிர்குண தியானத்தை (குணங்களற்ற பரம்பொருளின்மீது தியானம்) எவ்வாறு செய்வது**?**

*ஜ: நிர்குண தியானம் செய்யும் பொழுது உருவத்தையோ ஜபத்தையோ உபயோகப்படுத்த வேண்டிய தேவையில்லை. தியானப் பயிற்சியில் உயர்ந்த நிலையை அடைந்தவர்களுக்கு நிர்குண தியானம் மிகவும் பொருத்தமானது. எதற்கு ரூபமும் குணங்களும் பயன்படுத்தப்படுவது இல்லையோ அதுவே நிர்குண தியானம் எனப்படும். இது தியானத்திலேயே உயர்ந்த நிலையான நிர்விகல்ப ஸமாதிக்குக் கொண்டுவிடும். எப்படிச் செய்ய வேண்டும் என்பதை இங்கேயும் ஒரு குறிப்பிட்ட விதமாகச் சொல்ல முடியாது. இதற்கு ஒரு முறை என்னவென்றால், மனதில் தோன்றும் எண்ணங்களை 'எனக்கும் இந்த எண்ணங்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை' என்று அவைகள் தோன்றி மறைவதைப் பார்த்துக்கொண்டிருப்பது. இப்படிச் செய்தால், மனதில் தோன்றும் எண்ணங்கள் தாமாகவே அடங்கிவிடும். மற்றொரு முறை, வலுக்கட்டாயமாக மனதின் அனைத்து எண்ணங்களையும் அடக்கி வைத்துத் தான் சச்சிதானந்த வடிவான ஆத்மா என்று உறுதியாக எண்ணுவது. இதுபோன்ற நிர்குண தியானத்தின் போது உடலின் ஞாபகம் போய்விடும்.*

சி: சில சமயம் தியானம் செய்யும்போது சிலருக்கு உடலில் துடிப்பு ஏற்படுகிறது**.** இதற்கு காரணமென்ன**?**

*ஜ: சாமான்யமாக உடலில் பலமில்லை என்று அர்த்தம். இல்லாவிட்டால் குண்டலினி சக்தியின் ப்ரபாவம் என்ற காரணமாகவும் இருக்கலாம். சிறிய அதிர்வுகளைப் பற்றிக் கவலைப்படாமல் தியானத்தைச் செய்து கொண்டு போகலாம்.*

சி: தியானம் எம்மாதிரி இடத்தில் செய்ய வேண்டும்**?**

*ஜ: சப்தமில்லாத தூய்மையான இடத்தில் தியானம் செய்ய வேண்டும்.*

சி: பலர் சிரத்தையுடன் இதை விரும்புகிறார்கள்**.** ஆனாலும் அவர்களால் தியானத்தை ஒழுங்காகச் செய்ய முடிவதில்லையே, எதனால்**?**

*ஜ: அவர்கள் தியானத்தை மிகவும் நேசிக்கிறார்கள் என்று தோன்றலாம். ஆனால், உண்மையிலேயே அப்படித்தானா என்றால் முக்கால்வாசிப் பேர்களின் விஷயத்தில் 'இல்லை' என்பதே பதிலாகும். அவர்களின் வாழ்க்கையைச் சற்று ஆராய்ந்து பார்த்தால் தியானத்திற்கு முக்கிய ஸ்தானம் அளிக்கப்படுவதில்லை என்று தெரியும். அவர்களின் வாழ்வின் தூக்கம், உணவு, அலுவலகம், தேர்வு போன்றவைகளுக்கு தியானத்தை விட அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கும். அவர்களுக்கு அலுவலகத்திற்கு நேரமாகிவிட்டால் தியானத்தின் கதி அவ்வளவுதான். மேலும், அவர்கள் தியானத்தில் அமரும் போது 'உலகத்தில் எது வேண்டுமானாலும் நடக்கட்டும். எனக்கு இப்போது தியானம்தான் முக்கியம்' என்ற எண்ணத்துடன் அமருவதில்லை. மேலும் முற்பிறவியில் தியானத்தை அதிகமாகச் செய்யாதவர்களுக்கு இப்பிறவியில் தியானம் கடினமாக இருக்கிறது. அது போலவே முற்-பிறவியில் தியானத்தை நன்கு பயிற்சி செய்தவர்களுக்குத் தற்போது தியானம் செய்ய எளிதாக வரும். முதல் முறை ஆற்றில் இறங்கும் ஒருவனுக்கு நீச்சல் அடிப்பது மிகவும் கடினம். ஆனால் பழகப் பழக அது எளிதாகிவிடும். அதேபோல் தான் தியானமும் இருக்கும்.*

சி: தியானத்திற்கு அமரும் போது 'இப்போது நான் எந்த ஒரு லௌகிக கவலைக்கும், யோசனைக்கும் இடங்கொடுக்கப் போவதில்லை' என்று மனதில் தீர்மானத்துடன் இருப்பது தியானத்திற்கு உதவுமா?

*ஜ: ஆம், உதவும்.*

சி: தீவிரமான வைராக்யம் உள்ளவனுக்கு லௌகிக யோசனைகளை மறப்பது சுலபமாக இருக்க வேண்டுமல்லவா? சிலருக்குத் தீவிரமான வைராக்யம் இருப்பதைக் காண்கிறோம். ஆனால், அதேசமயம் அவர்களால்கூட நன்கு தியானம் செய்ய முடிவதில்லையே! இதற்கு என்ன காரணம் என்று ஜகத்குரு தெளிவுபடுத்துவார்களா?

*ஜ: சாமான்யமாக, வைராக்யம் அதிகமாக இருப்பவர்களுக்குத் தியானம் சுலபமாகவே வரும், ஆயினும் சிலபேர், தான் முற்பிறவிகளில் நன்கு தியானத்தைப் பயிற்சி செய்யாத காரணத்தினால், தற்போது தியானம் செய்ய முடிவதில்லை என்று கூறலாம்.*

சி: தியானம் செய்யும் முயற்சியில் ஒருவன் மீண்டும் மீண்டும் தோல்வியடைந்து கொண்டிருந்தால், அவனுக்கு உற்சாகம் போய் வெறுப்பு ஏற்படாதா?

*ஜ: ஒருவன் ஆன்மிக சாதனைகளின் போது வெறுப்பு உண்டாக இடம் கொடுப்பது தனது வழியில் தானே தடைக்கல்லாக நிற்பதைப்*

*போலாகும். மிகவும் அல்பமான ஒரு பட்டத்தைப் பெறுவதற்குக்கூட, பல வருடங்கள் கல்லூரி முதலியவைகளுக்குச் சென்று படிக்க வேண்டி வருகிறது. சாதாரணமான லௌகிக விஷயத்திலேயே பல வருடங்களுக்கு முயற்சி தேவைப்படுகிறது என்றால், மிகவும் சூட்சுமமாகவும், உத்தமமாகவும் விளங்கும் தியானத்தைப் பெறச் செய்ய வேண்டிய முயற்சிகளைப்பற்றி என்ன சொல்ல வேண்டும்? பட்டம் பெறுவதற்காகச் செய்யும் முயற்சிகளில் ஒரு சிறு பகுதியைக் கூட தியானத்திற்காக மக்கள் செய்யாவிட்டாலும், அதைச் செய்யும் போது வெறுப்பு வேறு ஏற்படுகிறது என்று கூறுகிறார்கள். இது எவ்வளவுக்கு நியாயம் என்று நீயே பார்த்துக்கொள்ளலாம். பதஞ்சலி மஹறிஷி தமது யோக சூத்திரங்களில், “நீண்ட காலம் விடாமல் சிரத்தையுடன் முயற்சி செய்தால், உத்தமமானதும் ஸ்திரமானதுமான அந்த நிலையைப் பெறலாம்”[1] என்று கூறியிருக்கிறார். சில நாட்களிலோ இல்லை சில மாதங்களிலோ ஒருவன் தியானம் கைவரப்பெறலாம் என்றால் பதஞ்சலி இதுபோன்று கூறியிருக்க மாட்டார்.*

**சி:** நன்கு தியானம் வரப்பெறுபவர்களுக்கும் தியான நிலையில் ஏற்ற இறக்கங்கள் இருக்கிறதே**.** அவர்களுக்குச் சில காலங்களில் தியானம் மிகவும் விசேஷமாக வருகிறது என்றும் சில சமயங்களில் அவ்வளவு நன்றாக வருவதில்லை என்றும் கூறுகிறார்கள்**.** எப்போதும் நன்கு தியானம் வருவதற்கு என்ன செய்ய வேண்டும்**?**

*ஜ: உடல்நலமின்மை, உணவில் நியமங்களைப் பின்பற்றாதது, சோம்பேறித்தனம், கவலைகள், ஆசைகள் முதலியவை தியானத்திற்குத் தடைகளாக இருக்கின்றன. ஆகவே இத்தடைகளை நாமே முயன்று நீக்கிக் கொண்டால், தியானம் நன்கு வரும். இவ்வாறு செய்தும் சரியாக வரவில்லையென்றால், கவலைக்கு இடம் கொடுக்காமல் மேலும் முயற்சிகளை மேற்கொள்ளலாம். ஆனால், ஏதாவது ஒரு குறிப்பிட்ட தடையினால் தான் தியானம் கெடுகிறதென்றால், அதைக் குருவின் உபதேசத்தின்படி முயற்சி செய்து, நீக்கிக்கொள்ள வேண்டும். தினமும், சூர்யோதயத்திற்கு முன் மற்றும் சூர்ய அஸ்தமனத்திற்குப் பின் மனம் இயற்கையாகவே அமைதியுடன் இருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு அம்மாதிரி சமயங்களில் தியானம் செய்வது நல்லது.*

**சி:** காமங்களை அடக்குவதற்குத் தியானம் மட்டும் போதுமா**?**

*ஜ: தியானத்தின் உத்தமமான நிலையான ஸமாதியை அடைந்தவர்கள்,*

[1] *யோக சூத்திரம் 1.14*

*தியானம் மூலமாகவே ஆசைகளை அழித்து விடலாம். ஆனால் மற்றவர்களுக்குத் தியானம் ஒன்று மட்டுமே போதாது. தியானம் செய்யும் நேரங்களைத் தவிர மற்ற நேரங்களில் விஷய சுகங்களை நாடுவதாலும், அவற்றைப்பற்றிச் சிந்திப்பதாலும், லௌகிக ஸம்ஸ்காரங்கள் ஏற்பட்டு, அவை மேலும் வலுவடைகின்றன. இவை தியானத்தின் போது உண்டாகும் ஸம்ஸ்காரங்களை மறைத்து விடுகின்றன. ஆகவே தியானத்தில் ஈடுபடாத நேரங்களிலும், உலக விஷயங்களில் உள்ள தோஷங்களை சிரத்தையுடன் நன்கு ஆராய்ந்து, வைராக்யத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். தினந்தோறும் சாஸ்திரப் புத்தகங்கள் படித்து, அவைகளில் உள்ள கருத்துக்களைச் சிந்திப்பது காமங்களை வெல்வதற்கு மிகவும் உதவுகிறது.*

## *21. நிர்விகல்ப ஸமாதி*

சி: நிர்விகல்ப ஸமாதி என்றால் என்ன?

*ஜ: இது ஸமாதியின் மிக உயர்ந்த நிலை. இந்நிலையில் பார்க்கிறவன், பார்க்கப்படுவது, பார்வை இவைகளில் வித்தியாசம் இல்லாதிருப்பது தான் இதன் விசேஷமான லக்ஷணம். நிர்விகல்ப ஸமாதியில் ஆத்ம தத்துவம் தெளிவாக உணரப்படுகிறது.*

சி: நிர்விகல்ப ஸமாதியில் இருக்கும்பொழுது ஒருவனுடைய மூச்சுக் காற்றின் சேஷ்டை முழுவதும் அடங்கிவிடுமா?

*ஜ: இல்லை. நுண்ணியமாக பிராணத்தின் சேஷ்டை இருக்கும்.*

சி: நிர்விகல்ப ஸமாதியில் பேரின்பத்தின் அனுபவம் இருக்குமா அல்லது துக்கம் மட்டும் இல்லாமல் இருக்குமா?

*ஜ: நிர்விகல்ப ஸமாதியில் பேரின்ப அனுபவம்தான் விசேஷமாக இருக்கும், துக்கமில்லாமல் இருப்பது மட்டுமில்லை.*

சி: நிர்விகல்ப ஸமாதியில் அகண்டாகார விருத்தி (ஆத்மாவை அடிப்படையாகக் கொண்ட அகண்ட ரூபமான மன எண்ணம்) இருக்கிறது என்று கேள்விப்பட்டேன். பார்க்கிறவன், பார்க்கப்படுவது, பார்வை என்ற வேற்றுமையின் உணர்வு இல்லை என்று ஆசார்யாளே சொன்னீர்கள். இப்படியென்றால் அகண்டாகார விருத்தியென்னும் மன எண்ணமிருக்கிறது என்னும் அறிவு ஸமாதியில் இருக்குமா?

*ஜ: இல்லை. ஒருவன் நிர்விகல்ப ஸமாதியில் இருக்கும் பொழுது, அவனுக்கு அகண்டாகார விருத்தி இருக்கிறதென்று தெரியாது.*

சி: அப்படியென்றால் நிர்விகல்ப ஸமாதியின்போது அகண்டாகார விருத்தி இருந்தது என்று எவ்வாறு கூறுவது?

ஜ: *அனுமானத்தினாலும் சாஸ்திர உபதேசங்களாலும் ஒருவன் தெரிந்து கொள்ளலாம். ஏதாவது ஒரு ஞாபகம் ஏற்பட வேண்டுமென்றால், அதற்கு முன்பு ஓரனுபவம் இருந்திருக்க வேண்டும். நிர்விகல்ப ஸமாதியிலிருந்து மனம் இறங்கும் பொழுது, 'முன்பு பேரின்பத்தை நான் அனுபவித்தேன்' என்ற ஞாபகம் இருக்கிறது. ஞாபகம் இருக்க வேண்டுமானால், அதற்கு ஓர் அனுபவம் இருந்திருக்க வேண்டும். மனம் சம்பந்தப்பட்ட அனுபவம் இருக்க வேண்டுமென்பதால், அது ஒரு எண்ணமாக (விருத்தியாக) இருந்திருக்க வேண்டும். அந்த விருத்திதான் அகண்டாகார விருத்தி எனப்படும்.*

சி: மனதில் ஓர் எண்ணம் ஏற்படுகிறதென்றால், அதற்கொரு விஷயம் தேவை. அகண்டாகார விருத்தியின் விஷயம் என்ன?

ஜ: *ஆத்மா மட்டுமே.*

சி: ஒரு பொருளைப் பார்க்கும்பொழுது, மனம் அப்பொருளின் உருவத்தை ஏற்றுக்கொள்கிறது. அதற்குப் பிறகுதான் அதைப் பற்றிய ஞானம் ஏற்படுகிறது. கனவிலும் இப்படித்தான். மனமே பொருள் வடிவாக மாறுகிறது. ஆனால் இங்கு இந்திரியங்கள் தேவையில்லை என்று தெரிகிறது. ஆதலால் விழிப்பு நிலையிலும், ஸ்வப்ன நிலையிலும் மனதின் விருத்திதான் பொருள் வடிவாக மாறுகிறது. அகண்டகார விருத்தியினால் ஆத்மாதான் கிரஹிக்கப்படுகிறது என்று ஜகத்குரு கூறினார்கள். ஆத்மாவிற்கு உருவமோ குணமோ இல்லையாதலால் அது விருத்தியின் விஷயமாக எப்படி ஆக முடியும்?

ஜ: *அகண்டாகார விருத்தி ஆத்மாவைக் கிரஹிக்கிறது என்பதற்கு, இதற்கு அர்த்தம் என்னவென்றால், அப்போது மனம் மிகவும் பரிசுத்த-மானதால், அதை ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறு என்று சொல்ல முடியாது. அந்தச் சமயத்தில் மனம் ஸ்படிகத்தைப் போலாகி-விடுகிறது. அதில் ஆத்ம பிரகாசம் தெளிவாகத் தெரிகிறது. எப்படி ஒரு சிவந்த பூவை ஸ்படிகத்தின் மூலம் பார்த்தோம் என்றால், ஸ்படிகமும் சிவப்பாகத் தெரியுமோ, அதுபோல ஆத்மாவின் தன்மையும் மனதால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இந்த அகண்டாகார விருத்திதான் அக்ஞானத்தைப் போக்குகிறது.*

சி: நிர்விகல்ப ஸமாதியின் ஓர் அனுபவம் மட்டும் ப்ரஹ்ம ஞானம் பெறப் போதுமா?

ஜ: *சாமான்யமாக அவ்வாறு போதாது. நிர்விகல்ப ஸமாதியின்போது*

ஆத்மாவின் அனுபவம் இருக்கும். அதிலிருந்து கீழிறங்கிய பின் அனுபவம் சிறிது நேரம் கழித்து மறைய ஆரம்பிக்கும். ஆனால், கீழிறங்கிய பின் அனுபவம் இருக்கும் காலத்தில், எல்லாமே ஆத்மாவாகவே தெரியும். ஆத்மாவைக் காட்டிலும் வேறு ஒன்றுமிருப்பதாகவே தோன்றாது. பொருத்தமான உதாரணம் கூற வேண்டுமானால், 'நான் ஒரு பெரிய கடலாயிருக்கிறேன். என்னிடத்திலேயே உலகம் என்னும் நீர்க் குமிழிகள் ஏற்படுகின்றன' என்பது போலத் தோன்றும். அனுபவத்தில்தான் இதைப் புரிந்துகொள்ள முடியுமே தவிர உதாரணம் தந்து வெறும் வார்த்தைகளால் முழுவதும் விளக்கவே முடியாது. மீண்டும் மீண்டும் ஒருவன் நிர்விகல்ப ஸமாதியின் அனுபவத்தைப் பெற்றானானால் அவனது ஞானம் ஸ்திரமாகிவிடும். ஞானம் ஸ்திரமான பிறகு மனம் நாசமடைந்து அவன் ஜீவன்முக்தனாகி விடுகிறான்.

சி: நிர்விகல்ப ஸமாதியிலிருந்து ஒருவன் எதனால் கீழிறங்குகிறான்?

ஜ: பிராரப்தம் தீரவில்லையென்றால் நிர்விகல்ப ஸமாதியிலிருந்தும் கீழிறங்கத்தான் செய்வான். யோக வாஸிஷ்டத்தில் இதற்குப் பல விதமான த்ருஷ்டாந்தகளை நாம் காணலாம்.

சி: நிர்விகல்ப ஸமாதி பெறாமலே ஒருவன் ஞானம் பெற முடியுமா?

ஜ: விசாரத்தின் மூலம் ஆத்மாவைப் பற்றிய தெளிவான அறிவு கிடைக்கிறது. குருவின் உபதேசங்கள் மற்றும் சாஸ்திரங்களின் மூலமாகவும், விசாரத்தினாலும், சந்தேகங்களறப் பெறப்பட்ட ஞானம், நிர்விகல்ப ஸமாதியின் மூலம் நன்கு பிரகாசிக்கிறது. கவனச்சிதறல்களையெல்லாம் நீக்குவதன் மூலம் அது அவ்வாறு நடக்கிறது. நிர்விகல்ப ஸமாதி என்பது ஓர் அற்புதமான வழி. இருப்பினும், அதற்குத் தானாகவே பந்தங்களிலிருந்து ஒருவனை விடுவிக்கும் ஞானத்தைத் தர இயலாது. மாறாக, குரு மற்றும் சாஸ்திரங்களின் உபதேசங்கள், மேலும் விசாரத்தின் அடிப்படையில் நிர்விகல்ப ஸமாதி ஏற்படும்போது அது தத்துவ ஞானத்தைத் தடைகள் ஏதுமின்றி பிரகாசிக்கிறது.

சி: நிர்விகல்ப ஸமாதியின்போது தனது உடலைப் பற்றியோ சுற்றுப்புறங்களைப் பற்றியோ ஏதேனும் அறிவு இருக்குமா?

ஜ: இருக்காது.

சி: ஒருவனை நிர்விகல்ப ஸமாதியில் இருந்து எழுப்ப முடியுமா?

ஜ: பெரும்பாலான சமயங்களிலும் கஷ்டப்பட்டுதான் எழுப்ப முடியும். சில சமயங்களில் எழுப்பவே முடியாது என்பது போலாகி விடும்.

இவை யாவும், ஸமாதியில் ஒருவன் எந்த அளவுக்கு ஆழ்ந்துள்ளானோ, அதைப் பொறுத்தது.

சி: நிர்விகல்ப ஸமாதியில் எவ்வளவு காலம் இருக்க வேண்டும் என்பதை ஒருவனால் நியமம் செய்து கொள்ளமுடியுமா?

ஜ: போதிய பயிற்சி இருந்தால் அவ்வாறு செய்யலாம். ஸமாதிக்குச் செல்வதற்கு முன் இதுபோன்ற ஒரு சங்கல்பத்தை ஏற்படுத்திக் கொண்டால், பின்னால் நிர்ணயித்த காலத்திற்குப் பின் இறங்கிவிடலாம். உதாரணத்திற்கு ஒரு மணி நேரத்திற்கு பிறகு பூஜைக்குச் செல்லப் போகிறேன் என ஒருவன் ஸங்கல்பித்துக் கொண்டால் அவன் ஸமாதியில் சரியாக ஒரு மணி நேரம் இருந்துவிட்டுப் பிறகு ஸமாதி கலைந்து செல்ல முடியும்.

சி: நிர்விகல்ப ஸமாதிக்குப் போவதற்குச் சற்றே முன்னால் எம்மாதிரி அனுபவம் இருக்குமென்பதை ஜகத்குரு சற்று விளக்குவார்களா?

ஜ: மிகத் தெளிவான வர்ணனையைக் கொடுப்பது என்பது முடியாத காரியம். மேலும் நிர்விகல்ப ஸமாதியை அடையும் முன்னர் உள்ள நிகழ்வுகளை 'இவ்வாறு தான்' என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. ஆனால், என்ன நடக்கலாம் என்பதற்குத் தோராயமாக ஒரு வர்ணனை தருகிறேன். முதலில் ஒருவனது உடல் மற்றும் சுற்றுப்புறங்களைப் பற்றிய அறிவு கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து கொண்டிருப்பதைக் காணலாம். பிறகு மனதில் உள்ள எண்ணங்கள் மட்டுமே தெரியும். தியானம் செய்யச் செய்ய மனதில் உண்டாகும் எண்ணங்களும் மறைந்துவிடும். 'நான் ஆகாசத்தைப் போல் அளவில்லாது வளர்ந்து கொண்டு போகிறேன்' என்று ஒருவனுக்குத் தோன்றும். அச்சமயத்தில் மிக ஆனந்தமானதொரு அனுபவம் ஏற்படும். அதன் பிறகு ஒரு திடீர் மாறுதல் ஏற்பட்டு, பார்ப்பவன், பார்க்கப்படுவது, பார்வை, இவைகளின் வேறுபாடு முற்றிலுமாக மறைந்துவிடும். இந்த அனுபவத்தை வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது.

சி: நிர்விகல்ப ஸமாதியை எப்படி அடைவது?

ஜ: சாமான்யமாக ஸவிகல்ப ஸமாதியை ஒருவன் மீண்டும் மீண்டும் அடைந்து வந்தால் நிர்விகல்ப ஸமாதியை அடையலாம்.

சி: ஸவிகல்ப ஸமாதியிலும் பார்ப்பவன், பார்க்கப்படுவது, பார்வை என்ற வித்தியாசம் போய்விடுமா?

ஜ: இல்லை. இம்மாதிரி வித்தியாசம் நிர்விகல்ப ஸமாதியில் தான் போகும். ஸவிகல்ப ஸமாதி என்று சொல்லும்போதே, இதில்

*பார்ப்பவன், பார்க்கப்படுவது, பார்வை என்ற வித்தியாசத்தின் அறிவு மிகச் சிறிதே இருப்பினும், வித்தியாசம் உள்ளது என்பது தெரிவிக்கப்படுகிறதல்லவா?*

சி: ஸவிகல்ப ஸமாதியில் கிடைக்கும் இன்பமும் நிர்விகல்ப ஸமாதியில் கிடைக்கும் இன்பம் போலிருக்குமா?

*ஜ: இல்லை. நிர்விகல்ப ஸமாதியில் கிடைக்கும் இன்பத்திற்கு ஈடே கிடையாது. ஆனால் ஸவிகல்ப ஸமாதியில் கிடைக்கும் இன்பம், மற்ற பொருட்களிலிருந்து கிடைக்கும் இன்பங்களை ஒப்பிட்டுப் பார்த்தால், பேரின்பம் என்றே சொல்லலாம்.*

சி: நிர்விகல்ப ஸமாதியில் இருக்கும் போது ஒருவன் தன்னை மாய்த்துக்கொள்ள ஏற்பாடு செய்திருந்தால், அவன் நிச்சயமாக மோட்சத்தை அடைவான் என்று கூறமுடியுமா?

*ஜ: அப்படிக் கூற முடியாது. ஞானம் ஸ்திரமாகி அது எவ்வித் தடையுமில்லாமல் ஒருவன் மோட்சத்தை அடையலாம். ஒருவன் பூரண ஞானம் அடையாமல், தன்னை ஸமாதியில் மாய்த்துக் கொள்ள ஏற்பாடு செய்திருப்பானேயானால், அவனுக்கு மறுபிறவிக்கு வாய்ப்பு இருக்கிறது.*

சி: ஒருவன் நிர்விகல்ப ஸமாதியிலிருக்கும் போது மரணமடைந்தான் என்றால், அடுத்த பிறவியில் மிகச் சுலபமாக ஞானத்தை அடைய முடியும் என்று கூறமுடியுமா?

*ஜ: ஆம். கூறமுடியும்.*

சி: நிர்விகல்ப ஸமாதியில் இருந்துவிட்ட பிறகும் ஒருவனுக்கு ஆன்மிக வாழ்வில் இருந்து கீழே விழ வாய்ப்பு உண்டா?

*ஜ: ஆம். ஞானம் முழுமையாக ஸ்திரம் ஆகும் வரை கீழே விழ வாய்ப்பு உண்டு. இம்மாதிரி நடந்திருப்பதை நான் கண்டிருக்கிறேன்.*

சி: மாத்திரைகள், மன ஆற்றல் கொண்டு தூண்டப்படும் அறிதுயில்நிலை (hypnosis) போன்றவற்றால் நிர்விகல்ப ஸமாதியை அடைய முடியுமா?

*ஜ: இல்லை.*

சி: நிர்விகல்ப ஸமாதியில் நீண்ட நேரம் இருந்து, அதிலிருந்து மனம் இறங்கிய பிறகு, பசி, தாகம் தெரிவதற்கு வாய்ப்பிருக்கிறதா?

*ஜ: சாமான்யமாகத் தெரியாது. ஆனால், ஒரேமாதிரி நிமிர்ந்தும், அசையாமலும் வெகு நேரம் இருந்ததன் காரணமாக, எப்போதாவது சற்று உடல் வலியோ, அல்லது பசியோ தெரியலாம்.*

சி: ஜகத்குரு தமது சுய அனுபவத்திலிருந்து நிர்விகல்ப ஸமாதி பற்றி ஏதாவது கூறுவார்களா?

ஜ: *(சிரித்துக்கொண்டே) இவ்வளவு நேரமும், சாஸ்திரத்தில் கூறப்பட்டவற்றை மட்டும் கிளிபோல் ஒப்பித்துக் கொண்டிருந்தேன் என்றா நீ நினைக்கிறாய்?*

## *22. நாதானுஸந்தானம்*

சி: நாதானுஸந்தானம் என்றால் என்ன?

ஜ: *சாமான்யமாகச் சொல்ல வேண்டுமெனில் அதுவும் ஒருவித தியானம் ஆகும்.*

சி: அதை எவ்வாறு அனுஷ்டிப்பது?

ஜ: *சில வழிமுறைகள் உள்ளன. அவைகளில் ஒன்றைக் கூறுகிறேன். காதுகளையும், மூக்கையும், வாயையும் விரல்களால் மூடிக்கொள்ள வேண்டும். அப்போது உள்ளே கேட்கப்படும் சப்தத்தைக் கவனத்துடன் கேட்க வேண்டும்.*

சி: மூக்கையும், வாயையும் முழுவதும் மூடிக் கொண்டால் எப்படி மூச்சு விடுவது?

ஜ: *மூக்கை முழுவதும் மூடிக் கொள்ள வேண்டும் என்ற அர்த்தத்தில் கூறவில்லை.*

சி: உள்ளே உண்டாகும் சப்தத்தில் கவனம் செலுத்தினால், அதனால் ஏதாவது பிரயோஜனம் உண்டா?

ஜ: *ஆம். ஏனென்றால் மனதை ஒருநிலைப்படுத்துவது அவசியம். இதை ஒரு ரூபத்தின் மூலமாகவும் செய்யலாம். இல்லாவிட்டால் ஏதாவது ஒரு சப்தத்தில் கவனம் செலுத்தியும் செய்யலாம். காதை மூடிக் கொள்வதால் வெளிச் சத்தம் கேட்காது. ஆனால் உள் சப்தம் தெளிவாகக் கேட்கும். அதன் மீது கவனம் செலுத்துவதால் மனம் ஒருநிலைப்படும்.*

சி: உள்ளே கேட்கும் சப்தத்தின் மேல் எப்படிக் கவனம் செலுத்துவது?

ஜ: *வெளிச் சப்தங்களில் எவ்வாறு கவனம் செலுத்துவோமோ அதே போல் இங்கும் செய்யலாம். ஏனென்றால், உள்ளே உண்டாகும் சப்தத்தைக் காதை மூடினால் உணரலாமே!*

சி: இம்மாதிரி தியானம் செய்கையில் ஒரு ரூபத்தில் கவனம் செலுத்த வேண்டுமா?

ஜ: *இல்லை. சப்தத்தில் மட்டும் கவனம் செலுத்தினால் போதும்.*

சி: சப்தத்தின் மேலேயே மனதை ஒருநிலைப்படுத்தினால் என்ன ஆகும்?

ஜ: *சிறிது சிறிதாக மனம் மிகுந்த அமைதியடைந்து கொண்டு வரும். வெளிச் சப்தங்களாலும் மற்ற இடைஞ்சல்களாலும் கவனம் சிதறுவது நின்றுவிடும். உள்ளே கேட்கும் சத்தம் தெளிவாக இருக்கும். காலம் செல்லச்செல்ல வெவ்வேறு விதமான சப்தங்கள் உள்ளிருந்து கேட்கும். கடைசியில், எல்லாச் சப்தங்களும் அடங்கி, மனம் ஸமாதி நிலையை அடையும்.*

சி: இம்மாதிரி தியானம் செய்யும்போது ஏதாவது விசேஷமான சக்தி வெளிப்படுவதை நாம் காணலாமா?

ஜ: *சில சமயங்களில் வெகு தூரத்தில் ஏற்படும் சப்தங்கள் மற்றும் உரையாடல்களைக் கேட்க முடியும். இருப்பினும், தூரத்தில் ஒலிக்கும் சப்தங்களைக் கேட்பது போன்ற ஸித்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், ஒருவன் தனது தியானத்தைத் தொடர வேண்டும். இவைகளுக்கு இரையானால், ஒருவனின் ஆன்மிக முன்னேற்றம் பாதிக்கப்படும்.*

சி: ஒரு ரூபத்தின் மேல் செய்யும் தியானத்தைக் காட்டிலும், நாதானுஸந்தானம் சிறந்ததா?

ஜ: *ஆன்மிகப் பாதையில் செல்பவர்களுடைய தகுதியும், மனப்போக்கும் வெவ்வேறாக இருப்பதனால், ஒருவன் சிறந்ததாகக் கருதும் வழியே மற்றவனுக்கும் சிறந்ததாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. ஆகவே, குருவானவர் சிலருக்கு நாதானுஸந்தானத்தையும் வேறு சிலருக்கு ரூபத்தின் மீது தியானம் செய்வதையும் உபதேசம் செய்யலாம்.*

சி: மற்ற வழி முறைகளைக் காட்டிலும் நாதானுஸந்தானத்திற்கு ஏதாவது சிறப்பு உண்டா?

ஜ: *(சிரித்துக்கொண்டே) இதைப் பயிற்சி செய்யும்போது, காதுகளையும் கண்களையும் மூடிக் கொள்வதால், இதில் தேர்ச்சி பெறாதவனுக்குக் கூட, வெளிச் சப்தங்களினாலும், வெளியிலுள்ள ரூபங்களினாலும் தொந்தரவே இருக்காது. இதையே ஒரு சிறப்பு அம்சமாகக்கூட நீ வைத்துக்கொள்ளலாம்!*

சி: இவ்விதம் தியானம் செய்வதில் ஏதாவது கஷ்டம் இருக்கிறதா?

ஜ: *(புன்னகையுடன்)கண்களையும் காதுகளையும் கைகளால் வெகுநேரம் மூடிக் கொள்வதால் வலிக்குமல்லவா?*

சி: நாதானுஸந்தானம் செய்வதற்கு வேறு ஏதாவது முறை இருக்கிறதா?

ஜ: *நான் சில பௌத்தர்கள் நீண்டநேரம் ஒலி எழுப்பக் கூடிய மணி ஒன்றைப் பயன்படுத்தித் தியானம் செய்வதைப் பார்த்திருக்கிறேன். இரண்டு பேர் ஒருவரையொருவர் பார்த்தவாறு அமர்ந்து கொண்டு, மாறி மாறி மணியடித்து அதில் வரும் ஓசையின் மீது தியானம் செய்வார்கள். இதுபோல், நாதானுஸந்தானம் செய்வதற்கும் பல்வேறு வழிமுறைகள் உள்ளன.*

## *23. லம்பிகா யோகம்*

சி: ஸ்ரீ வித்யாதீர்த்தர் (சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தின் 10வது ஜகத்குரு) தனது கடைசி காலத்தை லம்பிகா யோகத்தில் கழித்தார் எனக் கேள்விப்பட்டிருக்கிறேன். லம்பிகா யோகம் என்றால் என்ன என்பதை ஜகத்குரு தெளிவுபடுத்துவார்களா?

ஜ: *லம்பிகா யோகத்தின்போது தலையில் உள்ள ஸஹஸ்ரார சக்கரத்தில் இருந்து அமிர்தம் இறங்கிவரும். அந்த அமிர்தத்தின் ருசி ஏற்பட்டால் பசியும் தாகமும் போய்விடும். மேலும் நல்ல ஆரோக்கியத்தையும் கொடுக்கும்.*

சி: லம்பிகா யோகத்தை எப்படிச் செய்வது?

ஜ: *ஹடயோகப் பிரயோகத்தின்படி நாக்கின் கீழ்ப்பாகத்தை கொஞ்சம் கொஞ்சமாக வெட்டிக்கொண்டு வரவேண்டும். பிறகு அவ்விடத்தில் மருந்துகள் தடவி, சில நாட்கள் சென்றபின் நாக்கின் அடிப்பாகத்தை இன்னும் சிறிது வெட்ட வேண்டும். அதேசமயம் நாக்கையும் சிறிது சிறிதாக வெளியில் இழுத்துக்கொண்டே வரவேண்டும். இவ்வாறு செய்து வந்தால், விரைவில், நாக்கின் நீளம் அதிகமாகிக் கொண்டே வந்து, நாக்கு மிக மெல்லியதாகிவிடும். அவ்வாறு நீண்ட நாக்கை வெளியில் நீட்டினால், அது புருவங்களுக்கு நடுவில் உள்ள பகுதியைத் தொட வேண்டும். இப்படி இருக்கும் நாக்கை மடித்துத் தொண்டையின் பின் பக்கம் சொருகி மேல்நோக்கித் தள்ளவேண்டும். இதைச் செய்த பிறகு தியானம் செய்தால் அமிர்தம் கீழே இறங்கும்.*

சி: இப்படிச் செய்வதால் வலி ஏற்படுமா? மேலும் இதனால் ஊமையாக வாய்ப்புள்ளதா?

ஜ: *இம்மாதிரி செய்வதில் வலியில்லை என்று நிச்சயம் கூறமுடியாது. ஆனால் இதைச் செய்வதன் மூலம் ஒருவன் ஊமையாகி விடுவான் எனச் சொல்வது தவறு. இதைச் செய்த பின்னர் குரல் தெளிவாக இருக்கும்.*

சி: இந்த அமிர்தத்தின் ருசி எப்படி இருக்கும்? அது இறங்கி வருவதை அனுபவத்தின் மூலம் தெரிந்து கொள்ள முடியுமா ?

ஜ: *அமிர்தம் ருசிகரமானது என்று சொல்லத் தேவையில்லை. அது தொண்டைக்கு இறங்கி வருகிறது என்பதை நிச்சயம் அனுபவிக்கலாம்.*

சி: அந்த அமிர்தத்தைச் சுவைத்த பின்னர் பசியும் தாகமும் ஒருவனுக்கு முழுவதுமாக நீங்கிவிடுமா?

ஜ: *எப்போதைக்கும் நீங்கிவிடும் என்று சொல்லமுடியாது. சிறிது நேரம் அவை தெரியமாட்டா. பிறகு தெரிய ஆரம்பிக்கும். அமிர்தத்தின் சக்தியுள்ளவரை உடலுக்கு உணவும் நீரும் தேவைப்படாது. மேலும் உடலும் பலவீனமாகாது.*

சி: இம்மாதிரி நாக்கை வெட்டிக் கொண்ட யாரையாவது ஜகத்குரு பார்த்திருக்கிறாரா?

ஜ: *ஆம். நான் ஒருவனைப் பார்த்திருக்கிறேன். அந்த மனிதனுக்கு நல்ல தெளிவான குரலும் இருந்தது. அவன் இந்த யோகத்தைச் செய்து காண்பித்தான். அவன் நாக்கை மடித்து மேல் பக்கம் தள்ளும்போது ஒரு விசித்திரமான சப்தம் எழுப்பிக் கொண்டிருந்தான். முடிவில் அமிர்தத்தைப் பெறுவதில் வெற்றி பெற்றான்.*

சி: அச்சமயத்தில் வெளிச் சப்தமோ, வெளியில் ஏற்படும் இடைஞ்சல்களோ அவனுக்கு ஏதாவது கஷ்டத்தை உண்டாக்கி இருக்குமா?

ஜ: *ஆம். வெளியில் இடைஞ்சல்கள் அதிகமாக ஏற்பட்டிருக்குமானால் அவனுக்கு மரணம் கூட வந்திருக்கலாம்.*

சி: அமிர்தத்தைப் பெறுவதற்கு நாக்கை இதுபோல வெட்டிக் கொள்வதைக் காட்டிலும் சுலபமான வழி ஏதாவது இருக்கிறதா?

ஜ: *நிச்சயமாக இருக்கிறது. ஹடயோகம் மூலம் அமிர்தம் பெறுவதற்கான வழியைத்தான் நான் இப்போது உனக்குக் கூறினேன். பூர்வ ஜென்மத்தில் செய்த தவம் காரணமாகவும் சிலருக்கு இப்பிறவியில் தியானத்தின்போது அமிர்தம் வரும். எனது குருநாதர் (ஜகத்குரு ஸ்ரீ சந்த்ரசேகர பாரதி மஹாஸ்வாமிகள்) அமிர்தம் இவ்வாறு பொழிவதைப் பற்றி என்னிடம் கூறியிருக்கிறார்.*

சி: எவ்விதமான தியானத்தின்போது இது போன்று அமிர்தம் வரும்?

ஜ: *சாமான்யமாக இது ஸகுண தியானத்தின் போதுதான் நடைபெறுகிறது.*

சி: தலையிலிருந்து அமிர்தம் வரவேண்டுமென்றால், அங்கு அமிர்தம்

தேக்கி வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கருதலாமா**?** இது ஆச்சர்யமாக இல்லையா**?**

ஜ: *ஆச்சர்யமாக இருக்கிறதோ அல்லது இல்லையோ, அதல்ல பிரச்சனை. அமிர்தம் இருப்பதும், அது இறங்கி வருவதும் நேரடியான அனுபவமாக இருக்கிறது. மேலும் அவ்வமிர்தம் ருசிகரமாக இருப்பதோடு பசி தாகத்திலிருந்தும் ஒருவனுக்கு விடுதலையளிக்கிறது. ஆனால், ஸஹஸ்ராரத்திலிருக்கும் அமிர்தத்தையோ அல்லது தலையிலிருந்து தொண்டைக்கு இறங்கி வரும் இந்த அமிர்தத்தையோ வெளிப்படையாகக் காண முடியாது. இது ஸ்தூலமான விஷயமல்ல.*

சி: இதுபோன்ற லம்பிகா யோகத்தை எல்லோருக்கும் உபதேசம் செய்தால் பசியால் வாடும் எண்ணற்ற மக்கள் பயனடையலாமே**?**

ஜ: *எல்லோரையும் இப்பயிற்சியை செய்ய வைக்க முடியாது. ஏனெனில், மிகக் குறைவான சிலரே வெற்றிகரமாக அமிர்தத்தைப் பெறுகின்றனர். இதில் வெற்றியடையப் கடின முயற்சி தேவைப்படுகிறது. இதுவே அமிர்தத்தில் மிக்க நாட்டம் கொண்ட சிரத்தையான பயிற்சியாளர்-களுக்குக் கூட ஒரு தடையாக இருக்கக் கூடும்.*

சி: இதுபோல் அமிர்தப் பொழிவை அனுபவித்தவர்களிடம் வேறு ஏதாவது சிறப்பான அம்சத்தை ஜகத்குரு கவனித்திருக்கிறார்களா**?**

ஜ: *கவனித்திருக்கிறேன். சிலரது உச்சந்தலையிலிருந்து ஒரு துளி நீர் கசியும். ஆனால் இது அமிர்தம் பொழிவதற்கு எவ்விதத்திலும் காரணம் இல்லை.*

சி: தலையிலிருந்து நீர் எப்போது கசியும்**?**

ஜ: *எப்போது வேண்டுமானாலும் வரலாம். சாப்பிடும்போதும் வரலாம்.*

சி: எவ்வளவு**?**

ஜ: *ஏறக்குறைய ஓர் உத்தரணியளவு நீர் வரலாம். (உத்தரணி கரண்டி போன்றது. அனுஷ்டானத்தின்போது உபயோகப்படுத்துவது.)*

சி: அந்த நீர் தண்ணீரா அல்லது தண்ணீர் போல் இருக்கும் வேறு ஏதாவது திரவமா**?**

ஜ: *(சிரித்துக்கொண்டே) தண்ணீர்.*

சி: ஜலம் வருவதால் ஏதாவது அசௌகரியம் ஏற்படுமா**?**

ஜ: *இதனால் ஒருவித அசௌகரியமுமில்லை, இவ்வாறு வருகின்ற நீரைத் துணியால் துடைத்து விடவேண்டும். இல்லாவிட்டால் முகமெல்லாம் வழிந்து விடும்.*

சி: இந்த ஜலம் வருவதற்கு காரணம் என்ன?

ஜ: *அது வரலாம். அவ்வளவுதான்.*

சி: இவ்வாறு அமிர்தம் பெறுவதற்கு ஜகத்குரு முயற்சி செய்ததுண்டா?

ஜ: *நான் இதுபோன்ற ஸித்திகளில் கவனம் செலுத்துவதுமில்லை, அதைப் பெறவேண்டும் என்று முயற்சி ஏதும் எடுத்துக் கொள்வதுமில்லை. அதுவாகவே வரும்போது வருகிறது. ஆகவே அதை உண்டாக்கவோ வராமல் தடுக்கவோ நான் ஒரு முயற்சியும் மேற்கொள்வதில்லை.*

சி: நாக்கின் அடிப்பாகத்தை வெட்டாவிட்டாலும் சிலருக்கு அமிர்தம் வரலாம் என்று ஜகத்குரு குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்டவர்கள் அமிர்தத்தை முதலில் பெறுவதற்கோ, அல்லது பெறுவதை எளிதாக்குவதற்கோ என்ன செய்யலாம்?

ஜ: *அவர்கள் ஸகுண தியானம் செய்கையில், நாக்கை பின்பக்கமாக (நாக்கின் நுனி மேலண்ணத்தின் பின்புறத்தைத் தொட்டவாறு) மடித்து வைத்துக் கொண்டால், சற்று உபயோகமாக இருக்கும். அவர்கள் முற்பிறவிகளில் செய்த பயிற்சிகள் பொருத்தமானதாக இருந்தால், இவ்வாறு செய்வது உதவியாக இருக்கும்.*

சி: ஆன்மிக ஸாதகர்கள் பசி மற்றும் தாகத்தை வெல்வதற்கு லம்பிகா யோகத்தைச் செய்வார்களேயானால், அது அவர்களுக்கு பயனுள்ளதாக இருக்காதா?

ஜ: *இல்லை. ஆத்மஞானம் பெற்று மோட்சம் அடைவதே முமுக்ஷுக்களின் இலட்சியமாக இருக்க வேண்டும். அசாதாரண விதத்தில் பசியையும் தாகத்தையும் அடக்க முயற்சி செய்வதும் கூட, இலட்சயத்திலிருந்து கவனத்தைச் சிதற வைக்கும். வித்யாதீர்த்தர் போன்ற மஹான்களுக்கு இந்த யோகம் இயற்கையாகவே வந்தது. ஆனால் ஒரு சாதகன் இதிலேயே காலங்கழிப்பானேயானால், அத்தனையும் வீணாகிவிடும். ஆகவே நமது இலட்சியத்திலிருந்து மனம் திரும்பி விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.*

## *24. குண்டலினி*

*குண்டலினி என்பது பாம்பு வடிவாக இருக்கும் மிக உயர்ந்த சக்தியின் பெயர். சுஷும்னா நாடி என்பது முதுகெலும்பின் மத்தியக் கால்வாய் மூலமாகச் செல்லும் சூட்சுமமான குழாய். சுஷும்னா நாடியிலும், தலைக்குள்ளும், குறிப்பிட்ட சில இடங்களில் சக்தியை வெளிப்படுத்தும் ஸ்தானங்கள் இருக்கின்றன. தாமரை போல் வடிவமிருக்கும் இவற்றுக்கு*

சக்கரங்கள் என்று பெயர். இவைகள் இருக்கும் இடத்திற்குக் குண்டலினி வரும்பொழுது சக்தி விசேஷமாக வெளிப்படுகிறது. சாமான்யமாகக் குண்டலினி சுஷும்னா நாடியின் கீழ்ப்பாகத்தில் மூலாதாரச் சக்கரத்தில் உறங்கிய நிலையில் இருக்கிறது. உறங்கிய வண்ணம் இருக்கும் குண்டலினி விழித்தெழுந்து, மூலாதாரச் சக்கரத்திலிருந்து மேல் நோக்கி, சுஷும்னா நாடி வழியாக, தலையிலிருக்கும் ஸஹஸ்ரார சக்கரத்திற்கு வரும்பொழுது, ஒருவன் ஸமாதியை அடைகிறான்.

**சி: குண்டலினியும் யோகச் சக்கரங்களும் உண்மையில் இருக்கின்றனவா?**

ஜ: தெய்வீகத்தின் உருவமான குண்டலினி சக்தியின் மூலம் ஆகும். கண்களுக்கு புலப்படும் விதமாக, எந்த ஒரு ஸ்தூலமான பாம்பும் முதுகெலும்பின் கீழ்ப்பகுதியில் கிடையாது. மேலும் இதே போன்று ஸ்தூலமான தாமரைகளும் அங்கு கிடையாது. குண்டலினியின் எழுச்சியும், அதன் ஏற்றத்தையும் உடலின் பின்புறத்தில் உணர முடியும். இதைப்போல, சக்தி வெளிப்படுகின்ற வெவ்வேறு நிலைகளும் உணரப்படுகின்றன. இவை வெவ்வேறு சக்கரங்களில் குண்டலினியின் ஏற்றத்தை குறிக்கிறது.

**சி: எதற்காகச் சக்கரங்கள் தாமரை போல காட்டப்பட்டுள்ளன? மேலும் அங்குள்ள தேவதைகளின் வர்ணனைகள் எதற்காகக் கொடுக்கப் பட்டுள்ளன?**

ஜ: தாந்த்ரிக புத்தகங்களில் விளக்கப்பட்ட விதத்தில் குண்டலினியையும் சக்கரங்களையும் தியானம் செய்தால் சக்தி வெளிப்படும். மேலும் அறிவும் விரிவடையும். வெளிப்புறமாக இதன் விளைவுகளைக் காணலாம். சாமான்யமாக ஒருவன் நீண்ட காலத்திற்கு மூச்சுவிடாமல் இருந்தால் இறந்துபோய் விடுவான். ஆனால் குண்டலினியோகத்தைப் பயிற்சி செய்யும் பொழுது நீண்ட காலத்திற்கு சுவாசம் விடாமல் இருக்கலாம். இதுபோல் யோகச் சக்கரங்களின் மேல் தியானித்து சக்திகளைப் பெற்றவர்களை நான் பார்த்திருக்கிறேன். சிலரால் கண்களின் இமைகளை அசைப்பதினாலேயே மிகுந்த பாரத்தைத் தூக்கமுடியும். இம்மாதிரி விசேஷமான சக்திகளெல்லாம் குண்டலினி யோகத்தின் மூலம் உண்டாகலாம். இவற்றிற்குச் சக்கரங்களின் வர்ணனைகள் உதவுகின்றன. இருப்பினும், மோட்சத்தை மட்டுமே தீவிரமாக விரும்புபவர்களுக்கு, இச்சக்திகள் எல்லாம் முக்கியத்துவம் அற்றவை. அவர்களுக்குக் குண்டலினி யோகம் ஓர் உயர்ந்த நோக்கத்திற்காகவே இருக்கிறது.

சி: மூலாதாரத்தில் உறங்கிக் கொண்டிருக்கும் குண்டலினியை எவ்வாறு எழச் செய்வது?

ஜ: *தகுந்த தியானம் மூலமாகவும், ப்ராணாயாமம் மூலமாகவும் எழச் செய்யலாம். வேறு முறைகளும் இருக்கின்றன.*

சி: ப்ராணாயாமத்தை எவ்வாறு அனுஷ்டிப்பது?

ஜ: *பலவிதமான ப்ராணாயாமங்கள் இருக்கின்றன. ஆதலால், குருவின் உபதேசம் பெற்ற பிறகு செய்வது நலம்.*

சி: பொதுவான அனுஷ்டானத்தின் போதுச் செய்யும் சுலபமான ப்ராணாயாம முறை பற்றி ஜகத்குரு தெளிவுபடுத்துவார்களா?

ஜ: *ப்ராணாயாமம் செய்யும்போது ஸ்திரமான ஆசனத்தில் அமர்ந்து முதுகை நேராக வைத்துக்கொள்ள வேண்டும். மூக்கின் ஒரு துவாரம் மூலமாக காற்றை இழுத்து, சிறிது நேரம் உள்ளடக்கி, மற்றொரு துவாரத்தால் வெளியில் விடுவது, என்றவாறு ப்ராணாயாமம் பயிற்சி செய்யப்படுகிறது. இவ்வாறு செய்வது ஒரு ப்ராணாயாமமாகும். இதை அடுத்து, காற்றை வெளியில் விட்ட துவாரம் மூலமாக காற்றை உள்ளே இழுக்க வேண்டும். பொதுவான ப்ராணாயமத்திற்கு மூன்று அங்கங்கள் உள்ளன. அவை பூரகம், கும்பகம், ரேசகம் என்பன. காற்றை உள்ளே இழுப்பது பூரகம், அடக்கி வைப்பது கும்பகம், வெளியில் விடுவது ரேசகம். இதை 1:2:2 என்ற விதத்தில் செய்தால் கடினமாக இருக்காது. வழக்கமாக இருக்கும் 1:4:4 என்ற விகிதத்தின் மாறுபாடே இப்பொழுது நான் கூறியது. விசேஷமான பலனையடைய ப்ராணாயாமம் செய்யும்பொழுது, ஜாலந்தர, உட்டியான மற்றும் மூல பந்தங்களையும் செய்யவேண்டும். இவைகளை குருவிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். தவறாகப் பயில்வது கேடு விளைவிக்கும்.*

சி: அசௌகர்யத்தை ஏற்படுத்தும் அளவிற்கு காற்றை உள்வைத்திருக்க வேண்டுமா?

ஜ: *கூடாது. பிராணாயாமம் செய்யும் போது இம்மாதிரி அசௌகர்யம் வருமளவுக்கு வைத்துக் கொள்ளக்கூடாது. அசௌகர்யம் ஏற்படாமல் உள்ளடக்கும் நேரத்தைக் குறைத்துக் கொள்ளலாம். அதற்கேற்றவாறு காற்றை உள்ளே இழுக்கும் நேரத்தையும், வெளியில் விடும் நேரத்தையும் குறைத்துக் கொள்ள வேண்டும்.*

சி: பிராணாயாமத்தின் சில நன்மைகள் என்ன?

ஜ: *இது நாடிகளைச் சுத்தம் செய்து மனதை அமைதியாக்கும். இது ஒரு*

*வித பிராயச்சித்தம். இது தூங்கிக் கொண்டிருக்கும் குண்டலினியை எழச் செய்யவும் உதவுகிறது.*

**சி:** ஒரு ஆன்மிக சாதகனின் குண்டலினி ஸஹஸ்ராரச் சக்கரத்தை அடையும்பொழுது, அவன் ஆழ்ந்த ஸமாதியை அடைகிறான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸமாதி அடைந்த அனைவரும், குண்டலினி மேல்நோக்கிச் சென்று ஸஹ்ஸரார சக்கரத்தை அடைந்துவிட்டது என்பதைத் தெரிந்து கொள்வார்களா?

*ஜ: தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஒரு விதமான நியமமுமில்லை. குண்டலினி எழுச்சி பெற்று மேல் செல்கிறது என்கிற கவனம் இல்லாமலும் ஒரு ஆன்மிக சாதகன் ஸமாதியை அடையலாம். வேதாந்த மார்க்கத்தின் மூலமாக ஸமாதி நிலையை அடைந்தவர்களுக்கு இம்மாதிரி ஆகலாம். எனினும், குண்டலினி ஸஹஸ்ராரத்திற்கு ஏறுவதைக் கவனிக்க வேண்டும் என்று ஒருவன் நினைத்தால், அவ்வாறு கவனிக்கலாம். நான் இங்கு கூறியது ஹடயோக பிரதீபிகையிலும், மேலும் முக்கியமான தாந்த்ரிக புத்தகங்களிலும் கூறப்படாவிட்டாலும், அனுபவத்தின் மூலமாகத் தெரிகிறது.*

## *25. அமனஸ்க யோகம்*

**சி:** அசையாமல், அமைதியாக இருக்கும்பொழுது சந்தோஷமாக இருப்பதை நாம் உணர்கிறோம். ஆகவே கண்களைத் திறந்திருந்தும், மனவமைதி வேண்டுமென்றால், சிறிது நேரம் ஒன்றும் செய்யாமல், மௌனமாக உட்கார்ந்து கொள்ளலாமா?

*ஜ: அது சோம்பேறித்தனம் இல்லையென்றால், நிச்சயமாகச் செய்யலாம். யாக்ஞவல்க்யர் போன்ற மஹான்கள் இதைப்போன்று செய்வதை அமனஸ்க யோகம் என்று சொல்லியிருக்கிறார்கள்.*

**சி:** அமனஸ்க யோகம் என்றால் என்ன?

*ஜ: அது மனதில் எண்ணங்கள் வராத ஒரு நிலைமை. உண்மையான அமனஸ்கம் என்பது, ஸமாதியில் மனது நாசமாகும் பொழுதுதான் அடையப்படுகிறது. அதன் பிறகு அவன் ஜீவன்முக்தன் ஆகிவிடுவான். சாதாரணமாக நாம் பலவிதமான பொருட்களைப் பற்றி சிந்தனை செய்து கொண்டே இருக்கிறோம். மனதில் எண்ணங்கள் தொடர்ந்து இடைவிடாமல் வந்து கொண்டிருப்பது போல் தோன்றும். ஆனால் கூர்ந்து கவனித்தால், ஓர் எண்ணத்திற்கும் மற்றோர் எண்ணத்திற்கும் இடைவெளி இருப்பதைக் காணலாம். இந்த இடைவெளிகளில், சைதன்ய வடிவாயிருக்கும் ஆத்மா தெளிவாகத் தெரியும். இந்த*

*மாதிரிக் காலங்கள் மிகவும் சிறியதாக இருப்பதால் ஜனங்கள் இதைக் கவனிப்பதில்லை. லகுவாக்ய விருத்தி என்ற நூலில் சங்கரர் இதற்கு ஓர் உவமானம் கூறியிருக்கிறார். "முத்துக்களால் மறைக்கப்பட்ட நூல், இரண்டு முத்துக்களுக்கு நடுவில் தெரிகிறது. அதைப் போலவே, சைதன்யம் எண்ணங்களால் மறைக்கப்பட்டிருப்பது எண்ணங்களுக்கிடையில் தெளிவாகத் தெரிகிறது."[1] முத்துக்களால் செய்யப்பட்ட ஒரு மாலையில், முத்துகள் இருக்கும் இடங்களில் கோர்க்கப்பட்டிருக்கும் நூல் தெரிவது இல்லை. ஆனால் இரு முத்துக்களுக்கு நடுவில் இருக்கும் இடைவெளியில் அந்த நூல் தெரிகிறது. அதேபோல் சுத்த சைதன்ய வடிவாக இருக்கும் ஆத்மா, ஓர் எண்ணம் இருக்கும்போது தெரிவதில்லை. ஓர் எண்ணம் போய் மற்றொரு எண்ணம் வருவதற்குள் இருக்கும் இடைப்பட்ட நேரத்தில் ஆத்மா தெரிகிறது. அவ்விரு எண்ணங்களுக்கிடையே உள்ள இடைவெளியை, அமைதியுடனிருந்து அதிகப்படுத்திக் கொண்டால் நாம் மிகுந்த இன்பம் பெறலாம்.*

சி: இதைக் கண்களைத் திறந்து வைத்துக் கொண்டும் செய்யலாமா?

*ஜ: நான் முன்பே கூறியபடி நம் இலட்சியம், மனதில் எண்ணம் வராமல் வைத்துக்கொள்வது. ஆதலால் கண்களை திறந்து வைத்துக் கொள்வதால் தவறில்லை. மற்றபடி மனம் வெளிப் பொருட்களின் பக்கம் போகாமலிருந்தால் சரி. இதைச் செய்யும்போது சாந்தமாகவும், கவலையில்லாமலும் இருக்க வேண்டும். எதையும் செய்ய அல்லது நினைக்க முயற்சி செய்யக்கூடாது. மனதில் ஏதாவது எண்ணம் தோன்றினால், அதைத் தொடரவிடாமல் செய்ய வேண்டும்.*

சி: அமனஸ்க யோகத்தில் ஒருவன் முன்னேறிக் கொண்டிருக்கிறானென்று அறிய ஏதேனும் வழியுள்ளதா?

*ஜ: ஒருவன் பெறும் மன அமைதியும் இன்பமும் அவன் இவ்வழியில் முன்னேறுகிறான் என்பதைக் காட்டும்.*

சி: மனதில் எண்ணமே வராமல் செய்வது மிகவும் கடினம் அல்லவா?

*ஜ: ஆம். மனதில் எண்ணமில்லாமலிருக்கும் உத்தமமான நிலைமை வருவது சற்றுக் கடினம்தான். ஆனால், ஒரு நல்ல அளவிற்கு மனதை அமைதியாக வைத்துக் கொள்ள முடியும்.*

சி: லௌகிக ஜனங்களுக்கும் மனதை அசைவற்று அடக்கி வைக்கும் சக்தியிருக்கிறதா?

---

[1] *லகுவாக்ய வ்ருத்தி 10*

ஜ: *எல்லோரும் தூங்குவதில்லையா?*

சி: ஆம்.

ஜ: *எப்படி?*

சி: ஜகத்குரு எதை மனதில் வைத்து இக்கேள்வியைக் கேட்டார் என்பது எனக்குப் புரியவில்லையே!

ஜ: *மக்கள் படுத்துக்கொள்கிறார்கள். அதன்பின் எப்படித் தூங்குகிறார்கள்? கண்களை மூடிச் சிந்தனை ஏதும் செய்யாமல் இருக்கிறார்கள். சற்று நேரத்தில் தூக்கம் வந்து விடுகிறது இல்லையா?*

சி: ஆமாம்.

ஜ: *ஆழ்ந்த தூக்கத்தின்போது அனைவரும் நிம்மதியாக இருக்கிறார்கள். அவர்கள் மனதை எண்ணமற்றதாக வைத்துக்கொண்டுவிடுகிறார்கள். இது அனிச்சையாக நடைபெறுகிறது. சரி தானே?*

சி: ஆம்.

ஜ: *ஆதலால், அனைவராலும் மனதை அடக்க முடியும் என்று தான் சொல்ல வேண்டும். லௌகிக ஜனங்கள் ஆழ்ந்த உறக்கத்தின்போது முயற்சி செய்யாமலே தமக்குத் தெரியாமலேயே மனதை அடக்குகிறார்கள். அமனஸ்க யோகத்தில் விழிப்பு நிலையில் மனதை முற்றிலும் அமைதியாக்க வேண்டும்.*

சி: அமனஸ்க யோகத்தை எங்கு வேண்டுமானாலும் செய்யலாமா?

ஜ: *எங்கு வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் அங்கு நன்கு அமர வசதி இருக்கவேண்டும். ஓட்டப்பந்தயத்தில் ஓடிக்கொண்டிருக்கும் போது இதை எப்படிச் செய்வது?*

சி: இதைச் செய்து வருகையில் ஏதாவது கெடுதல் ஏற்படுமா?

ஜ: *கெடுதலொன்றும் ஏற்படாது.*

சி: அமனஸ்க யோகம் செய்கையில் எவ்விஷயத்தில் கவனத்துடன் இருக்க வேண்டும்?

ஜ: *(சிரித்துக்கொண்டே) தூங்காமலிருக்க வேண்டும். விழிப்புடன் இருந்து தூகத்தைத் தவிர்க்க வேண்டும்.*

# 26. மாயை

சி: மங்கலான வெளிச்சத்தில் கயிறானது பாம்பாகத் தோன்றலாம். அதே போல்தான் அறியாமையினால் பரம்பொருளும் உலகமாகத் தெரிகிறது என்று சாஸ்திரங்களில் படித்திருக்கிறேன். ஒரு கயிற்றைப் பாம்பு என்று தவறாகக் கருத வேண்டுமென்றால் கயிற்றிலிருந்தும், பாம்பிலிருந்தும் வேறுபட்டு பார்ப்பவன் ஒருவன் தேவை. அதைப் போலவே ப்ரஹமம் உலகமாகத் தோன்றுகிறது என்றால், அங்கும் வேறு ஒரு பார்ப்பவன் தேவை. அப்படி ஒருவன் இல்லை. ஆதலால் அந்த உபமானம் சரியாகுமா?

ஜ: *உபமானம் மூலத்திற்கு என்றும் சமமாக முடியாது. அப்படி சமமாகி விட்டால் அதுவே மூலமாகிவிடும். பாம்பு - கயிறு என்ற உதாரணம் 'ஒரு பொருள் மற்றொரு பொருளாகத் தவறாகத் தோன்றலாம்' எனக் காட்டுவதற்காகத்தான் கூறப்பட்டிருக்கிறது. உதாரணத்திலிருந்து இந்த கருத்தைத்தான் எடுத்துக்கொள்ள வேண்டுமேயன்றி, அதை விடுத்து கயிறினின்றும் பாம்பினின்றும் வேறுபட்டுப் பார்ப்பவன் ஒருவன் இருக்கிறான் என்பதல்ல.*

சி: ஒருவனுக்குத், ஒரு கயிற்றைப் பார்த்து 'அது பாம்பு' என்ற தவறான எண்ணம் தோன்ற வேண்டுமென்றால், அவன் அந்த கயிற்றைப் பார்ப்பதற்கு முன்பே ஒரு நிஜமான பாம்பைப் பார்த்திருக்க வேண்டும். பாம்பைப் பார்த்திருக்காவிடில், இப்போது கயிற்றைப் பார்த்தவுடன் 'இது பாம்பு' என அவனுக்குத் தோன்றாது. அதே போல் பரம்பொருளை உலகமாக எண்ணிக்கொள்ள வேண்டுமெனில், ஓர் உண்மையான உலகமும் இருக்கவேண்டும். இப்படி கூறுவது தவறா?

ஜ: *ஆம், தவறுதான். ஒரு கயிற்றைப் பாம்பாகக் கருதுவதற்குப் பாம்பைப் பற்றிய அறிவு தேவை. அவ்வறிவு ஏற்பட உண்மையான பாம்பு இருந்திருக்க வேண்டும் எனக்கூறுவது சரியில்லை. உதாரணம் ஒன்று கூறுகிறேன். ஒரு மனிதன் ஒரு மரத்தை 'அது ஒரு பூதம்' எனத் தவறாகக் கருதலாம். அந்த பூதத்தை அவன் எப்போதோ ஒரு சமயம் தன் கனவில் பார்த்திருக்கலாம். கனவில் பார்த்த பூதத்தை இப்போது அவன் மரத்தைப் பார்க்கும் போது கற்பனை செய்து கொள்கிறான். உண்மையில் அந்த பூதம் இருந்ததா? இல்லையே. ஏனெனில், அது கனவில் மட்டுமே பார்க்கப்பட்டது. கனவில் பார்ப்பது உண்மையல்ல என்பது எல்லோருக்கும் தெரியும். ஆகவே பாம்பைப் பற்றிய அறிவுதான் தேவையாக இருந்ததே தவிர உண்மையில் ஒரு பாம்பு தேவையில்லை. ஆகவே, இங்கும் பரம்பொருள் உலகமாகத்*

*தோன்றுவதற்கு உண்மையான உலகம் ஒன்று இருக்கத் தேவை இல்லை.*

**சி: மாயை என்பது உண்மையானதா? அப்படி மாயை என்பது ஸத்தாக (உண்மையாகவே) இருப்பின், ப்ரஹ்மம் (பரம்பொருள்) அத்விதீயமானது (இரண்டற்றது) எனக்கூறுவது தவறாகும். மாயை என்பது இல்லையென்று உறுதியாகக் கூறமுடியாது. ஏனெனில் நாம் மாயையின் காரியங்களைப் பார்க்கிறோம். இப்படிப் புரிந்துகொள்ளவே முடியாத மாயையின் குழப்பும் தன்மையைப் பற்றி ஜகத்குரு விளக்கம் அளிப்பீர்களா?**

*ஜ: மாயை 'ஸத்' அதாவது பாரமார்த்திக உண்மை என்று கூறமுடியாது. ஏனென்றால் உண்மையான ஞானம் ஏற்பட்ட கணமே அது நாசமாகி விடுகிறது. எப்படி நமக்கு விழிப்பு வந்தால் கனவு மறைந்து விடுகிறதோ, அதேபோல் ப்ரஹ்மஞானம் மாயையை நாசம் செய்து விடுகிறது. இதனால், எப்படி கனவு காண்பவனைத் தவிற வேறான கனவுப்பொருள் ஒன்றும் இல்லையோ, அதைப் போலவே ப்ரஹ்மத்தைத் தவிர இரண்டாவதாக மாயை ப்ரஹ்மத்தினின்றும் வேறுபட்டதாக இருக்கிறது எனக்கூற முடியாது. அதே சமயம் மாயையை 'அஸத்' (இருப்பு இலாதது) என்று கூற முடியாது. ஏனென்றால், உலக வடிவில் நாம் அதன் காரியங்களைப் பார்க்க முடியாது. இதனால்தான் யுக்தியின் ஆதாரத்துடன் மாயை என்பது ஸத்துமில்லை, அஸத்துமில்லை என்று கூறப்பட்டுகிறது.*

**சி: ப்ரஹமத்தைத் தவிர மீதியெல்லாம் பொய் என்று கூறினால், வேதமும் பொய்யாகி விடாதா? வேதமே பொய்யாகிவிட்டால் அதை ஆதாரமாக வைத்துள்ள அத்வைத மதமும் பொய்யாகி விடாதா?**

*ஜ: அத்வைதிகள் பரம்பொருளின் த்ருஷ்டியிலிருந்து உலகம் என்பது உண்மையில்லை என்கிறார்கள். லௌகிக-வ்யவஹார நிலையில் உலகமில்லை என்று கூறவில்லை. வ்யவஹார நிலையிலிருந்து உலகம் எவ்வளவு உண்மை என்று ஏற்றுக்கொள்ளப்படுகிறதோ, வேதங்களும் அவ்வளவிற்கு உண்மை என ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். வ்யவஹார நிலையில் இருக்கும் வேதங்கள், தாற்காலிகமான உலகைப் பொய்யாக்கக்கூடிய சக்தி வாய்ந்த ஞானத்திற்கு வழி வகுக்கிறது. அவ்வாறான ஞானத்தை அடைந்தபின், இரண்டற்ற ப்ரஹ்மமே ஒளிர்கிறது. எனவே அத்வைத வேதாந்தம் சரியாகவே உள்ளது. மேலும் வேதம் உண்மையாக இல்லை என்றுகூடச் சொன்னாலும் இவ்விடத்தில் தவறில்லை. ஏனெனில், உண்மையாக இல்லாத ஒன்றே ஓர் உண்மையான பலனைத் தரலாம். இதற்கு ஓர் உதாரணம்: நமது கனவில் ஒரு புலி நம்மைத்*

துரத்துவதாகக் காணலாம். அதனால் ஏற்பட்ட பயத்தினாலேயே நமக்கு விழிப்பு ஏற்பட்டு விடலாம். இங்கு பொய்யான புலி நமக்கு உண்மையான பலனை ஏற்படுத்தி விழிப்பைத் தந்தது. அதேபோல், மேலோட்டமாகப் பார்த்தால் வேதமும், உலகத்தைப் போல் பொய்யென்று வைத்துக் கொண்டாலும், வேதத்தினால் ச்ரேயஸ் உண்டு என்கிற விஷயத்தில் எள்ளளவும் ஐயம் வேண்டாம். இவ்விதத்தில் பார்த்தால்கூட, அத்வைத வேதாந்தம் மிகவும் சரியாகவே உள்ளது என்று கூறலாம்.

**சி: விஞ்ஞானிகள் உலகைப் பற்றிய தகவல்களைச் சேகரித்து, அதனை ஆராய்கிறார்கள். 'உலகமே அஸத்யம்' என்பதால் விஞ்ஞானிகள் செய்யும் ஆராய்ச்சி அனைத்துமே அர்த்தமற்றது என்று கூறுவது சரியா?**

*ஜ: உலகை ஆராய்ந்து அதன் நியமங்களை விமர்சிப்பது பயனற்றது என நாம் கூறவில்லை. விஞ்ஞானத்தின் வ்யவஹார நிலையிலுள்ள பயன்பாடுகள் அளவற்றன என்பதை மறுக்கமுடியாது. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். உலகத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்து 'இது இவ்வாறு தான் இருக்கிறது' என்று எவராலும் நிரூபிக்க முடியாது. ஒரு வௌவால் ஒலியலைகள் மூலமாக பொருட்கள் இருப்பதை அறிந்து கொள்கிறது. அது காணும் உலகம் நாம் காணும் உலகத்தை விட வேறுபட்டது. அது கண்களால் உலகைப் பார்ப்பதில்லை. அதேபோல் எக்ஸ்ரே கதிர்களை நாம் பார்க்க முடியுமானால், அப்போது நாம் உலகைக் காண்பதே வேறுவிதமாக இருக்கும். இதில் எந்தப் பார்வை சரி? இரண்டு விதமாகத் தெரியும் உலகமும் சரிதான், அல்லது இரண்டுமே சரியில்லை. அதனால் 'உலகம் இப்படித்தான்' எனக் கூறுவது சரி வராது. நாம் வாஸ்தவத்தில் ஒரு பொருளை அறிய வேண்டுமென்றால், அதைப்பற்றிய நமது ஆய்வு எவ்விதத்திலும் அதன் நிலையை மாற்றக்கூடாது. எதிர்மின்னணுக்களை, (எலக்ட்ரான்) கூர்ந்த ஆய்வுக்கு உட்படுத்தும் பொழுது, அதன் நிலை மாறுகிறது என்பதை இயற்பியலாளர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். ஒரு பொருளைப் பற்றிய நமது கருத்து, அந்தப் பொருள் மட்டுமில்லாமல், மற்ற பல காரணங்களினால் பாதிக்கப்படுகிறது. உதாரணமாக, ஒரு தெளிவான கண்ணாடியின் மூலம் ஓர் அறையைப் பார்த்தால் என்ன தெரியுமோ, அதற்கு மாறாக, கருப்புக் கண்ணாடியின் மூலம் பார்த்தால், அந்த அறையில் உள்ள அனைத்துமே கறுப்பாகத்தான் தெரியும். மனம் எவ்வாறு நமக்குப் பொருட்களைக் 'காட்டுகிறதோ', அவ்வாறுதான் நாம் அவைகளைக் காண்போம். ஆகவே, 'நாம் புரிந்துகொண்டபடி உள்ள உலகம் இதுதான்' என்று கூறலாமே*

தவிர, 'உலகம், இப்படித்தான் இருக்கிறது' என்று கூறமுடியாது.

**சி: மாயைதான் அனைத்து பந்தங்களுக்கும் காரணமாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. மாயை ஏன் இருக்கிறது?**

ஜ: ஞானியை பொறுத்தவரையில் மாயை என்பதேயில்லை. பரம்பொருள் ஒன்றுதான் உண்டு. ஆகவே அவனைப் பொறுத்தவரையில் இக் கேள்விக்கு இடமே இல்லை. மேலும் கேள்விகளும் பதில்களும், த்வைத நிலையில், மாயையின் உலகத்தில் தான் இருக்க முடியும். யுக்தி மூலமாக நீ கேட்ட கேள்விக்குப் பதில் சொல்ல முடியும் என்றால், ஒருவன் மாயையின் தன்மையைப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். எப்போது மாயையின் உண்மையான தன்மையை ஒருவன் புரிந்துகொள்கிறானோ, அப்போதே ஞானோதயம் ஏற்பட்டுவிடுவதால், மாயை முழுவதுமாக மறைந்து, பரம்பொருளான ப்ரஹ்மம் ஒன்று தான் காணப்படும். ஆதலால் இக்கேள்விக்குச் சரியான பதிலை எதிர்பார்ப்பது நியாயமில்லை. ஏனென்றால் கேள்வியே சரியில்லை.

மாயையே ஒரு பெரிய கேள்விக்குறியைப்போல் இருக்கிறது. பரம்பொருள் இரண்டற்றது. ஆனால் மாயை இந்த தோற்றமான த்வைதத்தை உண்டாக்குகிறது. இதுதான் மாயையின் சாமார்த்தியம்.

ஒளி அதிகம் இல்லாத சமயங்களில் ஒரு கயிறு பாம்பாகத் தோன்றலாம். இதைக்கண்டு ஒருவன் 'கயிறு ஏன் பாம்பாகத் தோன்ற வேண்டும்? அவைகள் வெவ்வேறு பொருட்கள் அல்லவா?' என்று கேட்கலாம். 'இதற்கு காரணம் அறியாமை' என்பதே இதற்குப் பதில். 'அறியாமை ஏன் வந்தது?' என்று ஒருவன் கேட்டால், அதற்குப் பதில் கூற முடியாது. எவனுக்குத் தவறான எண்ணம் இல்லையோ, அவன் எப்பொழுதும் கயிற்றைக் கயிறாகத்தான் பார்க்கிறான். ஆகவே 'அது எவ்வாறு பாம்பாகத் தோன்றுகிறது?' என்ற கேள்வியே அவனுக்கு அபத்தமானது. ஏனென்றால் அவனுக்கு கயிறு பாம்பாகத் தோன்றவே இல்லை.

அடுத்ததாக, எவனுக்குத் தவறான எண்ணமிருக்கிறதோ, எவனுக்கு அது பாம்பாகத் தோன்றுகிறதோ, அவனிடம் 'அது ஏன் பாம்பாகத் தோன்றுகிறது?'' என்று கேட்க முடியாது. அவனைப் பொருத்தமட்டில் அது பாம்பாகத் தோன்றவில்லை. அது பாம்பேதான், கயிறல்ல. மற்றொருவனின் நிலையைக் கவனிப்போம். அவன் முதலில் கயிற்றைப் பாம்பென்று தவறாக நினைத்தான். பிறகு தான் அது கயிறென்று தெரிந்து கொண்டான். அவனிடம் சென்று 'கயிறு ஏன் பாம்பாகத் தோன்றிற்று?' எனக் கேட்டால், 'அது என் தவறான எண்ணம்' என்று பதில் அளிப்பான். அத்தவறான எண்ணம் ஏன்

ஏற்பட்டது என்று கேட்டால், அவனாலேயும் பதில் கூறமுடியாது. ஏனென்றால், இப்போது அவன் கயிற்றை மட்டுமே அங்கு காண்கிறான். அவனுக்கிருந்த தவறான எண்ணம் முற்றிலுமாக மறைந்து போய்விட்டது.

சில கேள்விகளிலேயே பிழை இருப்பதால் அவறிற்கு பதில் உரைக்க முடியாது. ஒரு வட்டத்தின் ஆரம்பம் எங்கிருக்கிறது என்று கேட்டால் அதற்கு என்ன பதில் கூறமுடியும்? கேள்வி கேட்பவன் ‘வட்டத்திற்கு ஓர் ஆரம்பம் உள்ளது’ என்ற தவறான எண்ணத்தினால்தான் கேள்வி கேட்கிறான். ஆதலால் கேள்விதான் பொருத்தமில்லையே தவிர, பதில் ஒழுங்காக இல்லை என்று கூற முடியாது. ஆகவே ‘மாயை ஏன் உள்ளது’ என்ற கேள்விதான் சரியில்லை.

**சி: உலகம் ஒரு கற்பனையே; அது மாயையினால்தான் தோன்றுகிறது என்று ஒருவன் எவ்வாறு அனுமானிப்பது என்பதற்கு ஜகத்குரு விளக்கம் கூறியருள்வார்களா?**

ஜ: நாம் ஆலமரத்தின் விதையைப் பார்க்கிறோம். அது சிறியதாக இருக்கிறது. அதை உடைத்துப் பார்த்தால், உள்ளே அதன் சிறிய துகள்களே காணக்கிடைக்கின்றன. ஆனால் அதிலிருந்து பெரிய ஆலமரம் வளருகிறது. மேலோட்டமாகப் பார்த்தால் இது இந்திரஜாலம் போலல்லவா தோன்றுகிறது? அதுபோல மனிதனின் வீர்யத்திலிருந்து ஒரு குழந்தை உண்டாகி, கைகால்கள் பெரிதாகி, மனிதனாக வளர்ந்து, காரியங்களைச் செய்கிறான். இதைப் பார்த்தாலும் இந்திரஜாலம் போலல்லவா தெரிகிறது? இதிலிருந்து உலகம் ஒரு பொய்யான தோற்றம் போலத் தெரிகிறது என்றே கூறவேண்டும்.

மேலும், நாம் கனவில் எவ்வாறு ஒரு உலகத்தைப் பார்க்கிறோமோ அதேபோல்தான் இங்கும் காண்கிறோம். கனவைக் காட்டிலும் இது வேறு என்று சொல்வது சரியல்ல.

உலகத்திலுள்ள எதை எடுத்துக்கொண்டாலும், நாம் ஆராய்ச்சி செய்து பார்த்தாலும், எக்கேள்விக்கும் ‘இது இப்படித்தான்’ என்று நம்மால் கூற முடியாது. ஓரளவிற்கு மேல் விசாரம் செய்ய முடியாது. ‘ஏன்’ என்ற கேள்விக்கும் பதில் கிடைக்காமல், ‘எனக்குத் தெரியாது’ என்றே கூற வேண்டி வரும். உலகம் ஒரு கற்பனை எனக் கருதுங்கால், இதுவே நிலமை. கனவில் ஒரு சிறிய அறையில் ஒரு பெரிய யானையைப் பார்ப்பதாக வைத்துக்கொள்வோம். அந்த அறையின் கதவுகளோ சிறியவை. இந்த யானை எப்படி வந்தது என்று கனவில் விசாரம் செய்யத் தொடங்கினால் என்ன பதில் வரும்? “நான் யானையைப் பார்க்கிறேன். ஆனால், இது எப்படி வந்தது

என்பது எனக்குத் தெரியாது'' என்றே கூறுவோம். இந்திரஜால வித்தைக்காரன் இதுபோலத்தான் செய்வான். நம் கண் முன்னால் தெரியும் காட்சிக்கு நம்மால் காரணம் கூறமுடியாது. இதுபோன்றே உலகமும் விவரிக்க முடியாதது. ஆகவே அது ஒரு கனவைப் போன்றோ, அல்லது ஒரு பொய்த் தோற்றமாகவோ தான் இருக்க வேண்டும். கனவை விட்டு விழித்த பிறகு, 'அங்கு வாஸ்தவத்தில் யானையும் இல்லை, சின்ன அறையும் இல்லை, யானை அங்கு வரவேயில்லை' என்று கூறுவோம். உண்மையை உணர்ந்ததும் உலகமும் அவ்வாறே இல்லாமல் போய்விடுகிறது. ''ப்ரக்ருதியை மாயை என்று தெரிந்துகொள்''[1] என்று வேதம் கூறுகிறது.

**சி:** உலகம் வெறும் தோற்றம் என்று இருக்கும்போது சாஸ்திரங்களில் சிருஷ்டியை பற்றி எதற்காகக் கூறப்பட்டிருக்கிறது**?**

*ஜ:* ஒரு குழந்தை சூரியனைப் பற்றிக்கேட்டால் நாம் என்ன கூறுகிறோம்? சூரியன் கிழக்கில் உதித்து மேற்கில் மறையும் என்று சொல்வோம். பூமிதான் சுற்றுகிறதே தவிர சூரியன் உதயமாவதும் அஸ்தமிப்பதும் கிடையாது என்று நமக்குத் தெரியாதா என்ன? குழந்தையின் மனதில் உள்ள ஆவலுக்கு ஒரு சமாதானம் ஏற்படுத்துவதற்காகச் சூரியனே உதிக்கிறான் என்றே சொல்கிறோமல்லவா? அதேபோல் உலகத்தைக் காண்பவனுக்கு 'உலகம் எப்படி ஏற்பட்டது?' எனச் சந்தேகம் வந்தால், சாஸ்திரம் ஒரு தாயார் போல இருப்பதால், அது அவனுக்கு உலகத்தைப் பற்றிச் சிறிது கூறுகிறது. மேலும் படிப்படியாகக் கொண்டுபோய், முடிவில் உண்மையை விளக்குகிறது. பரம்பொருளைப் பற்றி சாஸ்திரங்கள் கூறும் ஒரு முடிவான விளக்கம் ''இது இல்லை, இது இல்லை''[2] என்பதேயாகும்.

## *27. விழிப்பு நிலையும் ஸ்வப்ன நிலையும்*

**சி:** விழிப்பு நிலை கனவைக் காட்டிலும் வேறானதா**?**

*ஜ:* பரமார்த்த திருஷ்டியில் இல்லை.

**சி:** அப்படியென்றால் எல்லாமே மனதால் கற்பனை செய்யப்பட்டதென்று தான் பொருள் வருமா**?**

*ஜ:* ஆம்.

---

[1] ஸ்வேதாஷ்வதர உபநிஷத் 4.10
[2] ப்ருஹதாரண்யக உபநிஷத் 2.3.6

சி: ஜகத்குரு சற்று விளக்கம் கூறுவார்களா?

*ஜ: ஸ்வப்ன நிலையில், கனவைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது மட்டுமே உண்மையெனத் தோன்றும் ஓர் உலகைப் பார்க்கிறோம். அதேபோல் விழிப்பு நிலையில் ஓர் உலகைக் காண்கிறோம். இதுவும் பார்க்கும் சமயத்தில் உண்மை எனத் தோன்றுகிறது. இன்பமும் துன்பமும் விழிப்பு நிலையில் அனுபவிக்கிறோம். அதேபோல் தான் கனவிலும் அனுபவிக்கிறோம். ஆதலால் இந்த இரண்டு நிலைகளும் சமமாகவே இருக்கின்றன.*

சி: விழிப்பு நிலையில் ஒரு புத்தகத்தை ஒரு நாள் மேஜையில் வைத்தால், அது அடுத்த நாளும் அங்கேயே இருக்கிறது. ஆனால் கனவில் ஒரு புத்தகத்தை வைத்தோம் என்றால் விழித்தவுடன் அது காணப்படுவது இல்லை. இந்த வித்தியாசத்தை வைத்துக்கொண்டே விழிப்புநிலை உண்மையானது, கனவு நிலை பொய்யானதென்றும் கூற முடியாதா?

*ஜ: ஒரு கனவின் போதே முதலில் நீ மேஜையில் ஒரு புத்தகத்தை வைக்கிறாய் என்று உதாரணத்திற்கு வைத்துக்கொள்வோம். பிறகு அந்தக் கனவிலேயே நீ வேறு காரியங்கள் செய்கிறாய். காரியங்களை முடித்து விட்டு மீண்டும் வந்து பார்க்கும் போது அப்புத்தகம் அங்கு இருக்குமா, இருக்காதா?*

சி: ஆம், இருக்கும்.

*ஜ: இதுவே உனது சந்தேகத்தைத் தீர்த்திருக்கும். ஏனென்றால், விழிப்பு நிலையில் ஒரு புத்தகத்தை வைத்திருந்தால், அந்நிலையில் வேறு ஒரு சமயத்தில் அப்புத்தகம் முன்னர் வைக்கப்பட்ட அதே இடத்தில் இருக்கிறது. அதேபோல் கனவிலும், அந்த நிலையிலேயே வேறொரு சமயம், முன்னர் வைக்கப்பட்ட இடத்திலேயே புத்தகம் இருக்கும். கனவின்போது மேஜையில் வைக்கப்பட்ட புத்தகம் விழித்தவுடன் (விழிப்புநிலையில்) இருப்பதில்லை. அதேபோல் விழிப்பு நிலையின் போது வைக்கப்பட்ட புத்தகம், ஒருவன் தூங்கிய பின் வரும் கனவில் மேஜையிலேயே இருப்பதாகத் தெரிவதில்லை.*

சி: மற்றொரு வித்தியாசம் இருப்பதாகத் தெரிகிறதே?

*ஜ: என்ன?*

சி: நாம் தூங்கிக் கொண்டிருப்பதை மற்றவர்கள் பார்க்கலாம். ஆகவே நாம் படுத்துறங்கிக் கொண்டுதான் இருந்தோம் என்பதை அவர்கள் நிச்சயம் சொல்லலாம். அதனால் நாம் காணும் கனவு பொய்யானது தானே?

ஜ: ஒரு கனவில் நீ உட்கார்ந்து கொண்டிருப்பதாக காண்கிறாய் என்று வைத்துக் கொள்வோம். அப்போது நீ பல விஷயங்களைப் பற்றிச் சிந்தனை செய்து கொள்ளலாம். உன் கனவிலேயே நீ உட்கார்ந்து கொண்டிருக்கிறாய் என்பதைச் சிலர் பார்க்கலாம். அவர்களைப் பொறுத்தவரை நீ உட்கார்ந்து கொண்டிருப்பது உண்மை. ஆனால் நீ சிந்தனை செய்வது பொய், அப்படித்தானே?

சி: ஆம்.

ஜ: உண்மையிலேயே நீ அந்தக் கனவில் வந்த ஜனங்களுக்கு முன்பு உட்கார்ந்து கொண்டிருந்தாயா?

சி: இல்லையே.

ஜ: இதற்குக் காரணம் 'நீ உட்கார்ந்து கொண்டிருந்தாய், உன்னை மற்ற ஜனங்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள்' என்ற இரண்டும் கனவைச் சேர்ந்தவை. அதேபோல்தான் இங்கும். அதாவது ஒருவன் தூங்கிக் கொண்டிருப்பதை மற்றவர்கள் பார்ப்பது என்பது.

சி: விழிப்பு நிலை வருடக்கணக்காக நீடிக்கிறது. ஆனால் கனவோ ஒரு சில மணிகள் தான் இருக்கிறது. இந்த வித்தியாசம் இருக்கிறதே?

ஜ: இந்த யுக்தியை உபயோகப்படுத்த வேண்டுமானால், நீ ஒரு கேள்விக்கு விடையளிக்க வேண்டும். ஒரு கனவு முப்பது நிமிடங்களும், மற்றொரு கனவு பத்து நிமிடங்களும் நீடிக்கிறது என்றால், முப்பது நிமிடங்கள் நீடித்த கனவு பத்து நிமிட கனவை விட உண்மை எனக் கூறுவாயா?

சி: இல்லையே.

ஜ: ஆகவே நீண்ட காலம் உள்ளது என்று காரணம் காட்டி விழிப்பு நிலை கனவை விட உண்மையானது எனக் கூற முடியாது. மேலும் 'நேரம் செல்கிறது' என்பதும் மனதில் ஒரு கற்பனையே. ஒரு கனவில் ஒருவன் தான் நீண்டநேரம் கழித்தது போல, அக்கனவில் நினைத்திருக்கலாம். ஆனால் விழிப்பு நிலையைப் பொறுத்தவரையில் பத்து நிமிடங்கள் மட்டுமே கழிந்திருக்கலாம்.

சி: தாங்கள் கூறியபடியே கனவில் அனுபவிக்கும் உலகத்தைப் போல் தான் விழிப்பு நிலையிலும் இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் இங்கு எனக்கு ஒரு சந்தேகம் தோன்றியுள்ளது.

ஜ: தோன்றிய சந்தேகத்தை நீ தயங்காமல் சொல்லலாம்.

சி: விழிப்பு நிலையில் நாம் அனுபவிப்பது எல்லாம் பொய் என்பது நமக்குத் தெரியவில்லையே! அது ஏன்?

*ஜ:* *சாதாரணமாக, நீ தூங்கும்போது கனவில் பார்ப்பது பொய் என்று தெரிகிறதா? அதாவது கனவு கண்டு கொண்டிருக்கும் போதே அது பொய் என்பது தெரிகிறதா?*

சி: இல்லை**.**

*ஜ:* *கனவில் கண்டது பொய் என்பது எப்போது உனக்குத் தெரிகிறது?*

சி: எப்போது நான் விழிப்பு நிலைக்கு வருகிறேனோ அப்போதுதான் தெரிகிறது**.**

*ஜ:* *அதேபோல் நாம் எப்போது இந்த விழிப்புநிலை என்ற கனவிலிருந்து எழுந்துகொள்வோமோ, அப்போதுதான் இவ்வுலகமும் பொய் என்பது மிகத் தெளிவாக நமக்குத் தெரியும்.*

சி: இப்பெரிய கனவிலிருந்து எப்போது ஒருவன் விழித்துக் கொள்வான்**?**

*ஜ:* *எப்போது ஞானோதயம் ஏற்பட்டு ஒருவன் தான் எவ்வித பந்தங்களும் இல்லாததும், பேரின்ப வடிவமானதுமான ஆத்மாதான் என அறிந்து கொள்வானோ அப்போதே இப்பெரிய கனவு அகன்றுவிடும்.*

சி: அப்படிப்பட்ட ஞானோதயம் எப்போது ஆகும்**?**

*ஜ:* *எப்போது ஒருவன் தன் மனதை முழுமையாகத் தூய்மையாக்கி, ஆத்மாவில் நிலைபெறச் செய்வானோ, அப்போதுதான் அவனுக்கு ஞானோதயம் ஏற்படும்.*

சி: குருவின் மற்றும் சாஸ்திரத்தின் பங்கு இவ்விஷயத்தில் எவ்வாறு**?**

*ஜ:* *சாஸ்திரத்தின்படி உள்ள குருவின் உபதேசங்கள் தத்துவ அறிவை உண்டாக்குகின்றன.*

சி: சாஸ்திரமும் குருவின் உபதேசங்களும் இந்தப் பொய்யான உலகைச் சேர்ந்தவை அல்லவா**?** அப்படியிருக்கையில், எவ்வாறு அவை உண்மையான தத்துவத்தின் அறிவை உண்டாக்க முடியும்**?**

*ஜ:* *ஆம். இந்த உபதேசங்களும் உலகிற்குச் சேர்ந்ததுதான். ஆனாலும் இவைகளால் உண்மையான தத்துவ அறிவு ஏற்படலாம். கனவில் ஒரு புலி நம்மை துரத்துவதாகக் காண்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். புலி துரத்துகிறது என்ற பயத்தினால் நமக்கு விழிப்பு ஏற்படலாம். அதேபோல் சாஸ்திரங்களின் கட்டளைகளும் குருவின் உபதேசங்களும் நம்மை இப்பெரிய கனவிலிருந்து விழித்தெழும்படிச் செய்கின்றன.*

சி: அப்படியென்றால் படைப்பு என்றால் என்ன**?**

ஜ: பார்வை தான் படைப்பு. பார்வையைக் காட்டிலும் வேறான படைப்பு கிடையாது. ஒரு பொருள் இருக்கிறது என்று கற்பனை செய்யும் நமது பார்வைதான் படைப்பே தவிர வேறில்லை.

சி: அப்படியானால் ஈச்வரனும் குருவும் உண்மையா அல்லது பொய்யா**?**

ஜ: அவர்கள் உண்மையில் ஸச்சிதானந்த ஸ்வரூபமான ஆத்மாவேதான். இருப்பினும், குருவின் ஸ்தூல உடலும், ஈச்வரனின் ரூபமும் பொய் தான். உண்மையில் காரணமும் இல்லை, காரியமும் இல்லை. உண்மையில் படைப்பு என்ற ஒன்றே இல்லாதபோது, எவ்வாறு ஈச்வரனின் பங்கு, அவனுடைய உள்ளார்ந்த உண்மை ஸ்வரூபத்திற்கு நிகராக, உண்மையாக இருக்க முடியும்? "இந்தப் ப்ரபஞ்சத்திற்கு அழிவில்லை, படைப்பு இல்லை, எவருமே பந்தத்தை அடைந்தவர்கள் இல்லை. ஸாதகனும் எவனுமில்லை, மோட்சத்தை விரும்புபவனும் யாருமில்லை மற்றும் மோட்சம் அடைந்தவனும் எவனுமில்லை. இது தான் உத்தமமான உண்மை."[1] என்று கூறப்பட்டு இருக்கிறது. எதுவரையில் ஒரு மனிதன் தனக்குப் பந்தம் உள்ளது என்று கருதுகிறானோ அதுவரையில் அவனுக்கு பந்தம் இருக்கிறது. எவன் தான் விடுதலை பெற்றவன் எனக் கருதுகிறானோ அவன் விடுதலை பெற்றவன்தான். ஆதலால்தான், "எவன் தன்னை முக்தன் என்று கருதுகிறானோ அவன் முக்தன். எவன் தனக்குப் பந்தம் இருக்கிறது என்று கருதுகிறாநோ அவன் பந்தம் உள்ளவன்"[2] என்று கூறப்பட்டுள்ளது. ஆகவே ஒருவன் தனக்குப் பந்தம் உள்ளது என்ற தவறான கருத்தை அகற்றிவிட வேண்டும்.

சி: தனக்குப் பந்தம் உள்ளது என்ற தவறான எண்ணத்தை நீக்கி விடுவதே மோட்சத்தை அடையும் ஸாதனமாகுமா**?**

ஜ: ஆம். இதுவரையில் நான் திருஷ்டி-சிருஷ்டி வாதத்தை (பார்வையே படைப்பு எனக்கூறுவது) மனதில் வைத்துப் பேசிக் கொண்டிருந்தேன். ஆனால் இது பல ஜனங்களுக்குப் பொருத்தமாக இருக்காது. ஏனென்றால், அவர்களது மனம் இத்தத்துவத்தை புரிந்து கொள்ளும் அளவிற்கு அவர்களுக்குத் தீவிரமான வைராக்யம் இல்லை. கனவு ஒன்றுதான் பொய்யானது என்று அனைவரும் ஒப்புக்கொள்வர். விழிப்பு நிலையும் அதேபோன்று பொய்யென்று சொன்னால், அவர்களுக்கு அதை ஏற்றுக்கொள்ள முடியாது அல்லது சங்கடம் ஏற்படும். ஆதலால் தான் சாஸ்திரங்கள், சாமான்யமாக திருஷ்டி-

---

[1] கௌடபாத காரிகை 2.32
[2] அஷ்டாவக்ர கீதை 1.11

*சிருஷ்டி வாதத்தைப் பற்றி அதிகமாகக் கூறுவதில்லை. ஒரு சில இடங்களிலேயே கூறுகின்றன. ஏனெனில், ஒரு சிலரே இந்த திருஷ்டி-சிருஷ்டி வாதத்தைச் சரியாகப் புரிந்துகொண்டு, அதை ஏற்றுக் கொண்டு, முக்தியடைவதற்குத் தகுதிவாய்ந்தவர்களாக இருக்கிறார்கள்.*

## *28. பந்தத்தின் ஸ்வரூபம்*

சி: உண்மையாகவே பந்தம் இருக்கிறதா?

ஜ: *இல்லை. அது உண்மையாகவே இருந்திருந்தால் ஞானம் உதயமான பிறகு அது எவ்வாறு இல்லாமல் போக முடியும்?*

சி: யாருக்குப் பந்தம் இருக்கிறது?

ஜ: *எவன் தனக்கு பந்தம் இருக்கிறது எனத் தவறாகக் கருதுகிறோனோ அவனுக்குப் பந்தம் இருக்கிறது?*

சி: பந்தம் தனக்கு உண்டு என்ற தவறான கருத்து யாருக்கு இருக்கிறது?

ஜ: *நீயே கூறு.*

சி: ஆத்மாவிற்குத்தான் வருகிறது.

ஜ: *ஆத்மா ஸச்சிதானந்த வடிவமாக இருக்கிறது. அதற்கு ஒரு விதமான பந்தமும் கிடையாது. இதுதான் சாஸ்திரங்களின் தீர்மானம்.*

சி: ஆத்மாவிற்குப் பந்தம் சேராதென்றால் மனதிற்குத்தானே பந்தமிருக்க வேண்டும்?

ஜ: *மனம் ஜடப்பொருள். அதற்கு எப்படி பந்தமிருக்க முடியும்? ஜடமான பொருளுக்குப் பந்தம் இருப்பது சாத்தியமில்லையே.*

சி: பந்தம் ஆத்மாவிற்குமில்லை, மனதிற்குமில்லை என்றால் பந்தமென்பது எப்படித்தான் இருக்கமுடியும்?

ஜ: *எல்லாவிதமான சாத்தியக்கூறுகளையும் நீ யோசித்துப் பார்த்தாயா?*

சி: எல்லாவற்றையும் யோசித்துப் பார்த்துவிட்டேன். ஆத்மாவும் மனமும் சேர்ந்த ஒரு கோஷ்டியைப் பற்றித்தான் யோசிக்கவில்லை. ஏனெனில், அது அர்த்தமற்றதாகத் தோன்றியது.

ஜ: *ஏன்?*

சி: ஏனென்றால், ஆத்மாவின் குணம் வேறு மனதின் குணம் வேறு. இவை எப்படிச் சேர்ந்திருக்க முடியும்?

ஜ: *வெப்பமும் ஒளியும் இரும்பின் குணங்களா?*

சி: இல்லையே.

ஜ: *அவை நெருப்பின் குணங்களா?*

சி: ஆம்.

ஜ: *ஓர் இரும்புத்துண்டை நீண்டகாலம் நெருப்பில் காய்ச்சினால் என்ன ஆகும்?*

சி: இரும்புத்துண்டு வெண்மையான பளபளப்புடன் தோன்றி ஒளிவீசும்.

ஜ: *அது சரி. ஒளியும் வெப்பமும் நெருப்பின் குணங்கள் என்று உனக்கு முன்பே தெரியவில்லையென்றால், இவைகள் இரண்டும் காய்ச்சிய இரும்பில் தெரிவதால் அதனுடைய குணங்கள் என்றுதானே நீ கருதுவாய்?*

சி: ஆம்.

ஜ: *அதுபோலவே, மனம் ஜடமாயுமள்ளது. ஆத்மா சைதன்ய வடிவாக உள்ளது. காய்ச்சிய இரும்பைப் போன்று, மனது மற்றும் ஆத்மாவின் சேர்க்கையான ஜீவனுக்குத்தான் பந்தம். இது ஆத்மாவுக்கு மட்டும் என்றோ, மனதிற்கு மட்டும் என்றோ இல்லை. உண்மையில் ஜீவன் ஆத்மாதான். எதுவரையிலும் ஜீவனுக்குத் தன்னுடைய உண்மையான ஸ்வரூபம் தெரியவில்லையோ, அதுவரையில் அவன் பந்தத்தை அனுபவிக்கிறான். எப்போது ஜீவன் தன் உண்மையான ஸ்வரூபத்தை அறிந்து கொள்கிறானோ அப்போது மறுபிறவியிலிருந்து விடுதலை பெறுகிறான்.*

சி: அப்படியெனில் மோட்சம் என்பது நிரந்தரமானதாக இருக்க முடியாதே?

ஜ: *ஏன்?*

சி: ஏனென்றால், எதற்கு ஆரம்பம் உள்ளதோ அதற்கு முடிவும் இருக்க வேண்டும். எப்போது ஒருவன் ஞானம் அடைகிறானோ, அப்போது மோட்சம் உண்டாகிறது. எனவே மோட்சத்திற்கும் ஆரம்பம் இருக்கிறது.

ஜ: *உண்மையில் பந்தம் என்ற ஒன்றே இல்லாததால், இந்த எதிர்ப்பு சரியானதல்ல. பந்தம் என்பது போலியானது, அறியாமையினால் உண்டாகிறது. ஞானத்தினால் அறியாமை அழியும்போது பந்தம் போய் விடுகிறது. மோட்சம் என்பது ஒருவன் தன் ஸ்வரூபமான ப்ரஹ்மத்தில் நிலைத்து இருப்பதேயன்றி, வேறொன்றுமில்லை. மோட்சம் என்பது ஆத்மாவினால் குறிப்பிட்டு அடையப்பெற்ற ஒன்று என நாம் கூறுவதில்லை.*

# *29. மோட்சத்திற்குக் காரணம்*

சி: மோட்சத்திற்கான ஸாதனங்கள் என்ன**?**

*ஜ: ப்ரஹ்ம ஞானம் மட்டுமே மோட்சத்திற்கு நேரடியான ஸாதனம். சாஸ்திரங்கள், "ஞானத்தால் மட்டுமே மோட்சம் அடையப்படுகிறது."[1], "அவனைத் தெரிந்து கொண்டால்தான் ஒருவன் மரணம் இல்லாதவன் ஆகிறான். வேறு வழியில்லை."[2] என்று கூறுகின்றன.*

சி: இப்படியென்றால் கர்மா ஞானத்திற்கு நேரடியான காரணம் இல்லை என்றுதானே பொருளாகும்**?**

*ஜ: ஆம், சாஸ்திரங்கள் இவ்விஷயத்தில் தீர்மானத்துடன் இருக்கின்றன. "கர்மாவின் மூலமாக மோட்சம் அடையப்படுவதில்லை"[3] என்ற உபநிஷத்தின் உபதேசம் இதற்கு ஓர் உதாரணம்.*

சி: ஞானம் எப்போது உண்டாகும்**?**

*ஜ: மனம் சுத்தமாகும் பொழுது ஞானம் உண்டாகும்.*

சி: இறைவனுக்கு அர்ப்பணித்துக் கர்மா செய்வதால் மனதிற்கு தூய்மை ஏற்படாதா**?**

*ஜ: ஆம், தூய்மை ஏற்படும்.*

சி: அப்படியென்றால் கர்மாவும் மோட்சத்திற்குக் காரணம் என்றுதானே கூறவேண்டும்**?** ஏனென்றால் கர்மாவை இறைவனுக்கு அர்ப்பணம் செய்வதால் மனம் புனிதமாகிறது**.** புனிதமான மனதில்தான் ஞானம் ஏற்படுகிறது**.** அதனால் மோட்சம் அடையப்படுகிறது**.**

*ஜ: நீ தந்த காரணமே கர்மா மோட்சத்திற்கு நேரடியான காரணமில்லை என்று தெளிவுபடுத்துகிறது. பானைக்கு மண் காரணம் என்று எல்லோருக்கும் தெரியும். அதேபோல் பானையை எவன் செய்கிறானோ அவனும் ஒருவிதமான காரணம் என்றுதான் கூறவேண்டும். செய்தவனின் தந்தையும் காரணமா? ஏனெனில் செய்தவனின் தந்தை இல்லாமல் செய்தவன் வந்திருக்க முடியாது. அவனில்லாமல் பானை வந்திருக்க முடியாது.*

சி: செய்பவனின் தந்தையைக் காரணமாகக் கூற முடியாது**.** ஏனென்றால் செய்பவனின் தாத்தா, அவருக்கும் அப்பா, இவர்களும் காரணங்கள் என்று போய்க்கொண்டே இருக்கும்**.**

---

*[1] ஸ்ம்ருதி*
*[2] தைத்திரீய ஆரண்யகம் 3.13.1.2*
*[3] மஹாநாராயண உபநிஷத் 12.14*

ஜ: அதே யுக்தியை இங்கும் உபயோகப்படுத்தினால், மோட்சத்திற்குக் கர்மா நேரடியான காரணமாகாது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். மேலும் எது கர்மாவினால் ஏற்படுகிறதோ அதற்கு ஒரு முடிவும் உண்டு. ஆதலால் மோட்சம் கர்மாவினால் ஏற்பட்டால் அது நிரந்தரமாக இருக்க முடியாது. ஆனால் மோட்சம் நிரந்தரமானது என சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆதலால் ஞானம் தான் மோட்சத்திற்கு நேரடியான காரணம் என்று தெரிந்து கொள்ளவேண்டும்.

## 30. அத்வைத நூல்களில் பலவிதமான கருத்துக்கள்

சி: அத்வைத நூல்களிலேயே நாம் பல விதமான கருத்துக்களைக் காணலாம். உதாரணத்திற்கு 'பஞ்சதசீ' என்னும் நூலில் ஜீவன் என்பது அவித்யையில் சைதன்யத்தின் ஒரு பிரதிபிம்பம் என்று படித்திருக்கிறேன். வேறு சில நூல்கள் அவித்யையினால் வரையறுக்கப்பட்ட ப்ரஹ்மத்தை ஜீவன் என்று கூறுகிறன்றன. சில நூல்கள் 'பல விதமாக ஜீவன்கள் இருக்கிறர்கள்' என்று கூறுகின்றன. மற்ற சில 'ஒரே ஜீவன்தான்' என்று கூறுகின்றன. இதுபோன்ற கருத்து வேற்றுமைகளுக்குக் காரணம் என்ன?

ஜ: எவ்வாறு கங்கை கடலில் போய்ச் சேர்வதற்கு முன்னர் பலவிதமாகப் பிரிந்திருக்கிறதோ, அதேபோல் சாஸ்திரங்களிலிருந்து சங்கர பகவத்பாதாளால் விளக்கப்படும் அத்வைதம் ஒரு சில விதங்களில் உபதேசிக்கப்படுகிறது. ஆயினும் "ப்ரஹ்மம் உண்மை, உலகம் மித்யை, ஜீவன் ப்ரஹ்மம்தான் வேறில்லை."[1] என்ற கருத்தில் அத்வைதிகள் ஒருமித்த கருத்தையே கொண்டுள்ளனர். மேலும் ஞானம் தான் மோட்சத்திற்கு காரணம் என்றும் அத்வைதிகள் எல்லோரும் ஒப்புக்கொள்கின்றனர்.

உலகம், கடவுள், ஜீவன், இவைகளின் விளக்கங்களில் வெவ்வேறான கருத்துக்கள் காணப்படுகின்றன. ஸாதகர்களுடைய வேறுபட்ட தகுதி மற்றும் மனப்போக்கை கருத்தில் கொண்டு, அவரவருக்கு ஏற்ப அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இவ்வாறு வேறுபட்ட கருத்துக்கள் உதவுகின்றன. உத்தமமான அதிகாரியாகவும், தன் மனதை பரம்பொருளிடம் வைக்கச் சாமர்த்தியம் உள்ளவனுமாக இருப்பவனுக்கு, ஏக-ஜீவ-வாதம் (ஒரு ஜீவன்தான் இருக்கிறான்) என்ற வாதத்தைக் கூறலாம். இம்மாதிரி மற்ற ஜனங்களுக்கும் கூறினால் அவர்களுக்குக் கஷ்டம் ஏற்படலாம். ஆகவே அவர்களுக்கு

---

[1] ப்ரஹ்மஞானாவலீமாலா 20

*நாநா-ஜீவ-வாதம் (பல ஜீவன்கள் உள்ளனர்) என்ற வாதத்தைக் கூறலாம். சுரேச்வாராச்சார்யார், "எந்த மார்க்கத்தின் மூலமாக உள்ளிருக்கும் ஆத்மாவின் அறிவைப் பெறலாமோ அந்த மார்க்கத்தைச் சரி என்று தெரிந்துகொள்ள வேண்டும். மேலும் இது போன்ற மார்க்கங்கள் பல்வேறு வகைப் பட்டவை"[1] என்று தெளிவுபடுத்தியிருக்கிறார்.*

## *31. ஞானி*

சி: சாஸ்திரம் எவர்களை ஞானி அல்லது ஜீவன்முக்தர் என்று அழைக்கிறது**?**

*ஜ: எவன் ஆத்ம ஸாக்ஷாத்காரம் பெற்றிருக்கிறானோ, தானே ப்ரஹ்மம் என்று எவன் பூரணமாக உணர்ந்திருக்கிறானோ, அவனை சாஸ்திரம் இவ்வாறு அழைக்கிறது.*

சி: ஞானி புண்ணியத்தையும் பாவத்தையும் கடந்தவனா**?**

*ஜ: ஆம்.*

சி: அப்படியென்றால் ஞானிக்கு ஒருவிதமான புண்ணியமும் பாவமும் ஏற்படாது என்பதால் அவன் எவ்வாறு வேண்டுமானாலும் நடந்து கொள்ளலாமா**?**

*ஜ: ஞானி அவ்வாறு சாதாரணமாக நடந்து கொள்ளமாட்டான். ஞானம் பெறுவதற்கு முன்பு அவன் மனம் மிகவும் புனிதமாக இருந்திருக்க வேண்டும். இதே நிலை ஞானத்தை அடைந்த பிறகும் இருக்கும். ஞானி மற்றவர்களுக்கு 'ஆதர்ச புருஷன்' (எடுத்துக்காட்டாக) போலிருக்கிறான். சுரேச்வராச்சார்யர், "இரண்டற்ற தத்துவத்தை உணர்ந்த ஒருவன் அவன் இஷ்டத்துக்கு எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்வானேயானால், அசுத்தமாய் இருப்பவற்றைக் கூட உண்ணும் ஒரு நாய்க்கும் அவனுக்கும் என்ன வேறுபாடு இருக்கும்?" என்று கூறியிருக்கிறார்.*

சி: ஆத்ம ஞானம் அடைந்த பிறகு, ஒரு ஞானியின் மனது எவ்வாறு செயல்பாட்டுடன் இருக்க முடியும்**?** மேலும் அதில் எவ்வாறு சுகம் மற்றும் துக்கத்தின் அனுபவங்கள் ஏற்படும்**?**

*ஜ: ஒரு சக்கரம் இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். ஒருவன் தன் கைகளால் அச்சக்கரத்தை சுற்றிக் கொண்டிருக்கிறான். சற்று நேரத்திற்குப் பிறகு சக்கரத்திலிருந்து அவன் தன் கையை எடுத்து*

---

*[1] நைஷ்கர்ம்ய ஸித்தி 4.62*

விட்டால், சக்கரம் சிறிது சுற்றிவிட்டுப் பிறகுதான் நிற்கும். அதே போல்தான் இங்கும். பிராரப்தம், ஞானியின் உடலுக்குக் காரணமாக இருக்கிறது. ஞானத்தை அடைந்த பிறகு உடலிலும் மனதிலும் உள்ள அபிமானம் போய்விடுகிறது. இருப்பினும், பிராரப்தம் (இப்பொழுது பலனைக் கொடுக்கக்கூடிய முற்பிறவிகளின் கர்மாக்கள்) நீங்கும் வரையில், அந்த சக்கரத்தின் சுழற்சியைப் போன்று, உடலும் மனதும் செயலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, பார்ப்பவரின் கண்ணோட்டத்திலிருந்து, ஒரு ஞானிக்கு பிராரப்தம் இருக்கிறது, அதன் பலனையும் அவன் அனுபவிக்கிறான் என்றுதான் தெரியும். ஆனால் ஞானியின் பார்வையிலிருந்து அவனுக்கு பிராரப்தம், சுகம், துக்கம், உடல், மனம் ஆகிய எதுமே இல்லை.

**சி:** ஜாக்ரத், ஸ்வப்ன, ஸுஷுப்தியாகிய மூன்று நிலைகளிலும் தன் ஸ்வரூபத்தை அவன் தெரிந்து கொண்டிருப்பானா?

*ஜ:* ஆம், அவன் எல்லா நிலைகளிலும் தன் ஸ்வரூபத்தைத் தெரிந்து கொண்டு இருப்பான்.

**சி:** அவன் பிரபஞ்சத்தைப் பார்க்கும்போது அவனுடைய அனுபவம் எவ்வாறு இருக்கும்?

*ஜ:* ‘எதுவும் தன்னைக் காட்டிலும் வேறில்லை. ஆத்மாவைக் காட்டிலும் வேறான பிரபஞ்சமில்லை. ஆத்மாதான் பிரபஞ்சமாகத் தோற்றம் தருகிறது’, என்கிற அறிவு அவனுக்கு அனுபவ பூர்வமாக இருக்கும்.

**சி:** ஞானிகள் எதனால் கருணை நிரம்பியவர்களாக இருக்கிறார்கள்?

*ஜ:* ஞானம் பெறுவதற்கு முன் அவர்கள் மனம் மிகவும் பரிசுத்தமாக இருந்திருக்கும். ஏனெனில், மனம் பரிசுத்தமான பிறகு தான் ஞானம் வருகிறது. ஆதலால் முன்னமே அவர் கருணையை வளர்த்திருக்க வேண்டும். ஞானம் வந்த பிறகு, அந்தக் கருணை தற்போது மேலும் விசேஷமாக இருக்கிறது. அவர்கள் அடைய வேண்டியதை அடைந்து விட்டதால், எப்போதும் திருப்தியுடன் இருப்பவர்கள். ஆதலால், அவர்களுடைய வாழ்க்கை எப்போதும் மற்றவர்களின் நன்மைக்காகவே இருக்கிறது என்று சொல்லலாம்.

**சி:** ஞானிகளும் பகவானிடத்தில் பக்தி செலுத்தலாமா?

**சி:** *ஒரு ஞானிக்கு உணர்வுகள் இருக்கலாம், மேலும் அவன் உணரவும் செய்கிறான் என்றிருக்கும்போது, இறைவன் விஷயத்தில் ஏன் அவனால் பக்தி செய்ய முடியாது? இறைவனின் தெய்வீகக் குணங்கள், வசீகரம், மகிமை இவை அனைத்தும் எல்லையற்றவை.*

*ஆகவே ஞானியின் சுத்தமான மனமும் இறைவனிடம் மிகவும் ஈர்க்கப்படுகிறது. எந்த விதமான எதிர்பார்ப்புகளையும் மனதில் வைத்துக்கொள்ளாமல் அவன் இறைவனிடம் பக்தி செய்கிறான். அதனால் அவன் தன் சுயரூபத்தை அறியவில்லை என அர்த்தமில்லை. அவன் தத்துவத்தை அறிந்திருந்தாலும் உடலும் மனதும் இறைவன் விஷயத்தில் ஈடுபாடுடன் இருக்கலாம். பாகவதத்தில், "ஆத்மாவிலேயே திளைத்துக்கொண்டு, தளைகளேதுமற்றவராய், எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாதவர்களாக பகவானிடம் பக்தி செலுத்துகிறார்கள். பகவானின் மஹிமை அத்தகையது."[1] என்று பார்க்கிறோம்.*

**சி: ஒரு ஞானி அல்லது ஜீவன்முக்தன் இறந்த பிறகு எந்த லோகத்திற்கு செல்வான்?**

*ஜ: அவன் எந்த லோகத்திற்கும் போக மாட்டான். எப்போதும் ப்ரஹ்மமாகவே இருப்பான். இறந்த பிறகு அவனை விதேஹமுக்தன் என்று கூறுவோம். சாஸ்திரங்கள், ஞானம் அடைந்தவன் சாகா நிலையை அடைகிறான் என்று கூறுகின்றன. அவன் இங்கேயே பரமாத்மாவை அறிந்து விடுகிறான். அவன் இறந்த பிறகு ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறானதாக.*

**சி: ஞானி ஸமாதியை விரும்புவானா? அந்த நிலையில் அவன் இருக்க வேண்டும் என்று தேவையுள்ளதா?**

*ஜ: ஒரு ஞானிக்குத் தான் ஸமாதியை அடைய வேண்டுமென்ற ஏக்கமோ அல்லது கண்டிப்பாக அவன் ஸமாதியில் இருக்க வேண்டுமென்ற தேவையோ இல்லை, ஸமாதியாக இருக்கட்டும் அல்லது மனம் அலைபாயட்டும், அவை மனதின் நிலைகள்தான். அவன் அவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டவன். ஒரு ஞானியினுடைய ஸமாதியின் அனுபவத்தின் ஆழத்தைப் பொறுத்து, ஒரு ஞானி மற்றவனைவிட உயர்ந்தவன் என்று கூறப்படுகிறது. இது பார்ப்பவனைப் பொறுத்தவரையிலும் தான். அதாவது, பார்ப்பவனைப் பொறுத்தவரையில், 'ஞானிகளில் இவன் உயர்ந்த ஞானி' என்பது போன்ற வித்யாசம் இருக்கலாம். ஆனால் ஞானிகளைப் பொறுத்தவரையில் பேதம் கிடையாது. வியவஹாரங்களில் ஈடுபாடு வைத்திருக்கும் ஞானிக்கு 'ப்ரஹ்மவித்' என்று பெயர். ஒரு ஞானி நிர்விகல்ப ஸமாதிக்குச் செல்லும் பழக்கம் இருந்தால், அதிலிருந்து தானாகவே எழுந்துவர முடியுமென்றால் அவனுக்கு 'ப்ரஹ்மவித்வர' என்று பெயர். மற்றவர்கள் முயற்சியால் தான் அவனை*

---

[1] *பாகவத புராணம் 1.7.10*

*ஸமாதியிலிருந்து எழுப்ப முடியும் என்றால் அவனுக்கு ‘ப்ரஹ்மவித்வரீயான்’ என்று பெயர். ‘ப்ரஹ்மவித்வரிஷ்டர்’ என்பவர் ஸமாதிக்குச் சென்றால், அவர் என்றுமே எழுந்து வரமாட்டார். அப்படியே அவர் உடலானது நசிந்துவிடும். ப்ரஹ்மவித்வரிஷ்டருக்குப் பிராரப்தம் மிகச் சிறந்ததாக இருப்பதால், அவரே பார்ப்பவர்களை பொறுத்தவரையில் உத்தமமான ஞானி. ஆனால் ஞானிகளைப் பொறுத்தவரையில் இவ்விதமான வேற்றுமையே கிடையாது.*

**சி:** சுகத்தையோ அல்லது வலியையோ அனுபவிக்கும்போது, ஒரு ஞானி எவ்வாறு நடந்துகொள்வான்**?**

*ஜ: தாம் துக்கமே தீண்டாத ஆத்மஸ்வரூபம் என்பதை அனுபவ பூர்வமாக அறிந்ததாலும், அவர்கள் மனம் பரிசுத்தமாக இருப்பதாலும், அவர்கள் கவலைப்படவோ அல்லது சோர்ந்து போகவோ மாட்டார்கள். ஒரு போர் வீரனுக்குப் போரின் போது காயம் ஏற்பட்டாலும் அவற்றை இலட்சியம் செய்யாமல் அவன் எவ்வாறு சுடுவதை நிறுத்துவதில்லையோ அதேபோல் ஞானியும் மற்றொருவன் துக்கம் ஏற்படுத்தினாலும் அவனது விஷயத்தில் பகைமைக்கு இடம் கொடுக்க மாட்டான்.*

**சி:** ஞானிகளுக்கு கனவுகள் ஏற்படலாமா**?**

*ஜ: ஏன் ஏற்படக்கூடாது? ஏற்படலாமே. எவ்வாறு விழிப்பு நிலையில் பிரபஞ்சத்தை ‘ஆத்மாவினின்று வேறுபட்ட இருப்பு இதற்குக் கிடையாது’ என்ற எண்ணத்துடன் பார்க்கிறானோ அதேபோல் தான் கனவையும் ‘ஆத்மாவினின்று வேறுபட்ட இருப்பு இதற்குக் கிடையாது’ என்ற எண்ணத்துடன் பார்க்கிறான். வாஸ்தவத்தில் உள்ள நிலைமையைத்தான் நான் உனக்குச் சொன்னேன்.*

**சி:** அனைத்து ஞானிகளுக்கும் ஸித்திகள் இருக்குமா**?**

*ஜ: இல்லை. ஒரு ஞானியின் பிராரப்தம் அவ்வாறிருந்தால் அவனிடம் ஸித்திகளை நாம் காணலாம். ஞானி விரும்பினால் எந்த ஸித்தியை வேண்டுமானாலும் பெறமுடியும். ஆனால் அவற்றிக்கு அவன் ஆசைப்படுவானா என்பது கேள்விக்குரிய விஷயம்.*

**சி:** ஸித்திகள் ஒருவன் அத்யாத்ம வாழ்வில் மேல்நிலை அடைந்ததைக் குறிக்கின்றனவா**?**

*ஜ: இல்லவேயில்லை.*

சி: ஞானியானவன் ஸித்திகளினால் எந்த விஷயத்திலாவது பாதிக்கப் படுகிறானா**?**

ஜ: *ஞானி ஒருவனுக்கு ஸித்திகள் இருந்து, ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில், அவன் அதை ஒரு தார்மிகமான தேவைக்கு பிரயோகம் செய்ய வேண்டி வந்தால், அந்த சித்திகளில் பற்றுதலே இல்லாமல் உலக நன்மைக்காக அவன் அவைகளை உபயோகிக்கலாம். அவன் அப்படிச் செய்வது அவனுடைய வைராக்யத்திற்கோ, ஆத்மாவில் அவன் நிலைபெற்றிருப்பதற்கோ எந்த விதமாகவும் கேடு விளைவிக்காது.*

சி: ஞானியாவதனால் ஏற்படும் சில பயன்கள் யாவை**?**

ஜ: *ஒரு ஞானிக்கு மறுபிறவி கிடையாது. உடலிருக்கும்போதே அவனுக்கு பந்தத்திலிருந்து விடுதலை கிடைக்கிறது. அவன் செய்ய வேண்டியதையெல்லாம் செய்தவனாகிறான். அடைய வேண்டியதை அடைந்தவனாகிறான். அவன் ஆத்மஸ்வரூபமான தன்னையே எங்கும் காண்கிறான். அவன் ஆனந்தத்தால் நிறைந்தவனாகிறான். அவனால் தனது சிஷ்யர்களுக்கு ஞானத்தைக் கொடுத்து, முக்தியையும் கொடுக்க முடியும். ஜீவன்முக்தி நிலைதான் மனிதன் அடைய வேண்டியவனவற்றில் எல்லாம் தலைசிறந்த நிலை. முண்டக உபநிஷத், "காரணம் என்ற வகையில் உயர்ந்தது, காரியம் என்ற வகையில் தாழ்ந்தது என்று இரண்டுமேயான பரம்பொருள் அறியப்பட்டவுடன் இதய முடிச்சுகளானது அறுபடுகிறது. எல்லாச் சந்தேகங்களும் ஒரு முடிவுக்கு வருகின்றன. ஒருவனது கர்மாக்கள் அழிவுறுகின்றன"[1] என்று கூறுகிறது.*

---

[1] *முண்டக உபநிஷத் 2.2.8*

# பகுதி 2

## ஜகத்குருவின் தெளிவுரைகள்

*பகவத்கீதை, உபநிஷத்துக்கள் மற்றும் பிரஹ்ம சூத்திரங்கள் மற்றும் அவற்றிற்கான பாஷ்யங்களைத் தழுவி ஜகத்குரு தமது சொற்பொழிவுகளில் அருளிய விளக்கங்கள் மற்றும் சாஸ்திர விஷயங்களுக்கு அவர் பிரத்தியேகமாக அளித்த விளக்கங்கள் ஆகியன தொகுக்கப்பட்டு இப்பகுதியில் 15 தலைப்புகளில் வழங்கப் பெற்றிருக்கின்றன.*

# *1. எண்பெருங்குணங்கள்*

ஒவ்வொரு மனிதனும் பயில வேண்டிய எட்டு "ஆத்ம குணங்கள்" பற்றிக் கௌதம முனிவர் விவரித்துள்ளார்.[1] இங்கே "ஆத்ம" என்கிற சொல் "தன்" என்ற பொருளில் வருகிறது; அதாவது "ஆத்ம குணங்கள்" என்றால் "தன் குணங்கள்" என்று பொருள். இந்த எட்டு குணங்களும் ஒரு மனிதன் மன அமைதியும் மகிழ்ச்சியும் அடைய வழி செய்கின்றன. இவற்றைக் கடைபிடிப்பதால் மனிதனுக்கு புண்ணியமும் உண்டாகிறது. எனவே இவை இம்மையில் மட்டுமன்றி மறுமையிலும் பயன்தருகின்றன. மேலும் எல்லா மனிதர்களும் இந்த எட்டு குணங்களையும் கடைப்பிடிக்க முயற்சித்தால், இவ்வுலகம் முழுதிலும் மகிழ்ச்சி நிலவும்.

இதில் முதல் குணம், "எல்லா உயிர்களிடத்திலும் கருணை காட்டுதல்". இந்த விஷயத்தில் இறைவனே நமக்கு முன்னோடியாக இருக்கிறான். இறைவன் தனக்காகச் செய்ய வேண்டியது எதுவும் இல்லை என்றாலும் தன் கருணையினால் மற்றும் மனிதனை உயர்த்த வேண்டும் என்கிற ஆசையினால் பல அவதாரங்களை எடுத்திருக்கிறான். எனவே நம்மால் மற்றவருக்கு உதவி செய்ய முடியும் என்கிற நிலையில் உள்ள நாம், அவ்வாறு செய்வதே சரியான முறையாகும். மற்றவரின் துன்பத்தைப் போக்க வேண்டும் என்ற ஆசையே கருணை என்று கூறப்படுகிறது. இக்குணம் சிலருக்கு இயல்பாகவே இருக்கும்; வேறு சிலருக்கு இந்த குணம் கருணை நிரம்பிய சான்றோர்களின் சேர்க்கையால் ஏற்படுகிறது. எந்தக் குணங்களைக் கடைப்பிடித்தால் இறைவனின் அன்பிற்கு ஒருவன் பாத்திரமாகிறான் என்பதை பகவத் கீதையில் கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு உபதேசிக்கிறார். அதில் அவர் முதலில் கூறுவது, உலகத்தில் உள்ள அனைத்து உயிர்கள் மீதும் வெறுப்பின்மை, நட்பு, கருணை என்பன.

துன்பத்திற்கு ஆளானவனிடம் கருணை காட்டுதல் மன அமைதிக்கு வழி வகுக்கும் என்று யோக ஸூத்ரம் கூறுகிறது.[2] இதற்கு மாறாக வெறுப்பு, தற்பெருமை முதலியன மனதைக் கலக்கமடையச் செய்கின்றன. ஆனால் ஒருவன், "நான் ஒரு பொழுதும் துயரத்தை விரும்பவில்லை. அதுபோல் தான் மற்றவரும். அவர்களுடைய துயரும் என் துயரைப் போலவேதான். அதனால் யாரும் துன்பமடைய வேண்டாம்" என்று எண்ணுவதன் மூலம், வெறுப்பும் தற்பெருமையும் தம் வலிமையை இழக்கின்றன, மனமும் அமைதி அடைவதுடன் மனதைக் கெடுக்கும் சினமும் அடங்குகிறது.

அடுத்த குணம், "பொறுமை". தனக்குப் பிடிக்காததைக் கேட்பதனாலோ, வேறொருவனின் செயலால் தனக்கு ஏற்பட்ட இடரினாலோ, மனிதன் பொதுவாகக் கோபம் கொள்கிறான். அப்பொழுது மற்றவர் மீது சினமும்,

பழிவாங்கும் உணர்வும் அவனது மனதினுள் ஏற்படுகின்றன. வலிமை உள்ளவன் திருப்பித்தாக்குகிறான்; வலிமை இல்லாதவன் மறைமுகமாகப் பழிவாங்க முயல்கிறான். இவை இரண்டுமே சான்றோர்க்கு அழகல்ல. துன்பம் ஏற்படுத்தியவனுக்கு எதிராகச் செயல்படும் நிலை இவனுக்கு வாய்த்தாலும், தவறு செய்தவனை மன்னிக்க வேண்டுமேயன்றி, மனதில் வஞ்சம் வைத்துக்கொள்ளக் கூடாது. ‘‘தனது மனவடக்கத்தால், ராமன் மற்றொருவன் தனக்கு இழைத்த பலநூறு தவறுகளையும் மறக்கிறான். ஆனால், ஒருவன் தனக்கு செய்த ஓர் உதவியினாலேயே மனநிறைவு அடைகிறான்’’ [3], என்று ராமாயணத்தில் கூறப்பட்டிருக்கிறது.

பொறுமையின்மை, சினம் இவற்றால் ஒருவனுக்கு எந்தப் பயனுமில்லை. அதற்கு மாறாக, இவைகளால் மனிதன் தன் மன அமைதியையே இழக்கிறான். ஒரு உதாரணம் பார்ப்போம். ஒருவன் மற்றொருவனால் பழிக்கப்படுகிறான், அல்லது இழித்துரைக்கப்படுகிறான் என்று வைத்துக் கொள்வோம். இதனால், இவனுக்குக் கோபம் உண்டாகலாம். அதனால் யாருக்குத் தோல்வி ஏற்படுகிறது? சினம் நன்றியற்ற பிராணி போன்றது. எப்படியென்றால், கோபத்திற்கு இடம் கொடுப்பவனையே அக்கோபம் முற்றிலும் அழித்து விடுகிறது. எனவே, கோபத்துக்கு இடம் தராமல் தன்னால் ஏதாவது தவறு நேர்ந்திருக்குமோ என்று எண்ணிப்பார்க்க வேண்டும். அப்படித் தவறு நேர்ந்திருந்தால், தன்னைத் திருத்திக் கொள்ளலாம். சில சமயங்களில் தான் ஒரு தவறும் செய்யாத பொழுது கூட இழிச்சொல்லிற்கு ஆளாகலாம். அவ்வாறு நடக்கும் பொழுது, ‘‘மற்றவருக்கு மகிழ்ச்சி உண்டாக்குதலும் இறைவனை வழிபடும் முறைகளில் ஒன்று என்று கூறுவர்.[4] அதனால் இவன் என்னைப் பழித்து மகிழ்வதும் என் நல்வினையே. நான் ஒன்றும் செய்யாமலேயே இவனை மகிழ்வித்து இறைவனை வழிபடுகிறேனே. இவன் எனக்குப் பேருதவி செய்திருக்கிறான்’’, என்று எண்ண வேண்டும்.

மூன்றாவதாகக் கூறப்படும் அருங்குணம், ‘‘குற்றம் காணாது இருத்தல்’’. பொதுவாக வாழ்க்கையில் வெற்றி பெறாதவரும், திறமையற்றவரும் திறமையுள்ளவர்கள், செல்வந்தர்கள் அல்லது பிரபலமானவர்களை குறை சொல்வது வழக்கமாக உள்ளது. இதனால் யாருக்கும் எந்த விதமான நன்மையும் இல்லை. இதை நன்றாகக் கவனித்துப் பார்த்தால், நமது குறைகளை மறைப்பதன் பொருட்டே மற்றவரிடத்தில் குற்றம் காண்கிறோம் என்பது தெளிவாகிறது. இது ஒரு கெட்ட குணம்; ஏனென்றால், நாம் மற்றவர்களின் நற்குணங்களைப் பாராட்டிப் போற்ற வேண்டுமேயன்றி அவர்களுடைய நடத்தையில் குற்றம் காண்பதிலோ அவர்கள் எந்த விதத்திலாவது குறை உள்ளதென்று தீர்மானிப்பதோ கூடாது. இதனாலேயே கீதையில் கிருஷ்ணர் ‘‘பிறரைக் குறைசொல்லாத’’

அர்ஜுனனுக்குத் தத்துவத்தை உபதேசிக்க முன்வந்தார்.[5] சங்கரபகவத் பாதரும், "ப்ரபோத ஸுதாகரம்" என்ற நூலில், "பிறரைக் குறை சொல்வதைக் கேட்ட மாத்திரத்திலேயே ஒருவன் பாவம் செய்கிறான்" என்கிறார்.[6] அப்படியுள்ள பொழுது நாமே மற்றவரைக் குறைசொல்வதில் ஈடுபடுவது பெரும்பாவம் என்று சொல்லவும் வேண்டுமோ?

சரி, இந்தக் குணத்தை மாற்றுவது எப்படி? மகிழ்ச்சியுடன் இருப்பவரிடம் ஒருவன் நட்பு பாராட்டுகிறான் என்று வைத்துக் கொள்வோம். அப்போது அவர்களது வெற்றியில் இவனும் மகிழ்வடைகிறான், எப்படி ஒரு தந்தை தனது மகனின் வெற்றியில் மகிழ்வடைகிறானோ, அது போல் ஒருவன் எல்லோரிடமும் நட்புடன் இருந்தால் அவன் எப்பொழுதும் சந்தோஷமாக இருக்கிறான். "சிறிய மனம் கொண்டவர்கள், 'இவன் நம்மவன், அவனல்லன்' என்றும் பெரிய மனம் கொண்டவர்களோ, 'இந்த உலகமே ஒரு குடும்பம்' என்றும் எண்ணுகிறார்கள்"[7] என்று ஒரு சுலோகம் உண்டு. எல்லோரும் எனது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என எண்ணினால், மற்றவரின் வளர்ச்சி இவன் மனதைக் கலக்காது அல்லவா? இன்னும் சொல்லப் போனால், இத்தகைய மனப்பான்மை மனதைக் கலக்கும் பொறாமை முதலியவற்றை அழித்து மனவமைதிக்கு வழி செய்கிறது.

நான்காவது நற்குணம், "தூய்மை". பல நாட்கள் குளிக்காமல், அதே ஆடைகளை அணிந்தவனின் துர்நாற்றம் நம்மை அந்த இடத்தை விட்டு ஓடச்செய்கிறது. ஆனால், துர்நாற்றம் உடையவனோ அதை அறிவதே இல்லை. அவ்வாறே, சிலர் பொது இடங்களில் துப்புவதைப் பழக்கமாக வைத்துள்ளனர். இப்பழக்கங்கள் வெறுப்பை உண்டாக்குவன மட்டுமன்றி சுகாதாரக் கேடு விளைவிப்பவை. ஆகவே, ஒருவன் தினமும் குளித்துச் சுத்தமாக இருக்க வேண்டும். சுத்தமாக இருத்தல் என்பது தூய்மையின் ஒரு முக்கிய அம்சமாகும்.

ஐந்தாவது பெருங்குணம், "சோம்பலின்மை". தம்மிடம் ஒப்படைக்கப் பட்ட பணிகளைச் சரியாகச் செய்யாமல், பலர் அதற்குப் பல விதமான காரணங்களையும் கூறுகின்றனர். சோம்பிக் கிடக்கும் பணியாளனை எந்த முதலாளிதான் விரும்புவார்? இதே போல், படிப்பதைத் தள்ளிப் போடும் மாணவன், கல்வியில் தேர்ச்சி பெறுவதில்லை. இதற்கு மாறாக, ஒருவன் தன் கடமைகளைச் சரியான நேரத்திலும் ஊக்கத்துடனும் செய்தால், அவனது மனம் எண்ணக்கோட்டைகள் கட்டுவதிலோ, தீய வழிகளிலோ செல்வதற்கு வாய்ப்புக் குறையும். அதனால், அனைவரும் சோம்பலைக் கைவிட்டு ஊக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

ஆறாவது பெருங்குணம், "இனிமை". நாம் சிலரைப் பார்க்கிறோம், அவர்களின் முகமும் மலர்வதில்லை, பேச்சும் இனிமையாக இல்லை.

நாம் அப்படி இருக்கக் கூடாது. நம் பேச்சும் செயலும் எப்பொழுதும் இனிமையாக இருக்க வேண்டும். உதாரணத்திற்கு, பெரியவர் ஒருவரைப் பார்த்தால், "இங்கே உட்கார்" என்று சொல்லாமல், அவருக்கு ஓர் இருக்கையை அளித்து அமரும்படி பணிவுடன் கூற வேண்டும். மேலும், நம்முடைய பேச்சில் சொல்லினிமை மட்டும் இருந்தால் போதாது; உண்மையைப் பேச வேண்டும். இதையே மனு, "உண்மையைப் பேசு. செவிக்கினியவற்றைக் கூறு. வருத்தமளிக்கும் உண்மையோ செவிக்கு இனிய பொய்யோ ஒரு பொழுதும் பேசாதே. இதுவே நிலைத்திருக்கும் அறம்"[8], என்று கூறுகிறார். இந்த விஷயத்தை பகவான் அர்ஜுனனுக்கு பகவத்கீதையில் இவ்வாறு கூறியுள்ளார் "துன்பமளிக்காததாகவும், உண்மையானதும், இனிமையானது மற்றும் நற்பயன் தரும் சொல்லும், அறநூல்கள் பயில்வதும் வாக்கினால் இயற்றும் தவம் ஆகும்"[9] என்று உபதேசம் செய்கிறார். இப்படிப்பட்ட சொல் நோன்மை ஒருவனைத் தூய்மையாக்குகிறது.

ஏழாவது நற்குணம், "உலோபமின்மை". செல்வத்தைப் பதுக்கி வைப்பது மற்றும் கொடையாக எதையும் அளிக்காமல் இருப்பது உலோபத்தால் வருவன. கிருஷ்ணர் கீதையில் காமம், குரோதம், உலோபம் ஆகிய மூன்றும் நரகத்தின் மூன்று வாயில்கள் என்று கூறுகிறார். நாம் இறந்த பிறகு, நம் செல்வம் நம்மோடு வரப்போவதில்லை. ஆதலால், செல்வத்தைப் பதுக்கி வைப்பதால் ஒரு பயனும் இல்லை. இதை நீலகண்ட தீக்ஷிதர் நகைச்சுவையாக, "நீ இறந்த பின்னரும் உன்னுடைய செல்வம் உன்னுடன் வர வேண்டும், நீ அதை உன் தலையில் ஒரு மூட்டையாகக் கட்டித் தூக்கிச் செல்ல வேண்டும் என்று விரும்பினால், உன் செல்வத்தைத் தகுந்தவருக்குக் கொடையாகக் கொடு"[10] என்று கற்பிக்கிறார், செல்வம் நம்முடன் மறுபிறப்பில் வராது. ஆனால், ஒரு கஞ்சன் தனது செல்வத்தைத் தானமாக அளித்து அதைப் புண்ணியமாக மாற்றினால், அச்செல்வம் அவன் இறந்த பின்னரும் அவனுடனேயே வரும். தான் இறந்த பின் தன் செல்வம் தன்னை விட்டுப் போய்விடுமோ என்று அவன் பயப்பட வேண்டியது இல்லை. ஏனென்றால், அவன் செய்த புண்ணியம் நிச்சயமாக அவனுடன் அடுத்த உலகிற்கு வரும்.

சாஸ்திரமும் தகுந்தவருக்குத் தானமளிப்பது உலோபத்திற்கு மருந்தாகக் கூறுகிறது. தானம் தருவது மற்றவருக்கு மகிழ்வூட்டுவதோடு, ஒருவனின் ஆன்மிக முன்னேற்றத்திற்கும் துணையாகிறது. தன்னுடைய செல்வத்தை இழந்த ஒருவன் வருத்தப்படுகிறான். ஆனால் அவன் தானாகவே அந்தப் பணத்தைத் தேர்வுக் கட்டணம் செலுத்த இயலாத ஏழை மாணவனுக்குக் கொடையாக அளித்து மகிழ்வடைகிறான். இந்த வகையில் தானம் வாங்குபவன் மட்டுமன்றிக் கொடுப்பவனும் சந்தோஷமடைகிறான்.

எப்படிக் கொடுக்க வேண்டுமென்றால், அது விஷயமாக ஒரு கதை சொல்வதுண்டு. சாமியார் ஒருவர் ஓர் ஏழை மனிதனிடம், "நீ தினமும் யாருக்காவது ஒரு காயைத் தானமாகக் கொடு. அதனால் உனக்குப் பெரும் புண்ணியம் உண்டாகும்" என்றாராம். அந்த ஏழையும் அவர் சொல்லியவாறே செய்து வந்தான். அவன் இறந்த பிறகு அவன் செய்த புண்ணியத்தின் பயனாக அரச வம்சத்தில் பிறந்து காலப்போக்கில் அரசனும் ஆனான். முன் ஜன்மத்தில் செய்து வந்த தானம் அவனுக்கு எப்படியோ நினைவிருந்ததால், அவன் தினமும் ஒரு காயைத் தானமாக அளித்து வந்தான். அரசனின் ஆயுட்காலம் முடிந்தவுடன் அவன் ஒரு பிச்சைக்காரனாகப் பிறந்தான்.

தன் நிலைமையை நொந்து இருந்தவன் ஒரு நாள், முன்னர் அவனுக்கு உபதேசம் செய்த அதே சாமியாரைப் பார்த்தான். அவரைப் பார்த்து, "எனக்கு ஏன் இந்த கதி ஏற்பட்டது?" என்று கேட்டான். அதற்கு அவர், "நீ அரசனாகப் பிறப்பதற்கு முன் ஓர் ஏழையாக இருந்தாய். அப்போது நீ தினமும் ஒரு காயைத் தானமாக அளித்துப் பெரும் புண்ணியம் சம்பாதித்தாய்; அரசனாகவும் பிறந்தாய். ஆனால், அரசனான பின்னும், ஒரு காயை மட்டுமே தானமாக அளித்ததால், நீ அவ்வளவு புண்ணியம் சம்பாதிக்கவில்லை. எனவேதான் பிச்சைக்காரனாகப் பிறந்திருக்கிறாய்" என்றார். அவரவர் தகுதிக்கேற்ற தானம் செய்தால் தான் புண்ணியம் உண்டாகும் என்ற உண்மை அவனுக்கு அவர் சொன்னதைக் கேட்ட பின் புரிந்தது.

இறுதியாக எட்டாவது குணம் "பற்றின்மை". உலக விஷயங்களில் நாம் வைத்திருக்கும் பற்றுதான் நமக்கு இடர்ப்பாடுகள் ஏற்படக் காரணம். பஞ்சதசீ கூறுகிறது, "பற்றுள்ளவன் உலகத்தில் மாட்டிக் கொள்கிறான். பற்றற்றவனோ மகிழ்ச்சியாக இருக்கிறான். ஆகவே, இன்பம் வேண்டும் என்று நினைப்பவன் பற்றற்றிருக்க வேண்டும்"[11] என்று உபதேசிக்கிறது. பற்றில்லாமல் ஒருவன் தன் கடமைகளைச் சரிவரச் செய்ய முடியுமா என்று கேட்டால், "நிச்சயமாக முடியும்" என்பதே பதிலாகும். இன்னும் சொல்லப் போனால், பற்றுள்ளவனால் ஒரு செயலைச் சரியாகச் செய்ய முடியாது. இதனால் தான் பெரும்பாலான சமயங்களில் அறுவைசிகிச்சை நிபுணர்கள் தம் சுற்றத்தாருக்குச் சிகிச்சை செய்வதில்லை. பற்றுள்ளவன் ஒரு செயலைச் சரியாகவும் நேர்த்தியாகவும் செய்ய முடியும் என்றால் இவ்வாறு இருக்காதல்லவா?

# 2. பக்தியின் மூன்று நிலைகள்

"அத்வைத ஸித்தி" என்ற பிரபலமான நூலை எழுதிய மதுஸூதன ஸரஸ்வதி சிறந்த கிருஷ்ண பக்தர். அவர் பழுத்த அத்வைதியானாலும், கிருஷ்ணர் மீது மனதை நெகிழ்த்தும் ஸ்துதிகளை இயற்றியுள்ளார். ஓரிடத்தில் பக்தியைப் பற்றிப் பேசும் பொழுது அவர் பக்தியின் மூன்று நிலைகளை விவரிக்கிறார். அவற்றை இப்போது பார்ப்போம்.

முதல் நிலையில் பக்தன் இறைவனை "நான் உன்னுடையவன்" என்று பாவிக்கிறான். அதாவது, தன்னையே இறைவனிடம் அர்ப்பணிக்கிறான். உண்மையான பக்தனிடம் உள்ள ஒரு விசேஷமான என்னவென்றால், தான் இறைவனுக்குச் செய்யும் சேவைக்கும் இறைவன் விஷயத்தில் தனக்குள்ள அன்பிற்கும் அவன் எந்த ஒரு பிரதிபலனையும் எதிர்நோக்க மாட்டான்.

இது விஷயமாகப் புராணக் கதை ஒன்று மனதிற்கு வருகிறது. "பகவான் எல்லா இடங்களிலும் நிறைந்திருக்கிறான்" என்று கூறிய பிரகலாதனின் வாக்கை மெய்ப்பிப்பதற்கும், இரண்யகசிபு சுட்டிக்காட்டிய தூணிலும் இருப்பதைக் காட்டுவதற்கும், நரசிம்மரூபத்தில் இறைவன் தூணிலிருந்து வெளிவந்தார். இரணியனைக் கொன்ற பின்னும் அவர் சினம் குறையாது மிகுந்த சினத்துடன் இருந்தார். அதனால், இறைவனின் துணைவியான லக்ஷ்மியும், வானோர் பிறரும் அவரை நெருங்கவே அஞ்சினர். அவர்கள் சிறுவனான பிரகலாதனை இறைவனின் கோபத்தைத் தணிக்குமாறு கேட்டுக் கொண்டனர். பிரகலாதனும் அதற்கு ஒப்புக்கொண்டு சிறிதும் அச்சமின்றிச் சினமே வடிவான நரசிம்மரின் அருகில் சென்று பாதங்களில் நெடுஞ்சாண்கிடையாக வீழ்ந்து வணங்கினான். அவனைப் பார்த்தவுடன் நரசிம்மரின் கோபம் தணிந்தது. தான் வீற்றிருந்த அரியணையிலிருந்து எழுந்து பிரகலாதனின் தலையில் மிகுந்த கருணையுடன் தம் கரத்தை வைத்தார். சிறுவன் பிரகலாதனின் பக்தியால் திருப்தியடைந்த நரசிம்மர், அவனை வரம் கேட்குமாறு பணித்தார். அதற்குப் பிரகலாதன் சிறிதும் யோசனை செய்யாமல், தான் இறைவனிடமிருந்து வேண்டுவது எதுவும் இல்லை என்றான். இதைப் பற்றி பாகவத புராணத்தில் ஓர் அருமையான சுலோகம் வருகிறது. அதில் பிரகலாதன் நரசிம்மரை நோக்கி இவ்வாறு கூறுகிறான் "இறைவனிடமிருந்து ஏதாவது ஒன்றைப் பெற விரும்புபவன் வணிகன்; இறைவனின் அடியவனல்லன்."[12]

இந்தக் கதையினால் நாம் இரண்டு விஷயங்கள் தெரிந்து கொள்கிறோம். ஒன்று, உண்மையான பக்தனுக்கு இறைவனன்றி வேறு புகலிடம் இல்லை. அதனாலேயே நரசிம்மரிடம் செல்வதற்குப் பிரகலாதன் சிறிதும் அஞ்சவில்லை. இரண்டாவது, உண்மையான பக்தன் இறைவனிடம்

எதையும் வேண்டிப்பெறுவதில்லை. சொல்லப்போனால், அவன் மோக்ஷம் வேண்டிக்கூடப் பிரார்திப்பதில்லை.

சிவானந்தலஹரீயில் சங்கரர் ஒரு சுலோகத்தில், "இந்த இழிவான உலக வாழ்விலிருந்து என்னை ஏன் விடுவிக்க மறுக்கிறாய்? நான் இந்த உலகில் துயரப்படுவது உனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது என்பதே உன் விடையானால், நான் அடைய வேண்டியதை அடைந்து விட்டேன். இறைவன் சந்தோஷம் அடைந்துவிட்டான் எனில் மேலும் விரும்புவதற்கு என்ன இருக்கிறது?"[13] என்று இறைவனைப் பார்த்துப் பாடுகிறார். இவ்வாறு பக்தன் இறைவனிடத்தில் "நான் உன்னுடையவன்" என்று பாவிப்பது பக்தியின் முதல் நிலை.

இரண்டாவது நிலை, "இறைவன் என்னுடையவன்" என்று பாவிப்பது. இந்நிலையில் பக்தன் கடவுளின் நலத்திலேயே கண்ணும் கருத்துமாய் இருக்கிறான். பக்தன் தன்னை இவ்வாறு பேணுவது இறைவனுக்குச் சற்றும் அவசியம் இல்லை தான். இருப்பினும், இறைவன் பக்தனின் அன்பிற்குக் கட்டுப்படுகிறான். இதை இறைவனே பாகவத புராணத்தில், "ஒருவன் மற்றொருவனுக்குக் கட்டுப்படுவது போல் நானும் எனது பக்தனிடம் பணிகிறேன்"[14] என்று கூறுகிறார். இம்மாதிரியான பக்திக்கு உதாரணம் யசோதை கிருஷ்ணனிடம் காட்டிய அன்பு. அவளைப் பொறுத்தவரையில், கிருஷ்ணன் அவளது செல்லக் குழந்தை, இறைவன் அல்ல. தான் பரம்பொருள் என்பதை யசோதையின் கண்களுக்குக் கிருஷ்ணர் மறைத்துவிட்டார் என்றே சொல்லலாம். யசோதை காட்டிய அன்பில் இறைவனுக்கு அவ்வளவு பிரியம் இருந்தது போலும்! சர்வ வல்லமை பொருந்தியவராக இருந்தாலும், யசோதை தன்னை ஓர் உரலில் கட்டுவதற்கும் கிருஷ்ணர் அனுமதித்தார்.

பக்தியின் மூன்றாவது நிலை, "நானே அவன்" என்று உணர்வது. அதாவது, அத்வைத ஞானமே பக்தியின் முதிர்ந்த நிலை. அது எப்படி என்றால், மற்றவர்கள் இறைவனை விட்டுச் சிறிது நேரமாவது பிரிய உடன்படுவர். ஆனால், பக்தியின் மூன்றாவது நிலையில் இருப்பவனோ இறைவன் தன்னை விட்டு ஒரு கணம் பிரிவதற்குக் கூட உடன்பட மாட்டான். பிரிவு எப்பொழுது முழுவதுமாக அழியும்? நானே அந்தப் பரம்பொருள் என்று ஒருவன் உணரும்போதே பிரிவுணர்ச்சி முற்றிலும் நீங்குகிறது. இந்தக் கருத்தை வலியுறுத்தியே பகவத் கீதையில் கிருஷ்ணர், பரம்பொருளை அறிந்த ஞானிக்கும் தனக்கும் எந்த வேறுபாடும் இல்லை என்று கூறுகிறார்.[15]

# 3. சரணடை, அருள் பெறு

கருணைக் கடலாய் விளங்கும் இறைவனிடம் அடியார் ஒருவர் "நான் செய்த இரண்டு பெரும்பாவங்களைப் பொறுத்து அருள்வாய்" என்று வேண்டினார்.[16] அவ்விரண்டு பாவங்கள் யாவை? பதிலையும் அந்த அடியவரே கூறுகிறார். முதல் பாவம் தன் முற்பிறவிகளில் இறைவனை வணங்காமல் இருந்தது. இது பெரிய பாவம் தான். ஆனால் தான் எப்பிறவியிலும் கடவுளை வணங்கவில்லை என்பது இவருக்கு எப்படித் தெரியும்? இதற்கு விடை எளிது என்கிறார் அந்த அடியார். இறைவனை வணங்கினால் பிறவிச் சக்கரத்திலிருந்து விடுபடலாம். ஆகவே, இவர் ஏதாவது ஒரு பிறவியில் இறைவனை வணங்கியிருந்தால் இப்பொழுது மறுபடி பிறந்திருக்க மாட்டார். இப்பொழுது தான் பிறந்திருப்பதால் அவர் இறைவனை முன்னர் வணங்கவில்லை என்று தெரிகிறது.

சரி, இரண்டாவது பாவம் என்ன என்று கேட்டால், இந்தப் பிறவியில் இறைவனை வணங்குவது தான். ஏன், அப்படி? இப்போது இறைவனை வணங்குவதால், இவருக்கு மறுபிறவி இல்லை. அப்படியென்றால் இவர் பின்னர் இறைவனை வணங்க முடியாதல்லவா? இவ்வாறு இனிமேலும் இறைவனை வணங்க முடியாத நிலைமையைச் சம்பாதித்ததே தனது இரண்டாவது பாவமாம்! இந்த இரண்டு பாவங்களையும் இறைவன் பொறுக்கட்டும் என்பதே இந்த அடியாரின் பிரார்த்தனை.

பகவானுக்கு நாம் செய்யும் நமஸ்காரம் எவ்வளவு முக்கியம் என்பதையே இந்தப் பிரார்த்தனை நமக்கு எடுத்துக் கூறுகிறது. நம்முள் பலரும் இறைவனைத் தினமும் வணங்குகிறோம். ஆனால் அவ்வாறு செய்யும் போது, அதையும் நாம் செய்யும் மற்ற செயல்களைப் போல் சாதாரணமாகச் செய்கிறோம். இது சரியல்ல. "இறைவனை வணங்க நமக்குக் கிட்டியிருக்கிற வாய்ப்பு விலைமதிப்பற்றது. இந்த வாய்ப்பு கிடைத்ததே இறைவன் அருளால் தான்" எனச்சிந்திக்க வேண்டும். நாம் நம்முடைய தாய் வயிற்றில் கருவாய்ச் செயலற்றுக் கிடந்த நேரம் முதல் நம்மைக் காப்பாற்றியவர் இறைவனே. அப்படிப்பட்டவரை முழுமனதுடன் நமஸ்கரிப்பது தான் நாம் அவருக்கு செலுத்தும் நன்றிக்கடன்.

சற்று சிந்தித்தால் நம் வாழ்க்கைக்கும் ஒரு விலங்கின் வாழ்க்கைக்கும் பெரிய வித்தியாசம் ஒன்றும் இல்லை என்பது தெளிவாகிவிடும். அப்படியிருக்கும்போது இறைவன் நம்மை எப்படி ஏற்றுக்கொள்வார்? வாழ்வில் பாதி நேரம் பொருள் சேர்ப்பதில் செலவாகிறது. மற்ற நேரத்தில் பெரும்பங்கு தூக்கத்தில் கழிகிறது. இறைவனிடம் உறுதியான அன்பு செலுத்தாமல் ஆன்மிக வாழ்க்கையில் நாட்டம் இல்லாமல் இருந்தோம் என்றால் நமக்கும் விலங்கிற்கும் என்ன வித்தியாசம்

இருக்கும்? “சிவ புஜங்கம்”[17] என்ற ஸ்தோத்திரத்தில் சங்கர பகவத்பாதர் இந்தக் கேள்வியை எழுப்பி இறைவனிடம், “நான் ஒரு விலங்கைப் போல் இருந்தாலும் நீ என்னை ஏற்றுக் கொள்” என்று வேண்டுகிறார். அது எப்படி முடியும் என்றால், நந்தி என்ற காளையைச் சிவபெருமான் தன் வாகனமாக வைத்துக் கொள்ளவில்லையா? அது போல் இன்னொரு விலங்கையும் தனதாக்கித் தன்னுடன் வைத்துக் கொள்ளட்டுமே! இப்படி ஒரு காளையைத் தனதாக்கிக் கொண்ட இறைவன், தன்னுடைய பக்தன் ஒரு விலங்குபோல் இருக்கிறான் என எப்படி அவர் குறை கூறமுடியும்?

சரி, இவன் விலங்கு போலிருக்கிறான். அது ஒரு பக்கம் இருக்கட்டும். அதைத் தவிர பாவம் வேறு செய்கிறான். அப்போது இறைவன் அவனை ஏற்றுக்கொள்வாரா? அப்படியிருப்பினும் இறைவன் தன் பக்தனை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று இந்த ஸ்தோத்திரத்தில் சங்கரர் சிவனிடம் கூறுகிறார். அது எப்படி நடக்கும் என்று கேட்டால், சிவன் தன் தலையில் சந்திரனைச் சூடியுள்ளார். சந்திரன் எப்படிப்பட்டவன்? “என் துணைவியர் எல்லோரையும் சமமாகப் பார்ப்பேன்” என்று உறுதியளித்த பின் அதை மீறி நடந்து கொண்டவன்; தன் குருவின் பத்தினியுடன் முறை தவறி நடந்து கொண்டவன். இப்பேற்பட்ட பாவச் செயல்களைச் செய்தவனைத் தன் தலையில் தூக்கி வைத்துக்கொண்ட சிவன், தன் பக்தன் ஒருவன் செய்த குற்றங்களின் பொருட்டு அவனை ஏற்றுக்கொள்ள மறுக்கலாமா?

இறைவன் விலங்குபோல் இருப்பவனையும் பாவியையும் ஏற்றுக் கொள்பவனாகவே இருக்கட்டும். பக்தன் இரட்டை வேடம் போடுபவனாக இருந்தால் என்ன ஆகும்? குறைந்தபட்சம் பக்தன் கபடமற்றவனாக இருக்க வேண்டாமா? இதையும் சங்கரர் மறுத்துச் சிவனிடம், “இரட்டை வேடம் போடுபவரை ஒதுக்குவாய் என்றால், இரட்டை நாக்குடைய (அதாவது, பிளவுபட்ட நாக்குடைய) பாம்பை எப்படி உன் அணிகலனாக வைத்திருக்கிறாய்? பாம்பை ஏற்றுக்கொண்டவன் என்னை ஏற்றுக் கொள்ளக் கூடாதா?” என்று கூறுகிறார்.

இந்த ஸ்தோத்திரத்தில் சங்கரர் சிவனிடம் என்ன நினைவுபடுத்துகிறார் என்றால், ஒருவன் எப்பேற்பட்டவனாக இருந்தாலும், இறைவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டால் அவன் புனிதமாகிறான் என்பதே. கடவுளின் கருணைக்கு அளவேயில்லை. எனவே நம்மிடம் எவ்வளவு குற்றம் குறையிருந்தாலும் நாம் நம்மை அவனிடம் அர்ப்பணித்தால், அவன் நம்மை ஏற்றுக் கொள்வான். இதுவே ஸ்தோத்திரத்தின் உட்கருத்து. இதனை மனதில் வைத்துக்கொண்டு நாம் இறைவனை நமஸ்கரித்து அவனிடம் சரணடைய வேண்டும். நடக்க வேண்டியவை அனைத்தையும் அவன் பார்த்துக் கொள்வான்.

# 4. பக்தியெனும் அமுதம்

*பிறரிடம் அன்பு செலுத்துவது என்பது, நம் எல்லோர்க்கும் இயல்பாகவே உள்ளது. நம் அன்பிற்கு ஒரு பாத்திரம் உண்டு. அந்தப் பாத்திரம் இறைவனாக இருந்தால், அந்த அன்பைப் பக்தி என்கிறோம். பக்திக்குப் பொருள் கூற வந்த நாரதர், "பக்தி என்பது இறைவன் மீதான பேரன்பு" என்கிறார்.[18] இறைவனிடம் அம்மாதிரியான அன்பு செலுத்துகிறவன், எதற்கும் ஆசைப்படாமல் எப்பொழுதும் திருப்தியுடனும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறான். மனைவி, செல்வம் போன்றவற்றில் வைக்கப்படும் பற்றும் அன்பும் பந்தத்தை மட்டுமே விளைவிக்கிறது. ஆனால் இறைவன் மேல் செலுத்தப்படும் அன்பு நம்மைப் பந்தத்திலிருந்து விடுவிக்கிறது. "இது எனக்கு இன்பம் தருகிறது" என்று நம்மால் அனுபவிக்கப்படும் எந்தப் பொருளுமே நமக்கு எப்பொழுதும் இன்பம் தருவதில்லை. அப்பொருள் சில சமயங்களில் நமக்கு மகிழ்ச்சியை உண்டாக்குகிறது, ஆனால் வேறு சமயங்களிலோ துன்பத்தைத் தருகிறது. மேலும் அந்தப் பொருள் எந்த நேரத்திலும் நமக்குக் கிடைக்கும் என்று கூறவும் முடியாது. அதிலுள்ள குற்றங்குறைகள் பல. இதற்கு நேர்மாறாக இறைவன் எப்பொழுதுமே நம் மனதைக்கவர்கிறவன், எப்பொழுதும் நம்மிடையே உள்ளவன், எந்தக் குறைபாடும் இல்லாதவன். மேலும் அவன் எல்லா நற்குணங்களுக்கும் உறைவிடமாக இருப்பவன். அப்பேற்பட்ட இறைவனைக் காட்டிலும் நம் அன்பிற்கு உரியவர் யாருளர்? இறைவனின் மேன்மை எத்தகையது என்றால், தம்மால் இனிமேல் செய்ய வேண்டியது ஒன்றுமில்லை என்ற நிலையை அடைந்த, மெய்ப்பொருளை உணர்ந்த ஞானிகளும் அவனை நினைத்த மாத்திரத்தில் பரவசமடைகின்றனர்.*

*இறைவன் உருவமற்றவனானாலும் கருணையே வடிவான அவன் தனது அடியார்களுக்கு அருள் புரியவும், மனிதர்கள் தன்னை எளிதில் தியானம் செய்வதற்காகவும் பல வடிவங்களில் காட்சி தருகிறான். சாஸ்திரங்களும் இறைவனின் பலவிதமான வியத்தகு வடிவங்களைப்பற்றிக் கூறுகின்றன. உதாரணமாக, மார்க்கண்டேய புராணத்தில் வரும் "தேவீ மாஹாத்மியம்" என்ற துதியில், "நீ வசீகரமானவள், அழகான எல்லாவற்றினும் அழகு மிக்கவள், பேரழகி. உயர்ந்தவை எல்லாவற்றிலும் நீயே உயர்ந்தவள். நீயே பெரும் இறைவி"[19] என்று வருகிறது.*

*தேவியின் பக்தன் ஒருவன், "தேவி! உன் அடிமையான என் மீது கருணை மிக்க உன் கடைக்கண் பார்வை விழட்டும்" என்று துதிக்க விரும்பினானாம். எனவே, அவன் தன் துதியை, "பவானி! த்வம்" என்ற இருசொற்களுடன் துவக்கினான். தேவிக்குத் தன் பக்தனின் விருப்பத்தை நிறைவேற்றுவதில் இருந்த அவசரத்தில் "த்வம்" என அவன் நிறுத்தியது*

அடுத்து வரப்போகும் சொல்லிற்கு முன்னால் வரும் இடைவெளி என்பது புரியவில்லை. இவன் விருப்பத்தைத் தெரிவித்துவிட்டான் என நினைத்து அந்தப் பக்தனுக்குப் ‘‘பவானித்வம்’’ அதாவது பவானியின் தன்மையை அளித்து தன்னுடன் ஒன்று சேர்த்துக் கொண்டாள். ‘‘ஸௌந்தர்யலஹரீ’’[20] என்ற ஸ்தோத்திரத்தில் இதை நாம் காணலாம்.

இறைவன் எல்லோரிடத்திலும் கருணை காட்டுகிறான். இதை விளக்கும் கதைகள் பலவுண்டு. உதாரணமாக, அதில் ஒரு கதையைப் பார்ப்போம். ராமாயணத்தில் விபீஷணன் ராமனிடம் சரணடையும்போது விபீஷணனின் நோக்கம் குறித்து சுக்ரீவன் ஐயமுறுகிறான். அதற்கு ராமன், ‘‘எவன் என்னிடத்தில் ஒரே ஒரு முறை ‘நான் உன்னுடையவன்’ என்று சரணம் அடைகிறானோ, அவனுக்கு நான் அபயம் அளிக்கிறேன்’’[21] என்று சொல்கிறான். உண்மையான பக்தன் தன் உடலையும் மனதையும் இறைவனிடம் அர்ப்பணித்து எல்லாவற்றையும் இறைவனின் கைகளில் ஒப்படைத்துவிடுகிறான். அதனால் அவன் எதன் பொருட்டும் கவலைப்பட வேண்டியதில்லை. தன்னிடம் அடைக்கலம் அடைந்த பக்தர்களின் அன்பிற்கு வசப்பட்ட கிருஷ்ணர் உத்தவரிடம் இவ்வாறு கூறுகிறார், ‘‘எதற்கும் ஆசைப்படாதவனும், எவரிடத்திலும் வெறுப்பில்லாதவனும், சாந்தமானவனுமான முனியின் கால் தூசியினால் என்னைத் தூய்மை படுத்திக் கொள்வதன் பொருட்டு நான் அவனைப் பின் தொடர்கிறேன்.’’[22] பிரபஞ்சத்திற்கே முழு அதிபதியான இறைவனே இப்படிக் கூறுவது நம்மை வியப்பில் ஆழ்த்துகிறதல்லவா?

சரி, உண்மையான பக்தன் இறைவனால் காக்கப்படுகிறான் என்று சொன்னோம். அப்போது அவனுக்கு எவ்வித இடர்பாடும் வரக்கூடாது என்றால், அப்படியில்லை. பகவான் கருணை மிக்கவன் மட்டுமல்லாது நடுநிலை தவறாதவனும் கூட. முந்தைய பிறவிகளில் பெரும் பாவங்கள் செய்த ஒருவனுக்குத் துன்பம் என்கிற தண்டனையை அளிக்காமல் விடுவது எந்த விதத்திலும் நியாயமாகாது. அது நீதிக்குப் புறம்பானதும் கூட. ‘‘கருணை காட்டுகிறேன்’’ என்று சொல்லி, ஒரு நீதிபதி கொலை செய்தவர்களை விடுவிக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவரால் சமூகத்திற்குப் பெரிய தவறன்றோ நேர்கிறது? ஆனால் சந்தர்ப்ப சூழ்நிலையை முன்னிட்டோ, குற்றம் செய்தவன் தன் தவறை உணர்ந்து வருந்துகிறான் என்ற காரணங்களினாலோ ஒரு நீதிபதி குற்றவாளியின் தண்டனையைக் குறைக்கலாம். அதுபோல நீதியின் வடிவான இறைவன் தன் பக்தனுக்கும் தண்டனை அளிக்கிறான். ஆனால் தண்டனையை எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவு குறைக்கவும் செய்கிறான். குழந்தையைக் கண்டிக்கிறாள் என்பதனால் ஒரு தாய்க்குத் தன் குழந்தையிடம் அன்பு இல்லை என்று ஆகிவிடுமா?

இறைவன் எல்லாமறிந்தவன், சர்வ வல்லமை உடையவன், எங்கும் நிறைந்தவன், கருணைக்கடல். அதனால் அவனுக்குத் தெரியாத ஒன்றைப் பக்தன் அவனிடம் தெரிவிக்கப் போவதில்லை. மேலும், ஒரு பக்தன் இறைவனிடம், ''எனக்கு இது வேண்டும், அது வேண்டும்'' என்று கூறினால் அவனுக்கு இறைவனின் அருட் கொடையில் முழு நம்பிக்கை இருக்கிறது என்று எவ்வாறு சொல்ல முடியும்? முழு நம்பிக்கை இல்லாத போது கூட இறைவனிடம் ஒன்றும் கேட்காதிருப்பதே சரி. இறைவன் நினைப்பது தவறாது நடக்கும் என்பது நிச்சயம். அதே போல், பெரும்பாலான மனிதர்களுக்குத் தாம் விரும்பியது கிடைத்தவுடன் மகிழ்ச்சியும், கிடைக்காவிட்டால் வருத்தமும் ஏற்படுவது எல்லோரும் அறிந்ததே. எனவே, ஒருவன் தன் மனதை இறைவனின் சங்கல்பத்திற்கு அடிபணிய வைத்தால் அவனுக்கு எவ்வித வருத்தமும் ஏற்பட வாய்ப்பில்லை. பக்தன் ஒருவனுக்குத் துன்பம் நேர்கிறது என்று வைத்துக் கொள்வோம். இதுவும் தனது நன்மைக்காக இறைவன் கொடுத்தது என்ற மனப்பாங்கு இவனுக்கு இருந்தால் துன்பம் நேரும் வேளையில் வருந்தி அழுது புரள மாட்டானல்லவா? தவிரவும், துயரம் மேலிட்டு அரற்றுதலால் எந்தப் பயனும் இல்லை. அவ்வாறு செய்வது துன்பத்தை அதிகமாக்குமே தவிரக் குறைப்பதில்லை.

பக்தி நெறிக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. அது என்னவென்றால், அந்த வழியில் சிறிது தூரம் சென்றவுடனேயே பக்தனுக்கு மன அமைதியும் மகிழ்ச்சியும் ஏற்படுகின்றன. இவ்வழியில் செல்வதற்கு ஒருவனின் கூரறிவு, ஆழ்ந்த புலமை, திறமை, வயது, வலிமை, சமூக அந்தஸ்து, பதவி, செல்வம் ஆகிய இவை எதுவும் முக்கியமில்லை. இறைவன் எல்லோரது மனதையும் கவர்பவன். ஆதலால் அவனிடம் அன்பு செலுத்துவது எல்லோராலும் செய்யக்கூடிய ஒன்று தான். ஒரு மனிதன் மற்றொரு மனிதனுடன் பழகுவதாலும் அவனைப் பற்றி உயர்வாக எண்ணுவதாலும் அன்பு ஏற்படுகிறது. அதே போல், இறைவனின் பெருமையைப் பற்றி இடைவிடாது சிந்தித்தல் அவனிடத்தில் பக்தியை உண்டாக்குகிறது.

இறைவனைப் பற்றிச் சிந்தித்தல் எளிதான ஒன்று தான். அவனுடைய திருநாமங்களை மனதில் ஜபிப்பதாலும், எல்லாச் செயல்களையும் அவனுக்கே அர்ப்பணம் செய்வதாலும் இறைவனின் நினைவு நமக்கு எப்பொழுதும் இருக்கும். சிறந்த பக்தர்களின் சகவாசம் நம் பக்தி வளர உதவிபுரிகிறது. ஏனெனில், அவர்கள் இறைவனிடம் சரணடைந்த மனதை உடையவர்கள். அவர்கள் மனதில் நிலவும் அமைதி நம்மையும் உயர்விக்கும். தீயோர்களின் சகவாசத்தினால் அதற்கு நேரெதிர் விளைவு ஏற்பட்டு மனம் இறைவனிடம் செல்லாமல் புறப்பொருட்களை நாடுகிறது.

ஒருவன் முதன் முறையாகத் தன் மனதை இறைவனிடம் நிலைநிறுத்த முற்படும் போது, மனம் அவனுடன் ஒத்துழைக்காமல் இருக்கலாம்; மனம் அமைதியும் மகிழ்ச்சியுமற்று இருக்கலாம். அதனால் அவன் மனம் தளர வேண்டியதில்லை. மனம் செய்யும் கூத்தை இறைவனிடம் சொல்லித் தான் படும் கஷ்டத்தையே அவன் தனக்குச் சாதகமாக்கிக் கொள்ளலாம். இறைவனிடம், “என் மனம் உன்னைத் தியானிக்க எப்படி மறுக்கிறது பார்த்தாயா?” என்று முறையிடலாம். இப்படி இறைவனுடன் பேசுவதும் அவனைச் சிந்திக்கும் வகைகளுள் ஒன்றாகும்.

ஒருவன் சிறிது நேரம் தன் மனதைக் கடவுளின் பக்கம் திருப்பினாலே அவன் மனம் நிம்மதி அடைகிறது. ஏனெனில், அவன் இறைவனைப் பற்றிச் சிந்திக்கும் போது எவ்விதக் கவலையுமற்றுத் தாயின் கைகளில் இருக்கும் குழந்தை போல் இருக்கிறான். இதே மன அமைதியும் மகிழ்ச்சியும் உயர்ந்த பக்தர்களிடையே இருக்கும் போதும் ஏற்படுகிறது. பக்தி நெறியில் காலடி எடுத்து வைக்கும் ஒருவனுக்கு இந்த அமைதியும் மகிழ்ச்சியும் இறைவனை மேற்கொண்டு தியானிக்க உதவும் ஊன்று கோல்களாக இருக்கின்றன. ஆனால் துவக்கத்தில் மனம் இறைவனைப் பற்றித் தொடர்ந்து சிந்திக்காமல் உலக விஷயங்களிலேயே ஈடுபடும் அபாயம் இருக்கிறது. இதை உணர்ந்து அம்மாதிரியான போக்கிற்கு இடம் கொடுக்காமல், மனதை அடிக்கடி இறைவன் பக்கம் திருப்ப முயற்சிக்க வேண்டும்.

சங்கரபகவத்பாதர் பக்தியின் பரிணாமத்தைப் பற்றி “சிவானந்தலஹரீ” என்ற நூலில் ஒரு சுலோகத்தில் பாடியுள்ளார்.[23] பக்தியின் முதல் நிலையில், பக்தன் எப்படியோ இறைவனிடம் வருகிறான்; இதற்கு உதாரணமாகச் சங்கரர் அழிஞ்சில் (அங்கோலம்) மரத்தின் விதையைக் காட்டுகிறார். அழிஞ்சில் விதை மரத்தின் பக்கவாட்டில் விழுந்து அடிமரத்தில் ஊன்றி வளர்கிறது. அது போல் இறைவனிடம் வந்த பக்தன் அவனுடன் ஒட்டிக் கொள்கிறான் என்கிறார். இதன் பின்னர், பக்தன் இறையருளின் விளைவுகளை மிகத் தெளிவாக உணர்கிறான். காந்தம் ஒன்று எப்படி ஊசியைத் தன் பக்கம் ஈர்க்கிறதோ அதுபோல் இறைவனும் பக்தனைத் தன்னிடம் ஈர்க்கிறான். மூன்றாவது நிலையில் பக்தனும் இறைவனும் கற்பிற் சிறந்த மனைவியும் கணவனும் போல் ஒருவரோடு ஒருவர் இணைந்திருக்கின்றனர். இவர்களுக்கிடையே உள்ள அன்பு பரஸ்பரமானது. இந்த விதமான அன்பு முற்றி நான்காவது நிலைக்குச் செல்கிறது. இந்நிலையில் மரத்தைச் சுற்றிப்படரும் கொடி மரத்திற்கு அழகு சேர்ப்பது போல பக்தனும் இறைவனின் மகிமைக்கு மெருகூட்டுவது போல விளங்குகிறான், பிரகலாதன் போன்ற அடியார்கள் இறைவனுக்கே அணிகலன்களாகத் திகழ்கின்றனர். கடைசியாக, ஓடும்

ஆறு கடலுடன் சேர்வது போல் பக்தன் இறைவனுடன் ஒன்றிவிடுகிறான். இதுவே பக்தியின் உச்ச நிலை.

இறைவனே தன்னிடம் எப்படி அன்பு செலுத்த வேண்டும் என்பதை மிகக் கருணையுடன் உபதேசித்துள்ளார்.[24] இந்த உபதேசத்தை அவர் பக்தனின் தகுதிக்கேற்ப அமைத்துள்ளார். இந்தப் பிரபஞ்சத்தில் இறைவனை விட வேறு பொருள் ஒன்றும் இல்லை. எனவே பக்தியில் முதிர்ந்தவன் தன் மனதையும் புத்தியையும் இறைவனில் நிலைபெறச் செய்யவேண்டும். அதாவது விராட் புருஷனாக இறைவனைத் தியானிக்க வேண்டும். பிரபஞ்சத்தில் இருக்கும் அனைத்தையும் இறைவனின் சரீரமாகப் பார்க்க வேண்டும். இப்படிச் செய்ய முடியாதவன் இடைவிடாது ஏதாவது ஒரு குறிப்பிட்ட உருவத்தில் இறைவனைத் தியானிக்க வேண்டும் என்று கிருஷ்ணர் உபதேசிக்கிறார். இப்படி தியானம் செய்ய முடியாதவன் இறைவனின் துதி, பூஜை, இறைவனின் மேன்மைகளைக் கேட்டல், முதலியவற்றில் ஈடுபட வேண்டும். இதுவும் செய்ய இயலவில்லை எனில், அப்படிப்பட்டவனுக்கும் ஏதேனும் வழி உண்டா என்றால், ஓர் எளிய வழி உண்டு. அதையும் பகவான் கிருஷ்ணரே உபதேசித்துள்ளார்.

இறைவனை நாடுபவன், மனதைக் கட்டுப்படுத்தி எல்லாச் செயல் களையும் இறைவனுக்காகவே செய்ய வேண்டும். செயல்களின் பலன் மீதான ஆசையைத் துறக்க வேண்டும். பொதுவாக எல்லோரும் பலனை எதிர்பார்த்தே எந்தவொரு செயலையும் செய்கின்றனர். ஆனால் அப்படிச் செய்வது பந்தத்திற்கு வழி வகுக்கும். இதற்கு மாறாக, இறைவனை நாடும் பக்தன் தான் இறைவன் மீது கொண்டிருக்கும் அன்பினால் உந்தப்பட்டு, அனைத்து செயலையும் இறைவனுக்காகவே செய்கிறான். அவனுக்குச் செயல்களின் பலனில் பற்றில்லை. எப்படிப் பூஜை செய்யும் பொழுது இறைவனுக்குப் பழங்கள் அளிக்கப்படுகின்றனவோ, அது போல் செயல்களின் பலன்களை இறைவனுக்கே அர்ப்பணிக்கிறான். எச் செயலையும் இவன், “நான் இதை இறைவனுக்காகச் செய்கிறேன்” என்கிற உணர்வுடன் செய்கிறான். ஒரு படி இறங்கி, “இறைவன் சந்தோஷம் அடைய நான் இதைச் செய்கிறேன்” என எண்ணுவதில்லை. வெற்றி, தோல்வி இரண்டையும் இவன் சமமாகப் பார்க்கிறான். வெற்றி என்பதில் மனத்தூய்மை அடைதலும் அடங்கியுள்ளது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

இவ்வாறு இறைவனுக்காகவே செயல்படுகிறவன் தீய செயல்களைத் தவிர்க்கிறான். செய்வது எல்லாவற்றையும் உறுதியுடனும் ஊக்கத்துடனும் செய்கிறான். இறைவன் மீது கொண்டுள்ள அன்பு அவனை எல்லாச் செயல்களையும் சிறந்த முறையில் செய்ய வைக்கிறது. சாஸ்திரங்களை

இறைவனின் ஆணைகளாகக் கருதி, சாஸ்திரத்தால் விதிக்கப்பட்ட செயல்களைத் தவிர்க்காது செய்கிறான். இறைவனின் ஆணைகளை மீறுபவனும் தனக்கு விதித்திருக்கும் கர்மாக்களைச் செய்யாமல் இருப்பவனும் எப்படி இறைவனின் உண்மையான பக்தனாக இருக்க முடியும்? ஆதலால், பலன்களில் பற்றின்றி செய்யப்படும் செயல்கள் கவனக் குறைவாகவோ திறமையின்றியோ செயல்படுத்தப்படுகின்றன என்றோ நினைப்பது தவறு. சொல்லப்போனால், ஒரு பக்தனுடைய செயல்திறன் பக்தியில்லாதவனின் செயல்திறனைக் காட்டிலும் சிறப்பாக இருக்கும். அது எப்படி என்று கேட்டால், உலகத்தில் பற்றுள்ளவனைப் போலல்லாமல், உண்மையான பக்தன் கவலை, மனச்சோர்வு போன்ற துன்பங்களால் பாதிக்கப்படுவதில்லை.

பகவான் கிருஷ்ணர் பகவத்கீதையில், "உன் மனதை என்னிடத்தில் வை. என் பக்தனாயிரு. என்னைப் பூஜை செய், என்னை நமஸ்காரம் செய். (இப்படி நீ நடந்து கொண்டு உன் தேவைகள், செயல்கள், அவற்றின் பலன்கள் ஆகிய எல்லாவற்றையும் எனக்கே அர்ப்பணித்து) என்னிடமே நீ வந்து சேர்வாய். இதை நான் உனக்கு உறுதியளிக்கிறேன், ஏனெனில், நீ எனக்கு மிகவும் பிரியமானவன்"[25] என்று உறுதியோடு கூறுகிறார். நம்மிடத்தில் இம்மாதிரியான அன்பை வைத்திருப்பவனும், மனதிற்கு இனியவனுமான இறைவனிடம் எவர் தான் அன்பு செலுத்த மாட்டார்?

## 5. பகவத் கீதையின் அடிப்படைக் கோட்பாடுகள்

பகவான் கிருஷ்ணர் அர்ஜுனனுக்குச் செய்த உபதேசத்தில் எந்த தத்துவத்தைப் போதித்தார்? உண்மையில் "தான் யார்" என்பதை அறிவதால் மட்டுமே ஒருவன் மோக்ஷம் அடைகிறான் என்று பகவான் கூறுகிறாரா அல்லது கர்மாக்களைச் செய்வதும் மோக்ஷத்திற்கு நேரடி காரணம் என்று கூறுகிறாரா? இந்த உலகம் உண்மை, ஆத்மாக்கள் பல என்பது பகவானின் கருத்தா? அல்லது ஆத்மா பரம்பொருள் தான், பார்க்கப்படும் உலகம் வெறும் தோற்றம் என்று கூறுகிறாரா? இத்தகைய வினாக்களுக்கு விடை காண வேண்டும் என்றால் நாம் அவருடைய வாக்கான பகவத்கீதையை ஆராய்வதைத் தவிர வேறு வழியில்லை.

ஆத்மா அழிவற்றது, உடலினும், உடலின் தன்மைகளைக் காட்டிலும் வேறானது என்பதைப் பகவான் அர்ஜுனனுக்கு மிகத் தெளிவாகக் கூறுகிறார்: "இந்த ஆத்மா எப்போதும் பிறப்பதில்லை, இறப்பதில்லை, இருந்து இல்லாது போவதுமில்லை. அவன் (ஆத்மா) பிறக்காதவன், எப்போதும் உள்ளவன், மாற்றமற்றவன், மிகவும் பழமையானவன். உடல் கொல்லப்படும் பொழுது ஆத்மா கொல்லப் படுவதில்லை."[26] ஆத்மா

உடலைக் காட்டிலும் வேறு என்ற இக்கருத்தைப் பகவான் பகவத் கீதையில் இன்னும் பல இடங்களில் தெளிவாகக் கூறியுள்ளார். அது போலவே, ஆத்மாவானது உடலின் செயல்பாட்டினால் மாசுபடுவதில்லை. உடலுக்கு உரித்தான சேஷ்டைகள் ஆத்மாவிற்கு இல்லை என்பதையும் பகவான் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார். இதற்கு உதாரணமாகப் பகவத்கீதையில், "தொடக்கமற்றும், தன்மைகளற்றும் இருப்பதால் இந்த அழிவற்ற ஆத்மா, உடலுள் இருப்பினும் செயல் புரிவதில்லை; மாசு படுவதுமில்லை"[27] என்ற அவர்தம் கூற்றையே எடுத்துக் கொள்ளலாம்.

அப்படியென்றால், செயல் புரிவது எது? இதையும் பகவான் பல இடங்களில் தெளிவுபடுத்தியுள்ளார்: "ப்ரக்ருதியின் குணங்கள் எல்லாச் செயல்களையும் செய்கின்றன. அஹங்காரத்தினால் மறைக்கப்பட்ட அறிவுடையவன், 'நான் செயல் புரிபவன்' என்று எண்ணுகிறான்."[28] அதனால் பகவானின் சொற்களில் இருந்தே ஆத்மா செயலற்றது, மாசற்றது என்பதை அறிகிறோம். அப்படியானால், "ஆத்மா பந்தத்தினால் துன்பப்படுவது எப்படி?" என்ற கேள்வி எழலாம். அதற்கு, "பந்தம் உண்மையில்லை, அஞ்ஞானத்தினால் விளைவது" என்பது ஒன்றே பதில். இல்லையேல், பகவானின் கூற்றுகள் அனைத்தும் பொருளற்றனவாகி விடும்.

மேலும் பகவான், "எவனொருவன் 'செயல்கள் யாவும் எல்லா விதங்களிலும் ப்ரக்ருதியினாலேயே செய்யப்படுகின்றன, ஆத்மா செயல் புரிபவன் அல்லன்' என்பதை அறிகிறானோ, அவனே உண்மையிலேயே அறிகிறவன்"[29] என்று கூறுகிறார். (பரம்பொருளான ஆத்மாவைப்பற்றிய) உண்மையான அறிவே அஞ்ஞானத்தைப் போக்கி மோக்ஷத்தை அளிக்கிறது என்பதை பகவான், "சிரத்தை உடையவனும், ஞானத்தையே தனது இலக்காக உடையவனும், புலன்களை அடக்கியவனும் ஞானத்தை அடைகிறான். ஞானம் அடைந்தவுடன் மேலான சாந்தியை அடைகிறான்" போன்ற சுலோகங்களில் தெளிவுபடுத்தியுள்ளார்.[30]

சரி, இறைவனின் அருளால் மோக்ஷம் அடைய முடியாதா? பகவான் கிருஷ்ணரே கீதையில், "என்னைச் சரணடைந்தவர் மட்டுமே இந்த மாயையைக் கடக்கின்றனர்"[31] என்று சொல்கிறாரே என்றால் அது சரி தான். "என் பக்தர்களுக்கு மோக்ஷம் அளிக்கிறேன்" என்பது பகவானின் கூற்றுதான். ஆனால் அதை அவர் எப்படிச்செய்கிறார்? இதையும் அவரே விளக்கியுள்ளார்: "அவர்களின் (பக்தர்களின்) மீது நான் கொண்டுள்ள கருணையாலேயே, அவர்கள் மனதில் வீற்றிருந்து, ஞானம் என்ற ஒளிச் சுடரால் அஞ்ஞானத்தினால் பிறந்த இருளை நாசம் செய்கிறேன்."[32] இவ்வாறு, "ஞானமே மோக்ஷ ஸாதனம்" என்று மிகத்தெளிவாக பகவான்

விளக்கியுள்ளார். அப்படிப்பட்ட ஞானம் கர்ம பலன்கள் அனைத்தையும் நாசம் செய்கிறது. பகவான், "எவ்வாறு நெருப்பு விறகுக் கட்டைகளைச் சாம்பல் ஆக்குகிறதோ அது போல் ஞானம் என்கிற நெருப்பு எல்லாச் செயல்களையும் சாம்பல் ஆக்குகிறது"[33] என்கிறார். இவ்வாறு கீதையில் "ஞானமும் கர்மமும் (செயலும்) ஒன்றுக்கு ஒன்று நேர் எதிரானவை" என்று முழங்கும் பகவான், திடீரென்றுத் தன் சொற்களையே மறந்து, "ஞானம் கர்மம் இவற்றின் சேர்க்கையால் மோக்ஷம் கிட்டுகிறது" என்று சொல்வதாக நாம் ஒப்புக்கொள்ளவே முடியாது.

பகவத்கீதையில், "ஞானம் அடையாதவனுக்கே கர்மா என விதிக்கப் பட்டிருக்கிறது. ஞானம் அடைந்தவனுக்கு ஆத்மாவிலேயே நிலைத்து இருத்தலைத் தவிர வேறேதுவும் இல்லை" என்ற கருத்தைக் கிருஷ்ணர் கீதையில் எவ்வித முரண்பாடும் இன்றிக் கூறியுள்ளார். இதை நாம், "யோகத்தில் முன்னேற விரும்பும் முனிக்குக் கர்மா (செயல்) காரணம் என்று கூறப்படுகிறது. யோகத்தை எட்டிய பின் அவனுக்குச் செயலற்று இருத்தல் காரணமாகக் கூறப்படுகிறது"[34], முதலான பல சுலோகங்களில் பார்க்கலாம்.

"எது பிறக்கிறதோ, அதற்கு அழிவு நிச்சயம்" என்பதன் அடிப்படையில் பகவான் "எதற்குத் துவக்கம் உண்டோ அதற்கு முடிவும் உண்டு"[35] என்று சுட்டிக் காட்டுகிறார். உண்மையான மோக்ஷம் கர்மாவினால் ஏற்படுகிறது என்று நாம் கூறினால், மோக்ஷத்திற்குத் துவக்கம் உண்டு என்றாகிறது. அப்படியானால், மோக்ஷத்திற்கு முடிவும் உண்டு என்று ஆகிவிடும். எனவே, மோக்ஷம் என்பது கர்மாவினால் அடையப்படுவது இல்லை. அப்படி என்றால், கர்மாவின் பங்கு என்ன என்று கேட்டால், கர்மா மனதைத் தூய்மை அடையச் செய்கிறது. தூய்மையான மனதில் மட்டுமே ஞானம் உதிக்கிறது. இந்தக் கருத்தைக் கிருஷ்ணர், "யக்ஞம், தானம், தவம் ஆகியவை அறிவுடையோரைத் தூய்மை ஆக்குபவை" என்கிறார்.[36]

சரி, "ஆத்மா என்பது ஒன்றா, பலவா?", "ஆத்மாவும் பரம்பொருளும் எத்தகைய தொடர்புடையது?" என்ற கேள்விகளுக்குப் பகவானின் விடை என்ன? அவர், "யோகத்தினால் ஒருநிலைப்பட்ட மனம் உடையவன் – அனைத்திலும் ஒன்றையே பார்ப்பவன் ஆத்மாவை எல்லா உயிர்களிலும் உறைவதாகவும், எல்லா உயிர்களும் ஆத்மாவில் உறைவதாகவும் பார்க்கிறான்"[37], என்கிறார். இங்கே ஆத்மா என்ற சொல் ஒருமையில் வந்திருப்பதைக் கவனிக்க வேண்டும். இதிலிருந்து ஆத்மா ஒன்று தான், பல அல்ல என்று நாம் அறிகிறோம். ஆத்மாவிற்கும் பரம்பொருளிற்கும் உள்ள தொடர்பைப் பற்றி அவர், "குடாகேசா! அனைத்து உயிர்களின்

ஹ்ருதயத்திலும் வீற்றிருக்கும் ஆத்மா நானே''[38] என்றும், ''என்னைக் க்ஷேத்ரஜ்ஞனாக (ஜீவாத்மாவாக) அறிவாய்''[39] என்றும் கூறியுள்ளார். இதிலிருந்து ஜீவாத்மாவும் பரம்பொருளும் ஒன்று என்பதே பகவானின் கருத்து என்று தெரிந்து கொள்ளலாம்.

## 6. உண்மையான அத்வைதிகளும் போலிகளும்

பிரம்மமே பரமார்த்திக ஸத்யம் (இறுதியான உண்மை). பரம்பொருளான பிரம்மத்தைக் காட்டிலும் வேறான பிரபஞ்சம் இல்லை, பார்க்கப்படும் இவ்வுலகம் வெறும் தோற்றம் என்பது அத்வைத மதத்தின் தீர்மானமான முடிவு. 'நான் இந்த உடல்', 'நான் மனம்', 'என்னைத் தவிர்த்து இரண்டாவதான பொருள் உண்டு' முதலான தவறான கருத்துக்கள் அவித்யை என்று கூறப்படும் அறியாமையினால் தோன்றுகின்றன.

தனிப்பட்ட ஜீவாத்மாவிற்கும் பரம்பொருளிற்கும் உண்மையில் எவ்வித வித்தியாசமும் கிடையாது. வாஸ்தவமாகச் சொல்ல வந்தால், ''நான் பரப்பிரம்மம்'' என்ற உண்மையை எவனொருவன் தனது அனுபவத்தில் உணர்கிறானோ அவன் தான் உண்மையான அத்வைதி. அத்வைத தத்துவம் சரியென்று கொள்கையளவில் கருதுபவரும் அத்வைதிகள் என்றே கூறப்படுகின்றனர். இவர்களைப் பொறுத்தவரையில் ''அத்வைதி'' என்ற சொல் பெயரளவில் மட்டும் தான்.

பரம்பொருளை நேரடியாக அறிந்தவர்கள் ஞானிகள் என்று கூறப் படுகின்றனர். இவர்கள் ஜீவன்முக்தர்கள், அதாவது உயிர் இருக்கும் போதே முக்தி அடைந்தவர்கள். அத்தகையோர் மிகவும் அரிது. பகவத் கீதையில் கிருஷ்ணர், '''இது எல்லாமே வாஸுதேவன் தான்' என்று அறிபவன் மிகவும் அரிது''[40] என்று இவ்விஷயத்தைக் குறிப்பிடுகிறார். அஹங்காரமற்ற அத்தகைய ஞானிகள் தங்கள் ஞானத்தைப் பகட்டாக வெளிக்காட்டிக் கொள்வதில்லை. இப்படிப்பட்ட ஞானிகளுக்கு நேர் எதிராக இருப்பவர் பலர். பேச்சிலும் பழக்க வழக்கங்களிலும் மோக்ஷம் அடைந்தவர் போலத் தம்மைக் காட்டிக் கொள்வர். ஆனால் நன்றாகக் கவனித்துப் பார்த்தால், அவர்கள் நடத்தையே சரியாக இல்லை என்பது தெரியவரும். அதைப்பற்றி அவர்களைக் கேட்டால், ''நான் இந்த உடலும் இல்லை; மனமும் இல்லை. நான் செயல் செய்வதுமில்லை; செயலால் மாசுபடுவதும் இல்லை. உலகமோ வெறும் தோற்றம் மட்டுமே. எனவே உடலும் மனமும் எச்செயலில் ஈடுபட்டாலும் எனக்கென்ன?'' என்பார்கள்.

இது சம்பந்தமான கதை ஒன்று உள்ளது. அத்வைத தத்துவத்தை ஆசிரியர் ஒருவர் தம் மாணவர்களுக்குக் கற்பித்தாராம். ஒரு நாள் அப்படி அவர் கற்றுத்தரும் பொழுது, ''உலகத்தின் தோற்றம் பொய்''

என்று சொல்கின்ற தருணத்தில் மதம் பிடித்த யானை ஒன்று அவ்வழியே ஓடியதாம். ஆசிரியரும் மாணவரும் உயிருக்கு அஞ்சி அங்கும் இங்கும் ஓடினார்கள். துரதிர்ஷ்டவசமாக ஆசிரியர் கால் தவறி ஒரு குழியில் விழுந்தார். யானை அந்த இடத்தைத் தாண்டிய பின்னர் ஆசிரியரைத் தேடிய மாணவர்கள், குழியிலிருந்து உதவிக்காகக் குரலெழுப்பியவரைக் கண்டனர். அவரிடம் சென்று, ‘‘ஐயா, சற்று முன்னர் தான் நீங்கள் எங்களுக்கு ‘உலகத்தின் தோற்றம் பொய்’ என்று கற்பித்தீர்கள். பின், யானை தாக்கிய போது ஏன் அதற்குப் பயந்து ஓடினீர்கள்? இப்பொழுது ஏன் உதவிக்காகக் குரல் எழுப்புகிறீர்கள்?’’ என்று கேட்டனர்.

வசமாக மாட்டிக் கொண்ட ஆசிரியர் சற்று யோசித்து, ‘‘முதலில் நான் இந்தக் குழியிலிருந்து வெளிவர நீங்கள் உதவி செய்யுங்கள். அதற்குப் பின் நான் எல்லாவற்றையும் உங்களுக்கு விளக்குகிறேன்’’ என்றார். மாணவர்களும் அவர் பேச்சிற்கு இணங்கி அவரை குழிக்கு வெளியே கொணர்ந்தனர். ஆசிரியர் தாம் வழக்கமாகப் பாடம் சொல்லும் இடத்திற்குச் சென்று அமர்ந்தார். பின்னர் சற்றும் கூசாமல் அவர், ‘‘நான் சொன்னது சரியே. இந்த உலகம் பொய். நம்மைத் தாக்கிய யானையும் பொய். நான் அச்சத்துடன் ஓடுவதை நீங்கள் பார்த்தீர்களே, அதுவும் பொய்தான். நான் குழியில் விழுந்து அலறுவதைக் கேட்டீர்கள். அது எல்லாம் பொய். இறுதியில் நீங்கள் என்னைக் காப்பாற்றியதும் பொய் தான்’’ என்றாராம்.

ஆசிரியரின் விளக்கம் அவருடைய சமயோசித புத்தியைக் காட்டலாம். ஆனால் உண்மையிலேயே அது அவருடைய போலித்தனத்தைத் தான் காட்டுகிறது. எவனும் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசக் கூடாது. அத்வைதம், பிரம்மம் என்று பெரிய வார்த்தைகளால் மற்றவரை ஏமாற்றிவிடலாம். ஆனால் ஒருவன் தனது போலியான நடத்தையை மாற்றிக் கொள்ளவில்லை என்றால், அந்த வார்த்தைகளினால் எந்தப் பலனும் கிடையாது.

‘‘உலக சுகத்தில் பற்று வைத்துக் கொண்டு, ‘எல்லாம் பிரம்மம்’ எனக் கூறுபவன் கர்மத்திலிருந்தும் பிரம்மத்திலிருந்தும் தவறியவன். அவ்வாறு இருப்பவனை இழிந்தவனாக ஒதுக்கவேண்டும்’’[41] என்று கூறப்படுகிறது. தத்துவத்தை அறியாத காரணத்தினாலும் மோக்ஷம் அடையாததனாலும் இவன் ‘‘பிரம்மத்திலிருந்து தவறியவன்’’ ஆகிறான். ஞானி போல் பாசாங்கு செய்வதால் தனக்கு விதிக்கப்பட்ட கர்மாக்களை இவன் சரிவரச் செய்வதில்லை. எனவே, ‘‘கர்மத்திலிருந்தும் தவறியவன்’’ என்று இங்கே கூறப்பட்டுள்ளது.

சரி, உலகம் தோற்றம் தான் என்பதை உணராத போதிலும் ஏன் இம்மாதிரி நடிக்கிறார்கள்? தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்ளுதல் என்பது இதற்கு ஒரு காரணம். நல்ல பெயர் வாங்க வேண்டும் என்ற உந்துதலும் ஒரு காரணமாகும். இதை நீலகண்ட தீக்ஷிதர் ‘‘கையில் எப்பொழுதும் ஜப மாலையை வைத்துக் கொண்டும், அவ்வப்பொழுது கண்களைத் திறந்து, ‘எல்லாம் பிரம்மம்’ என்று உறுதியுடன் சொல்வதும் நற்பெயர் வாங்குவதற்குச் சிறந்த வழிகள்’’[42] என்று ஏளனம் செய்கிறார். இக்காலத்தில் இம்மாதிரி போலிகள் பலர் இருக்கிறார்கள். இவர்கள் கடோபநிஷத்தில் உள்ள இந்த வாக்கியத்தை நினைவில் வைத்துக் கொள்வது நல்லது ‘‘எவன் தனது தீய நடத்தையை விலக்கவில்லையோ, எவனுடைய புலன்கள் அவன் வசத்தில் இல்லையோ, எவனுடைய மனம் ஒருமுகப்படவில்லையோ, எவன் மனம் ஒருநிலைப்பாட்டின் பலனுக்காக ஏங்குகிறதோ, ஞானத்தினால் ஆத்மாவை அவன் அடையமுடியாது.’’[43] ஆன்மிக சாதனையினால் மனம் நன்கு தூய்மையடைந்த பிறகே ஞானம் உதிக்கும் என்பது இதிலிருந்து தெளிவாகிறது.

## 7. பரம்பொருளைப் பற்றிய விசாரணைக்கு வேண்டிய தகுதிகள்

பாதராயணர் தொகுத்த வேதாந்தஸூத்ரங்களில் முதல் ஸூத்ரம், ‘‘பின்னர் அதனால் பிரம்மத்தைப் பற்றிய விசாரணை மேற் கொள்ளப்பட வேண்டும்’’[44] என்பது. இங்கே ‘‘பின்னர்’’ என்று கூறியதால், பரம்பொருள் பற்றிய விசாரணையானது அதற்கான தகுதியை அடைந்த பின்னரே செய்யப்பட வேண்டும் என்பது தெளிவாகிறது. அந்தத் தகுதி வேதத்தின் கர்மகாண்டத்தில் விளக்கப்படும் சடங்குகளைப் பற்றிப் புரிந்துகொள்வது அல்ல. ‘‘ஸாதன சதுஷ்டயம்’’ என்று வழங்கப்படும் நான்கு தகுதிகளின் சேர்க்கையே இது. ஒருவனின் ஆன்மிக முன்னேற்றத்திற்கு இவை நான்கும் வழிவகுக்கும்.

வேதாந்தசாஸ்திரத்தை வெகுகாலம் கற்று அதில் வல்லுனனாகி ஒருவன் கற்றோரையும் மற்றோரையும் மகிழ்விக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். ஆனால் இந்நான்கு தகுதிகளை அவன் அடையவில்லை என்றால் பரம்பொருளை நேரடியாக உணரமாட்டான். வேதாந்தத்தில் மிகுந்த புலமை இருப்பினும் பிறப்பு இறப்பு என்ற சுழற்சியிலிருந்து அவனுக்கு விடுதலை கிடையாது. மாறாக இந்நான்கு தகுதிகளையும் பெற்று, தத்துவத்தை அறிந்த ஞானியினால் வழிகாட்டப் படுகிறவன் பரம்பொருளை அறிகிறான்; அதனால் மோக்ஷமும் அடைகிறான். இனி, இந்நான்கு தகுதிகள் என்ன என்பதைப் பார்ப்போம்.

“ஸாதனசதுஷ்டயம்” அல்லது நான்கு தகுதிகளில் முதலானது விவேகம், அதாவது பிரித்தறிதல். மோக்ஷத்தை நாடுபவன் முதலில் எது நித்தியம், அதாவது எப்போதும் உள்ளது: பிரம்மம், எது அநித்தியம் நிலை இல்லாதது: மற்றவை எல்லாம், என்பதைப் பிரித்து அறிய வேண்டும். “இது நிலையானது, இது நிலையற்றது” என்று அறிபவன் மட்டுமே தன் மனதை இந்நிலையற்ற உலகிலிருந்து திசை திருப்புவான். ஏனென்றால், உலகத்தைப் பொறுத்தவரை அதை அழிவிற்கு உட்பட்டதாகக் கருதுதல் மட்டும்போதாது. அது பொய்த்தோற்றமே என்பதையும் அறியவேண்டும். ஒரு பொருள் வெறும் தோற்றம் என்று நன்கு உணர்ந்த பின் அதை யார் தான் விரும்புவார்? எனவே, புலன்களுக்கு விஷயமாகிற புறப் பொருட்களும், அவற்றினின்று வருவதாகக் கருதப்படும் இன்பமும் நிலையற்றன என உணர்ந்து கொள்வது மட்டும் போதாது. ஏனென்றால், மனிதன் இன்ப அனுபவங்கள் தற்காலிகமானவை தான் என உணர்ந்த போதிலும் அவன் உலக சுகங்களையே மீண்டும் மீண்டும் நாடுகிறான். எனவே, இவ்வுலகம் வெறும்தோற்றம் என்பதை அவன் அறியவேண்டும்.

இரண்டாவது தகுதி “வைராக்யம்” அல்லது பற்றின்மை. மேற்கூறியது போல், உண்மையான வைராக்யம் விவேகம் இருந்தால் மட்டுமே ஏற்படும். சில சமயங்களில் நெருங்கிய நண்பனோ உறவினரோ இறந்து விட்டால் ஒருவனுக்கு உலகின் மீது தான் வைத்திருக்கும் பற்று சற்றே குறையும். ஆனால் இம்மாதிரியான பற்றின்மை விரைவிலேயே நீங்கி விடும். நிலையானது எது, நிலை இல்லாதது எது என்பது குறித்த விவேகத்தினால் வரும் உறுதியான வைராக்யம் ஒன்றே பரம்பொருளை அறிவதற்கு உதவுகின்றது. அதனால் மோக்ஷத்தை நாடும் சாதகன் வைராக்யத்தைக் கவனமாக வளர்த்துக் கொள்ள வேண்டும். வைராக்யம் முதிர்ந்த நிலையில் அவன், தன் உடல் உட்பட இவ்வுலகில் மற்றும் பிறவுலகங்களிலும் கிடைக்கும் போகப்பொருட்கள் எல்லாவற்றையும் காக்கையின் எச்சத்தைப் பார்ப்பதைப் போல் பார்க்கிறான்.

இனி, மூன்றாவது தகுதி. இது ஆறு குணங்களை உள்ளடக்கியது. அவற்றில் முதலாவது ‘சமம்’ அதாவது மனவடக்கம் அல்லது தனது இலக்கிலிருந்து விலகாத மனம். இதுவும் வைராக்யத்திலிருந்து பிறப்பது தான். வைராக்யம் இல்லையென்றால் மனம் மீண்டும் மீண்டும் வெளிப் பொருட்களையே நாடிச் செல்லும். மாறாக, ஒருவன் “பொருட்களும் அவற்றினால் ஏற்படும் இன்பமும் நிலையல்ல, அவற்றை அடைவதற்குப் பணம் மற்றும் முயற்சி வீணாகிறது. இறுதியில் நாம் நினைப்பதைப் போல் அவை சுவை தருவனவும் அல்ல” என்ற வழியில் புலன்களுக்கு விஷயமான பொருட்களின் குற்றம் குறைகளை விடாது சிந்தித்தால் அவனுடைய மனம் அந்த பொருட்களினால் கவரப்படுவது கிடையாது.

அதனால், வைராக்யமே மனவடக்கத்திற்கு அடிப்படை. இரண்டாவது குணம் 'தமம்', அதாவது புலன்களை அவற்றின் விஷயங்களின் பக்கம் செல்ல விடாமல் தடுப்பது. இது முதல் குணமான மனவடக்கத்திலிருந்து பிறப்பது. கடோபநிஷத்தில் பொருட்களை (தேரோடும்) சாலைகளுக்கும், புலன்களைக் குதிரைகளுக்கும், மனதைக் கடிவாளத்திற்கும் ஒப்பிட்டு கூறுப்பட்டுள்ளது.[45] ஆகவே, ஓடும் புலன்களை இலக்கிலிருந்து விலகாத மனதால் கட்ட முடியும்; மனவடக்கம் புலனடக்கத்திற்கு வழி செய்யும். அதனால் ஆன்மிகப் பாதையில் செல்பவன் புலன்களின் செயல்பாட்டைக் கவனிக்காமல் மனவடக்கத்தில் மட்டும் குறியாக இருக்கவேண்டும் என்று ஆகாது. பகவான் பகவத் கீதையில் கூறியது போல், புலன்கள் வலிமை மிக்கவை; அவை மனதைக் கலைக்கவும் கலக்கவும் செய்கின்றன.[46] பொருட்களைத் தவிர்ப்பது மனவடக்கத்திற்குச் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்துகிறது என்பதில் ஐயமில்லை. ஆனால் அழகான காட்சிகள், சுவையான உணவுப்பண்டங்கள் முதலியன அருகில் உள்ள போதும் உறுதியான மனம் இருந்தால் தான் புலனடக்கம் இருக்கும்.

மூன்றாம் குணம் 'உபரதி' அதாவது விலகிக் கொள்ளவது. இது புலன் அடக்கத்தினால் வருவது. பொருட்களை நுகர்வதால் வரும் இன்பம் பந்தத்தை விளைவிக்கும் கர்மாக்கள். இவற்றிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும் என்பதையே இது குறிக்கும். ஒருவன் எந்நேரமும் உலகத்து விஷயங்களிலோ அல்லது சடங்குகளிலோ ஈடுபட்டிருந்தால், அவன் மிகவும் சூக்ஷ்மமானதும் குணங்கள் அற்றதுமான பிரம்மத்தை அறிய இடைவிடாமலும், தீவிரமாகவும் எப்படி முயற்சிக்க முடியும்? உபரதியின் முதிர்ச்சியே யோகத்தின் சிகரமான நிர்விகல்பஸமாதி. இந்த ஸமாதியில் மனமானது புறவுலகம், உடல் எல்லாவற்றிலிருந்தும் விலகிக்கொண்ட நிலையில் இருக்கிறது.

நான்காவது குணம் 'திதிக்ஷை' அதாவது பொறுமை அல்லது சகிப்புத் தன்மை. உண்மையான சகிப்புத்தன்மை என்பது, எந்தத் துன்பம் வந்த போதும் அதைப் பொறுத்துக் கொள்வது. துன்பத்தைப் போக்கிக் கொள்ளக்கூட முயற்சிக்காமலிருப்பது மற்றும் துன்பம் நேர்ந்து விட்டதே என்று வருந்தி புலம்பாமல் இருப்பது. உபரதி முதிர்ச்சியடையும்பொழுது மனமானது வெப்பம், தட்பம் ஆகியவற்றை உணர்வதில்லை. அப்படி அவை உணரப்பட்டாலும் சாதகனால் பொறுத்துக் கொள்ளப்படுகின்றன. பொதுவாக மனிதர்கள் தனக்குப் பிடிக்காதது நடக்கும் போது அதைத் தவிர்க்க முயல்வார்கள். அவ்வாறு தவிர்க்க முடியாத போது அதைப் பற்றிக் கவலைப்படுவர், புலம்புவர். உண்மையான சகிப்புத்தன்மை கொண்டவனோ இப்படியிருக்க மாட்டான். கவலை, புலம்பல் இவற்றால்

களங்கம் அடைந்த மனம் பரம்பொருளைப் பற்றி விசாரம் செய்வதற்குத் தகுதியற்றதாக ஆகிறது.

ஐந்தாவது குணம் 'சிரத்தை'. குருவின் சொற்களை அப்படியே ஏற்றுக் கொள்வதும் சாஸ்திரம் கூறுவதில் அசையாத நம்பிக்கையும் சிரத்தை என்று கூறப்படுகிறது. உலக விஷயங்களையே எடுத்துக் கொள்வோம். ஒருவனுக்கு மற்றொருவனின் சொற்களில் தீவிர நம்பிக்கை இல்லை என்றால் அவன் சொற்களின் வழி இவன் நடந்து கொள்ள மாட்டான். உலக விஷயங்களிலேயே நிலைமை இவ்வாறு இருக்கும் பொழுது புலன்களினால் அறியமுடியாத பரம்பொருள் பற்றிய விசாரணையில் குருவின் சொற்களில் அசையாத நம்பிக்கை தேவை என்பதைச் சொல்ல வேண்டுமோ? இன்னொன்றையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஒருநிலைப்பட்ட மனமுடையவனும், புலனடக்கம் கொண்டவனும், வெளி விஷயங்களில் ஈடுபாடு இல்லாதவனும், பொறுமை உள்ளவனுமான ஒருவனுக்கு மட்டுமே, குரு "பிரம்மம் ஒன்றே உண்மையானது, மற்றவை அனைத்தும் தோற்றமே. நீ உண்மையில் பரம்பொருளாய் இருக்கிறாய்" என்று உபதேசிக்கும் பொழுது, "ஆம், அது அவ்வாறு தான்" என்ற திட நம்பிக்கை ஏற்படுகிறது.

குருவின் சொற்களிலும் சாஸ்திரங்களிலும் தீவிர நம்பிக்கை ஏற்பட்டால் ஐயங்கள் நீங்குகின்றன, கவனச்சிதைவு இருக்காது. அப்போது சாதகன் தன் புத்தியை நிர்குணமான பிரம்மத்தில் திடமாக வைக்க முடியும். இப்படிப் புத்தியைப் பிரம்மத்தில் நிலைநிறுத்துதல் 'சமாதானம்' என்று கூறப்படுகிறது. இதுவே ஆறு தகுதிகளில் இறுதியானதாகும். முன்னர் (இந்த ஆறு குணங்களில் முதலாவதாகக்) கூறப்பட்ட சமம் என்பதும் புத்தியைப் பிரம்மத்தில் நிலைநிறுத்துவது தான். ஆனால் அங்கே முயற்சி தேவைப்படுகிறது, மேலும் ஸாதகனுக்கு ஐயங்கள் நீங்காமல் இருக்கின்றன. ஆனால் சமாதானம் என்னும் நிலையில் புத்தியானது பெருமுயற்சியின்றி பிரம்மத்தில் நிற்கிறது, ஐயங்களும் இருப்பதில்லை. எனவே, சமாதானம், சமம் ஆகியவை இரண்டும் வெவ்வேறு நிலைகள்; சமத்தின் முதிர்ந்த பலன் சமாதானம்.

இறுதியாக, ஸாதன சதுஷ்டயத்தில் நான்காவதும் கடைசியுமான தகுதி முமுக்ஷுத்வம், அதாவது (பந்தத்திலிருந்து) விடுபட வேண்டும் என்ற ஆசை. பொதுவாக, இந்த ஆசையை கீழ், நடு, உயர் என்று மூன்று விதமாகப் பிரிக்கலாம். உலகத்து விஷயங்களில் ஈடுபட்டு மாசடைந்த மனமுடைய ஒருவன் வேதாந்தப் பிரசங்கம் ஒன்று கேட்கிறான் என்று வைத்துக்கொள்வோம். பிரசங்கத்தைக் கேட்கும் பொழுது அவனுக்கு, "நான் மோக்ஷம் அடைய வேண்டும்" என்கிற ஆசை எழலாம். ஆனால்

இந்த ஆசை விரைவில் மறைந்து போகிறது; சொல்லப் போனால், பிரசங்கம் நீடிக்கும் நேரம் கூட நீடிக்காது. இப்படிப்பட்ட முமுக்ஷுத்வம் கீழ்நிலை முமுக்ஷுத்வம் என்று அழைக்கப்படுகிறது. இது மோக்ஷத்திற்கு வழி வகுக்காது. இன்னும் சிலர் வேதாந்த நூல்களைப் பாடம் கேட்கின்றனர். அதிலிருந்து அவர்களுக்கு விவேகமும், வைராக்யமும் ஓரளவிற்கு ஏற்படுகின்றன. இந்நிலையிலுள்ள ஒருவன் ஞானியான ஸத்குருவை நாடி விசாரம் செய்கிறான். குருவின் சொற்களைக் கேட்கும் போது அவனுக்கு நடு நிலை முமுக்ஷுத்வம் ஏற்படுகிறது. இதுவும் மோக்ஷம் அடையப் போதாது. எப்பொழுது அவனுக்குத் தீவிரமான வைராக்யம் ஏற்படுகிறதோ, அப்பொழுது அவன் மனம் ஒருநிலைப்படும். குருவின் அருள் வெள்ளத்தால் அவன் மோக்ஷத்தைத் தவிர வேறு எதையும் நாடாமல், சம்சாரத்திலிருந்து விடுபடுவதில் அவன் எவ்விதத் தாமதத்தையும் சகித்துக் கொள்ள தயாராக இல்லாமல், தலை தீப்பற்றி எரிந்தால் எப்படி ஒருவன் உடனடியாக நீரைத் தேடி ஓடுவானோ, அது போல் மோக்ஷம் அடைய வேண்டும் என்ற குறிக்கோளில் மிகத்தீவிரமாக இருப்பான். இதுவே உயர் நிலை முமுக்ஷுத்வம். இப்படிப்பட்டவனுக்குப் பரம்பொருளை அறிவதற்கான எல்லாத் தகுதிகளும் இருக்கின்றன. எனவே, இவன் விரைவிலேயே பரம்பொருளை நேரடியாக உணர்ந்து வாழும் போதே விடுபட்டவன் (ஜீவன்முக்தன்) ஆகிறான்.

## 8. எல்லாத் தீமைக்கும் எது மூலம்?

பகவத் கீதையில் அர்ஜுனன் கிருஷ்ணரை நோக்கி, "வார்ஷ்ணேயா! எதனால் உந்தப்பட்டு இந்த மனிதன், தனக்கு விருப்பம் இல்லாவிடினும், வலிமையாகத் தள்ளப்பட்டவன் போல் பாவம் செய்கிறான்?"[47] என்று கேட்கிறான். பாவச் செயல் செய்ய விரும்புவோர் பாவம் செய்வது ஒரு புறமிருக்கட்டும். அறத்திலிருந்து வழுவாதிருக்க விரும்புவோரும் பாவம் செய்கிறார்களே. இது ஏன் நேர்கிறது? இதுதான் அர்ஜுனனின் குழப்பம். அரசனால் பணியாளன் ஏதாவது ஒரு வேலைக்கு ஏவப்படுவது போல ஒரு மனிதனை யாரோ தவறிழைக்குமாறு கட்டாயப்படுத்துவது போல் இருக்கிறது இது.

அர்ஜுனனின் கேள்விக்கு விடையாகப் பகவான் கிருஷ்ணர் கூறுகிறார், "இது காமம்; இது குரோதம். ரஜோ குணத்திலிருந்து பிறப்பது, பெருந்தீனியை விழுங்குவது, பெரும்பாவி. இதை நீ இங்கே எதிரியாக அறிவாய்."[48] காமமானது உலகம் முழுதிற்கும் எதிரி. காமத்தினாலேயே எல்லா உயிர்களுக்கும் தீமை வருகிறது. காமம் அதாவது ஆசை நிறைவேறுவது ஏதேனும் ஒரு காரணத்தினால் தடைப்பட்டால் கோபம் அதாவது குரோதம் உண்டாகிறது. அதனால், குரோதமும் காமத்தின்

மாறுபட்ட வெளிப்பாடன்றி வேறில்லை. இந்த உலகத்திலுள்ள எல்லாம் ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற இயற்கையின் மூன்று குணங்களினால் ஆனது. மனச்சாந்தி, மகிழ்ச்சி முதலானவை ஸத்வகுணம் மேலிடும் போது ஏற்படுகின்றன. செயல் புரிவதில் மிகுந்த ஈடுபாடு, பற்று, போன்றவை ரஜோகுணத்தின் வெளிப்பாடு. தமோகுணம் மேலிடும் போது சோம்பல் முதலிய குணங்கள் வெளிப்படுகின்றன. பகவான் இங்கே காமம் ரஜோகுணத்தினால் பிறக்கிறது என்கிறார். அவரது வார்த்தைகளுக்குக் "காமமே ரஜோ குணத்தை ஓங்கச்செய்கிறது" என்றும் பொருள் கொள்ளலாம். அதாவது, காமம் வெளிப்படும் போது அது ரஜோகுணத்தை எழும்பச் செய்கிறது. இந்த ரஜோகுணம் தான் ஒருவனைச் செயல் புரியத் தூண்டுகிறது. பகவான் ஏன் காமத்தைப் பெரும் பாவமாகக் கூறுகிறார் என்பதை நாம் இப்பொழுது புரிந்து கொள்ளலாம். காமத்தினால் உந்தப்படும் போது மட்டுமே ஒருவன் தீய செயலில் ஈடுபடுகிறான். இதன் காரணமாக இந்த உலகில் காமம் தான் மனிதனின் உண்மையான எதிரி.

பகவான் இந்த உலகத்தில் உள்ளதை உள்ளபடி உரைக்கும் வல்லமை பெற்றவர். எனவேதான், சங்கர பகவத்பாதர் கீதையின் இப்பகுதிக்கு உரை எழுதும் பொழுது, "பகவான்" என்ற சொல்லைப் பின்வருமாறு விளக்குகிறார். இறைவன் "பக"த்தின் இருப்பிடம் ஆவார். ஆதலால் அவருக்குப் "பகவான்" என்று பெயர். "பக" என்றால் என்ன? விஷ்ணு புராணத்தின்படி, இச்சொல் ஆறு தன்மைகளைக் குறிக்கிறது. அவை பூரண ஆளுமை, வல்லமை, புகழ், சிறப்பு, வைராக்யம், மோக்ஷம் என்பன[49]. மேலும், விஷ்ணு புராணத்தில், "எவன் துவக்கம், முடிவு, உயிர்களின் வருகை (பிறப்பு), போதல் (இறப்பு), ஞானம், அஞ்ஞானம் ஆகியவற்றை அறிகிறானோ, அவன் பகவான் என்று கூறப்படுகிறான்"[50] என்று வருகிறது.

காமம் இவ்வாறு நமது எதிரியாக இருக்கிறது என்பதை அர்ஜுனனுக்கு பகவான் மூன்று உதாரணங்களின் மூலமாக விளக்குகிறார். ஞானம் காமத்தால் மறைக்கப்படுவதில் மூன்று நிலைகள் உள்ளன. இம்மூன்று நிலைகளுக்கு உதாரணங்களாகப் பகவான், "எவ்வாறு தீ புகையினால் சூழப்படுகிறதோ, எப்படி ஒரு கண்ணாடியை அழுக்கு மறைக்கிறதோ, எவ்வாறு ஒரு கரு கருப்பையினால் மூடப்படுகிறதோ, அதே போல், ஞானமும் காமத்தினால் மறைக்கப்படுகிறது" என்கிறார்.[51] ஒரு பொருள் மற்றொன்றை மறைப்பதில் சில வேறுபாடுகள் உள்ளன. அவைகளை விளக்கவே பகவான் இங்கே மூன்று உதாரணங்கள் தருகிறார். புகை நெருப்பைச் சூழ்கிறது, ஆனாலும் நெருப்பு தொடர்ந்து எரிகிறது. இது ஒருவிதம். அழுக்கான கண்ணாடியில் பிரதிபலிக்கும் பொருளின் பிம்பம்

தெளிவாகத் தெரியாது; ஆனால் கண்ணாடியைத் தூய்மையாக்கிய பின் அப்பொருள் நன்றாகத் தெரியும். இது இரண்டாவது விதம். மூன்றாவது உதாரணம் கருப்பையில் இருக்கும் கரு. இது முற்றிலும் மூடப்பட்டு இருக்கிறது. இப்படி மனதில் தோன்றும் காமமும் ஞானத்தை இம்மூன்று விதங்களில் மறைக்கிறது.

பகவான் மேலும் கூறுகிறார், "காமம் என்ற உருவில் அறிவுற்றோர்க்கு என்றும் பகைவனாக இருப்பதும், திருப்தி அடையாததுமான இதனால் (காமத்தால்) ஞானம் மறைக்கப்படுகிறது."[52] அறிவுடையவனுக்கும் அறிவிலிக்கும் என்ன வித்தியாசம்? "காமத்தினால் நான் தீய வழிகளில் அழைத்துச் செல்லப்பட்டு விட்டேன்" என்பதை பின்விளைவுகளைச் சந்திக்கும் முன்னரே அறிவுள்ளவன் அறிந்து அதற்காக வருந்துகிறான். அதனால் காமமானது அறிவுள்ளவனின் எதிரி என்று கூறப்படுகிறது. இதற்கு மாறாக, பொருட்களின் மீது ஆசை கொள்ளும் சமயத்தில் மூடன் காமத்தைத் தன் நண்பனாக பார்க்கிறான். பின்னர் காமத்தின் பின்விளைவாகத் துன்பம் ஏற்படும்போது தான் இந்த மூடன் "காமத்தின் வசத்தில் சிக்கியதால் எனக்கு இந்தத் துன்பம் நேர்ந்தது" என்பதை உணர்கிறான். இந்தச் சுலோகத்தில் பகவான் காமத்தைத் "திருப்தி அடையாதது" என்று குறிக்கிறார். ஏன்? ஆசை, அதை அனுபவிப்பதன் மூலம் நீங்குவதில்லை. இதே கருத்தை மனு ஸ்ம்ருதியில், "எப்படித் தீயில் நெய்யை விடுவதால் அந்த தீ தணிவதில்லையோ, அது போல் காமத்தை அனுபவிப்பதன் மூலம் அது (காமம்) திருப்தியடைவதில்லை" என்ற சுலோகத்தில் பார்க்கலாம்.[53]

அடுத்தது, காமம் என்கிற பகைவன் எங்கிருக்கிறான் என்று பகவான் கிருஷ்ணர் கூறுகிறார். ஏனென்றால், பகைவன் எங்கிருக்கிறான் என்பது தெரிந்து விட்டால் அவனை அழிப்பது எளிதாகிவிடும். ஆகவே அவர், "இந்திரியங்கள் (புலன்கள்), மனம், புத்தி ஆகியவை இதன் (காமத்தின்) உறைவிடங்களாகக் கூறப்படுகின்றன. ஞானத்தை இவற்றின் மூலமாக மறைத்து, உடல் கொண்டவனை (ஜீவனை) இது மயக்குகிறது"[54] என்று கூறுகிறார்.

சரி, காமத்தின் உறைவிடம் எங்கே என்பதைச் சொல்லிவிட்டார். அதை எவ்வாறு வெல்வது? அதற்குப் பகவானின் உபதேசம், "பரதகுலத்திற் சிறந்தவனே! எனவே நீ முதலில் புலன்களைக் கட்டுப்படுத்தி ஞானத்தை மற்றும் விஞ்ஞானத்தை அழிக்கும் இந்தப் பாவியைத் துறப்பாய் (அழிப்பாய்)."[55] கீதையின் இரண்டாவது அத்யாயத்திலேயே பகவான் புலன்களால் வரும் தீமைகளைப் பற்றி இவ்வாறு குறிப்பிடுகிறார் "பரம்பொருளை அறிவதற்காக முயற்சி செய்யும் ஒரு விவேகியையும்

புலன்கள் வலிமையுடன் தாக்கி அவன் மனதைக்கடத்தி விடுகின்றன.''[56] அதனால் காமத்தை அழிக்க வேண்டும் என்றால் புலனடக்கம் மிகவும் இன்றியமையாதது. ஆனால் இது மட்டும் போதாது; ஏனென்றால், மனமும் புத்தியும் கூட காமத்தின் உறைவிடங்களாகும். ஆகவே, ஒருவன் தனது ஆத்மாவை அறிய வேண்டும் என்கிறார் பகவான். மனம், புத்தி என்ற இரண்டினும் ஆத்மா உயர்ந்தது. ஆதலால், தூய்மையான மனத்துடன் புத்தியை ஆத்மாவில் நிலைநிறுத்திக் காமத்தை அழிக்க வேண்டும் என்கிறார் பகவான்.[57] ''நான் இந்த உடல், மனம் ஆகியவற்றின் சேர்க்கையல்ல. மாறாக, நான் மாற்றமற்ற சுத்த சைதன்ய வடிவான ஆத்மா'' என்று அறிந்தால், தோன்றி மறையும் எப்பொருளையும் அவன் விரும்புவதில்லை.

ப்ருஹதாரண்யக உபநிஷத், ''ஆசையுள்ளவன் மறுஜன்மம் எய்துகிறான். ஆனால் ஆசையற்றவனுக்கு மறுபிறப்பு கிடையாது. காமமற்றவனும், காமத்திலிருந்து விடுபட்டவனும், ஆசைப்படும் பொருட்கள் அனைத்தும் அடையப்பெற்றவனும், எவன் ஆசைப்படும் எல்லாமே ஆத்மாவைத் தவிர வேறில்லையோ, அப்பேற்பட்டவனின் புலன்கள் புறப்படுவதில்லை (அவன் இறந்த பின் வேறு உடலுள் புகுவதுமில்லை). பிரம்மமான அவன் பிரம்மத்திலேயே ஒன்றிவிடுகிறான்''[58] என்று கூறுகிறது. இதிலிருந்து காமமற்ற நிலையை அடைவது எப்படி என்று புரிகிறது. ''ஆத்மா மட்டுமே இருக்கிறது, அதைக் காட்டிலும் இரண்டாவது பொருள் வேறு எதுவுமில்லை'' என்பதை ஒருவன் அறிந்தால், அவன் தான் ஆசைப்பட்ட அனைத்தையும் அடைந்தவனாக ஆகிவிடுகிறான். எப்படியென்றால், இவனுக்கு ஆத்மாவைத் தவிர ஆசைக்கு உரித்தான பொருள் வேறு இல்லை; மேலும் இவனே அந்த ஆத்மா என்பதையும் அறிகிறான். எனவே, ஆசைப்படும் எல்லாவற்றையும் இவன் அடைந்து விட்டான். இந்த நிலையில், ஆசைகள் அவனை விட்டு நீங்குகின்றன. பொதுவாக ஒரு குறிப்பிட்ட ஆசையைப் பூர்த்தி செய்தவுடன் அந்த ஆசை தற்காலிகமாக மட்டுமே ஒடுங்குகிறது; பின்னர், அதே ஆசை இன்னும் வலிமையுடன் ஓங்குகிறது. ஆத்மாவை அறிந்தவனுக்கு ஆசை என்பது எப்பொழுதுமே பூர்த்தி செய்யப்பட்டதாகவே இருக்கிறது. எனவே, ஆசைகள் அவனை விட்டு நீங்குகின்றன என்று கூறுவதே சரி. இவ்வாறு ஆசைகள் நீங்கினமையால் அவன் ஆசைகளற்றவனாகிறான்.

எனவே, ஆத்ம ஞானமடைந்த பின்னரே காமத்தை முற்றிலுமாக அழிக்க முடியும். இல்லையென்றால், காமத்தை ஒடுக்கி வைக்கலாமே தவிர அதன் விதை அழிவதில்லை. ஆகவே பகவான், புத்தியை ஆத்மாவில் நிலைநிறுத்துவதே காமத்தை முற்றிலுமாக அழிக்கும் என்கிறார். இந் நிலையை அடைவதற்குப் புலனடக்கம் ஒரு முக்கியமான சாதனமாகும்.

# 9. அசுத்த வாஸனைகள் மூன்று

பிரம்மஞானம் அடைவதற்காகத் தீவிரமாக முயற்சி செய்பவன் காமம், குரோதம், உலோபம் ஆகிய மூன்றை நீக்குவது மட்டுமல்லாது மூன்று அசுத்த வாஸனைகளை வெல்வதும் முக்கியமானது. (இங்கே வாஸனை என்ற சொல் மனப்போக்கு அல்லது உள்ளப்பாங்கு என்கிற பொருளைத் தருகிறது.) அவற்றில் முதலாவது உலக வாஸனை: உலகத்தில் உள்ளோர் குறித்த மனப்போக்கு, இரண்டாவது சாஸ்திர வாஸனை: சாஸ்திரம் குறித்த உள்ளப்பாங்கு, மூன்றாவது தேஹ வாஸனை: உடல் குறித்து ஒருவனின் உள்மனதில் இருக்கும் ஆழமான பதிவு. இம்மூன்றும் பரம்பொருளை ஒருவன் உணரப் பெருந்தடைகளாக இருக்கின்றன. இதனாலேயே முக்திகோபநிஷத், ''உலக வாஸனை, சாஸ்திர வாஸனை, மற்றும் தேஹ வாஸனை உள்ளவனுக்கு உண்மையறிவு ஒருபொழுதும் தோன்றுவது கிடையாது''[59] என்று கூறுகிறது.

வாஸனை என்பதை மனச் செயல்பாட்டின் விதை என்று கருதலாம். இதன் காரணமாகவே ஒருவனுக்கு மனதில் காமம், குரோதம் முதலிய உணர்வுகள் எந்த முன்யோசனையுமின்றி திடீரென்று தோன்றுகின்றன. இதற்கு ஓர் உதாரணத்தைப் பார்ப்போம். சிறுவன் ஒருவன் காளை மாடு ஒன்றினால் துரத்தப்பட்டு அச்சமுறுகிறான். அவன் அடுத்த முறை ஒரு காளை மாட்டைப் பார்க்கும் பொழுது தன்னை அறியாமலேயே அச்சம் கொள்கிறான். இது எப்படி நேர்கிறது? முதல் முறை அவனுக்குக் காளையிடம் நேர்ந்த அனுபவம் அவனுடைய மனத்தில் பதிவாகி ஒரு வாஸனையை உண்டாக்குகிறது. இந்த வாஸனை அவன் இரண்டாவது முறை வேறொரு காளையைப் பார்க்கும் போது தலை தூக்குகிறது. அதனால் அவன் மனம் அச்சத்தால் கலங்குகிறது. இது போல் மனதில் உறையும் வாஸனைகள் கணக்கற்றவை. நாம் இப்பிறவியிலும், நமது முற்பிறவிகளிலும் செய்தவற்றாலும், நமது எண்ணங்களினாலும் இந்த வாஸனைகள் மனதில் வேரூன்றி வளர்கின்றன.

பொதுவாக வாஸனைகளை இரண்டு விதமாகப் பிரிக்கலாம், ஒன்று நல்ல வாஸனைகள்: இவை ஆன்மிக முன்னேற்றத்திற்கு வழி வகுப்பன; மற்றொன்று தீய வாஸனைகள்: இவை ஆன்மிக முன்னேற்றத்திற்குத் தடைகளாக இருப்பன. ஒரு தீய வாஸனைக்கு நேரெதிரான நல்ல வாஸனையைக் கவனமுடன் வளர்த்தால் அந்தத் தீய வாஸனை தன் வலிமையை இழக்கிறது. எனவே ஒரு சாதகன் பொருத்தமான நல்ல வாஸனைகளை வளர்த்துத் தன்னைப் பாதிக்கும் அசுத்த வாஸனைகளை வெல்ல வேண்டும். இனி, அசுத்த வாஸனைகள் மூன்றையும் சற்று விரிவாகப் பார்ப்போம்.

உலக வாஸனை என்பது, “உலகத்தோர் யாவரும் என்னைப் பார்த்துப் புகழும்படியே நான் நடந்து கொள்வேன்; என்னுடைய நடத்தையைக் கண்டு எவரும் என்னைப் பழிக்கக் கூடாது” என்ற மனப்போக்கு. இந்த வாஸனை சாதகனுக்குத் தடைக்கல் ஆகும். ஏனென்றால், சாதகனால் அடையமுடியாத ஒன்றை இந்த வாஸனை எதிர்பார்க்க வைக்கிறது. எப்பொழுதுமே இவ்வுலகத்தில் நம்மையும் நம் செயலையும் கடிந்து கொள்பவர் சிலரேனும் இருப்பார்கள். சீதா தேவியையே எடுத்துக் கொள்வோம். அவள் கற்புக்கரசி. தன் கற்பின் சிறப்பை எடுத்துக்காட்ட தீயினுள் புகுந்து வெளிவந்தாள். அப்படியிருந்தும் அயோத்திநகர மக்கள் அவளுடைய கற்பைப் பழித்தனர். சீதையின் மேலுள்ள ஆசையினால் தான் ராமர் அவளை ஏற்றுக் கொண்டார் என்று ராமரையும் பழித்தனர். சற்றும் மாசற்ற தெய்வப்பிறவிகளான சீதைக்கும் ராமருக்குமே இந்த நிலை என்றால் மற்றவர்களைப் பற்றி நாம் என்ன சொல்ல இருக்கிறது? எனவேதான், “ஒருவன் எல்லோரையும் திருப்திப்படுத்த வழியேதும் இல்லை. ஆதலால் எது சரியோ அதையே அவன் எப்பொழுதும் செய்ய வேண்டும்”[60] என்று கூறப்படுகிறது. “ஒரு சாதகன் புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் சமமாகப் பார்க்க வேண்டும். உலக வாஸனை, அதாவது, ‘நான் எல்லோராலும் நல்லவன் என்று புகழப்பட வேண்டும்’ என்ற எதிர்பார்ப்பு அடைய முடியாத ஒன்று என்பதை உணர்ந்து இந்த வாஸனையிலிருந்து விடுபட வேண்டும்” என்று மோக்ஷசாஸ்திர நூல்கள் கூறுகின்றன.

இங்கே சில விஷயங்களை நாம் நன்கு புரிந்து கொள்வது அவசியம். முதலாவதாக, உலக வாஸனையை நீக்குதல் என்றால் மற்றவரின் கருத்தைச் சிறிதும் அக்கறை இல்லாமல் ஒதுக்குதல் என்பதாகாது. மற்றவரின் கூற்றைத் தன் முன்னேற்றத்திற்கு பயன்படுத்திக் கொள்வது தவறில்லை. ஆனால் தன்னை மற்றவர் புகழ்வதால் வரும் மகிழ்ச்சி மற்றும் இகழ்வதால் ஏற்படும் வருத்தம் இரண்டையும் அறவே ஒதுக்க வேண்டும். அடுத்தது, சாதகன் மற்ற சாதனைகளுடன் சேர்த்து உலக வாஸனையை ஒடுக்குவது என்பதைப் பொருத்தமாகச் செய்யவேண்டும். உதாரணமாக, ஒருவன் தம் பெற்றோரிடம் நற்பெயர் எடுப்பதற்காகத் தீயோர் சேர்க்கையைத் தவிர்க்கிறான் என்று வைத்துக் கொள்வோம். இது உலக வாஸனை தான். அதற்காக வேறு எதையும் செய்யாமல் இந்த வாஸனையை மட்டும் நீக்க முயலுதல் எந்தவொரு நன்மையும் பயக்காது. மற்றுமொரு உதாரணம்: ஒருவன், “நான் மற்றவருக்குக் கீழ்ப்படிய மாட்டேன்; அவர்கள் சொல்வதைப் பற்றி எனக்கு எந்த அக்கறையும் இல்லை” என்ற மனப்போக்குடன் செயலாற்றுவதைக் கவனித்துப் பார்த்தோமானால் இதுவும் உலக வாஸனை தான் என்று

புரியவரும். ஏனென்றால், "நான் யாருக்கும் கீழ்ப்படியாதவன்" என்கிற செருக்கு அவனுக்கு இருக்கிறது.

அடுத்தது, சாஸ்திர வாஸனை. இதை மூன்றாகப் பிரிக்கலாம்: கற்க வேண்டும் என்ற வெறி, கல்வியின் எல்லாப் பிரிவுகளையும் கற்க வேண்டும் என்ற ஆசை, சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட கர்மாக்களைச் செய்வதில் தேவைக்கதிகமான ஈடுபாடு. இதில் முதல் விதமான சாஸ்திர வாஸனைக்கு உதாரணமாகத் தைத்திரீய ப்ராஹ்மணத்தில் ஒரு கதை வருகிறது.[61] பரத்வாஜ முனிவர் வேதங்களைக் குறையறக் கற்பதற்காக மூன்று ஜன்மங்கள் எடுத்தாராம். அப்படியும் வேதம் முழுவதையும் கற்க முடியாததனால், நான்காவது பிறப்பில் தன் படிப்பைத் தொடர வேண்டும் என்று ஆசைப்பட்டாராம். அவரைக் கண்டு இரக்கங்கொண்ட இந்திரன், எல்லா வேதங்களையும் கற்பது என்பது முடியாத செயல் என்பதை அவருக்குப் போதித்து, ஸகுணப்ரஹ்மத்தைப் பற்றி அவருக்கு உபதேசித்தானாம். பரத்வாஜர் வேதங்களைக் கற்க வேண்டும் என்று ஆசைப்பட்டதில் தவறேதும் இல்லை. ஆனால் எல்லா வேதங்களிலும் வல்லுனராக வேண்டும் என்று அவருக்கு இருந்த வெறியைத் தான் நாம் சாஸ்திர வாஸனை என்கிறோம். இது ஆன்மிக வளர்ச்சிக்குத் தடை செய்கிறது. எந்த ஒரு சாஸ்திரத்தையும் முழுமையாகக் கற்க முடியாது என்பதை சாஸ்திர வாஸனையை ஒழிக்க நினைக்கும் சாதகன் தன் நினைவில் எப்பொழுதும் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

பல சாஸ்திரங்களைக் கற்க ஆசைப்படுவதும் அசுத்த வாஸனை தான். இது சம்பந்தமாகக் காவஷேய கீதையில் துர்வாச முனிவரைப் பற்றிய கதை ஒன்று உள்ளது. ஒரு முறை துர்வாச முனிவர் இறைவன் மஹாதேவனுக்குத் தனது வணக்கங்களைச் சமர்பிக்க பரமசிவனின் அவைக்கு வந்தார். அப்போது ஒரு வண்டி நிறைய புத்தகங்களுடன் அவர் வந்தார். அதைப் பார்த்த நாரதர், துர்வாசரைப் பொதி சுமக்கும் கழுதைக்கு ஒப்பிட்டு ஏளனம் செய்தார். அதைக் கேட்டு எரிச்சலுற்ற துர்வாசர் சாஸ்திர வாஸனையிலிருந்து விடுபட்டவராகித் தம் புத்தகங்கள் எல்லாவற்றையும் கடலில் எறிந்தார். அதன் பின் சிவபெருமான் துர்வாச முனிவருக்கு ஆத்மாவைப் பற்றி உபதேசித்தார் என்று கதை.

வெவ்வேறு சாஸ்திர நூல்களை ஆராய்தலால் பரம்பொருளைப் பற்றிய அறிவு ஏற்படாது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இதைக் கடோபநிஷத், "இந்த ஆத்மா மிகுந்த கல்வி அறிவினாலோ, நூல்கள் கூறும் பொருளைப் புரிந்து கொள்ளும் சக்தியினாலோ, (நூல்கள் கூறுபவற்றை) கேட்பதால் மட்டுமோ அடையப்படுவதில்லை"[62] என்று கூறுகிறது. சாந்தோக்ய உபநிஷத்தில் நாரதரைப் பற்றிய செய்தியும்

இதே கருத்தை வெளிப்படுத்துகிறது.[63] பல்வகை விஷயங்களைக் கற்று அவற்றில் மிகுந்த தேர்ச்சி பெற்றிருந்தாலும், ஆத்மாவை அறியாததால் நாரதர் சோகத்திலிருந்து விடுபடவில்லையாம். சோகத்தைப் போக்க வல்ல ஆத்மஞானத்தைப் பெறுவதற்காக நாரதர் சனத்குமாரரின் சிஷ்யர் ஆனார் என்று அறிகிறோம். இதையெல்லாம் கருத்தில் கொண்டே சாஸ்திரம், "புனித நூல்கள் பற்றிய பேச்சு என்கிற அழுக்குக் கந்தல் துணியை அசை போடுவதால் என்ன பயன்? புத்திசாலிகள் தம்முள் ஒளிரும் ஞான தீபத்தைத் கண்டறிய எவ்வகையிலும் முயல வேண்டும்" என்கிறது.[64]

மூன்றாவது விதமான சாஸ்திர வாஸனை விதிக்கப்பட்ட கர்மாக்களைச் செய்வதில் அளவுக்கதிகமான பற்று, அதாவது சிறிய விஷயங்களில் அளவுக்கு அதிகமாகக் கவனம் செலுத்துவது என்பதாகும். கர்மாக்களை முழுதும் துறக்கும் நிலைக்கு இன்னும் வராதவன் தனக்கு விதிக்கப்பட்ட கர்மாக்களைச் சிரத்தையுடன் செய்வது மிக அவசியம். அவ்வாறு செய்யும் போது எளிதில் திருப்தியடையாமல் ஏதாவது ஒரு விஷயத்தில் தேவையில்லாமல் கவனம் செலுத்துவது ஆன்மிக முன்னேற்றத்திற்குத் தடையாகவே அமைகிறது. யோக வாஸிஷ்டத்தில் தாசுரன் என்பவனைப் பற்றி ஒரு கதை வருகிறது. அதை இங்கே நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். தாசுரன் சாஸ்திரக் கர்மாக்களைச் செய்யும் போது எளிதில் திருப்தி அடையாதவன். எனவே, தன் கர்மாக்களைச் செய்யத் தூய்மையான இடம் ஒன்றைத் தேடினானாம். அவன் எதிர்பார்த்தபடி முற்றும் தூய்மையான இடம், இம்மூன்று உலகங்களிலும் அவனுக்கு கிடைக்கவில்லையாம்.[65]

ஜீவன்முக்திவிவேகம் என்ற நூலில் வித்யாரண்யர் வாஸனைகளை அழிப்பது பற்றி மிக விரிவாக எழுதி இருக்கிறார். அதில் அவர் சாஸ்திர வாஸனை கல்விச் செருக்கிற்கு வழி செய்கிறது என்று சொல்கிறார். இந்தக்காரணத்தாலும், சாஸ்திர வாஸனையினால் உண்டாகும் ஆசைகள் பூர்த்தி செய்ய முடியாதன என்பதாலும், நாம் சாஸ்திர வாஸனையைத் தூய்மையற்ற வாஸனையாகக் கருதுகிறோம்.

இறுதியாக, மூன்றாவதான தேஹ வாஸனை, அதாவது உடல் குறித்த உள்ளப்பாங்கு. இதையும் மூன்றாகப் பிரிக்கலாம். இதில் முதலாவது முற்றிலும் கீழ்த்தரமானதான, "நான் இந்த உடல்" என்ற வாஸனை; அதாவது ஆத்மாவையும் உடலையும் ஒன்றாகக் கருதுதல். உடலின் தன்மைகளை ஆத்மாவிற்கு ஏற்றுதல் சாஸ்திரத்திற்கு விரோதமானது; தவிர இதுவே எல்லாத் துன்பத்திற்கும் காரணம். எனவே இவ்வாஸனை மிகவும் கீழ்த்தரமான ஒன்றாகும். துரதிருஷ்டவசமாக, எல்லாரிடத்தும்

இவ்வாஸனையே பரவலாகக் காணப்படுகிறது. மேலும் இந்த வாஸனை (பல பிறவிகளில்) நன்கு வேரூன்றி இருப்பதால், இதைக் களைவது அவ்வளவு எளிதல்ல. எனவே, சாதகன் இந்த வாஸனைக்கு நேரெதிரான வாஸனையான "ஆத்மா உடலிலிருந்து வேறுபட்டது" என்பதை மிகுந்த கவனத்துடன் வளர்க்க வேண்டும்.

இரண்டாவது விதமான தேஹ வாஸனை உடலை அழகாகவும் கவர்ச்சிகரமாகவும் வைத்துக்கொள்வதில் மிகுந்த அக்கறை செலுத்துதல். இந்த வாஸனையின் காரணமாகவே மக்கள் ஒப்பனைப் பொருட்களைப் பயன்படுத்துவது, கங்கை முதலிய புண்ணிய நதிகளில் குளிப்பதை நியமமாக வைத்துக்கொள்வது போன்றவைகளை செய்வதில் நாட்டம் செலுத்துகின்றனர். தூய்மை என்பது போற்றத்தக்க தன்மை தான். ஒவ்வொருவரும் வளர்க்க வேண்டிய எட்டு நற்குணங்களில் இதுவும் ஒன்று. யோக சாஸ்திரத்திலும் தியானம் செய்வதற்கு முக்கியமான முன்னோடியாகத் தூய்மை கூறப்பட்டிருக்கிறது.[66] ஆனால் இவ்வுடலை எப்பொழுதும் தூய்மையாக, நேர்த்தியாக வைத்திருக்க முடியும் என்ற தவறான நம்பிக்கை சிக்கலில் கொண்டு விடுகிறது. ஏனென்றால், எதை அடைய முடியாதோ அதை அடைவதற்கு இந்த வாஸனை நம்மை முயலச் செய்கிறது.

பொலிவு, நறுமணம் முதலிய குணங்கள் ஒப்பனைப் பொருட்களின் தன்மைகளே தவிர தசை, கொழுப்பு, எலும்பு இவைகளால் ஆன உடலின் தன்மைகள் அல்ல. கண்ணுக்கு அழகான ஆடை உடலை எந்த விதத்திலும் மாறுபடுத்துவதில்லை. மிளகு போன்றவற்றை உண்பதால் குரல் இனிமையாகிறதே என்றால் அது எப்பொழுதும் பலனளிக்காது; அப்படியே பலனளித்தாலும், அதன் ஏற்பட்ட விளைவுகள் வெகுநேரம் நீடிப்பதில்லை. சாஸ்திரங்களில் கூறப்பட்ட வழி, அதாவது கங்கை போன்ற புனித நதிகளில் நீராடி ஒருவன் தூய்மை அடைதல் என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். ஆனால், அதே சாஸ்திரம் பல இடங்களில் இந்த உடல் எப்பொழுதும் அசுத்தமானது தான் என்பதை நமக்கு நன்கு வலியுறுத்துகிறது என்பதை மறக்கக்கூடாது.

மூன்றாவது விதமான தேஹ வாஸனை மேற்கூறிய (இரண்டாவது விதமான) தேஹ வாஸனையுடன் தொடர்புடையது; உடலில் உள்ள குற்றங்குறைகளைக் களைவதில் விடாமுயற்சி. நோயை நீக்க முயல்வது இந்த வாஸனையின் வெளிப்பாடுதான். இதில் சிக்கல் என்னவென்றால் நோய் வருவதை எப்பொழுதுமே தடுக்க முடியாது; அதே போல், எல்லா நோய்களையும் குணப்படுத்த முடியாது. உடலைப் பொறுத்த வரை அசுத்தமானவற்றின் இருப்பிடமாக இருப்பது அதன் (உடலின்) தன்மை

எனச்சாஸ்திரம் மிகத்தெளிவாகக் கூறுகிறது. உதாரணமாக, மைத்ராயணீ உபநிஷத், "இவ்வுடல் துர்நாற்றமுடையது, திடமற்றது; தோல், எலும்பு, தசை, தசைநார், எலும்பு மஜ்ஜை, இரத்தம், விந்து, கபம், கண்ணீர், வாதநீர், சிறுநீர், மலம், பித்தநீர், கோழை ஆகியவற்றின் திரண்ட சேர்க்கை. இதில் (இந்த உடலில்) ஒருவனின் ஆசையைத் தீர்த்துக் கொள்வது என்பது எந்த விதத்தில் சரி?"[67] என்று கேட்கிறது.

இது சம்பந்தமாக ஒரு விஷயத்தை நாம் வலியுறுத்த வேண்டும். ஒரு சாதகன் தூய்மையாக இருக்க வேண்டும்; தன் உடலையும் கவனமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். அசுத்தமான உடலோ, நோயால்வாடுகின்ற உடலோ ஆன்மிக சாதனைக்கு ஏற்றதல்ல. இந்த விஷயத்தில் எந்த ஐயமும் இல்லை. ஆனால், தான் நேர்த்தியாக இருக்கவேண்டும் என்கிற ஆசையையும், நோயற்றிருத்தல், குறையற்றிருத்தல் முதலியவற்றைப் பற்றி ஓயாது சிந்தனை செய்வதையும் சாதகன் விட்டுவிட வேண்டும். தூய்மையில் நிலை பெற்ற ஒருவன் உடலில் பற்றற்றவன் ஆகிறான் என்ற யோக ஸூத்ரத்தின் கூற்று இங்கே குறிப்பிடத்தக்கது.[68] பொதுவாக, தினமும் குளிப்பவன் உலர்ந்த வியர்வை முதலான துர்நாற்றங்களை உடனே கண்டு கொள்கிறான்; அழுக்கு மூட்டையாக உள்ளவனோ இவற்றை இயல்பாகக் கவனிப்பதில்லை. எனவே, தனது உடலைத் தூய்மையாக வைத்திருப்பவனே உடலின் இயல்பான அசுத்தத்தை எளிதில் புரிந்துகொள்கிறான்.

## 10. இறைவன் பிரபஞ்சத்தின் காரணம்

நாம் காரணங்களை இருவகையாகப் பார்க்கமுடிகிறது. சாஸ்திரத்தில் அவையிரண்டும் உபாதான காரணம், நிமித்த காரணம் என்று அழைக்கப் படுகின்றன. உபாதான காரணம் என்பது ஒரு காரியத்தின் (அதாவது உண்டாக்கப்படும் பொருளின்) உற்பத்திக்குப் பயன்படும் மூலப்பொருள்; நிமித்த காரணமானது காரியத்தை செய்வதற்குக் கருவியாக இருப்பது. இதற்கு உதாரணமாக ஒரு பானையைச் சொன்னால், அதன் உபாதான காரணம் மண்; நிமித்த காரணம் குயவன். இப்பொழுது, பிரபஞ்சத்தின் விஷயத்திற்கு வருவோம். நாம் இப்பிரபஞ்சத்தைப் பார்க்கிறோம். அதன் விஷயத்தில் கீழ்க்கண்ட கேள்விகள் எழுகின்றன. இந்த பிரபஞ்சத்தின் உபாதான காரணம் எது? இறைவன் இவ்வுலகின் உபாதான காரணமா இல்லையா? ப்ரஹ்ம ஸூத்ரத்தில் பாதராயணர் இந்த விஷயத்தைப் பற்றிப்பேசுகிறார். வேதாந்தத்தின் கோட்பாடு என்னவென்றால் இறைவன் (பிரம்மம்) இந்தப் பிரபஞ்சத்தின் நிமித்த காரணம் மட்டுமல்ல, உபாதான காரணமும் கூட என்பது.

இக்கோட்பாட்டிற்கு எதிராகச் சில வாதங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. முதலில் அவற்றை விவரிப்போம். சில உபநிஷத்துக்களில், இறைவன் பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்கும் முன்னர் யோசித்தார் என்பது போன்ற வாக்கியங்கள் காணப்படுகின்றன. ஒரு குயவன் பானையைப் பற்றிச் சிந்தித்த பின்னர் பானையைச் செய்கிறான். அது போலவே, இறைவனும் பிரபஞ்சத்தைப் பற்றிச் சிந்தித்து அதைச் செய்கிறான். இப்படிக் குயவன் போல் ஒரு காரியத்தைத் தோற்றுவிப்பதால் இறைவன் பிரபஞ்சத்தின் நிமித்த காரணமே. ஒரு பொருளின் உபாதான காரணமானது தானாகவே யோசித்து அந்த பொருளைச் செய்வதை நாம் இவ்வுலகில் எங்கும் பார்ப்பதில்லை.

அடுத்தது, சாஸ்திரம் இறைவனை எல்லாவற்றின் தலைவன், ஈசுவரன் என்றே குறிப்பிடுகிறது. உலகத்தில் நாம் பார்த்தோம் என்றால், அரசர் முதலிய தலைவர்கள் நிமித்த காரணமாகவே இருக்கிறார்களே தவிர உபாதான காரணமாக இருப்பதில்லை. எந்த ஓர் அரசனாவது தான் ஏற்படுத்திய அரண்மனைக்கோ அல்லது சாலைக்கோ மூலப்பொருளாக அதாவது உபாதானமாக இருப்பதைப் பார்த்திருக்கிறோமா?

மேலும், இவ்வுலகில் பல குறைபாடுகள் தெரிகின்றன. செய்யப்பட்ட பொருள் (காரியம்) மாசுபட்டிருந்தால் மூலப்பொருளில் (உபாதானத்தில்) மாசுள்ளது என்று ஊகிக்கலாம். எனவே, இறைவன் இவ்வுலகின் உபாதான காரணமாக இருந்தால், அவன் மாசுள்ளவன் என்றாகிவிடும். இறைவன் அசுத்தமானவன் என்ற கருத்து கேட்பதற்கு நன்றாகவும் இல்லை, சாஸ்திரங்களினாலும் மறுக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, சுவேதாசுவதர உபநிஷத் பரம்பொருளை மாற்றமற்றது, மாசற்றது என்றே கூறுகிறது.[69] எனவே, இறைவனை இவ்வுலகின் உபாதான காரணமாகக் கூற முடியாது.

இவ்வாறான வாதங்களை முன்வைத்து பூர்வபக்ஷி, “இறைவன் இந்த பிரபஞ்சத்தின் நிமித்த காரணம் மட்டுமே, உபாதான காரணம் இல்லை” என்று கூறுகிறான். இந்த விஷயத்தில் உபநிஷத்துக்களின் கருத்தைச் ஸூத்ரம் இயற்றிய பாதராயணர் கீழ்க்கண்ட ஸூத்ரத்தின் மூலமாக மிகத் தெளிவாக அறிவிக்கிறார்: “பிரதிக்ஞை (அறுதியுரை), திருஷ்டாந்தம் (எடுத்துக்காட்டு) இரண்டும் முரண்படாமல் இருக்க வேண்டுமென்றால் பிரம்மம் மூலப்பொருளாகவும் இருக்க வேண்டும்.”[70] என்று கூறுகிறார். இனி, இந்த ஸூத்ரத்தைச் சற்று விரிவாகப் பார்ப்போம்.

சாந்தோக்ய உபநிஷத்தில் உத்தாலக ஆருணி என்ற முனிவர் தன் மகன் சுவேதகேதுவை நோக்கி இவ்வாறு கேட்டார், “எந்த உபதேசத்தினால் கேட்கப்படாதது கேட்கப்பட்டதாக ஆகிறதோ, எதனால் நினைக்கப்

படாதது நினைக்கப்பட்டதாக ஆகிறதோ, அறியப்படாதது அறியப் பட்டதாக ஆகிறதோ, அந்த உபதேசத்தைப் பற்றிக் கேட்டாயா?"[71]. இந்த வாக்கியத்தில் குறிப்பிடப்படுவது மூலப்பொருள்தான் என்பதை நாம் எளிதாகத் தீர்மானிக்கலாம். ஒரு பொருளின் நிமித்த காரணத்தைத் தெரிந்து கொண்டதனால் அப்பொருளைப் பற்றிய அறிவு ஏற்படுவது இல்லை. மாறாக, ஒரு பொருளின் இருப்பு அதன் மூலப்பொருளைச் சார்ந்தே இருப்பதால், மூலப்பொருளை நாம் அறிவதால் அந்தப் பொருளையே அறிந்ததாக ஆகிறது. ஆகவே, உத்தாலகரின் அறுதியுரை உலகத்தின் உபாதான காரணத்தை பற்றியதுதான். பரம்பொருளான பிரம்மத்தை அறிந்தால் எல்லாமே அறியப்படுகிறது என்று சாந்தோக்ய உபநிஷத் விளக்குவதால், பிரம்மம் தான் இந்த உலகத்தின் உபாதான காரணமாக இருக்கவேண்டும். இல்லாவிட்டால், இந்த அறுதியுரை முரண்பட்டுவிடும்.

மற்ற உபநிஷத்துக்களிலும், இதே அடிப்படைக் கருத்தைப் பார்க்கலாம். உதாரணமாக, ப்ருஹதாரண்யக உபநிஷத்தில் யாக்ஞவல்க்யரின் அறுதியுரையைக் கூறலாம், "அன்பிற்குரியவளே, ஆத்மா பார்க்கப் பட்டால், கேட்கப் பட்டால், நினைக்கப் பட்டால், தியானிக்கப் பட்டால் இது எல்லாம் அறியப்பட்டதாகும்."[72] மேலும் முண்டக உபநிஷத்தில் சௌனகன் தன் குரு ஆங்கீரசரைக் கேட்கிறான், "எது அறியப்பட்டால் இது எல்லாம் அறியப்பட்டதாகும்?"[73] என்று. பிரம்மம் நிமித்த காரணம் மட்டுமே, உபாதான காரணமல்ல என்று சொன்னால் உபநிஷத்துக்களில் பலவிடங்களில் வரும் இதுபோன்ற அறுதியுரைகள் முரணாகிவிடும்.

மறுபடியும் சாந்தோக்ய உபநிஷத்திற்கு வருவோம். இங்கே உத்தாலகர் கொடுக்கும் பல உதாரணங்கள் உபாதான காரணத்தையே குறிக்கின்றன. எடுத்துக்காட்டாக அவர், "ஒரு மண் கட்டியை அறிவதால் மண்ணினால் செய்யப்பட்ட எல்லாப் பொருட்களும் அறியப்பட்டதாக ஆகின்றன. எல்லா மாறுதல்களும் சொல்லையே ஆதாரமாகக் கொண்டன; அவை வெறும் பெயர்களே. மண்ணாக இருத்தல் என்பது மட்டுமே உண்மை"[74], என்கிறார். மண்ணை அறிவதால், மண்ணால் செய்யப்பட்ட குடம் முதலிய பொருட்கள் அறியப்பட்டவையாகின்றன; ஏனென்றால் குடத்திற்கு மண்ணைக் காட்டிலும் வேறான இருப்பு கிடையாது. "குடம்" என்பது மண்ணின் ஒரு குறிப்பிட்ட உருவத்தைக் குறிக்கும் ஒரு சொல் மட்டுமே. உத்தாலகர் இன்னொரு உதாரணமும் கூறுகிறார், "ஒரு தங்கக் கட்டியை அறிவதால், தங்கத்தால் செய்யப்பட்ட எல்லாப் பொருட்களும் அறியப்பட்டவை ஆகின்றன"[75]. பரம்பொருள் நிமித்தகாரணமாக மட்டும் இருந்தால் இது போன்ற உதாரணங்கள் எல்லாம் பொருத்தமற்றவை ஆகிவிடும். எனவே தான் ப்ரஹ்ம ஸூத்ரம், "பிரம்மமானது உபாதான

காரணம் இல்லை என்றால் உபநிஷத்துகளில் வரும் அறுதியுரைகளும் அவற்றை விளக்கும் உதாரணங்களும் முரண்பட்டுவிடும்'' என்று குறிப்பிட்டுக் கூறுகிறது.

''மூலப்பொருளாகவும் ...'' என்று கூறியிருப்பதால், இச்ஸூத்ரத்திலிருந்து பிரம்மம் நிமித்த காரணமும் கூட என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். பரம்பொருளல்லாத வேறொன்று இவ்வுலகிற்குக் காரணமாக இருந்தால், பரம்பொருளை அறிவதால் மட்டுமே மற்ற எல்லாம் அறியப்பட்டதாக ஆகிவிடாது. ஆகவே, பிரம்மம் உபாதான காரணம் இல்லை என்று சொன்னால், இதுவரையில் பார்த்த அறுதியுரைகளும் அவற்றிற்கான உதாரணங்களும் பொருத்தமற்றவை என்றாகிவிடும். மேலும், சாந்தோக்ய உபநிஷத், இந்தப் பிரபஞ்சம் தோன்றுவதற்கு முன்னால் பரம்பொருள் ஒன்றே இரண்டற்றதாக இருந்தது என்று மிகத் தெளிவாகக் கூறுகிறது. மேலும், பரம்பொருள் யோசித்த பின்னர் இவ்வுலகைத் தோற்றுவித்தது என்றும் கூறுகிறது.[76] இதிலிருந்து பிரம்மம் தான் உலகின் நிமித்த காரணம் என்பதையும் நாம் புரிந்து கொள்ளலாம்.

கடைசியாக, எந்த ஓர் உபாதான காரணமும் தானாகவே யோசித்துக் காரியத்தைத் தோற்றுவிப்பதாக நாம் உலகில் பார்ப்பதில்லை என்ற ஓர் ஆட்சேபணை எழுந்தது. இந்த ஆட்சேபணை உலகின் காரணம் எது என்ற விஷயத்தில் ஏற்புடையதல்ல. ஏனென்றால், பிரபஞ்சத்தின் காரணத்தைப் பற்றி நாம் வேதங்களின் மூலமாக மட்டுமே அறிந்து கொள்ளமுடியும். மேலும், பிரம்மம் உலகமாகத் தோன்றும் போது பிரம்மம் எந்த விதமான மாறுதலையும் அடைவதில்லை என்பதையும் நாம் உபநிஷத்துக்களிலிருந்து தெரிந்துகொள்ள முடிகிறது. மாறாக, அது எப்பொழுதும் முழுமை மாறாது இருக்கிறது. எவ்வாறு ஒரு கயிறு இருட்டில் சரியாகப் பார்க்கப்படாததால் ஒரு பாம்பாகவோ அல்லது தரையில் உள்ள பிளவாகவோ தோன்றுகிறதோ, அது போல் மாயையின் காரணமாகப் பிரம்மம் இந்த உலகமாகத் தோன்றுகிறது.

## 11. இறைவன் பாரபட்சமுள்ளவனல்லன், கொடியவனுமல்லன்

இந்தப் பிரபஞ்சத்தில் உயர்வு தாழ்வு என்பது எங்கும் பரவியுள்ளது. தேவர்கள் சுவர்க்கத்தில் பேரின்பம் அனுபவிக்கிறார்கள், மனிதனுக்கு மேலான சக்தி உள்ளவர்கள் என்றும் சொல்லப்படுகிறது. இந்த உலகின் படைப்புகளுக்குள் பார்த்தால், மனிதர்களினும் கீழானவை விலங்குகள். மூடனுக்கும் புழுவை மிஞ்சிய செயல்திறன் உண்டு. இவ்விதமாகப் பார்த்தால் மனிதர்களைப் படைப்பின் நடுத்தரவர்க்கமாகக் கருதலாம்.

உலகத்தில் சமமின்மை மட்டுமன்றிப் பெருந்துயரையும் காண்கிறோம். மனிதர்களும் சரி, விலங்குகளும் சரி, ஏதோவொரு நாள் இறக்க நேரிடும்; சுவர்க்கத்தில் உள்ளவர்களும் எந்தப் புண்ணிய வினையின் பலனாக சுவர்க்கத்தை அடைந்து அவ்வாசத்தை அனுபவிக்கிறார்களோ, அந்த வினையின் பலன் தீர்ந்தவுடன் மனித உலகத்திற்குத் திரும்பயாக வேண்டும். ஒரு பாவமும் அறியாத சின்னஞ்சிறு குழந்தைகள் கூடச் சில சமயங்களில் பெருந்துன்பத்திற்கு ஆளாகிறார்கள். பிணி, மூப்பு இவை எல்லோரையும் துயரத்திற்கு ஆளாக்குகின்றன. இவ்வாறு, துன்பமும் சமமின்மையும் பிரபஞ்சத்தில் எங்கும் எப்போதும் உள்ளன.

இறைவன் (பிரம்மம்) இந்தப் பிரபஞ்சத்தின் உபாதான காரணமாகவும் நிமித்த காரணமாகவும் இருக்கிறான் என்பது வேதாந்தத்தின் முடிவு. எனவே சமமின்மையும் துயரும் பரவியுள்ள இவ்வுலகத்தை இறைவன் படைக்கிறான் என்றுள்ளபோது உலகத்தைச் சமமின்றிப் படைப்பதால் இறைவன் பாரபட்சமுடையவன் என்று ஆகமாட்டானா? மேலும் துன்பம் நிறைந்த இவ்வுலகைப் படைப்பதனால் இறைவன் கருணையற்றவன் என்றும் ஆகமாட்டானா? பாரபட்சத்துடன் கருணையற்று இருப்பவனான இறைவன் உண்மையான பரம்பொருளாக இருக்கவே முடியாது. இந்த உலகின் நிமித்த காரணம் இறைவன் என்று ஏற்றுக் கொண்டதனாலேயே இந்த முடிவிற்கு நாம் தள்ளப் படுகிறோம். இதை (அதாவது இறைவன் பாரபட்சம் உடையவன், கருணையற்றவன் என்ற முடிவை) நாம் ஒப்புக் கொள்ளமுடியாத காரணத்தால் இறைவன் இந்தப் பிரபஞ்சத்தைப் படைக்கவில்லை என்றே சொல்ல வேண்டும்.

இந்த வாதத்தைப் பாதராயணர் ப்ரஹ்ம ஸூத்ரத்தில் மறுத்துரைக்கிறார். ஒரு ஸூத்ரத்தில் அவர், "மற்ற காரணக் கூறுகளைக் கருதுவதால், பாரபட்சமும் கொடூரமும் இறைவனுக்கு இல்லை; வேதங்கள் அவ்வாறே மொழிகின்றன" என்கிறார்.[77] இறைவன் இவ்வுலகைப் படைப்பதில் எந்தக் காரணக் கூற்றையும் கருத்தில் கொள்ளாமல் ஏதேனும் ஒரு விதத்தில் படைத்திருந்தால் நாம் அவனைப் பாரபட்சமுள்ளவன், கருணையற்றவன் என்று குற்றம்சாட்டலாம். ஆனால் இறைவன் குற்றமற்றவன். சமமில்லாத இவ்வுலகை அவன் ஒவ்வொரு உயிரின் பாவ புண்ணியங்களுக்கேற்பப் படைக்கிறான். இறைவனை நாம் மழைக்கு ஒப்பிடலாம். ஒரே மழையின் காரணமாக நெல், வாற்கோதுமை போன்ற பல பயிர்கள் விளைகின்றன. பயிர்களுக்குள் வேற்றுமை அவற்றின் விதைகளின் வேற்றுமையினால் ஏற்படுகிறது. வாற்கோதுமை விதை நெல்லைப் போல் விளையாததற்கு மழையைக் குற்றம் கூற முடியுமோ? அதே போல், தேவர், மனிதர் முதலான உயிர்களுக்கும் இறைவனே காரணம். முற்பிறவியில் உயர்ந்த புண்ணியம் செய்து ஒருவன் தேவப் பதவியை அடைகிறான்.

முற்பிறவிகளில் பாவமும் புண்ணியமும் கலந்து செய்து ஒருவன் மனிதப் பிறவியை அடைகிறான்.

இறைவன் பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப இவ்வுலகிலுள்ள உயிர்களைப் படைக்கிறான் என்பது எப்படித் தெரியும்? ஸூத்ரமியற்றியவர் கூறுகிறார், "...வேதங்கள் அவ்வாறே மொழிகின்றன".[78] ப்ருஹதாரண்யக உபநிஷத், "அது நல்ல செயல்களால் புண்ய வடிவாகவும் தீய செயல்களால் தீய வடிவாகவும் ஆகிறது"[79] என்று கூறுகிறது. கீதையிலும் பகவான், "எவர் என்னை எவ்வழியில் வழிபடுகின்றனரோ, அவர்தம் ஆசைகளை நான் அவ்வழியில் நிறைவேற்றுகிறேன்"[80] என்கிறார்.

ஸூத்ரகாரர் மேலும் ஒரு பூர்வபக்ஷத்தை எடுத்துக் கொண்டு அதற்கும் விடையளிக்கிறார் "படைப்பிற்கு முன் கர்மாவில் பாகுபாடு இல்லாததால் இது முடியாது என்றால், அப்படியில்லை; உலகம் அனாதியானதனால்."[81] முதலில் இந்த பூர்வபக்ஷத்தைப் பார்ப்போம். "பிரபஞ்சம் தோன்றுவதற்கு முன்னால் இறைவன் படைப்பதற்குக் காரணக்கூறான கர்மா, அதாவது, எவ்விதமான பாவச்செயலோ அல்லது புண்ணியச்செயலோ இருந்திருக்க முடியாது. இதை நாம் உபநிஷத்தின் மூலம் தெரிந்து கொள்ளலாம். சாந்தோக்ய உபநிஷத், "இன்முகம் கொண்டவனே! ஆதியில் இது எல்லாம் ஸத்தாகவே (பரம்பொருளாகவே) இருந்தது; ஒன்றாகவும், இரண்டற்றதாகவும்...",[82] என்று கூறுவதால், படைப்பிற்கு முன்னால் வேற்றுமைகள் இல்லை என்பதைப் புரிந்து கொள்ளலாம். எனவே, இறைவன் இவ்வுலகைப் படைத்தான் என்று கூறினால், படைப்பின் ஆரம்பத்தில் காணப்படும் சமமின்மைக்கு அவனே பொறுப்பாகிறான். (முதற் படைப்பிற்கு) அடுத்து வரும் பிறவிகளில் மனிதர் செய்யும் நல்வினை மற்றும் தீவினைகளுக்கு ஏற்றவாறு இறைவன் அவர்களுக்கு நற்பயனையோ தீய பயனையோ தருகிறான் என்று வேண்டுமானால் சொல்லலாம். ஆனால், படைப்பின் ஆரம்பத்தில் உள்ள சமமின்மைக்கும் துயருக்கும் இறைவனே காரணமாக இருப்பதால், அவன் பாரபட்சம், கருணையின்மை என்ற குற்றங்களுடையவன்." இது ஆட்சேபம்.

இந்த வாதத்திற்கு வேதாந்தியின் பதில், முதல் படைப்பு என்று எதுவும் இல்லை என்பதே. ஸம்ஸாரத்திற்கு (பிறப்பு, இறப்பு என்ற சுழற்சிக்கு) துவக்கம் என்பது கிடையாது. அதாவது, இதுதான் படைப்பின் துவக்கம் என்பது கிடையாது. ஒவ்வொரு படைப்பிற்கு முன்னும் மற்றொரு படைப்பு உண்டு. அதிலுள்ள உயிர்களுக்குப் பாவ புண்ணியங்களும் உண்டு. இப்படி ஒவ்வொரு படைப்பிலும் சமமின்மை பரவியுள்ளது.

ஸம்ஸாரத்திற்குத் துவக்கம் கிடையாது என்பதை எப்படி அறிகிறோம்? இதற்குப் பாதராயணர் "அறிவிற்குப் பொருத்தமாக இருப்பதாலும்,

சாஸ்திரத்தில் கூறப்படுவதாலும்"[83] என்று பதில் கூறுகிறார். சமமில்லாத உயிர்கள் கொண்ட பிரபஞ்சத்திற்கு முதல் படைப்பு ஒன்று இருந்தது என்று வைத்துக் கொள்வோம். அவ்வாறிருந்தால், உலகின் தோற்றம், தற்செயலாகவும் தாறுமாறாகவும் ஏற்பட்டதாகவே கூறவேண்டியிருக்கும். இறைவன் இப்பேற்பட்ட பிரபஞ்சத்திற்குக் காரணமாக இருக்க முடியாது; ஏனெனில், முன்னால் சொல்லியபடி அவன் உயிர்களின் முந்தைய வினைகளுக்கு ஏற்பவே இவ்வுலகைப் படைக்கிறான். உயிர்கள் கொண்ட இப்பிரபஞ்சத்தின் தோற்றத்திற்கு முன்னர், எந்தக்கர்மாவும் இருந்திருக்க முடியாது. எனவே முதல் படைப்பு கொண்ட பிரபஞ்சத்திற்கு இறைவன் காரணமாக இருக்க முடியாது. ஒரு வேளை அவித்யை காரணமோ என்றால் அதுவும் முடியாது. ஏனென்றால், முன்வினை இல்லாத போது அவித்யை எல்லா உயிர்களுக்கும் ஒரே ஸ்வரூபத்தில் தான் இருக்க முடியும். எனவே, முதல் படைப்பு கொண்ட பிரபஞ்சம் தற்செயலாகவே தோன்றியிருக்க வேண்டும் என்றே சொல்ல வேண்டிவரும்.

தற்செயலான நிகழ்வுகள் நடக்கக்கூடும் எனில், உலகத்து உயிர்களுக்கும் எக்காரணமுமின்றி இன்ப துன்பங்கள் ஏற்படலாம். ஒரு மனிதனின் நல்ல செயல்களினால் நற்பயனும் தீய செயல்களால் தீய விளைவுகளும் ஏற்பட வேண்டிய அவசியமில்லை. பிரபஞ்சத்தில் எது வேண்டுமானாலும் நடக்கலாம் என்றிருந்தால் மோக்ஷம் அடைந்தவர்களும் உலகில் மீண்டும் பிறக்கலாம். இவை எல்லாம் ஒப்புக்கொள்ள முடியாதவை மட்டுமல்ல; அறிவிற்கு ஒவ்வாதவையும் கூட. இதற்கு மாறாக, ஸம்ஸாரம் துவக்கம் இல்லாதது என்பதை நாம் ஒப்புக்கொண்டால் இது போன்ற அபத்தமான முடிவுகளுக்கு இடமிராது. ஒவ்வொரு படைப்பிற்கு முன்னும் பின்னும் உள்ள பிரபஞ்சத்தின் தொடர்பை விதைக்கும் அதன் முளைக்கும் உள்ள தொடர்பிற்கு ஒப்பிடலாம்.

சாஸ்திரங்களும் ஸம்ஸாரம் துவக்கமற்றது என்று தான் கூறுகின்றன. ரிக் வேதம், "ஈசுவரன் சூரியனையும் சந்திரனையும் முன் போலவே படைத்தான்"[84] என்று உபதேசிக்கிறது. கீதையில், "இங்கே இதன் (ஸம்ஸாரத்தின்) உருவம் தெரிவதில்லை; முடிவுமில்லை, துவக்கமும் இல்லை, இருப்பும் இல்லை"[85] என்ற வாக்கியத்தை நாம் பார்க்கிறோம். புராணங்களும், "முடிந்துவிட்டனவும், இனி வரப்போவதுமான கல்பங்கள் எண்ணற்றவை"என்றே கூறுகின்றன.

ஆகவே, முற்பிறவிகளில் சேர்க்கப்பட்ட பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப இறைவன் உலகத்து உயிர்களைப் படைப்பதால் அவன் பாரபட்சம், கருணையின்மை ஆகிய குற்றங்கள் இல்லாதவன். முதற்படைப்பு என்று எதுவும் கிடையாததால் (ஏனெனில் ஸம்ஸாரம் அனாதி) புண்ணியம்,

பாவம் ஆகியவற்றை முறையே தரும் நல்வினை, தீவினை என்பன இல்லாத நிலை என்பது எப்பொழுதும் இருந்ததில்லை. எனவே, இறைவனே இந்த பிரபஞ்சத்தின் உபாதான காரணமாகவும் நிமித்த காரணமாகவும் இருக்கிறான் என்கிற வேதாந்த ஸித்தாந்தம் குற்றமற்றது.

## 12. பிரம்மம் பிரபஞ்சமாக முற்றிலும் மாறுவதில்லை

பிரபஞ்சத்தின் உபாதான காரணமும் நிமித்த காரணமும் பிரம்மம் தான் என்பது வேதாந்தத்தின் முடிவு. இதற்கு எதிர் வாதங்கள் சிலவற்றையும் அவற்றிற்கான பதில்களையும் இதுகாறும் பார்த்தோம். இப்பொழுது, மேலும் சில வாதங்களையும் அவற்றிக்கு பாதராயணர் அவர்கள் கூறும் பதில்களையும் பார்ப்போம். பிரம்மம் பிரபஞ்சத்தின் காரணம் என்பதற்கு எதிராகக் கீழ்க்கண்ட வாதத்தைப் பாதராயணர் அவர்கள் ஸூத்ர வடிவில் கூறுகிறார், "(பிரம்மம் உபாதான காரணமாக இருந்தால்) முற்றிலும் மாறிவிடும் அல்லது பகுதிகளற்றது என்ற கூற்றுக்கு முரண்பாடு (ஏற்படும்)."[86] அதாவது, பிரம்மம் பிரபஞ்சத்தின் உபாதான காரணமாக இருப்பின், பிரம்மம் முற்றிலுமாகப் பிரபஞ்சமாக மாறியிருக்க வேண்டும் அல்லது பிரம்மத்தின் ஒரு பகுதி பிரபஞ்சமாக மாறியிருக்க வேண்டும். இது தான் ஆட்சேபம். இந்த இரண்டு முடிவுகளுமே ஒப்புக்கொள்ளக் கூடியவையல்ல. அது ஏன் என்பதை முதலில் பார்ப்போம்.

பிரம்மம் முற்றிலுமாகப் பிரபஞ்சமாக மாறிவிடுகிறது என்று வைத்துக் கொள்வோம். அப்பொழுது, உபநிஷத்துக்களில் காணப்படும் பிரம்மம் பற்றிய உபதேசங்கள் எல்லாம் பயனற்றவை ஆகிவிடும். அது ஏன்? பிரம்மம் உலகமாக மாறிவிட்ட பட்சத்தில், உலகத்திற்கு அப்பாற்பட்டதும் அறியப்பட வேண்டியதுமான பரம்பொருள் ஒன்றும் இருக்காது. பிரம்மம் உலகத்தின் உருவத்தில் உள்ளது என்ற பட்சத்தில், உலகமோ நம்மால் (புலன்களால்) அறியப்படுவதால் பிரம்மத்தை அறிவதற்கு சாஸ்திரத்தின் துணை தேவையில்லை. பிரம்மம் முழுவதுமாக உலகமாகிவிட்டது என்று கூறும் பட்சத்தில், ஆழ்ந்த உறக்கத்தில் ஜீவன் ஒடுங்குவதற்குப் பிரம்மம் உலகை விடுத்துத் தனித்து இல்லாததால் "ஆழ்ந்த உறக்கத்தில் ஜீவன் பிரம்மத்தில் ஒன்றிவிடுகிறது" என்ற உபநிஷத்தின் கூற்றும் பொய்த்து விடும். மேலும், பிரம்மம் பிறப்பற்றது என்ற உபதேசத்தையும் நாம் கைவிட வேண்டியிருக்கும். அதனால், நாம் பிரம்மம் முழுதுமாகப் பிரபஞ்சமாக மாறுகிறது என்ற கூற்றை ஒப்புக்கொள்ள முடியாது.

பிரம்மத்தின் ஒரு பகுதி பிரபஞ்சமாக மாறுகிறது என்ற இரண்டாவது கூற்றையும் நாம் ஒப்புக்கொள்ள முடியாது. பிரம்மம் பல பகுதிகள்

கொண்டதாக இருந்தால் தான் அதன் ஒரு பகுதி பிரபஞ்சமாக மாறியும் மற்ற பகுதிகள் பிரபஞ்சத்திற்கு அப்பாற்பட்டவையாகவும் இருக்கும். ஆனால், உபநிஷத்துக்கள் பரம்பொருளானது பகுதிகள் மற்றும் வேறுபாடுகள் அற்றது என்றே கூறுகின்றன. ஆகவே, பிரம்மத்திற்குப் பகுதிகள் உண்டு என்றும் நாம் சொல்ல முடியாது. மேலும் பகுதிகள் கொண்ட எப்பொருளும் சாசுவதமானதில்லை. சாஸ்திரமோ பிரம்மம் எப்பொழுதும் உள்ளது என்கிறது. எனவே, பிரம்மத்திற்கு உறுப்புகள் அல்லது பகுதிகள் உண்டு என்றால் அது சாசுவதமாக இருக்கமுடியாது.

இனி, பாதராயணர் இந்த வாதத்திற்கு எப்படி விடையளிக்கிறார் என்று பார்ப்போம். வேதாந்தியின் பதில் இந்த ஸூத்ரத்தின் வடிவில் அமைகிறது: "ஆனால் (பிரம்மம் முற்றும் மாறுவதில்லை என்பதற்கு) உபநிஷத்துக்கள் பிரமாணம் என்பதாலும் உபநிஷத்துக்கள் மூலமாகவே (பிரம்மத்தை அறிய முடியும்) என்பதாலும்."[87] உபநிஷத்துக்களை அடிப்படையாகக் கொண்டதால் தன் வாதத்தில் எந்தக் குற்றமும் இல்லை என்பதே வேதாந்தியின் கோட்பாடு. ஏன் அப்படி? சுருதியின், அதாவது உபநிஷத்தின் மூலமாக மட்டுமே பிரம்மத்தை அறிய முடியுமேயன்றி வெறும் தர்க்கத்தினால் முடியாது. "எந்த விஷயங்கள் எண்ணத்திற்கு அப்பாற்பட்டவையோ, அவற்றைப் பற்றி வாதிக்காதே. எண்ணத்திற்கு அப்பாற்பட்ட பொருளின் இயல்பு, ப்ரக்ருதியின் (இயற்கையின்) வரம்பிற்கு உட்பட்ட பொருளின் இயல்பிலிருந்து வேறு பட்டது"[88] என்று கூறப்படுகிறது. புலன்களுக்கு அப்பாற்பட்டதான பிரம்மம் போன்ற ஒன்றை உபநிஷத்தின் மூலமாக மட்டுமே அறிய முடியும். உபநிஷத்துக்களோ, பிரம்ம விஷயத்தில், "அது (பிரம்மம்) பகுதிகளற்றது, மாற்றமற்றது, மேலும் அதுவே பிரபஞ்சத்தின் உபாதான மற்றும் நிமித்த காரணம்" என்றே ஒருமித்துச் சொல்கின்றன.

பிரபஞ்சத்தின் வெளிப்பாடு பிரம்மத்தின் மேன்மைக்கு எந்த விதத்திலும் ஊறு விளைவிப்பதில்லை. உதாரணமாக, சாந்தோக்ய உபநிஷத்தில் வரும் கீழ்க்காணும் வாக்கியம் இவ்விஷயத்தைத் தெளிவுபடுத்துகிறது: "இவனுடைய மேன்மை அவ்வளவு பெரிது. எங்கும் வியாபித்திருக்கும் புருஷனின் மேன்மை அதனினும் பெரிது. அவனுடைய ஒரு பாதத்தில் எல்லா விஷயங்களும் அடங்குகின்றன. மூன்று பாதம் கொண்ட அந்த அழிவில்லாதவன் அவனது ஆத்மாவிலேயே நிலைபெற்றிருக்கிறான்."[89] மேலும் பிரம்மம் இவ்வுலகமாக முற்றிலும் மாறியிருந்தால் "ஆழ்ந்த உறக்கத்தில் ஜீவன் பரம்பொருளில் லயமடைகிறான்" என்று இதே உபநிஷத் கூறியிருக்காது.[90]

இப்போது பூர்வபக்ஷி, "வேதம், 'பகுதிகளோ உறுப்புகளோ அற்ற பிரம்மத்தின் ஒரு பகுதி உலகமாக மாறுகிறது' என்று தனக்குத் தானே

முரண்பாடான கருத்தை உபதேசிக்க முடியாது'' என்று ஆட்சேபம் செய்யக்கூடும். இதற்கு வேதாந்தி, ''வேதத்தின் உபதேசத்தில் எந்த முரண்பாடும் இல்லை'' என்றே விடையளிக்கிறான். இது எவ்வாறு? பிரம்மம் தனது உண்மைத் தன்மையில் மாறுதலற்று, எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டதாகவும் இருப்பினும், பிரம்மத்தில் பாகுபாடும் வேறுபாடும் அவித்யையினாலேயே கல்பிக்கப்படுகின்றன என சுட்டிக் காட்டுவதே உபநிஷத்துக்களின் நோக்கம். உதாரணமாக, வானத்தில் நிலவு ஒன்றாக இருப்பினும் திமிர நோயினால் கண்கள் பாதிக்கப்பட்ட ஒருவன் பல நிலவுகளைக் காண்கிறான். பெயரிலும் உருவத்திலும் காணப்படும் வேற்றுமைகள் அவித்யையினால் தான் கல்பிக்கப்படுகிறது. ஆதலால், பிரம்மம் பகுதியற்று இருக்கிறது என்கிற கருத்திற்கு எவ்விதப்பாதிப்பும் இல்லை. ஆனால், அதே சமயத்தில், பிரம்மத்தின் ஒரு பகுதி உலகாக மாறியுள்ளது போல் தோன்றுகிறது.

பிரம்மம் உண்மையிலேயே உலகமாகப் பரிணமித்திருக்கிறது என்பதை நிலை நாட்டுவது வேதத்தின் நோக்கமல்ல. அப்பேற்பட்ட பரிணாமத்தைப் பற்றி அறிவதால் மனிதனுக்கு ஒரு பயனும் இல்லை. பயனற்ற ஒன்றை உபநிஷத் ஒருகாலும் உபதேசிக்காது. பிரம்மம் பிரபஞ்சமாக மாறுவது பற்றிப் பேசும் வேத வாக்கியங்களின் நோக்கமே வேறு. பிரபஞ்சத்தின் எல்லா வியவஹாரங்களுக்கும் அப்பாற்பட்ட பிரம்மத்தைக் காட்டிலும் வேறான பொருள் ஒன்று இல்லை என்பதைச் சுட்டிக்காட்டுவதே அதன் நோக்கம். பிரம்மத்தைப் பற்றிய இந்தச் சரியான ஞானமானது ஸம்ஸார சக்கரத்திலிருந்து விடுதலை என்கிற மிக உயர்ந்த பலனையளிக்கிறது.

வேதாந்தியின் பதிலை இன்னொரு ஸூத்ரத்தின் வாயிலாகப் பாதராயணர், கூறுகிறார் ''ஏனெனில், இதைப் போலவே ஜீவாத்மாவினிடத்திலும் (தேவர்கள் முதலானோர் போல்) வெவ்வேறு (வகையான படைப்பு உண்டு). (அதுபோலவே பிரம்மத்திலும்)''.[91] கனவு நிலையில் இருக்கும் ஜீவாத்மாவின் இயல்பு மாறுபடுவதில்லை. ஆனால் அங்கு பலவாறாக உலகம் தோன்றுகிறது. இதைப் ப்ருஹதாரண்யக உபநிஷத் இவ்வாறு கூறுகிறது, ''அங்கே தேர்களும், தேர்களில் பூட்டப்படும் விலங்குகளும், சாலைகளும் இல்லை. ஆனால் அவன் தேர்களையும் விலங்குகளையும் சாலைகளையும் படைக்கிறான்''.[92]

தேவர்கள் தங்களுக்கு எந்த விதமான மாற்றமுமின்றிப் பல்வகைப் பொருட்களைத் தாமே படைக்கின்றனர் என்றும் கூறப்படுகிறது. இந்த உலகிலேயே, செப்படி வித்தை காட்டுபவன் தன்னில் ஒரு மாற்றமுமின்றி மற்றவர் பல விதமான பொருட்களைக் காணுமாறு செய்கிறான். பிரம்மத்தின் விஷயத்திலும், அது போலவே படைப்பானது பல்வேறாக

இருப்பினும், பிரம்மம் மாறாமல் இருக்கிறது; அதன் பகுதிகளற்ற தன்மைக்கும் கேடு ஏதும் ஏற்படாமல் இருக்கிறது.

முடிவாக, பிரம்மமே பிரபஞ்சத்தின் உபாதான காரணம், ஆயினும் அது பகுதிகளற்றது, குறைகளற்றது என்ற வேதாந்தியின் கோட்பாட்டில் எந்தக் குற்றமும் இல்லை. ஏனென்றால், வேதாந்தியுடைய இக்கோட்பாடு, இவ் விஷயங்களுக்குப் பிரமாணமான வேதத்தை ஆதாரமாகக் கொண்டது. அவித்யை அல்லது மாயையினால்தான் இரண்டற்றதான பரம்பொருள் பலவாகத் தெரிகிறது. இக்கோட்பாட்டை விளக்கும் உதாரணங்களும் உள்ளன.

## 13. மிக உயர்ந்த ரகசியம்

பகவத்கீதையில் கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு உபதேசம் செய்யும் பொழுது ஓரிடத்தில் ஆத்ம ஞானத்தின் மேன்மையைப் புகழ்ந்துவிட்டுப் பின்னர் அதை அர்ஜுனனுக்குக் கற்பிக்கிறார். பகவான் கூறுகிறார், "எதை அறிந்தால் நீ (ஸம்ஸாரம் என்கிற) தீமையிலிருந்து விடுபடுவாயோ, மிக உயர்ந்த ரகசியமானதும், விஞ்ஞானத்துடன் (நேரடி அனுபவத்துடன்) கூடியதுமான அந்த ஞானத்தை (பரம்பொருளின் அறிவை) அசூயை இல்லாத உனக்குக் கூறுகிறேன். இது வித்யைகளுள் சிறந்தது; மிக உயர்ந்த ரகசியம், தூய்மை ஆக்குவனவற்றுள் உயர்ந்தது. நேரடியாக உணரக்கூடியது, தர்மத்திலிருந்து விலகாதது, கடைப்பிடிக்க மிகஎளியது, அழிவற்றது."[93] இவ்வாறு, கேட்பவனது ஆவலைத் தூண்டுவதற்கும், தான் சொல்வதை அவன் கவனமாகக் கேட்கவேண்டும் என்பதற்காகவும் பகவான் தத்துவத்தைப் புகழ்கிறார்.

பகவான் தத்துவத்தைப் புகழ்ந்துவிட்டு, அதனை விளக்குகிறார்: "எனது அவ்யக்தமான (வெளித் தோன்றாத) வடிவினால் நான் இந்தப் பிரபஞ்சம் முழுவதிலும் பரந்திருக்கிறேன். படைக்கப்பட்ட எல்லாம் என்னுள்ளே நிலைபெறுகின்றன, ஆனால் நான் அவற்றினுள்ளே இல்லை. அவையும் என்னுள் நிலைகொள்வதில்லை. எனது தெய்வீக யோகத்தைப் பார்! பொருட்களைத் தாங்கிக்கொண்டு ஆனால் அவற்றுள் இல்லாமலிருக்கும் என்னுடைய ஆத்மா எல்லாவற்றையும் தோற்றுவிக்கிறது."[94]

மேலெழுந்தவாரியாகப் பார்த்தால், பகவானின் உபதேசம் முற்றிலும் முரணுள்ளதாகத் தோன்றும். எப்படி? முதலில் பகவான் பிரபஞ்சத்தில் உள்ள எல்லாம் தன்னால் வியாபிக்கப்பட்டிருக்கிறது என்றும் எல்லாமே தன்னுள் நிலைபெறுகின்றன என்றும் கூறுகிறார். ஆனால் உடனே அவர், "தான் எதிலும் இருப்பதில்லை, எதுவும் தன்னுள் இல்லை" என்றும் கூறுகிறார். இப்படிப் பகவான் புதிர் போடுவது போல் ஏன் பேச

வேண்டும் என்று கேட்டால் அதற்குக் காரணம் இந்தத் தத்துவத்தின் தன்மையே. அதைச் சற்று விரிவாகப் பார்ப்போம்.

பார்க்கப்படும் உலகம் உண்மை என்று நாம் கருதினால், பகவானின் உபதேசத்தில் உள்ளதாகத் தோன்றும் முரண்பாட்டை சரியாக நீக்க முடியாது. எனவே அவர் கருத்தை விளக்குவதற்கு ஓர் உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். அரை வெளிச்சத்தில் ஒரு கயிறு பாம்பாகத் தோன்றுகிறது. இப்படித் தோன்றும் பாம்பு கயிறே இல்லாத பட்சத்தில் கண்ணில் தோன்றுமோ? "தோன்றாது". சரி, பாம்பின் ஏதாவது ஒரு பகுதியாவது கயிறு இல்லாத இடத்தில் தோன்றுமா? இதற்கும் "தோன்றாது" என்ற அதே பதில் தான். கண்ணில் தோன்றும் பாம்பிற்குக் கயிற்றினும் வேறுபட்ட இருப்பு இல்லை; மேலும் பாம்பின் எப்பகுதியை எடுத்துக் கொண்டாலும் கயிறே அதன் அடிப்படை. எனவே, கயிறானது பாம்பு முழுவதிலும் பரந்திருக்கிறது என்று சொல்வதில் எந்தத் தவறும் இல்லை. தவிர, கண்ணில் தோன்றும் பாம்பின் அடிப்படையாகக் கயிறு உள்ளதால், பாம்பு கயிற்றுள் இருக்கிறது அல்லது பாம்பு கயிற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது என்றும் கூறலாம். ஆனால் சற்று ஆழ்ந்து சிந்தித்தால் இக்கூற்றுகள் பிழையானவை என்பது தெளிவாகும். உண்மையிலேயே கயிறு பாம்பில் பரந்தும் இல்லை; பாம்பும் கயிற்றை ஆதாரமாகக் கொள்ளவும் இல்லை. ஏனென்றால், இங்கே உண்மையான பாம்பு என்ற ஒன்று இல்லவே இல்லை. உண்மையான பாம்பு ஒன்று இருந்தால் தான் கயிறு பாம்பில் பரந்திருக்கிறது என்று கூற முடியும்.

ஆத்மாவும் இதைப் போல் தான். ஆத்மா இந்தப் பிரபஞ்சத்திற்கு அடிப்படையாக உள்ளது. ஆத்மாவன்றி எப்பொருளும் இருக்க முடியாது. எனவே உலகிலுள்ள எல்லாப் பொருட்களும் ஆத்மாவை அடிப்படையாகக் கொண்டுள்ளன என்று கூறலாம். ஆனால் சற்று சிந்தித்தால், ஆத்மா எல்லாவற்றுள்ளும் இருக்கிறது என்றோ, எல்லாமே ஆத்மாவில் நிலை பெறுகின்றன என்றோ கூற முடியாது. ஆத்மா மட்டுமே உள்ளது; மற்றவையாவும் பொய்த்தோற்றமே என்ற உண்மையை விளக்ககவே பகவான் இம்மாதிரியாகத் தத்துவத்தை விளக்கினார்.

முன்னுக்குப் பின் முரணாக இருப்பது போலவும் புதிர் போலவுமுள்ள தன் உபதேசத்தைப் பற்றிப் பகவான் கூறுகிறார், "என்னுடைய தெய்வீக யோகத்தைப் பார்!"[95] கீதையின் இப்பகுதிக்கு முன்னரே பகவான் தன் மாயையைப் பற்றி, "தெய்வீகமானதும் குணங்களின் சேர்க்கையுமான எனது இந்த மாயை கடப்பதற்கு அரிதானது"[96] என்று உபதேசித்தார். எனவே, மாயையே உலகத்தின் தோற்றத்திற்குக் காரணம் என்பதே பகவானின் கருத்து என்பதில் எந்த ஐயமும் இல்லை.

கீதையில் வேறு சில இடங்களிலும் பகவான் தத்துவத்தை இங்கே கூறியதைப் போன்றே போதித்துள்ளார். உதாரணமாகப் பதின்மூன்றாவது அத்தியாயத்தில் ஆத்மாவைப் பற்றிக் கூறும் போது அவர், "எல்லா இந்திரியங்களின் செயல்களிலும் வெளிப்பட்டுப் பிரகாசிக்கும் போதிலும் அது எந்த இந்திரியங்களுமற்றது; பற்றற்றது, ஆனால் அனைத்தையும் தாங்குவது; குணங்களற்றது, ஆனால் குணங்களைத் துய்ப்பது"[97] என்று கூறுகிறார்.

இறுதியாக ஒரு கேள்வி எழலாம். நாம் மேலே கூறிய ஒரு சுலோகத்தில் பகவான், "என்னுடைய ஆத்மா எல்லாவற்றையும் தோற்றுவிக்கிறது" என்கிறார். அப்படியென்றால் பகவான் வேறு, அவருடைய ஆத்மா வேறு என பொருள்கொள்ள வேண்டுமா எனில் அவ்வாறில்லை. ஏனென்றால், அவரே பிறகு "நான் ஆத்மா"[98] என்று கூறுகிறார். பகவான் (எனது ஆத்மா என்று) கூறும் போது இங்கே நாம் பொது வழக்கில் பேசும் முறையைக் கையாண்டிருக்கிறார். (இதற்காக) பகவானை அஞ்ஞானி என்று யாரும் கூற முடியாது.

பரம்பொருளை அறிந்த ஞானியும் "நான்" என்ற சொல்லை மற்றவர்கள் பயன்படுத்துவது போல் தன் பேச்சில் பயன்படுத்தலாம். பஞ்சதசீ என்ற நூலில், "ஞானி 'நான் செல்கிறேன்'[99] என்று சொல்லும் போது தன் உடலைக் குறிப்பிட்டுப் பேசுகிறான். ஆனால் அவனே 'நான் ஆத்மா' என்று சொல்லும் போது மாறுதலற்ற ஆத்மாவையே குறிப்பிட்டுப் பேசுகிறான்" என்று விளக்கப்பட்டுள்ளது.

## 14. சுயம்பிரகாசமான சுத்த சைதன்யமே ஆத்மா

ஆத்மா மாறுதலற்ற சுயம்பிரகாசமான (தானே ஒளிர்கிற) சுத்தசைதன்யம் என்று ப்ருஹதாரண்யக உபநிஷத்தின் ஒரு பகுதியான ஜ்யோதிர் ப்ராஹ்மணம் உபதேசிக்கிறது. இந்த உபதேசத்தின் முக்கியத்துவம் மற்றும் இது எப்படி உபதேசிக்கப்பட வேண்டும், இந்த உபதேசத்தை எப்படிப் பெற்றுக் கொள்ள வேண்டும் ஆகியவற்றை எடுத்துச் சொல்லும் பொருட்டு, ப்ருஹதாரண்யக உபநிஷத் கதை ஒன்றைக் கூறுகிறது. ஜனகர் என்ற மன்னரும் அவரது குருவான யாக்ஞவல்க்யர் என்ற முனிவரும் இக்கதையில் வரும் பாத்திரங்கள். "ஒருவனுக்கு எது ஒளியாகத் திகழ்கிறது?"[100] என்று ஜனகர் தம் ஆசிரியரைக் கேட்கும் கேள்வியுடன் இக்கதை துவங்குகிறது. ஜ்யோதிர் ப்ராஹ்மணத்தில் வரும் இந்தச் சிறந்த உபதேசத்தைக் கருணை உள்ளம் கொண்ட சங்கர பகவத்பாதர் ஓர் எளிமையான சுலோகமாகப் படைத்துள்ளார். இந்தச் செய்யுளே "ஏகச்லோகி" என்று அழைக்கப்படுகிறது.

இச்செய்யுள் ஒரு குருவிற்கும் தன் மாணவனுக்கும் இடையே நிகழும் உரையாடலை விவரிக்கிறது. இவ்வாறான உரையாடல்களில் பொதுவாக சிஷ்யனின் சந்தேகங்களும் குருவின் பதில்களும் காணப்படும். மாறாக ஏகச்லோகியில், குரு கேள்விகளை எழுப்புகிறார். குரு வரிசையாகக் கேட்கும் கேள்விகளுக்கு சிஷ்யன் தகுந்த விடைகள் தருகிறான். குரு படிப்படியாகக் கேள்வி கேட்டு ஆத்மாவே உயர்ந்த பிரகாசம் என்ற உண்மையை சிஷ்யனுக்கு உணர்த்துகிறார். இந்த உபதேசத்தின் போது சிஷ்யன் ஒவ்வொரு கேள்விக்கும் ஆழ்ந்து சிந்திக்கத் தூண்டப்படுவதால் அவன் கவனச்சிதைவு, சந்தேகங்கள், உறுதிப்பாடின்மை முதலியவற்றால் பாதிக்கப்படுவதில்லை. இனி, இந்த உபதேசத்தைச் சற்று விரிவாகப் பார்ப்போம்.

குரு முதலில் கேட்கும் கேள்வி ஜ்யோதிர் ப்ராஹ்மணத்தில் ஜனகர் கேட்பதைப் போலவே அமைந்துள்ளது. அவர் சிஷ்யனை, “உன்னுடைய ஒளி எது?” என்று கேட்கிறார். “எதனுடைய வெளிச்சத்தினால் உன்னால் பொருட்களைப் பார்க்கவும், செயல்களில் ஈடுபடவும் முடிகிறது?” என்பதே கேள்வியின் உட்கருத்து. இதற்கு சிஷ்யன், “பகற் பொழுதில் சூரியன் என் ஒளியாக இருக்கிறது” என்று பதில் கூறுகிறான். கதிரவன் மறைந்த பின்னும், மனிதர்கள் செயல்களில் ஈடுபடுகின்றனர். இதற்காக இரவு நேரத்தில் மனிதர்கள் விளக்குகளைப் பயன்படுத்துகின்றனர். இந்தச் செயற்கை வெளிச்சம் அல்லாது இயற்கை வெளிச்சத்தின் துணை கொண்டும் மனிதர் இரவில் பார்க்கின்றனர், செயல் புரிகின்றனர். உதாரணமாக முழு நிலவின் வெளிச்சத்தில் மனிதர்கள் தத்தம் வீடு திரும்புகிறார்கள். எனவே, சிஷ்யன் தொடர்ந்து “இரவில் விளக்குகள் முதலியன எனக்கு ஒளி தருகின்றன” என்று கூறுகிறான்.

எல்லோருக்கும் தெரிந்ததும், சாமானியமானதுமான இந்த விடையை சிஷ்யன் கூற வேண்டும் என்பது குருவின் நோக்கம் அல்ல. எனவே அவர் மேலும் கேட்கிறார், “இருக்கலாம். ஆனால் எதன் ஒளியினால் உன்னால் சூரியன், விளக்குகள் முதலியவற்றைப் பார்க்க முடிகிறது?” கதிரவன், நிலவு, விண்மீன்கள், விளக்குகள், இவையாவும் ஒளி தருபவை. ஆனால் அவைகளும் பார்க்கப்படுபவையே; அதாவது புலன்களுக்குப் பொருளானவை. உதாரணமாகச் சுற்றுச் சூழலில் ஒலிகள் இருக்கலாம், ஆனால் காது கேளாதவனுக்கு அவ்வொலிகள் கேட்காது. ஒலிக்குத் தம்மைத் தாமே புலப்படச் செய்து கொள்ளும் சாமர்த்தியம் இல்லை. அதைப் போலவே, இங்கு சிஷ்யன் கூறிய சூரியன், விளக்கு முதலிய ஒளி தருவனவற்றைப் பார்ப்பதற்கு வேறொரு “ஒளி” தேவை.

ஆசிரியரின் கேள்வி மாணவனைச் சிந்திக்க வைக்கிறது. எந்த ஓர் ஒளியும் தன் கண்ணினால் பார்க்கப்படுகிறது என்று முடிவு செய்கிறான். அவனுடைய புலன்களில் எவ்விதக் குறைபாடும் இல்லை. உதாரணமாக, ஒருவன் ஓர் இருட்டறையுள் நுழைகிறான் என்று வைத்துக் கொள்வோம். அவனது கண்களுக்கு ஒன்றும் தெரிவதில்லை. அதனால் அவன் தன் பார்வையை இழந்து விட்டான் என்று சொல்ல முடியாது. அவன் இருட்டைப் பார்க்கிறானே! மாறாக, அவன் கண்கள் செயல்படவில்லை என்றால், சூரியன் முதலான ஒளி தரும் வெளிப்பொருட்களாலும் அவனைப் பார்க்கச் செய்ய முடியாது; அவையே அவனால் பார்க்கப்படாமல் இருக்கின்றன. இவ்வழியில் சிந்தித்து, சிஷ்யன், "(எனது) கண்" என்று பதிலளிக்கிறான்.

சிஷ்யனை மேலும் சிந்திக்க வைப்பதற்காக குரு கேட்கிறார், "உன் கண் மூடியுள்ள சமயங்களில் எது உனக்கு ஒளியாக இருக்கிறது?" நம் கண்கள் திறந்திருக்கின்றனவா, மூடியிருக்கின்றனவா என்பதை நம்மால் அறிய முடிகிறது. அதே போல், கண் பார்வை தெளிவாக இருக்கிறதா அல்லது பார்வையில் குறையுள்ளதா என்பதையும் ஒருவனால் அறிய முடிகிறது. ஆகவே, கண் என்பதும் புலப்படும் பொருள் தான். கண் எதனால் புலப்படுகிறது? ஒருவன் கவனக் குறைவுடன் இருக்கும் போது அவன் கண்கள் திறந்திருந்தாலும், போதிய வெளிச்சம் இருந்தாலும், வெளிப்பொருட்களையோ, சூரியன் முதலிய ஒளி தருவனவற்றையோ தன் கண்களின் நிலைமையையோ அவன் அறிவதில்லை. மாறாகக் கண்கள் மூடியிருந்தாலும் ஒருவனால் சிந்திக்க முடிகிறது. இவ்வகையில் யோசித்து சிஷ்யன், "(எனது) புத்தி" என்று கூறுகிறான்.

உபதேசத்தின் முடிவான நோக்கத்தை சிஷ்யனுக்கு உணர்த்த விரும்பும் ஆசிரியர் "எந்த ஒளியினால் உன் புத்தி பார்க்கப்படுகிறது?" என்று மேலும் கேட்கிறார். நமது மனதில் எண்ணங்கள் இருப்பதையும், அவை இல்லாமல் இருப்பதையும் நம்மால் உணர முடிகிறது. எனவே, மனமும் (புத்தியும்) மற்ற பொருட்களைப் போலவே புலப்படும் பொருள்தான். எப்படி சூரியனால் தன்னைத் தானே புலப்படுத்த முடியாதோ, கண் தானே ஒளிர்வதில்லையோ, அதைப் போலவே புலப்படும் பொருளான புத்தியும் தன்னைத்தானே அறிவதில்லை. ஒரு பொருள் ஒரே சமயத்தில் அறியப்படுவதாகவும் அறிவதாகவும் இருக்க முடியாது அல்லவா? மனதில் தோன்றும் ஓர் எண்ணத்தை மற்றொரு எண்ணம் அறிகிறது என்றும் கூற முடியாது. ஏன் அப்படி? ஓர் எண்ணத்தை (அறியப்படும் பொருள்) இரண்டாவது எண்ணம் (அறிவது) பார்க்கிறது என்றால், இரண்டாவது எண்ணத்தைப்பார்க்க மேலும் ஓர் எண்ணம் தேவைப்படும், அதைப் பார்க்க இன்னொன்று, என்ற இந்த வரிசை முடிவற்றதாகி

விடுவதால் இது (மனதின் செயல்பாட்டை மனதாலேயே பார்க்க முடியும் என்பது) தவறான வாதம்.

குருவின் கடைசி கேள்விக்கு வேறு விதமாகவும் பொருள் சொல்லலாம். அதாவது, “உனது புத்தி பார்க்கப்படாத போது எது உனது ஒளியாக உள்ளது?” ஆழ்ந்த உறக்கத்தில் அல்லது யோகத்தின் உயர்ந்த நிலையாம் நிர்விகல்ப சமாதியில் எண்ணங்கள் எழுவதில்லை. ஆயினும் தன்னுணர்வு இருக்கிறது. இதனாலேயே, ஒருவன் உறங்கியெழுந்த பின்னர், “நான் நன்கு தூங்கினேன். எனக்கு ஒன்றுமே தெரியவில்லை” என்று கூற முடிகிறது. உறங்கும் போது தன்னுணர்வு இல்லையென்றால் தனக்கு (உறக்கத்தின் போது) ஒன்றும் தெரியவில்லை என்ற நினைவு ஏற்பட முடியாது. இதே போல், (விழிப்பு நிலையில்) எண்ணங்களுக்கு இடையே தன்னுணர்வு இருக்கிறது.

இப்படி ஆழ்ந்து சிந்தித்த பின்னர், சிஷ்யன் தன் குருவின் கேள்விக்கு, “நான் இருக்கிறேன்” என்று பதிலளிக்கிறான், எண்ணங்கள் தோன்றி மறைவதையும் எண்ணங்களற்று இருப்பதையும் பார்ப்பவன் அவன் தானே? எனவே தன் உண்மை இயல்பு அறிவுத்தன்மை தான் என்பதை சிஷ்யன் உணர்கிறான். சிஷ்யன் சரியாகப் புரிந்து கொண்ட விதத்தைப் பாராட்டும் வகையில் ஆசிரியர் உபதேசத்தின் முடிவை, “ஆகவே, நீயே முடிவான ஒளியாக இருக்கிறாய்” என்று கூறுகிறார். புத்தியைப் பார்க்கும் ஒளி சுயம்பிரகாசமானது (அதாவது தானே விளங்கும் தன்மையுடையது) அல்ல என்று வைத்துக்கொள்வோம். அப்படியானால், அதைப் (புத்தியைப் அறியச்செய்யும் ஒளியை) பார்ப்பதற்கு இன்னொரு அறிபவன் வேண்டும். இந்த இரண்டாவது அறிபவனைப் பார்ப்பதற்கு மூன்றாவது அறிபவன் வேண்டும். இப்படி இவ்வாதம் முடிவற்றதாக ஆகிவிடுவதால், இது சரியன்று. எனவே மனதை (புத்தியை) விளங்கச் செய்யும் ஒளி தானே ஒளிரும் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும். சிஷ்யன் சுயம் பிரகாசமான அவ்வொளியாகவே இருக்க வேண்டும். எனவேதான், குரு, “நீயே அந்த உத்தமமான ஒளியாக இருக்கிறாய்” என்கிறார். இதை அறிவு பூர்வமாக மட்டுமல்லாமல் நேரடியாகவும் உணரும் சிஷ்யன் சொல்கிறான், “குருவே! ஆம் நான் தான்”.

விழிப்பு நிலை, கனவு, ஆழ்ந்த உறக்கம் ஆகிய மூன்று நிலைகளிலும் ஆத்மாவே மாறுதலற்ற சுயம்பிரகாசமான (தானே ஒளிரும்) சாக்ஷியாக இருக்கிறது; பார்க்கப்படும் பொருட்கள் மட்டுமே மாறுதலடைகின்றன. எனவே தான், சைதன்யமற்ற நிலை போல் தோன்றுகிற ஆழ்ந்த உறக்கம் பற்றி யாக்ஞவல்க்யர், “அறிபவனின் அறியும் செயல் மறைவதில்லை; ஏனெனில், அது அழிவற்றது. ஆனால் அது அறிவதற்கு

*அதைக் காட்டிலும் வேறான இரண்டாவது பொருள் இல்லை"[101] என்று ஜனகருக்கு உபதேசிக்கிறார். குறையில்லாத பார்வை உடையவன் இருட்டறையுள் நுழைவது போல், என்பதை இங்கே தோராயமான உதாரணமாகக் கூறலாம். நிர்விகல்பசமாதியிலும் த்வைதம் (இரண்டாவது பொருள்) தெரிவதில்லை. ஆனால் அப்போது ஆழ்ந்த உறக்கத்தில் உள்ளது போல் அவித்யை என்ற அடர்ந்த மறைப்பு இல்லாததால் ஆத்மா தானாகவே தெளிவாக ஒளிர்கிறது. முடிவாக, மாறுதலற்ற சுயம்பிரகாசமான சைதன்யமே ஆத்மா என்பது கருத்து.*

## *15. ஞானிகளுக்கு மறுபிறவி உண்டா?*

*மெய்ப்பொருளான பிரம்மத்தை அறிந்தவர்கள் மீண்டும் பிறக்கிறார்களா? பரம்பொருளின் அறிவே மோக்ஷத்திற்குக் காரணம் என உபநிஷத்துக்கள் மிகத் தெளிவாகக் கூறுவதால் மேற்கூறிய கேள்வியே அர்த்தமற்றது என்று இந்தக் கேள்வியை நமக்கு ஒதுக்கிவிடத் தோன்றலாம். இந்தக் கேள்விக்கு ஓர் உதாரணம் கூறுவதென்றால், "அறுசுவை விருந்தை உண்ணத் தொடங்கி விட்டவனது பசியாறுமா?" என்று கேட்பது போலாகும். ஆயினும் இக்கேள்வியை அர்த்தமற்றது என்று நாம் ஒதுக்க முடியாது. ஏனென்றால், பரம்பொருளை உணர்ந்த ஞானிகள் சிலர் மீண்டும் பிறப்பதாக ராமாயணம், மஹாபாரதம் மற்றும் புராணங்களில் சில கதைகள் உள்ளன.*

*ராமாயணத்தில் பிரம்மாவின் மானஸ புத்திரரும் சிறந்த முனிவருமான வசிஷ்டர், நிமி என்ற அரசனின் சாபத்தால் தன் சரீரத்தை இழந்தார் என ஒரு கதை உள்ளது. வசிஷ்டர் பிரம்மாவின் உதவியை நாடினார் என்றும் பிரம்மாவின் யோசனையின் பேரில் மித்ர-வருணரிடமிருந்து[102] மீண்டும் உண்டானார் என்று இக்கதை கூறுகிறது. ஆனால் வசிஷ்டர் பிரம்மஞானி என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.*

*மஹாபாரதத்தில் கீழ்க்கண்ட கதையைக் காணலாம். பண்டைக் காலத்து முனிவரும் வேதங்களைக் கற்பிப்பதில் வல்லவருமான அபாந்தரதமஸ் என்பவர் மஹாவிஷ்ணுவின் ஆணைப்படி த்வாபர-கலி யுகங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் க்ருஷ்ணத்வைபாயனராக மீண்டும் பிறந்தார்; இவரை நாம் வியாசர்[103] என்றும் அறிவோம். வருணர்[104] நடத்திய யாகம் ஒன்றில் பிருகு முனிவரும் ஏனையோரும் மீண்டும் பிறந்ததாக ஒரு கதையும் உண்டு. அபாந்தரதமஸ், ஸனத்குமாரர், பிருகு ஆகியோர் நிர்குணமான பரப்பிரம்மத்தை அறிந்தவர்களே. இதே போல் ஸனத்குமாரர் என்ற சிறந்த முனிவர் ருத்ரரின் விருப்பத்திற்கு இணங்கி ஸ்கந்தராகப்[105] பிறந்தார் என்ற கதையும் உண்டு. விண்ணுலக இசை*

வித்தகரான நாரதர் பலமுறை பிறந்ததாகப் புராணங்களில் படிக்கிறோம். இவற்றிற்கான ஆதாரங்களை வேதத்தின் மந்த்ர மற்றும் அதைச் சார்ந்த பாகங்களிலும் காணலாம்.

பிரம்மத்தை அறிந்த சில முனிவர்கள் தமது உடல் இறந்த பின்னர் வேறு உடல் பூண்டனர் என்றும், வேறு சிலர் தம் உடல் இருக்கும் போதே யோக சக்தியினால் ஒரே சமயத்தில் பல உடல்களுள் புகுந்தனர் என்றும் இக்கதைகளிலிருந்து அறிகிறோம். இம்முனிவர்கள் வேதத்தின் சாரத்தை முற்றும் அறிந்தவர்கள் என்றே ஸ்ம்ருதிகள் கூறுகின்றன. எனவே, இக் கதைகளைப் படித்த பிறகு தன்மைகளற்ற பிரம்மத்தின் அறிவு ஒருவனை ஸம்ஸாரத்திலிருந்து சில சமயங்களில் விடுவிக்கிறது, மற்ற சமயங்களில் விடுவிப்பதில்லை எனத் தோன்றலாம். இதை மறுத்துப் பாதராயணர், “பணி மேற் கொண்டவருக்கு, அப்பணி முடியும் வரை உடலுடன் கூடிய நிலை இருக்கிறது”[106] என்று ஸூத்ரம் இயற்றியுள்ளார். இனி, இந்த ஸூத்ரத்தை சங்கரரின் பாஷ்யத்தின் துணை கொண்டு ஆராய்வோம்.

பிரம்மஞானம் மோக்ஷமளிப்பதில் எப்போதுமே தவறுவதில்லை. சுவர்க்க லோகம் அடைவதற்காகச் செய்யப்படும் ஜ்யோதிஷ்டோமம் போன்ற யாகங்கள் அவற்றைச் செய்பவன் இறந்த பிறகே பலன் தருகின்றன. சில சமயங்களில் யாகம் செய்தவன், அந்த யாகத்தைச் செய்து பல காலங்கழிந்தே இறக்கக்கூடும். இதிலிருந்து யாகத்தின் பலன் உடனே கிடைப்பதில்லை என்பது தெளிவாகிறது. இதனால், முழுமையான சிரத்தை இல்லாதவனுக்கு இது போன்ற யாகங்கள் உண்மையிலேயே பலன் தருகின்றனவா என ஐயம் ஏற்படலாம். ஆனால், பரம்பொருளைப் பற்றிய அறிவின் விஷயத்திலோ இப்படி ஆவதற்கு எவ்வித வாய்ப்பும் இல்லை. ஏனென்றால், ஞானத்தின் – அதாவது பரம்பொருளைப் பற்றிய அறிவின் பலன் உடனடியாகவும் நேரடியாகவும் பெறப்படுகிறது. எனவே பரம்பொருளை அறிந்தவன் உயிர் வாழும் போதே முக்தனாகிறான். வசிஷ்டர் போன்றோரும் இதற்கு விதிவிலக்கல்ல.

ஆத்மஞானம் கர்மாவின் (செயலின்) விதைகளை எரித்துவிடுகிறது. முண்டகோபநிஷத், “உயர்ந்ததும் தாழ்ந்ததுமான அப்பரம்பொருளை அறிவதால் இருதயத்தின் முடிச்சு அறுகிறது; எல்லா ஐயங்களும் நீங்குகின்றன; எல்லாச் செயல்களும் அழிகின்றன”[107] என்று கூறுகிறது. கீதையிலும் பகவான் அர்ஜுனனிடம், “அர்ஜுனா! எவ்வாறு நெருப்பு விறகுக்கட்டைகளைச் சாம்பல் ஆக்குகிறதோ, அதே போல் ஞானமாகிய நெருப்பு எல்லாச் செயல்களையும் எரித்துவிடுகிறது”[108] என்கிறார். ஞானமடைந்த பிறகு மனதாலோ உடலாலோ செய்யப்படும் எந்தக் கர்மாவும் மறு பிறவிகளில் பலனளிக்கும் புண்ணிய பாவங்களைத்

தருவதில்லை. வசிஷ்டர், பிருகு போன்றவருக்கும் இது பொருந்தும். ஞானம் பிறப்பதால், முற்பிறவிகளில் சேர்க்கப்பட்டதும் வரவிருக்கின்ற பிறவிகளில் பலனைத் தருவதுமான கர்மாக்களும் பலனளிப்பதில்லை. எஞ்சியிருப்பது பிராரப்த கர்மா மட்டுமே அதாவது முற்பிறவிகளில் செய்து இப்பிறவியில் பலனளிக்கத் துவங்கிவிட்ட கர்மா. எனவே தான் சாந்தோக்ய உபநிஷத், "இவ்வுடல் வீழும் வரைதான் அவன் காத்திருக்க வேண்டும். அதன்பின் அவன் பிரம்மத்துடன் ஒன்றி விடுகிறான்"[109] என்று உபதேசிக்கிறது. பிராரப்த கர்மா தீர்ந்தவுடன் ஜீவன்முக்தனின் உடல் செயல்படுவதிலிருந்து நின்று விடுகிறது. அம்முனிவன் விதேஹ முக்தி அடைகிறான். பொதுவான நியமம் என்னவென்றால் ஒருவனுக்கு ஆத்ம ஞானம் எப்பிறவியில் உறுதியாகப் பிறக்கிறதோ அப்பிறவியுடன் பிராரப்த கர்மாவும் தீர்ந்துவிடுகிறது என்பதாகும்.

"உடல், மனம் ஆகிய இவற்றின் செயல்பாட்டினால் மாசடையாமல் இருப்பது, உடலுள்ள போதே முக்தி அடைவது" என்ற இவ்விரண்டைப் பொறுத்தவரையில் குறிப்பிட்ட பணிகளைச் செய்வதற்காக இறைவனால் அனுப்பப்பட்டதனால் மறு பிறப்பு எய்தும் வசிஷ்டர் போன்றவர்களுக்கும் மற்ற ஞானிகளுக்கும் எந்த வேறுபாடும் இல்லை. ஆனால் வசிஷ்டர் போன்றவர் விஷயத்தில் என்ன விசேஷம் என்றால் உடலுடனிருக்கும் நிலை பிரம்ம ஞானமடைந்த பிறவியுடன் நிற்பதில்லை; தனக்கு இடப்பட்ட பணி தீரும்வரையில் இந்நிலை நீடிக்கிறது. வசிஷ்டர் போன்ற ஞானிகளுக்கு உள்ள அசாதாரணமான பிராரப்த கர்மா இறைவனால் இடப்பட்ட பணி முடிந்த பின்னரே தீரும். அந்தப்பணி முடிந்தவுடன் இவர்களும் மற்ற ஞானிகளைப் போல் தம் உடல் வீழ்ந்தவுடன் விதேஹ முக்தி அடைந்து பிரம்மமாகவே நிலைத்துவிடுகிறர்கள்.

இறைவனின் ஆணையின் பேரில் அபாந்தரதமஸ் போன்ற பெரியோர்கள் உலக நன்மைக்காக, வேதங்களைக் காப்பது போன்ற புனிதப்பணிகளில் ஈடுபடுகின்றனர். அதனால், உடலுடன் கூடிய அவர்கள் நிலைமை அப்பணிகளுக்கு ஏற்றவாறே அமைகிறது. தெய்வீகத் தன்மை வாய்ந்த இவர்கள் ஓர் உடலிலிருந்து மற்றொரு உடலுக்கு ஒரு வீட்டிலிருந்து வேறொரு வீட்டிற்கு மாறுவது போல் சுதந்திரத்துடன் புகுகின்றனர். பலனளிக்கத் தொடங்கிய மிச்சமுள்ள கர்மாக்கள் எல்லாவற்றையும் அவர்களுடைய பல பிறவிகளில் கழிக்கின்றனர். ஆனால் எச்சமயத்திலும் இவர்கள் தாங்கள் உண்மையில் யார் என்பதை முற்றிலும் நினைவில் வைத்திருக்கின்றனர். தேஹத்தை உருவாக்குவதற்குத் தேவையான பொருட்களை உண்டாக்குவது போன்ற செயல்களில் இவர்கள் திறமை வாய்ந்தவர்கள். எனவே தமக்கு வேண்டிய உடல்களை உருவாக்கி

அந்த உடல்களில், ஒன்றிலோ அல்லது ஒரே சமயத்தில் பலவற்றிலோ, வசிக்கின்றனர்.

பிரம்மத்தை அறிந்த சுலபா என்ற பெண்ணைப் பற்றி மஹாபாரதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஜனகருடன் உரையாட விரும்பித்தன்னுடலைத் துறந்து ஜனகரின் உடலில் இவள் நுழைந்தாள்; ஜனகருடன் உரையாடிய பின், மறுபடியும் தன் உடலில் புகுந்தாள்.[110] இப்படிப்பட்ட மஹிமை வாய்ந்தவர்களால் ஓர் உடலிலிருந்து இன்னொரு உடலுக்கு எளிதாகச் செல்ல முடியும் என்பது இக்கதையிலிருந்து தெரிய வருகிறது. வசிஷ்டர் போன்றவர்கள் முற்பிறவிகளை நினைவு கூறும் ஆற்றல்பெற்ற வெறும் ஜாதிஸ்மரர்களைப் போல் அல்லர். இம்முனிவர்கள் முற்றிலும் ஞானமடைந்தவர்கள், தம் செயல்களில் முழு சுதந்திரம் உடையவர்கள், உண்மையில் தாங்கள் யார் என்பதை எப்பொழுதும் கருத்தில் கொண்டுள்ளவர்கள். எனவேதான், வசிஷ்டர் மித்ர-வருணருக்குப் பிறந்த பின்னும், ராமாயணத்திலும் மஹாபாரதத்திலும் பிரம்மாவின் மானஸ புத்திரராகவே குறிப்பிடப்படுகிறார்.

முடிவாக, ஞானம் மோக்ஷத்தை அளிக்கிறது என்ற நியமத்திற்கு எந்த விலக்கும் இல்லை. பிரம்மத்தை உணர்ந்த ஞானிகள் பொதுவாகத் தமது உடல் இறந்தபின் விதேஹமுக்தி அடைகிறார்கள். ஆனால் இறைவனால் தெய்வீகப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டவர்கள் அப்பணிகளை அவர்கள் முடிக்கும் வரை உடலுடன் இருப்பார்கள். அதன் பின், விதேஹ முக்தி அடைந்து பிரம்மத்தில் நிலைத்திருப்பர்.

---

[1] கௌதம தர்ம ஸுத்ரம் 1.8.23,24
[2] யோக ஸுத்ரம் 1.33
[3] வால்மீகி ராமாயணம் 2.1.11
[4] ஸமயோசிதபத்யமாலிகா
[5] பகவத் கீதை 9.1
[6] ப்ரபோத சுதாகரம் 4.59
[7] சார்ங்கதர பத்ததி 273
[8] மனு ஸ்ம்ருதி 4.138
[9] பகவத் கீதை 17.15
[10] ஸபாரஞ்ஜன சதகம் 38
[11] பஞ்சதசீ 6.274
[12] பாகவத புராணம் 7.10.4
[13] சிவானந்தலஹரீ 19
[14] பாகவத புராணம் 9.4.63
[15] பகவத் கீதை 7.18
[16] ஸுபாஷித-ரத்னகோசம் 4.7
[17] சிவ புஜங்கம் 12
[18] நாரத பக்தி ஸுத்ரம் 1.2
[19] தேவீ மாஹாத்மியம் 1.81
[20] ஸௌந்தர்யலஹரீ 22
[21] வால்மீகி ராமாயணம் 6.18.33,34
[22] பாகவத புராணம் 11.14.16
[23] சிவானந்தலஹரீ 61
[24] பகவத் கீதை 12.8-11
[25] பகவத் கீதை 18.65
[26] பகவத் கீதை 2.20
[27] பகவத் கீதை 13.31
[28] பகவத் கீதை 3.27
[29] பகவத் கீதை 13.29
[30] பகவத் கீதை 4.39
[31] பகவத் கீதை 7.14
[32] பகவத் கீதை 10.11
[33] பகவத் கீதை 4.37
[34] பகவத் கீதை 6.3
[35] பகவத் கீதை 2.27
[36] பகவத் கீதை 18.5
[37] பகவத் கீதை 6.29
[38] பகவத் கீதை 10.20
[39] பகவத் கீதை 13.2
[40] பகவத் கீதை 7.19

[41] கருட புராணம் *2.49.64*
(வெங்கடேச்வரா ஸ்டீம் பிரஸ் பதிப்பு)
[42] கலிவிடம்பனம் *90*
[43] கடோபநிஷத் *1.2.24*
[44] ப்ரஹ்ம ஸூத்ரம் *1.1.1*
[45] கடோபநிஷத் *1.3.3,4*
[46] பாகவத புராணம் *2.60*
[47] பகவத் கீதை *3.36*
[48] பகவத் கீதை *3.37*
[49] விஷ்ணு புராணம் *6.5.74*
[50] விஷ்ணு புராணம் *6.5.78*
[51] பகவத் கீதை *3.38*
[52] பகவத் கீதை *3.38*
[53] மனு ஸ்ம்ருதி *2.94*
[54] பகவத் கீதை *3.40*
[55] பகவத் கீதை *3.41*
[56] பகவத் கீதை *2.60*
[57] பகவத் கீதை *3.43*
[58] ப்ருஹதாரண்யக உபநிஷத் *4.4.6*
[59] முக்திகோபநிஷத் *2.2*
[60] வித்யாகரரின் சுபாஷிதரத்னகோசம்
[61] தைத்திரீய ப்ராஹ்மணம் *3.10.11.3*
[62] கடோபநிஷத் *1.2.23*
[63] சாந்தோக்ய உபநிஷத் *7.1.1-3*
[64] முக்திகோபநிஷத் *2.63*
[65] (லகு) யோக வாசிஷ்டம் *4.2*
[66] யோக ஸூத்ரம் *2.41*
[67] மைத்ராயணீ உபநிஷத் *1.1.2*
[68] யோக ஸூத்ரம் *2.40*
[69] சுவேதாசுவதர உபநிஷத் *6.19*
[70] ப்ரஹ்ம ஸூத்ரம் *1.4.23*
[71] சாந்தோக்ய உபநிஷத் *6.1.2*
[72] ப்ருஹதாரண்யக உபநிஷத் *2.4.5*
[73] முண்டக உபநிஷத் *1.1.2*
[74] சாந்தோக்ய உபநிஷத் *6.1.4*
[75] சாந்தோக்ய உபநிஷத் *6.1.5*
[76] சாந்தோக்ய உபநிஷத் *6.2.2,3*
[77] ப்ரஹ்ம ஸூத்ரம் *2.1.34*
[78] ப்ரஹ்ம ஸூத்ரம் *2.1.34*
[79] ப்ருஹதாரண்யக உபநிஷத் *3.2.13*
[80] பகவத் கீதை *4.11*
[81] ப்ரஹ்ம ஸூத்ரம் *2.1.35*
[82] சாந்தோக்ய உபநிஷத் *6.2.1*
[83] ப்ரஹ்ம ஸூத்ரம் *2.1.36*
[84] ரிக் வேத ஸம்ஹிதை *10.190.3*
[85] பகவத் கீதை *15.3*
[86] ப்ரஹ்ம ஸூத்ரம் *2.1.26*
[87] ப்ரஹ்ம ஸூத்ரம் *2.1.27*
[88] மகாபாரதம் *6.6.11*
[89] சாந்தோக்ய உபநிஷத் *3.12.6*
[90] சாந்தோக்ய உபநிஷத் *6.8.1*
[91] ப்ரஹ்ம ஸூத்ரம் *2.1.28*
[92] ப்ருஹதாரண்யக உபநிஷத் *4.3.10*
[93] பகவத் கீதை *9.2,3*
[94] பகவத் கீதை *9.4,5*
[95] பகவத் கீதை *9.5*
[96] பகவத் கீதை *7.14*
[97] பகவத் கீதை *13.14*
[98] பகவத் கீதை *10.20*
[99] பஞ்சதசீ *7.12,13*
[100] ப்ருஹதாரண்யக உபநிஷத் *4.3.2*
[101] ப்ருஹதாரண்யக உபநிஷத் *4.3.23*
[102] ராமாயணம் *7.55.3 – 7.57.8*
[103] மகாபாரதம் *12.337.37-57*
[104] வாயு புராணம் *2.4.21-22*
[105] த்ரிபுரா ரஹஸ்யம் *1.37.120-135*
[106] ப்ரஹ்ம ஸூத்ரம் *3.3.32*
[107] முண்டக உபநிஷத் *2.2.8*
[108] பகவத் கீதை *4.37*
[109] சாந்தோக்ய உபநிஷத் *6.14.2*
[110] மஹாபாரதம் *12.308.3-191*

# பகுதி 3

## ஜகத்குருவின் கட்டுரைகள்

*ஜகத்குரு 1950களில் கன்னடத்தில் இயற்றியிருந்த மூன்று கட்டுரைகளின் தமிழாக்கம் இப்புத்தகத்தில் வழங்கப்பட்டுள்ளது. ஜகத்குரு மேற்கோள் காட்டியுள்ள எண்ணற்ற சமஸ்கிருதப் பகுதிகள் கட்டுரைகளுக்குள்ளேயே அளிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின் சான்றாதாரங்கள் அடிக்குறிப்புகளாகத் தரப்பட்டிருக்கின்றன. சாஸ்திர விஷயங்களை ஆழமாகவும், துல்லியமாகவும், தேவையான அனைத்துப் பகுதிகளை உள்ளடக்கியும் இந்த மூன்று கட்டுரைகளில் எவ்வளவு நேர்த்தியாக ஜகத்குரு வழங்குகிறாரோ அதற்கு இணையாக, அனைவருக்கும் அனாயாஸமாகப் புரியும்படி எழுதும் அவரது நடையும் நேர்த்தியாக உள்ளது.*

# 1. இறைவனின் வழிபாடு

எல்லா மனிதர்களும் தாங்கள் மரணத்திலிருந்து விடுபட வேண்டும் என ஆசைப்படுகின்றனர். ஆனால் இந்த ஆசை நிறைவேறுவதில்லை என்று அனுபவம் கூறுகிறது. பகவான், பகவத்கீதையில் இவ்வாறு கூறியுள்ளார்: "பிறந்த எவருக்கும் இறப்பு உறுதி; இறந்த எவருக்கும் பிறப்பும் உறுதி. எனவே, தவிர்க்க முடியாத ஒன்றைப்பற்றி நீ துயரப்படுதல் தக்கதன்று."[1]

நாம் இப்பொழுது பிறந்துள்ளோம். பகவான் மறு பிறப்பைப் பற்றிப் பேசுகிறார். மறு பிறப்பு ஒன்றிருக்க வேண்டுமானால், முதலில் மரணம் சம்பவிக்க வேண்டும். மரணம் என்றால் என்ன? உடலிலிருந்து பிராணன் (உயிர் மூச்சு) வெளியேறுவதே மரணம் என்று அழைக்கப்படுகிறது. நம் உடலிலிருந்து பிராணன் வெளியேறக் கூடாது என்று ஆசைப்படுகிறோம் எனும்போது, யாருக்குப் பிராணன் உடலிலிருந்து வெளியே செல்லாமல், மேலும் வேறொரு உடலினுள் புகாமலும் இருக்கிறது? வேதம் இவ்வாறு உரைக்கிறது: "ஒரு ஞானியின் பிராணன்கள் உடலிலிருந்து வெளியேறுது இல்லை."[2] "அவை அவனுள்ளேயே கரைகின்றன."[3]

பரம்பொருளை அறிந்து கொண்டவனான ஞானியின் விஷயத்தில், மனம், புலன்கள் மற்றும் பிராணன் இவற்றின் சேர்க்கையான சூட்சுமசரீரமானது, ஸ்தூலசரீரமான இந்த உடலிலிருந்து வெளியேறி வேறொரு உடலில் நுழைவதில்லை. மாறாக, இந்த உடலின் சேர்மங்களான நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகியவை முறையே, அவற்றின் தத்தம் பிரபஞ்ச வடிவங்களில் கலந்துவிடுகின்றன. ஞானிக்கு மரணம் இல்லை என்பதை வேதம் அறுதியிட்டுக் கூறுகிறது. "இவனை அறிவதால் தான் ஒருவன் மரணத்தைக் கடக்கிறான்."[4] எவருக்கு இறப்பு இல்லையோ, அவருக்கு மறுபிறப்பு இருக்க முடியாது.

"மீண்டும் மீண்டும் பிறப்பு, மீண்டும் மீண்டும் இறப்பு. மீண்டும் மீண்டும் தாயின் கருவில் துயில்."[5] இத்தகைய வாக்கியங்கள் ஒரு ஞானிக்குப் பொருந்தாது. ஆகவே, மனிதர்கள் மரணத்திலிருந்து விடுபட வேண்டும் என்ற ஆசையை நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமானால், அவர்கள் ஞானத்தை – அதாவது பரம்பொருளைப் பற்றிய அறிவை – அடைய வேண்டியது அவசியமாகிறது. இது நடக்க வேண்டுமென்றால், ஞானம்

---

[1] பகவத்கீதை 2.27
[2] பிருஹதாரண்யக உபநிஷத் 4.4.26
[3] பிருஹதாரண்யக உபநிஷத் 3.2.11
[4] சுவேதாச்வதர உபநிஷத் 3.8
[5] மோஹமுத்கரம் 21

அடைவதற்கான வழி வகைளை முதலில் அவர்கள் ஈட்ட வேண்டும். வேதம் இவ்வாறு உரைக்கிறது: "அன்பிற்குரியவளே! ஆத்மா அறியப்பட வேண்டியது; கேட்கப்பட வேண்டியது; மனனம் செய்யப்பட வேண்டியது; உறுதியுடன் தியானிக்கப்பட வேண்டியது."[1]

அதாவது, சிரவணம் என்பது குருவின் மற்றும் சாஸ்திரத்தின் மூலமாக பரம்பொருளைப் பற்றி கேட்பது, ஐயங்களைத் தீர்த்துக்கொள்ளத் தான் கேட்டதற்கு ஏற்ப ஆராய்ந்து பார்ப்பது மனனம், மேலும் உறுதியான, ஒருநிலைப்பட்ட மனத்துடன் ஆத்மாவைத் தியானிப்பது நிதித்யாஸனம். பரம்பொருளிலிருந்து வேறில்லாத ஆத்மாவை அறிவதற்கான நேரடி வழி வகைகள் இவையாகும்.

சிரவணம், மனனம் மற்றும் நிதித்யாஸனம் ஆகியவற்றில் ஈடுபடுவதற்கு நான்கு தகுதிகள் தேவைப்படுகின்றன. அவை விவேகம் (பகுத்தறிதல்), வைராக்யம் (பற்றின்மை), ஸமாதி-ஷட்க-ஸம்பத்தி (மனவடக்கம் முதலிய ஆறு அருங்குணங்கள்), முமுக்ஷுத்வம் (ஸம்ஸாரத்திலிருந்து விடுபட வேண்டும் என்கிற ஆசை) என்பன. இதில் கூறப்பட்ட 'ஆறு குணங்கள்' என்பவை பின்வருமாறு: சமம் (மனவடக்கம்), தமம் (புலனடக்கம்), உபரதி (செயல்களிலிருந்து உள்வாங்குதல்), திதிக்ஷை (சகிப்புத்தன்மை), சிரத்தை (சாஸ்திரம் மற்றும் குருவின் சொற்களில் திடமான நம்பிக்கை), சமாதானம் (புத்தியை நிலை நிறுத்தல்). இந்நான்கு தகுதிகளும் ஒருவனிடம் இல்லாவிட்டால் அவன் செய்யும் சிரவணம், மனனம், முதலிய முயற்சிகள் பரம்பொருளைப் பற்றிய அறிவு ஏற்படுதல் என்னும் பலனை அவனுக்குத் தராது. எவ்வாறு வேதத்தில் உள்ள யாகம் ஒன்றைச் செய்ய உபநயனம் (பூணூல் அணிவிப்பு) அவசியமோ, அதுபோலவே இங்கு இந்த நான்கு தகுதிகளும் ஒருவனுக்கு மிகவும் இன்றியமையாதவை. ஆனால், அவற்றை ஒருவன் எளிதில் அடைய முடிவதில்லை.

ஒருவனுக்கு சிரவணம், மனனம், முதலியவற்றில் ஈடுபட இன்னும் தகுதி வரவில்லை என்றால் அப்பேற்பட்டவன் என்ன செய்வது? பின்வருமாறு சுலோகம் ஒன்று உள்ளது: "நம் மனம் உலகத்திலிருந்து முழுவதுமாக விலகாததாலால் நாம் சிரவணம், மனனம் முதலியவற்றைச் செய்ய முடியாது. அதேசமயம், விஷயமாகிற புறப்பொருட்களால் வரும் துன்பமோ தாளவில்லை. அவை நீங்குவதற்காக இறைவனின் திருவடிகளுக்கு நாம் ஆராதனையை செய்கிறோம்."

பக்தியைத் தான் நாட வேண்டும் என்பது பொருள்.

---

[1] பிருஹதாரண்யக உபநிஷத் 2.4.5

## பக்தியின் தன்மை

*இயல்பாகவே நாம் எல்லோரும் ஏதாவது ஒரு விஷயத்தில் பற்றுடன் ஈடுபடுகிறோம். "ஒரு பாலகன் விளையாட்டில் ஈடுபடுகிறான். இளைஞன் ஒரு பெண்ணிடத்தில் ஈடுபடுகிறான். வயதில் முதிர்ந்தவன் கவலையில் ஈடுபடுகிறான். எவரும் பரம்பொருளான பிரம்மத்தில் ஈடுபடுவதில்லை."[1]*

*எந்த ஒரு சமயத்திலும், நாம் எந்தப் பற்றும் இல்லாமல் இருப்பதில்லை எனத் தெரிகிறது. அதே போல், சற்றும் பிரியம் இல்லாமலிருப்பது என்பது முடியாத காரியம் என்றே கூற வேண்டும். ஆனால் நம்மால் என்ன செய்ய முடியும் என்றால், நமது அன்பை இறைவனிடத்தில் செலுத்துவதுதான். அவ்வாறு நாம் செய்தால், நமக்குப் பெரும்பயன் கிட்டும். அன்பு என்பது மனதின் விருத்தி. அன்பு செலுத்துவதற்கு ஒரு பொருள் வேண்டும்; இல்லையேல் அது நிலைக்காது. குழந்தைகளைக் கண்டால் வரும் ஈர்ப்பிற்கு 'வாத்ஸல்யம்' என்று பெயர்; மனைவியிடம் வைக்கும் அன்பிற்கு 'ரதி' என்று பெயர். வணங்குதற்குரியவரிடம் நாம் வைக்கும் அன்பிற்கு 'பக்தி' என்று பெயர். 'பக்தி' என்ற சொல்லை நாரதர் தமது பக்தி சூத்திரங்களில் பின்வருமாறு விளக்குகிறார்: "பக்தி என்பது இறைவனின் மீதுள்ள பேரன்பு."[2] இறைவனின் மீது பேரன்பு கொண்ட பக்தனால் அவனை விட்டு விலகி ஒரு நொடியும் இருக்க முடியாது. இறைவனிடத்தில் அன்பில்லாமல் ஒரு நொடி கூட ஒருவனால் இருக்க முடியுமானால் அவனுக்குப் பேரன்பு இல்லை என்றே கூற வேண்டும். இப்படிப்பட்ட பேரன்பே பக்தியின் உச்ச நிலை. இது ஒருவனுக்கு இருக்குமானால், அந்த பக்தன் இறைவனை அடைந்து மூப்பையும் இறப்பையும் கடக்கிறான்.*

*"பிரம்மம் சார்பிலா இருப்பு; சுத்த சைதன்யம்; வெளி, காலம், பொருள் இவற்றால் வரையறுக்கப்படாதது."[3]இது தான் பரம்பொருளின் ஸ்வரூபம் என்று வேதம் இயம்புகிறது. அதாவது, பரம்பொருள் நிர்குணமானது – குணமற்றது. ஒரு பொருளில் உள்ள நல்ல தன்மைகள் அப்பொருளின் மீது நம்மைப் பற்றுதல் கொள்ள வைக்கின்றன. இங்கேயோ இறைவன் குணமற்றவன் என்கிறோம். அப்படியானால், பரம்பொருளின் மீது அன்பு கொள்வது எப்படி? பரம்பொருள் ஸ்வரூபத்தில் குணமற்றதாயினும், வியத்தகு தன்மைகளுடன் காட்சிதந்து பக்தி உண்டாவதற்கு உதவுகிறது. பகவான் பகவத் கீதையில் இவ்வாறு கூறியுள்ளான்: "நான் பிறப்பிலி, இயல்பிலேயே குறைவில்லா ஞானசக்தி உடையவன், எல்லாவற்றிற்கும்*

---

[1] *மோஹமுத்கரம் 7*
[2] *நாரத பக்தி சூத்திரம் 1.2*
[3] *தைத்திரீயஉபநிஷத் 2.1.1*

இறைவன் ஆயினும், எனது பிரகிருதியை வசப்படுத்தி, எனது மாயையினாலேயே பிறக்கிறேன்."[1] வேதமும் இவ்வாறு உரைக்கிறது "பிறப்பற்றவன் பல விதமாகத் தோன்றுகிறான்."[2]

எனவே, இறைவன் அவதாரம் செய்கிறான் என்பதை ஒப்புக்கொள்ளவே வேண்டும். அவனது அவதாரங்கள் மனதைக் கவரும் அவனுடைய லீலைகளே. இறைவன் ஏன் அவதரிக்கிறான்? உலகத்து உயிர்கள் நன்மையடைய வேண்டும் என்பதற்காக. ஓரிடத்தில் "மற்றவர்களுக்கு உதவுதல், கைவல்யத்தில் இருத்தல் என்கிற இரண்டையும் சீர்தூக்கிப் பார்த்த இறைவன், மற்றவர்களுக்கு உதவுதலே மேலானது என்று முடிவு செய்து பத்து அவதாரங்கள் எடுத்தான்."[3] என்று கூறப்படுகிறது.

"சீ! ஒருவருக்கும் உதவாதவனின் வாழ்க்கை! விலங்குகள் நன்றாக வாழட்டும்; அதன் தோல் மற்றவருக்கு பயன்படுகிறது."[4] மற்றவருக்கு உதவாதவனின் வாழ்க்கை வீணே. அவனை விட ஒரு விலங்கே மேல். ஏனென்றால், அதன் உயிர் போன பின்பு கூட அது மற்றவர்களுக்குப் பயன்தருகிறது. இறைவனைப் பொருத்தமட்டில் அவன் கருணைவடிவாக இருக்கிறான்.

இதோ, அவனது கருணையை எடுத்துக்காட்டும் மஹாபாரதத்தில் உள்ள ஒரு கதை: ஒரு சமயம், கிருஷ்ணர் துவாரகையில் தமது மாளிகையில் இருந்தார். அதே சமயத்தில், ஹஸ்தினாபுரத்தில் திரௌபதியை அவளது தனி இருப்பிடத்திலிருந்து துரியோதனனின் ஆணைக்கிணங்க, கௌரவர் சபைக்கு துச்சாதனன் இழுத்து வந்து, அவளை மானபங்கப்படுத்த எண்ணி அவள் அணிந்திருந்த உடையைக் களைய முற்பட்டான். கிருஷ்ணரிடம் மிகுந்த பக்தி கொண்ட திரௌபதி அவரிடம் ஆதரவு கேட்டுக் கதறினாள். "அந்தோ! கிருஷ்ணா! துவாரகையில் உறைபவனே! யாதவர்களை மகிழ்விப்பவனே! நீ எங்கிருக்கிறாய்? காப்பவர் எவரும் இல்லாத இந்நிலையை அடைந்த என்னை ஏன் புறக்கணிக்கிறாய்?"[5] இதைக் கேட்ட பகவானின் உள்ளம் உருகியது. தமக்கு ஏற்படக்கூடிய சௌகரியக்குறைவு பற்றியெல்லாம் அவர் சிந்திக்கவில்லை, யாரிடமும் சொல்லிக் கொள்வதற்காகவும் அவர் தாமதிக்கவில்லை. உடனடியாக அற்புதமான விதத்தில் திரௌபதியிடம் சென்று, அவளது மானத்தைக் காப்பாற்றினார். அவருடைய கருணையின் தன்மை எத்தகையது எனில்,

---

[1] பகவத்கீதை 4.6

[2] தைத்திரீய-ஆரண்யகம் 3.13.1

[3] ஸுபாஷித ரத்ன பாண்டாகாரம் இரண்டாவது ப்ரகரணம், பரோபகாரப்ரசம்சை 5

[4] சாரங்கதரபத்ததி 59.1478

[5] மஹாபாரதம் (தாக்ஷிணாத்ய பாடம்) 2.61.47

அவ்வாறு உதவி செய்தும் அவருக்குத் திருப்தியில்லை. பின்பு அவர் கூறியதாவது: "ஓ கோவிந்தனே!" என்று கதறித் திரௌபதி, தொலைவில் இருந்த என்னை அழைத்தாள். அவளுக்கு நான் பட்ட கடன் மிகப் பெரிது; அது என் நெஞ்சை விட்டு நீங்காது."[1]

பகவானின் மனதைக் கொள்ளை கொள்ளும் குணங்களைப் பற்றி பாகவத புராணம் இவ்வாறு குறிப்பிடுகிறது: "எந்தவிதமான தளைகள் அற்றவரும் (அல்லது, நூற்கல்வியை விட்டவரும்) ஆத்மாவில் மட்டுமே திளைக்கும் முனிவர்களும் எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் பகவானிடத்தில் அன்பு செலுத்துகின்றனர். பகவானுடைய அற்புதமான குணங்கள் அத்தகையன."[2] பகவத் பாதரின் பிரார்த்தனையொன்று பின்வருமாறு உள்ளது: "உன்னை வணங்குவோரிடம் இல்லாதவற்றை அளிப்பதிலும், அவர்களிடம் இருப்பவற்றைக் காப்பதில் தேர்ந்தவனும், அவர்களுக்கு மேலான நன்மையை தருவதிலேயே கருத்துள்ளவனும், கண்களுக்குத் தெரிந்தவை, அப்பாற்பட்டவை என்ற இரண்டையும் அடையும் வழி முறைகளை உபதேசிப்பவனும், உள்ளிலும் வெளியிலும் எங்கும் வியாபித்திருப்பவனும், எல்லாவற்றையும் அறிந்தவனும், கருணை கொண்டவனுமான உன்னிடம் நான் கூறவேண்டியது என்ன இருக்கிறது? சம்புவே! நீ எனக்கு மிகவும் அந்தரங்கமான என் ஆத்மா என்பதை நான் எப்பொழுதும் மனதில் கொண்டுள்ளேன்."[3] அற்புதமான பகவானின் இயல்பு மேற்கூறப்பட்ட செய்யுட்களில் சித்தரிக்கப்பட்டபடி உள்ளது.

இறைவனிடத்தில் தீவிரமானதும் நிலையானதும் ஆன அன்பைப் பற்றி மேலே கூறினோம். இதற்கு, 'ஸாத்ய பக்தி' அதாவது 'முதிர்ந்த பக்தி' என்று பெயர். இதை அடைவதற்கு பக்தி சார்ந்த ஒன்பது வழிமுறைகள் உள்ளன. இவ்வழிமுறைகளையும் நாம் 'பக்தி' என்றே அழைக்கிறோம். அதாவது, 'பக்தி' என்ற சொல் சாஸ்திரத்தில் ஸாத்ய பக்தியையும், வேறு சில சமயங்களில், இரண்டாம் பட்சமாக அதை அடைவதற்கான வழிமுறைகளையும் குறிக்கிறது.

பாகவத புராணத்தில்: "இறைவனது மேன்மையைக் கேட்டல், அவனைப் புகழ்தல், அவனை நினைத்தல், அவனுடைய பாதங்களுக்குத் தொண்டு புரிதல், அவனைப் பூஜித்தல், அவனை வணங்குதல், அவனுடைய பணியாளனாக இருத்தல், தன்னை அவனுடைய நண்பனாகக் கருதுதல், தன்னை முழுவதுமாக அவனிடம் அர்ப்பணித்தல் என்ற ஒன்பது வகையான இறைபக்தியை எவனொருவன் பலனொன்றும் எதிர்பாராமல்,

---

[1] மஹாபாரதம் 5.58.21

[2] பாகவத புராணம் 1.7.10

[3] சிவானந்தலஹரீ 35

கற்ற கணம் முதல் கடைபிடிப்பானோ, அதையே மிகச்சிறந்த கல்வியாக நான் கருதுகிறேன்.”[1]

இறைவனின் மேன்மையைக் கூறும் பாகவதபுராணம் முதலிய நூல்களின் விளக்கங்களைச் சிரத்தையுடன் கேட்பது ‘சிரவணம்’ எனப்படுகிறது. (இதுவே மேற்சொன்ன ஒன்பது வகைகளில் முதலாவது.) இப்படிச் சிரவணம் செய்வதால் நமக்கு பகவானிடம் அன்பு ஏற்படுகிறது. ஆனால் நாமோ பயனற்ற விஷயங்களில் நமது பொன்னான நேரத்தை வீணடிக்கிறோம். இதனால் இம்மையிலோ மறுமையிலோ நமக்கு எந்த நன்மையும் வரப்போவதில்லை. மாறாக, நமது கவனம் இறைவனைப் பற்றிய பாகவதம் முதலிய நூல்களின்பால் திரும்பினால், அவனிடத்தில் அன்பு ஏற்படுவது மட்டுமல்லாது, நாம் எப்படி அர்த்தமுள்ள வாழ்க்கை வாழ வேண்டும் என்பதைப் பற்றியும், உலக சுகங்களின் சுவையின்மை பற்றியும் நாம் அறிந்து கொள்ள முடியும்.

நமக்கு எது உண்மையான நன்மையோ அதை நாம் அடைவதற்கான வழிமுறைகள் பலவற்றைச் சாஸ்திரம் கூறுகிறது. இக்கலியுகத்தில் மக்கள் இவைகளை நன்கு கடைப்பிடிப்பது கடினம் என்றாலும் அதில் ஒன்றான கீர்த்தனம் (ஒன்பது வழிகளில் இரண்டாவதாகக் கூறப்பட்டது) மிகவும் எளிதானது மற்றும் நன்கு பலனளிப்பதுமாகும். பகவானின் நாமங்கள் கூறுவதும் இதில் அடங்கும். விஷ்ணு புராணத்தில் இவ்வாறு வருகிறது: “ஒருவன் கிருதயுகத்தில் தியானம் செய்வதன் மூலம் எதை அடைவானோ, திரேதாயுகத்தில் யாகங்கள் செய்வதன் மூலம் எதை அடைவானோ, துவாபரயுகத்தில் பூஜைகள் செய்வதன் மூலம் எதை அடைவானோ, அதை அவன் கலியுகத்தில் பகவானின் நாமங்களைச் சொல்வதன் மூலம் அடைகிறான்.”[2] மனிதனின் ஆற்றல் யுகத்திற்கு யுகம் குறைந்து வந்தது; எனவே மக்கள் முன்பு செய்ததை விட எளிமையான வழிமுறைகளையே பின்பற்றினர். ஆனால், மனிதனால் இறுதியில் என்ன அடையப்பட வேண்டுமோ, அது மட்டும் என்றும் மாறவில்லை; அதை நாம் நம் பார்வையிலிருந்து ஒருபொழுதும் விலகிச் செல்லவிடக் கூடாது.

‘கீர்த்தனம்’ என்றால் இறைவனின் நாமத்தைப் பாடுவது மட்டுமே அல்ல. ஒருவன் தனக்கு உபதேசிக்கப்பட்ட மந்திரத்தை ஜபம் செய்வதும் இதில் அடங்கும். மனு ஸ்ம்ருதியில், “ஒரு பிராம்மணன் ஜபத்தின் மூலமாகவே ஸித்தி(முழுமை) அடைகிறான் என்பதில் எந்த ஐயமும் இல்லை. அவன் யாகம் முதலியவற்றைச் செய்யலாம், செய்யாமலும் இருக்கலாம். (ஜபமானது யாருக்கும் எந்த விதமான இம்சையையும் கொடுக்காது

[1] பாகவத புராணம் 7.5.23 24;
[2] விஷ்ணு புராணம் 6.2.17

*என்பதால், அதைச் செய்வதன் மூலம்) எவன் அனைத்து உயிர்களுக்கும் நண்பனோ, அவனே பரம்பொருளுடன் இணைந்தவன் என்று கருதப் படுகிறான்.''*[1] என்று கூறப்பட்டுள்ளது.

*''அரசனே! குறைகளின் இருப்பிடமான இக்கலியுகத்தில் பெரும் நன்மை ஒன்று இருக்கிறது. இறைவனைப் புகழ்வதன் மூலமாகவே ஒருவன் பற்றற்றவன் ஆகிப் பரம்பொருளை அடைகிறான்.''*[2] என்று பாகவத புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

இதிலிருந்து, கீர்த்தனம் செய்து கொண்டிருப்பதாலேயே ஒருவன் உலகத் தளைகளிலிருந்து விடுபடுகிறான் என்பது தெளிவாகிறது. கீர்த்தனம் செய்தாலும், நமக்கு சாஸ்திரத்தால் விதிக்கப்பட்ட மற்ற கர்மாக்களைச் செய்வதில் அசிரத்தை இருக்கக்கூடாது. நாம் நம்முடைய கர்மாக்களைச் செய்யாவிட்டால் நாம் செய்யும் இறைவனின் நாம ஜபமும், மந்திர ஜபமும் தகுந்த பலனளிக்காது. கர்மாக்களைப் புறக்கணிப்பது 'நாம அபராதம்' – பகவானின் நாமங்களைச் சொல்வது சம்பந்தமாக ஏற்படும் குற்றம் என்றே கருதப்படுகிறது. பின்வருமாறு சுலோகம் ஒன்று உள்ளது: *''1.உயர்ந்தோரைப் பழிப்பது, 2.தீயவருக்கு இறைவன் நாமமஹிமையை எடுத்துரைப்பது, 3.சிவ-விஷ்ணு பேதம் பார்ப்பது, 4-6.வேதம், சாஸ்திரம், குருவின் வாக்கு இவற்றில் நம்பிக்கையின்மை, 7.இறைவனின் மேன்மை உண்மையல்ல என்ற தவறான அறிவு, 8-9.'பகவன்நாமம் இருக்கிறது' என்பதால் செய்யவேண்டிய கர்மாக்களைச் செய்யாமல் இருத்தல், செய்யத் தகாதவற்றைச் செய்தல், மற்றும் இதனால் தவறில்லை என்று கருதுதல், 10.சிவ-விஷ்ணு நாமங்கள் சொல்லுதலே மற்ற அனைத்து தர்மங்களுக்குச் சமமென எண்ணுதல், என்ற பத்தும் ''நாம அபராதம்'', பகவானின் நாமத்தைச் சொல்வது தொடர்பாக ஏற்படும் குற்றங்கள், என்று கருதப்படுகின்றன.''*[3]

மற்றொரிடத்தில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. *''எவனொருவன் புல்லினும் தாழ்மையுள்ளவனாக, மரத்தினும் பொறுமையுடையவனாக, மற்றவரிடம் மதிப்புள்ளவனாக மற்றும் செருக்கற்றவனாக இருக்கிறானோ, அவனால் பகவானின் நாமம் கீர்த்தனம் செய்யப்பட வேண்டும்.''*[4]

பக்தியின் மூன்றாவது வழிமுறை ஸ்மரணம். இது இறைவனை மனதில் வைத்திருப்பது என்பதாகும். *''(பரம்பொருளின் பெயரான) 'ஓம்' என்னும்*

---

[1] *மனு ஸ்ம்ருதி 2.87*
[2] *பாகவத புராணம் 12.3.51*
[3] *பகவந்நாமபூஷணம்; பகவந்நாமாம்ருதரஸோதயம் என்ற நூலில் மேற்கோளாகக் காட்டப்படுகிறது; உல்லாஸம் 6.*
[4] *சைதன்யரின் சிக்ஷாஷ்டகம் 3*

பிரணவத்தை ஜபித்தலும், அதன் பொருளைத் தியானித்தலும் (சாதகனின் மனதை ஒருநிலைப் படுத்துகின்றன)''[1] என யோகசூத்திரம் போதிக்கிறது. பகவான், பகவத்கீதையில் பின்வருமாறு கூறுகிறார்: ''யார் என்னிடத்தில் எப்போதும் பற்றுக்கொண்டு, என்னினும் வேறல்லாதவராய், என்னிடம் மனதை எப்பொழுதும் நிலைநிறுத்தி, எங்கும் என்னை வழிபாடு செய்பவர்களுக்கு, நான் அவர்களிடம் இல்லாதவற்றைத் தருகிறேன், இருப்பவற்றைப் பேணுகிறேன்.''[2]

பாகவத புராணத்தில் இவ்வாறு வருகிறது: ''தலையில் மயிலிறகுகளைக் கிரீடமாக அணிந்து, இரு காதுகளிலும் வெண்ணாங்குப் பூக்கள், மஞ்சள் நிற ஆடை, வைஜயந்தி மாலை ஆகியவற்றை அணிந்து, நாட்டிய வல்லுநரின் உடல் தோற்றத்துடன், புல்லாங்குழலின் துளைகளைத் தன் உதடுகளிலிருந்து கசியும் அமிர்தத்தால் நிரப்பிய கிருஷ்ணன், கோபியர் தனது புகழ்பாட, பிருந்தாவனத்துள் நுழைந்து, அந்த இடத்தைத் தனது அடிச்சுவடுகளால் எழிலாக்கினான்.''[3] இதுபோல் இறைவனைத் தியானம் செய்யலாம். கடவுளின் உபாஸனையையும் உள்ளடக்கியதே 'ஸ்மரணம்'.

அடுத்து, 'பாதஸேவனம்'. இறைவனின் திருவடிகளுக்குத் தொண்டு புரிவது. இறைவனின் உருவங்களுக்குப் பணிவிடை செய்வது, பகவானின் திருவடியிலிருந்து வருவதாகக் கருதப்படும் கங்கை, கிருஷ்ணர் விளையாடிய யமுனை முதலிய புண்ணிய நதிகளில் நீராடுவது போன்றவை இவ்வகை பக்தியில் அடங்குவன.

அடுத்தது, 'அர்ச்சனை' – இறைவனை வழிபடுதல். சாஸ்திரங்களில் கூறப்பட்ட வழியில் இறைவனின் விக்கிரகங்களை வழிபட வேண்டும். பகவானுடைய ஸாநித்தியத்தை ஏற்படுத்துவதான பிராணப் பிரதிஷ்டை செய்யப்படாத சுவாமி விக்கிரங்களுக்குப் பூஜை செய்யக்கூடாது. ''பிராணப் பிரதிஷ்டை செய்யப்படாத விக்கிரகங்கள் முன்னர் எப்படி இருந்தனவோ, அப்படியே இருக்கின்றன; அவற்றுள் புனிதத்தன்மை இல்லை. தங்கம் முதலிய பொருட்களுக்கு தானாகவே இறைத்தன்மை இருப்பதில்லை.'' என்று சுலோகம் ஒன்று உள்ளது. எப்படி மனிதன் தன்னுடைய நிழற்படத்தை அன்புடன் ''இது நான்'' என்று அடையாளம் கூறுகிறானோ, அதே போல் பகவானும் பிராணப் பிரதிஷ்டை செய்யப்பட்ட விக்ரஹங்களில் விசேஷமாக வீற்றிருக்கிறான்.

''இறைவனோ எங்கும் இருக்கிறான். அவனுடைய விக்கிரகத்திற்கு பூஜை எதற்கு?'' என்ற கேள்வி எழலாம். ஒரு கால்நடை மருத்துவர், உடல்

[1] யோக சூத்திரம் 1.28
[2] பகவத் கீதை 9.22
[3] பாகவத புராணம் 10.21.5

நலம் சரியில்லாத ஒரு பசு மாட்டிற்கு மருந்து ஒன்றை நெய்யில் கலந்து கொடுக்குமாறு ஆலோசனை கூறலாம். "பாலிலிருந்து தான் நெய் கிடைக்கிறது. பசுவின் வயிற்றில் ஏற்கெனவே மிகுந்த அளவிற்குப் பால் இருக்கிறதே" என்ற எண்ணி மாட்டுக்கு மருந்தை நெய்யில் கலக்காமல் கொடுத்தால் அது சரிவராது.

அதைப் போலவே, இறைவன் எங்கும் இருக்கிறான் என்றாலும், சரியான முறையில் பிரதிஷ்டை செய்யப்பட்ட விக்கிரகங்களை நாம் வழிபட்டால், அதற்கு அவன் விசேஷமான பலனைத் தருகிறான். சரி, நம்மிடம் விக்கிரகம் இல்லை, அல்லது நாமாகவே பூஜை செய்வதற்கு நமக்குச் சக்தி இல்லை, நாம் என்ன செய்வது என்று கேட்டால், அதற்கு என் குரு (ஜகத்குரு ஸ்ரீசந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்) நாம் கோயிலுக்குச் சென்று அங்குள்ள இறைவனை வழிபடலாம் என்று சொல்லியிருக்கிறார்.

பகவானைப் பூஜை செய்வது மிகவும் எளிது. பகவான் இவ்வாறு கூறியுள்ளான்: "எவன் எனக்கு ஓர் இலையையோ, ஒரு மலரையோ, ஒரு பழத்தையோ அல்லது நீரையோ பக்தியுடன் அளிக்கிறானோ, சுத்த மனமுடையவனான அவன் பக்தியுடன் அளிக்கும் அதை நான் ஏற்றுக் கொள்கிறேன்."[1]

மேலும், மிருத்யுஞ்ஜய மானஸபூஜா, தேவீ மானஸ பூஜா ஸ்தோத்திரம் (முறையே சிவனுக்குக்கும் அம்பிகைக்கு மனதால் பூஜை செய்வதற்கான சுலோகங்கள்) போன்றவை எந்த விக்கிரகமும் இல்லாமல் இறைவனை எவ்வாறு மனதால் வழிபாடு செய்வது என்பதை நமக்கு விளக்குகின்றன.

'வந்தனம்' – இறைவனின் திருவடிகளில் விழுந்து வணங்குதல் என்பது அடுத்துச் சொல்லப்படுகிறது. இப்படி வந்தனம் செய்வது பூஜையின் ஒரு பகுதி என்றாலும், இறைவன் எங்கும் இருப்பதால் அவனை நாம் எந்த நேரமும் உடலாலோ, வாக்காலோ, மனதாலோ விழுந்து வணங்கலாம். பக்தி சாஸ்திரம் இதை 'வந்தனம்' என்று ஏற்றுக் கொள்கிறது.

பகவானின் விச்வரூபத்தைப் பார்த்த அர்ஜுனன் தனது நமஸ்காரங்களை அர்ப்பணித்தான். "உனக்குக் கிழக்கு முகமாக என் நமஸ்காரங்கள்; மேலும், மேற்கு முகமாக என் நமஸ்காரங்கள். எல்லாமாய் உள்ளவனே! எல்லாப் பக்கங்களிலிருந்தும் உனக்கு என் நமஸ்காரங்கள்."[2]

பக்தியின் அடுத்த வடிவம் 'தாஸ்யம்'– தன்னை இறைவனின் சேவகன் எனக் கருதுவது. பகவான் உரைத்ததாவது: "சுருதியும் ஸ்ம்ருதியும் என்

---

[1] பகவத் கீதை 9.26
[2] பகவத்கீதை 11.40

கட்டளைகள்.''[1] எனவே, சுருதியையும் ஸ்ம்ருதியையும் இறைவனின் ஆணைகளாகக் கருதி, அவை நமக்கு விதித்தவற்றை சிரத்தையுடன் செய்யவேண்டும். அது மட்டுமல்லாமல், ''குந்தியின் மைந்தனே! நீ எதைச் செய்கிறாயோ, எதை உண்கிறாயோ, எதை யாகத்தில் அளிக்கிறாயோ, எதைத் தானமாகக் கொடுக்கிறாயோ, எந்த தவம் செய்கிறாயோ,அவை எல்லாவற்றையும் எனக்கு அர்ப்பணமாகச் செய்!''[2] என்ற பகவானுடைய கட்டளைக்கிணங்க, அனைத்தையும் அவனுக்கே நாம் அர்ப்பணிக்க வேண்டும்.

தாஸ்யத்திற்கான ஒரு பிரார்த்தனை: ''பரமசிவனே! நீ மயானத்திலோ, இவ்வுலகிற்கப்பால் உள்ள ஏதோவொரு இடத்திலோ, கயிலாயத்திலோ, மேரு மலையுச்சியிலோ சுற்றித் திரியலாம். ஆனால் என்னை உன் அருகிலேயே வைத்துக் கொண்டு உன் தொண்டனின் தொண்டனாக என்னை ஆக்கி விடு.''[3]

பக்தியின் அடுத்த வடிவமாகக் கூறப்படுவது 'ஸக்யம்', அதாவது தன்னை இறைவனின் நண்பனாகக் கருதுவது. இத்தகைய பக்தியை விடாமல் செய்வதால் இறைவனிடம் நமக்கு உள்ள பற்று மேன்மேலும் உறுதியடைகிறது. நம்மில் எவரும் உற்ற நண்பனைக் கண்டு அச்சம் கொள்வதில்லை. அதே போல், நம் நண்பனும் நாம் மகிழ்ச்சியுடன் இருக்கவே விரும்பி அதற்காக நமக்கு உதவியும் செய்கிறான். இது பகவானுக்கும் பக்தனுக்கும் இடையே உள்ள நட்பு என்ற உறவிலும் காணப்படுகிறது.

கடைசியாகச் சொல்லப்படுவது, ''ஆத்ம நிவேதனம்'', அதாவது தன்னை இறைவனிடம் முழுமையாக அர்ப்பணித்துக் கொள்ளுதல். இவ்விதமான பக்தி பக்குவம் அடைந்து, நாமும் இறைவனும் இரு வேறுபட்டவர்கள் அல்ல, நாமே அந்தப் பரம்பொருள் என்ற ஞானம் அடைய வழி வகுக்கிறது. ஒரு ஆறு, கடலுடன் கலந்த பின் தனது தனித்தன்மையை இழக்கிறது. எது ஆறாக இருந்ததோ அது கடலாகிக் கடல் மட்டுமே எஞ்சி நிற்கிறது. அதே போல், பரம்பொருளுடன் இரண்டறக் கலந்தவன் பரம்பொருளாகவே இருக்கிறான்.

''பரத குலத்திற் சிறந்தவனே! அவனையே முழுதுமாகச் சரணடை. அவனுடைய அனுக்கிரகத்தினால் மிக உயர்ந்த சாந்தியும், அழிவற்ற உறைவிடத்தையும் அடைவாய்.''[4] இவ்வாறு பகவத் கீதையில் பகவான்

---

[1] விஷ்ணுதர்மம் 74.30
[2] பகவத்கீதை 9.27
[3] ஆத்மார்ப்பணஸ்துதி 45
[4] பகவத் கீதை 18.62

அறுதியிட்டுக் கூறியிருக்கிறான். மேலும், முனிவர்களின் கருத்தும் இது தான்: "எப்பொழுதும் அதைச் சிந்திப்பது, அதைப் பற்றிப் பேசுவது, அதை மற்றவர்க்குக் கற்பிப்பது, அதிலேயே முழு மனதுடன் இருப்பது – இதையே சான்றோர் மெய்ஞ்ஞானத்தின் பயிற்சியாகக் கருதுகிறார்கள்."[1]

நாம் எல்லாவற்றையும் இறைவனுக்கு அர்ப்பணித்துக் கவலையில்லாமல் இருக்க வேண்டும். அப்படியிருந்தால், பகவானே நம்மை முழுவதுமாகப் பார்த்துக்கொள்வான். நம்மிடம் இல்லாதவற்றை நமக்குத் தருவான்; நம்மிடம் இருப்பதையும் பேணிக்காப்பான்; மெய்ஞ்ஞானமும் அளிப்பான். அப்பொழுது நாம் விரும்பும் சாகாமை என்ற நிலை நமக்குக் கிட்டும். எனவே, இறைவனை அடைவதே எல்லாவற்றிலும் மேலான சாதனை; அது தான் உயர்ந்த நன்மை.

## 2. சாஸ்திரம் தேவை என்பதற்கான நிரூபணம்

முகவுரை

இறைவனின் படைப்பில் மனிதன் முழுமை பெற்றுள்ளான். எதில்? உருவ அளவில் இல்லை; ஒரு யானை மனிதனை விட மிகப் பெரியது. வலிமையில் என்றும் கூறமுடியாது; பல விலங்குகள் மனிதனை விட வலிமையானவை. துயரத்திலா என்றால் அதுவும் இல்லை; மனிதர்கள் துயரத்தின் உச்சியைப் பொறுத்துக் கொள்கிறார்கள் என்று கூறமுடியாது. மனிதன் அனுபவிக்கும் இன்பத்திற்கு எல்லையில்லை என்று கூறினால் அது நம்புவதற்கில்லை என்று முற்றிலும் நிராகரிக்கப்பட்டு விடும். சுலோகம் ஒன்றில் இக்கருத்தைப் புலவர் ஒருவர் மிகவும் பொருத்தமாக வடித்துள்ளார்: "மானே! நீ செல்வந்தரை வஞ்சனையாகப் புகழ்ந்து அவர்களை ஏமாற்றுவதில்லை; அவர்கள் முகத்தோற்றத்தை அடிக்கடி உன் கண்களால் பருகுவதுமில்லை; அவர்களுடைய பெருமைப்பேச்சைச் செவி மடுத்துக் கேட்பதில்லை; ஏதேனும் ஒரு எதிர்ப்பார்ப்பை மனதில் வைத்துக் கொண்டு அவர்களை நோக்கி ஓடுவதுமில்லை. மாறாக, பசி வரும் நேரத்தில் இளம்புல்லை உண்கிறாய்; பின், உறக்கம் வரும் போது உறங்குகிறாய். இப்படி, திருப்தியுடன் இருக்க நீ என்ன தவம் செய்தாய்? எங்கு செய்தாய்? அதை எனக்குச் சொல்வாய்!"[2]

மனிதனின் முழுமை அவனுடைய செல்வத்திலா என்றால் அதுவுமில்லை. இங்கே, வாஸ்தவத்தில் செல்வம் என்றால் என்ன என்று சற்று யோசிக்க

---

[1] யோகவாஸிஷ்டம் 3.22.24

[2] ஸுபாஷித ஸுதாநிதி 2.136.22; குவலயானந்தத்தில் வ்யாஜஸ்துதி அலங்காரத்திற்கு எடுத்துக்காட்டாகக் கூறப்பட்டுள்ள சுலோகம்.

வேண்டும். “செல்வம் என்பது எல்லோர்க்கும் சமமான ஒன்றல்ல. எதை ஒருவன் விரும்புகிறானோ, அதுவே அவனுடைய செல்வமாகிறது. பாமரர்களுக்கு வெவ்வேறு பொருட்கள் செல்வமாகும் போது, ஒன்றும் இல்லாமல் இருப்பதே அறிவுடையோரின் செல்வம்.”[1] எது ஒருவனுக்கு மிகவும் பிரியமாக இருக்கிறதோ, அதுவே அவன் செல்வமாகிறது. ஆகவே, பசும்புல் நிலத்தில் திரியும் மானின் செல்வத்திற்கு என்ன குறைச்சல்?

அப்படியானால் எதைக் கொண்டு நாம், மனிதன் முழுமையானவன் என்கிறோம்? ‘அறிவு’ என்பது தான். விலங்குகளும் மனிதனைப் போல் இன்பம், துன்பம், ஆசை, கோபம் முதலியவற்றை அனுபவிக்கின்றன. ஆனால், அறிவு என்ற களஞ்சியத்தை முழுவதுமாகப் பயன்படுத்தும் ஆற்றல் விலங்குகளுக்கு இல்லை. விலங்குகளுக்கும் உணவு, அங்கும் இங்கும் திரிதல், தூக்கம், முதலிய விஷயங்களில் நன்கு அறிவுள்ளதே என்று ஆட்சேபிக்கப்படலாம். மிருகங்களுக்கு அறிவு இருக்கிறது என்று கூறுவது சரி தான். ஆனால், அறிவுக் களஞ்சியம் என்று நாம் சொல்வது விலங்குகள் அறியக்கூடிய இந்த விஷயங்களை மட்டும் குறிப்பதாக இருந்தால், மனிதனுக்கும் (குறிப்பாக ஆட்சேபத்தை கூறியவனுக்கும்), விலங்குகளுக்கும் எந்த வேற்றுமையும் இல்லை என்றே சொல்ல வேண்டும். விலங்குகளுக்கு எட்டாத ஆனால் மனிதன் அடையக்கூடிய உயரறிவு நிலைகள் இருக்கின்றன.

வேதத்தில் இவ்வாறு வருகிறது: “அறியத்தக்கது இரு விதமாயுள்ளது: மேலானது, கீழானது.”[2] இதில், ‘கீழான அறிவு’ (அபரா வித்யை) என்பது இம்மையிலும் மறுமையிலும் எவை இன்ப துன்பங்களுக்கு நம்மை இட்டுச்செல்லும் என்பதைப் பற்றிய அறிவு. எப்படி மருத்துவமும் பொறியியலும் பொது நன்மையை ஊக்குவிக்கின்றனவோ, அதேபோல் வேதங்களில் உபதேசிக்கப்பட்ட அபரா வித்யையில் கூறப்படும் வழி முறைகள், இம்மையிலும் மறுமையிலும் நாம் விரும்பும் நன்மையைத் தரவல்லன. உதாரணமாக, வேதம் இவ்வாறு வாக்கியங்கள் வருகின்றன: “மழை வேண்டுபவன் காரீரி யாகத்தைச் செய்யட்டும்.”[3] “சுவர்க்கத்தை விரும்புபவன் ஜ்யோதிஷ்டோம யாகத்தைச் செய்யட்டும்.”[4]

இவ்விதமான அறிவு விலங்குகளுக்கு இல்லை என்பதனாலே, மனிதன் விலங்குகளை விட உயர்ந்தவன் என்று கருத முடியாது. ஏனென்றால்,

---

[1] நீலகண்டதீக்ஷிதரின் வைராக்யசதகம் 43
[2] முண்டக உபநிஷத் 1.1.4
[3] ஆபஸ்தம்ப ச்ரௌத சூத்திரம் 19.25.16
[4] ஆபஸ்தம்ப ச்ரௌத சூத்திரம் 10.2.1

அபரா வித்யை நிலையற்ற சுகத்தை மட்டுமே ஈட்ட ஏதுவாகிறது. இந்த உலகைப் பற்றியும் இனி வரும் உலகுகளைப் பற்றியும் மனிதனின் அறிவு, பெரிதாய்ப் பரந்தும் பல பகுதிகளை உள்ளடக்கியதுமாக இருக்கிறது. இதுவே விலங்குகளைக் காட்டிலும் மனிதன் உயர்ந்தவன் என்று நிரூபிக்கப் போதுமானது என்றால், அப்போது பரந்தும் பல்வேறு துகள்களைக் கொண்டதுமான ஓர் உமிக் குவியல், ஒரு வைரக் கல்லை விட மதிப்பில் உயர்ந்தது என்றல்லவா ஆக வேண்டும்!

அறிவியலில் பரிச்சயம் இருப்பதால் மட்டுமே மனிதன் உயர்ந்தவன் என்பதில்லை. மாறாக, 'நான் இந்த உடலா அல்லது அதனின்றும் வேறுபட்டவனா?', 'நான் உடலினின்று வேறுபட்டவன் என்றால், நான் அழிவற்றவனா? அல்லது நிலையற்றவனா?', 'நான் பேரின்பவடிவினனா? துக்கவடிவினனா?','இவ்வுலகிற்கும் எனக்கும் என்ன தொடர்பு?' போன்ற கேள்விகளுக்கு எந்த அறிவு விடை தருகிறதோ, அந்த ஞானத்தினால் தான் மனிதன் முழுமை அடைகிறான். வேதங்களும் இதையே உரைக்கின்றன: "பிறகு, எதனால் மாறுதலற்ற பரம்பொருள் அறியப் படுகிறதோ, அந்த உயர்ந்த அறிவு ஒன்று இருக்கிறது."[1]

இந்த அறிவு விலங்குகளுக்கு உண்டாவதில்லை. மேலும், வேறு வகையான அறிவுகள் பிற்காலத்தில் தவறுகள் ஏற்பட இடமளிப்பது போலல்லாமல், இவ்வுயர்ந்த அறிவு மோகத்தை அடியோடு நீக்குகிறது. "இதை அறிவதனால், அஞ்ஞானம், காமம், கர்மம் ஆகியவற்றைக் கொண்ட இறப்பிலிருந்து ஒருவன் விடுபடுகிறான்."[2] என்று வேதம் தீர்மானமாகக் கூறுகிறது.

இந்த அறிவை நாம் விசாரம் அல்லது ஆய்வின் மூலமாகப் பெற வேண்டும். அடிப்படை ஒன்று இல்லாமல், விசாரம் செய்ய முடியாது. உலக விஷயங்களை எடுத்துக் கொண்டாலும், எந்த விசாரணையும் ஏதாவது ஓர் அடிப்படையிலேயே செய்யப்படுவது தான் வழக்கம். உதாரணமாக, பூமியிலிருந்து சூரியன் எவ்வளவு தொலைவில் உள்ளது என்பதை அறிய நாம் கணிதத்தை நாட வேண்டியிருக்கிறது. மாறாக ஒரு அளவு கோலைக் கொண்டு அந்த தூரத்தை அளக்க நினைத்தால் அது பயன்படாது.

அவ்வாறே, உபநிஷத் மூலமாக ஆத்மாவை அறிய வேண்டும்; பின், அதை நேரடியாக உணர வேண்டும். எனவே பகவத்பாதர் "ஜீவ-ப்ரஹ்ம ஐக்கியத்தைப் பற்றிய வேத வாக்கியத்தின் தாத்பர்யத்தை விசாரம்

---

[1] முண்டகோபநிஷத் 1.1.5

[2] கடோபநிஷத் 1.3.15

செய்ய வேண்டும். வேதத்தின் கருத்துடன் உடன்படும் யுக்தியை (தர்க்கத்தைக்) கைக்கொள்ளுதல் வேண்டும்."[1] என்று கூறுகிறார்.

ஆனால், வெறும் யுக்தியின் துணை கொண்டு மட்டுமே ஆத்மாவை அறியமுடியாது. ஏனெனில், தர்க்கத்திற்கு முடிவே கிடையாது. இதை "தர்க்கத்திற்கு முடிவின்மையால்..."[2] என்று கூறப்பட்டுள்ளது. இன்றைக்கு ஒன்றை நாம் சரி என்று தர்க்கத்தின் துணையுடன் அறுதியிட்டுக் காண்பித்ததை இன்னொருவன் வேறொரு வாதத்தின் மூலம் நாளை தவறு என்று நிரூபிக்க நேரலாம்.

வாசஸ்பதி இவ்வாறு கூறுகிறார் "திறமை வாய்ந்த தார்க்கிகர்களால் மிகுந்த பிரயாசையுடன் எது அறுதியிட்டுக் கூறப்படுகிறதோ, அதுவே அவர்களை விடக் கைவந்த தார்க்கிகர்களால் தவறு என்று நிரூபிக்கப் படுகிறது."[3] நமது அனுபவமும் இந்த சுலோகத்தை ஒத்தேயிருக்கிறது.

ரகுநாத சிரோமணி என்ற பண்டிதரின் பின்வரும் கருத்து, வெறும் தர்க்கத்தால் எதையும் முடிவாகக் கூற இயலாது என தெளிவாக்குகிறது. "கருத்துக்களுக்கு அரசனாகிய ரகுநாதன் என்ற நான், எனது விளக்கத்தை அளித்தவுடன், சான்றோர் கூட்டம் முன்னர் ஒருமனதாக எது சரி, எது தவறு என்று பறைசாற்றியதோ அதை மாற்றிக் கொள்ள வேண்டும்."[4]

எனவே, உபநிஷத்துகளை அடிப்படையாகக் கொண்டு, ஆத்மா பற்றிய அறிவை யுக்தியின் துணையுடன் பெறவேண்டும். ஆத்மாவை நேரடியாக அறிவதனால் ஒருவன் ஆத்மாவினின்று வேறுபடாத பரம்பொருளான பிரம்மத்தை அடைகிறான். பிரம்மத்தை சாஸ்திரம் இவ்வாறு காட்டுகிறது: "பரம்பொருளான பிரம்மம் வரம்பற்றது. பிரபஞ்சத்தை உபாதியாய்க் கொண்ட பிரம்மமும் வரம்பற்றது."[5] பிரம்மத்தில் நிலை பெறுவதன் மூலமாக மனிதன் உண்மையான முழுமையை அடைகிறான்.

### உபநிஷத்துகள் தேவையில்லை என்ற எதிர்ப்பு

"பரம்பொருளைக் காட்டிலும் நாம் வேறல்ல" என்ற முழுமையை நாடிச் செல்லவேண்டுமா? அப்படி இருப்பினும், அந்த இலட்சியத்தை அடைய ஏன் ஒரு குருவினிடம் உபநிஷத்தின் உட்பொருளைக் கேட்டு, அதன்பின் அதை சிந்தித்து உணர வேண்டும்? இது போன்ற கேள்விகள் எழலாம்.

---

[1] உபதேச பஞ்சகம் 3
[2] பிரம்ம சூத்திரம் 2.1.11
[3] பாமதீ; பிரம்ம சூத்திரம் 2.1.11
[4] தீதிதி
[5] பிருஹதாரண்யக உபநிஷத் 5.1.1

எந்த மனிதனுமே தான் விரும்புவதையே அடைய முற்படுகிறான். தான் விரும்பாதவைகளை தவிர்க்க முற்படுகிறான்; அதை "வேண்டாதது" என்றும் அழைக்கிறான். நஞ்சு, புலி போன்ற பல பொருட்கள் மற்றும் உயிர்களின் விஷயத்தில் நமக்கு வெறுப்பு உண்டு எனினும் இவ்வெறுப்பு உள்ளார்ந்ததல்ல. அவை நமக்குத் துன்பம் தர வல்லன என்று அச்சமுற்றே நாம் அவற்றை வெறுக்கிறோம். எனவே, நாம் இயல்பாக வெறுப்பது துன்பம் ஒன்றை மட்டுமே. துன்பத்தை எப்போதும் நாம் வெறுப்பதுடன் நமது முயற்சிகளும் அதைப் போக்கிக் கொள்ளும் நோக்கிலேயே உள்ளன. துன்பமே இல்லையென்றால், ஆத்மாவைப் பற்றி நமக்கு அறிவிக்கும் சாஸ்திரம் அவசியமே இல்லை. உலகத்தில் துன்பம் இருந்த போதிலும், மனிதன் அதை வெறுக்கவில்லை, அதை நீக்குவதற்கும் முயற்சி செய்யவில்லை என்றாலும், சாஸ்திரத்தின் அவசியம் இருக்காது. துன்பம் நீங்க வேண்டும் என்றே மனிதன் ஆசைப்படுகிறான் என்று வைத்துக் கொண்டாலும் துன்பத்தை முற்றுமாக நீக்குதல் என்பது இயலாத ஒன்றாக ஆகி விட்டால் அப்போதும் சாஸ்திரத்திற்கு அவசியம் இல்லை. இந்த இயலாமை இரண்டு வகையாக இருக்கலாம்: தார்க்கிகர்கள் ஆகாசத்தை இயல்பாகவே நித்தியமானது என்கிறார்கள்; அது அழிக்கப்பட முடியாதது என்பதால், எந்த விதமான வழிமுறைகளைக் கொண்டும் அதை அழிக்க முடியாது என்றாகிவிடுகிறது. அதுபோல, துன்பமும் இயல்பாகவே அழிவற்றதாக இருக்கிறது என்றால், அதை அழிப்பதற்கு முடியவே முடியாது. இரண்டாவது இயலாமை இதுவே: துன்பத்திற்கு அழிவு இருப்பினும், அதற்கான வழிமுறைகள் பற்றி நமக்கு அறிவே இல்லை என்றாலும் அதை அழிக்க முடியாது. இறுதியாக, துன்பத்தை நீக்க முடியும் என வைத்துக் கொண்டாலும், உபநிஷத்துக்களின் உபதேசங்கள் துன்பத்தை அழிக்கத்தக்க வழிகளாக அமையாவிட்டால், உபநிஷத்துகள் அவ்வாறு இருப்பினும் அவை கூறும் வழியை விட வேறு எளிதான வழிமுறைகள் இருந்து விட்டாலோ உபநிஷத்துக்களுக்கு அவசியம் இல்லாமற் போய்விடும்.

### இந்த ஆட்சேபணைக்குப் பதில்

துன்பமே இல்லை என்று யாராலும் கூற முடியாது. எல்லோரும் துன்பப் படுகின்றனர்; துன்பத்தை நீக்கவும் முயற்சி செய்கின்றனர். சாஸ்திரம், துன்பத்தை மூவகையாகப் பிரிக்கிறது: ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம் மற்றும் ஆதிதைவிகம் என்பவையே அவை. இதில் ஆத்யாத்மிகத் துன்பம் மேலும் இருவகையாகப் பிரிக்கப்படுகிறது – சாரீரம், அதாவது, உடலால் துயருறுவது, மானஸம், மனதால் துயருறுவது. உடலால் துயருறுவது என்பது உடலில் வாயு, பித்தம், கபம் ஆகியவற்றின் சமமின்மையினால் ஏற்படும் காய்ச்சல் முதலிய வியாதிகளால் வரும்

துன்பம். மனதால் துயருறுதல் என்பது காமம், சினம், லோபம், மருட்சி, பயம், பொறாமை முதலியவற்றால் ஏற்படும் துன்பம். இவையிரண்டும், உடலும் மனமும் சரியாக இயங்காததால் உண்டாகின்றன என்பதால் இவை ஆத்யாத்மிகம் என்று கூறப் படுகின்றன. நஞ்சு, பகைவர், பாம்பு முதலியவற்றால் வரும் துன்பம் ஆதிபௌதிகம் எனப்படும். அச்சுறுத்தும் பேய்கள் முதலியவற்றாலும் இயற்கையின் சீற்றங்களான நிலநடுக்கம் முதலியவற்றாலும் வரும் துன்பம் ஆதிதைவிகம் எனப்படும்.

நாம் இம்மூன்று வகையான துன்பங்களையும் அறவே நீக்கிக் கொள்ள முயல்கிறோம்; ஆனால் இது வரை நம் முயற்சிகள் பலனளிக்கவில்லை. எனவே, மூவகைத் துன்பம் இருக்கத்தான் செய்கிறது; மனிதனும் அதைப் போக்கவே விருப்பப்படுகிறான். துன்பத்தை அறவே நீக்க முடியும். சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ள வழிவகைகள் துன்பத்தை நீக்கும் ஆற்றல் பெற்றவை.

(இதற்கு ஆட்சேபணை:) அப்படியே இருந்தாலும், இந்த விஷயத்தில் நாம் சாஸ்திரத்தை அணுக வேண்டிய அவசியம் இல்லை. ஆத்மஞானம் அடைந்து ஒருவன் துன்பத்தைப் போக்கிக் கொள்ள வேண்டும் என்று சாஸ்திரம் கூறுகிறது. ஆத்மஞானம் அடையத் தகுதிகளாக விவேகம், வைராக்யம், ஆறு பொக்கிஷங்களான மனவடக்கம், புலனடக்கம், செயல்களிலிருந்து உள்வாங்குதல், சகிப்புத் தன்மை, சிரத்தை, புத்தியை நிலை நிறுத்தல் பிறகு ஸம்ஸாரத்திலிருந்து விடுபட வேண்டும் என்கிற ஆசை என்பன வேண்டும் என்றும் அது உபதேசிக்கிறது. இத்தகுதிகளை அடைந்த பின்னர், ஆத்மாவைப் பற்றி கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். அதன்பின், கேட்டதை நன்கு சிந்தித்து, உறுதியாக தியானம் செய்ய வேண்டும் என்று சாஸ்திரம் சொல்கிறது. சாஸ்திரம் கூறும் வழி கடினமானது. ஏன் அப்படி?

உபநிஷத்தில் இவ்வாறு வருகிறது: ''சுயம்புவான இறைவன், புறஞ் செல்லும் புலன்களைப் பழுதாகப் படைத்தார். எனவே, ஒருவன் புறப் பொருட்களை மட்டுமே பார்க்கிறான்; உள்ளிருக்கும் ஆத்மாவை அல்ல.''[1] மேலும் பகவான் பகவத் கீதையில் இவ்வாறு கூறுகிறார்: ''மனதைக் கட்டுப்படுத்துதலைக் காற்றைக் கட்டுப்படுத்துதல் போல் செயற்கரியதாக நான் நினைக்கிறேன்.''[2] எனவே, துன்பத்திலிருந்து விடுபடுவதற்கு எளிய வழி ஒன்றைத் தேட வேண்டும். (ஆத்யாத்மிகம் முதலான) மூன்று வகைத் துன்பங்களிலிருந்து விடுபட உலகறிந்த வழிவகைகள் உள்ளன. இவற்றைக் கடைபிடித்தல் எளிது; இவற்றிற்கு புலனடக்கம், மனவடக்கம்

[1] கடோபநிஷத் 2.1.1
[2] பகவத் கீதை 6.34

முதலியவை அவசியம் இல்லை. "எருக்கஞ் செடியில் தேன் கிடைத்தால், மலையை நோக்கி ஒருவன் போவானேன்? விரும்பிய பொருள் கிடைத்துவிட்ட பின், அறிவுடையவன் எவனாவது அதை அடைய முயற்சிப்பானா?"[1]

உடலால் படும் துயரைப் போக்குவதற்குச் சிறந்த மருத்துவர்கள் கூறும் பல மருந்துகள் இருக்கின்றன. மனத்துயரின் காரணம் அடையப்படாத ஆசைகளே. மனம் ஆசைப்படும் அனைத்தையும் அதற்குக் கொடுத்து விட்டால், மனத்துயர் வடிவில் வரும் ஆத்யாத்மிக துன்பம் இருக்காது.

"இந்தப் பகைவனைக் கொன்றுவிட்டேன்; மற்ற பகைவர்களையும் நான் கொல்வேன்." இச்சுலோகத்தில் உள்ளதைப் போல ஒருவனது ஆசைகள் நிறைவேற எவர் குறுக்கே நிற்கிறார்களோ அவர்களைக் கொன்று விட்டால், சினத்திலிருந்து பிறக்கும் துன்பம் அவனுக்கு நீங்கிவிடும்.

உலகறிவையும், நல்வாழ்வுக்கான முறைகளையும் கூறும் நூல்களைக் கற்றால், தீங்கு விளைவிக்கும் பொருட்கள் மற்றும் விலங்குகளிடமிருந்து ஒருவன் தன்னைக் காத்துக்கொள்ள முடியும். இவ்விதம் ஆதிபௌதிகத் துன்பம் நேராமல் காக்கலாம். ஆதிதைவிகத் துன்பத்தைப் பொருத்த வரையில், பேய், பிசாசுகள் முதலிய தீய சக்திகளினால் விளையும் துன்பத்தைத் தக்க மந்திரங்களை ஜபம் செய்வதாலோ, அல்லது தகுதி பெற்ற ஒருவரைக் கொண்டு ஜபம் செய்விப்பதாலோ தவிர்க்க முடியும். இவ்வாறு, எளிய வழி வகைகளைக் கைக்கொண்டு எல்லா வகையான இடர்களையும் நீக்கி விடலாம். கஷ்டம் இல்லாமலேயே, எவ்விதமான துன்பங்களையும் மேற்கூறிய வழிகளின் மூலம் நீக்கிக் கொள்ளலாம். எனவே, பரம்பொருளை உபதேசிக்கும் சாஸ்திரங்கள் தேவையற்றவை போல் தெரிகிறது.

(இதற்குப் பதில்:) மருந்து உட்கொள்வதாலும், சரியான சிகிச்சை முறையை மேற்கொள்வதாலும் நோயாளிகள் எல்லாச் சமயத்திலும் குணமடைவதில்லை. நாம் விரும்பும் அனைத்தையும் அடைந்து அவற்றை அனுபவிப்பதன் மூலம் துயரத்தை நீக்குவோம் என்பது நடைமுறையில் சாத்தியமற்றது. மேலும், போகத்தினால் அடக்கப்படும் மனத்தின் ஆசைகள் மீண்டும் தலை தூக்கும். மனு ஸ்ம்ருதி இவ்வாறு உரைக்கிறது: "ஆசைப்பட்டவற்றை அனுபவிப்பதால் ஆசை ஒருபோதும் அடங்குவது இல்லை. மாறாக, நெய்யை வார்ப்பதால் வளரும் தீயைப் போல் மேலும் மேலும் வளர்கிறது."[2]

---

[1] மீமாம்ஸா ஸூத்ரத்தின் (1.2.4) சாபர பாஷ்யத்தில் எடுத்தாளப்பட்ட சுலோகம்
[2] மனு ஸ்ம்ருதி 2.94

(ஆட்சேபிப்பவனால்) மேலே கூறப்பட்ட வழிகளைக் கைக்கொள்வதன் மூலம், ஆதிபௌதிகம் மற்றும் ஆதிதெய்விகத் துன்பங்களைச் சில காலத்திற்குத் தடுத்து நிறுத்தலாம். ஆனால், அவற்றால் துன்பத்தை வேரோடு அழிக்க முடியாது. ஆகவே, உலகத்தில் உள்ள இந்த வழிவகைகள், கடைப்பிடிப்பதற்கு ஓரளவிற்கு எளிதாக இருந்தாலும், எப்பொழுதும் துன்பம் அடையக்கூடாது என்ற நமது விருப்பத்தை நிறைவேற்றும் வலிமையற்றவை என்றே கூற வேண்டும். இதனால், பிறவிச் சுழற்சியிலிருந்து விடுபட வேண்டும் என்கிற தீவிரமான ஆசை, விவேகமுள்ளவர்கள் மனதில் பிறக்கிறது. நீலகண்ட தீக்ஷிதர், இந்த விஷயத்தை, "எது அழிவற்றது, எது நிலையில்லாதது என்ற விவேகம், 'பானைத்தன்மை', (எல்லாப் பானைகளுக்கும் பொதுவான இயல்பு) "பானை" என்ற இவ்விரண்டின் விஷயத்தில் எல்லோருக்கும் உள்ளது. ஆனால், எது மன அமைதியை தருகிறதோ, அதுவே உண்மையான விவேகம்; மற்றவை எல்லாம் அவிவேகமே."[1]

உபநிஷத்துக்களின் தேவையை எதிர்த்து இன்னொரு ஆட்சேபணை: "துயரத்தைப் போக்குவதற்கு சாஸ்திரங்கள் கூறும் வழிவகைகள், எல்லாத் துன்பங்களையும் போக்கும் என்று கூற இயலாது" என்பது.

சாஸ்திரத்தில் கூறப்படும் வழி எல்லாத் துன்பங்களையும் வேரோடு அழிக்கவல்லதா என்பதை நாம் ஆராய்வதற்கு முன், துன்பத்தின் வேர் எது என்பதை முடிவு செய்ய வேண்டும். அஞ்ஞானம் – அதாவது, தன்னுடைய உண்மையான ஸ்வரூபத்தை அறியாமல் இருப்பது, என்பதே துயரத்தின் ஊற்று. "நான் பரம்பொருளிலிருந்து வேறானவன் அல்ல" என்ற அறிவு மட்டுமே துன்பத்தை அடியோடு களைகிறது. அது எப்படி என்ற நுணுக்கங்களைப் பற்றிப் பேச இப்பொழுது அவசியம் இல்லை. நம்முடைய உண்மையான ஸ்வரூபம் பற்றிய மெய்யறிவு உபநிஷத்துகள் மூலமாக எழுகிறது. அதனால், நாரதரின் பின்வரும் கூற்றுக்கிணங்க அஞ்ஞானம் அழிந்து, துயரம் நீங்குகிறது. "ஆத்மாவை அறிந்தவன் துயரத்தைக் கடக்கிறான்."[2]

ஆத்ம ஞானம் பெற்று பரம்பொருளுடன் இரண்டற இருப்பதே முழுமை; இதுவே எல்லாத் துன்பத்தையும் போக்குகிறது. இந்த ஆத்ம ஞானத்தை பெறுவதற்கான வழியை பரம்பொருளைப்பற்றி உபதேசிக்கும் சாஸ்திரம் தெளிவாகக் கூறுகிறது: "அன்பிற்குரியவளே! ஆத்மா அறியப்பட

---

[1] *நீலகண்டதீக்ஷிதரின் வைராக்யசதகம் 20*
[2] *சாந்தோக்ய உபநிஷத் 7.1.3*

வேண்டியது, கேட்கப்பட வேண்டியது, நினைக்கப்பட வேண்டியது, உறுதியுடன் தியானிக்கப்பட வேண்டியது.''[1]

இந்த வேத நெறி, பகவத்பாதரின் அவதார சமயத்தில் கிட்டத்தட்ட அழிந்திருந்தது. அவர் வாழ்ந்த முப்பத்திரண்டே ஆண்டுகளில், இந்திய மண்ணில் அக்காலத்தில் வேரூன்றியிருந்த தவறான சமயங்களைக் களைந்து, வேத நெறியை மீண்டும் அதன் புகழுடன் ஒளிரச் செய்தார். ஆன்மீக நெறியைப் பின்பற்றி பூரணத்துவம் அடைய எல்லோருக்கும் பகவத்பாதர் அருள்வார்களாக!

## 3. ஆத்ம விஞ்ஞானம்

மனிதனுக்கு உள்ள ஆற்றல்களுள் சில, ஏனைய உயிரினங்களிடம் காணப்படுவது இல்லை என்று சொல்லலாம். அவற்றுள் ஒன்று விசாரம் செய்யும் ஆற்றல். இந்த ஆற்றல் விலங்குகளில் சிறிதளவு இருப்பினும், அது வளர்ந்து உத்தம நிலையை அடைய முடியாது. இதுவே, நமக்கும் மற்ற உயிரினங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடாகும். ஒவ்வொரு ஆற்றலுக்கும் விளைவுகள் உண்டு. நமது ஆற்றலைப் பொருத்தமாகப் பயன்படுத்துக்கூடிய நிலையில் மனிதர்களாகிய நாம் இருக்கிறோம். நம்முடைய இயல்பான ஆற்றலான விசார சக்தி நாம் ஆழ்ந்து உறங்கும் நேரத்தைத் தவிர மற்ற எல்லா நேரத்திலும் ஏதேனும் ஒரு வழியில் வெளிப்படுகிறது. விசாரம் என்பது சிந்தனைக்கு இணையாகும். சிந்தனை செய்வது நமக்கு இயல்பாகவே வருகிறது. ஆனால், சிந்திக்கத்தக்கது எது என்பதைப் பற்றி நாம் முதலில் ஆராய வேண்டும்.

பொதுவாக, நாம் ஏதாவது ஒரு பயனுள்ள விஷயத்தைச் சிந்திக்கிறோம்; அல்லது பயனில்லாத உலக விஷயங்களைப் பற்றிச் சிந்திக்கிறோம். ''அவதூறு செய்பவர்களின் உள்ளம் குளிர அவர்கள் வேறொருவனை வசைபாடுவதை மனிதன் தன் காதுகளால் கேட்கிறான். இதனால், வசைக்கு ஆளானவன் அழிவதில்லை; மாறாக, அவதூறுப் பேச்சை வீணாகக் செவிமடுத்தவன் பெரும் பாவத்திற்கு ஆளாகிறான்.''[2] என பகவத்பாதர் ஓரிடத்தில் எச்சரிக்கிறார்.

மற்றவர்களிடம் உள்ள, அல்லது, அவர்களிடம் இல்லாத குறைகளைப் பற்றிச் சிந்திப்பது போதாது என்று அவர்களுடைய குடும்ப விஷயங்கள், சொத்து முதலியன பற்றியும் நாம் சிந்திக்கிறோம். பல விஷயங்களைப் பற்றிச்சிந்தித்தாலும், அவை நமக்கு எப்பொழுதும் பிரியமானவை அல்ல.

---

[1] பிருஹதாரண்யக உபநிஷத் 2.4.5

[2] ப்ரபோதஸுதாகரம் 59

நம் விஷயத்தில் மட்டுமே நாம் எப்பொழுதும் அசையாத அன்பை வைத்திருக்கிறோம். நமக்கு எப்பொழுதும் பிரியமாக இருக்கும் 'தான்' என்பது சாஸ்திரத்தில் 'ஆத்மா' என்று அழைக்கப்படுகிறது.

இப்பொழுது நமக்கு மிகவும் பிடித்திருக்கும் பொருள், வேறொரு சமயத்தில் நமக்குப் பிடிக்காமல் போய் விடலாம். அதே போல், நமக்கு இப்போது பிடிக்காத ஒன்று, பின்னர் விருப்பத்திற்குரியது ஆகிவிடலாம். ஆனால், ஆத்மா இப்போது பிரியமாக இருப்பதோடு எப்போதுமே அவ்வாறே தொடர்ந்து பிரியமாக இருக்கிறது. ஒருவனுக்கு ஒரு இனிப்பு மிகவும் பிடித்திருக்கிறது. ஆனால், அவனுக்கு உடல் நலம் சரியில்லாது போய், பசியுணர்வு பாதிக்கப்படுகையில், அதே பண்டம் அவனுக்கு பிடிக்காம்ல் போய் விடுகிறது. நாம் முன்பு ஏதாவது ஒரு பொருளை விரும்பியிருப்போம்; இப்போது அதையே வெறுத்து ஒதுக்குவோம்; ஆனால் நாம் நம்மைக் கடந்தகாலத்திலும் விரும்பினோம்; இன்றும் அவ்வாறே விரும்புகிறோம். பொதுவாக நாம் மூன்று நிலைகளை எதிர் கொள்கிறோம். அவை விழிப்பு, கனவு, ஆழ்ந்த உறக்கம் என்பன. இம்மூன்றிலும் நமக்கு நாமே மிகவும் பிரியமாக இருக்கிறோம். இதை சங்கரர் தனது சதச்லோகீயில் பின்வருமாறு கூறியுள்ளார், "எதுவரையில் ஒரு பொருள் ஒருவனுக்கு இன்பம் தருகிறதோ அதுவரையில் அது அவனுக்குப் பிரியமாகிறது; அதே பொருள் துன்பத்தைத் தரும் பொழுது அது அவனுக்குப் பிரியமல்லாததாகிறது. எப்பொருளும் எப்பொழுதும் விருப்பமான ஒன்றாகவோ வேண்டாததாகவோ இருப்பதில்லை. சில சமயங்களில் வேண்டப்படாத ஒன்று வேண்டியதாகலாம். அதே போல், எது மிகவும் விரும்பப்பட்டதோ அது வெறுப்பிற்குரித்தாகலாம். ஆகவே, எப்பொழுதும் குறையாத அன்பைப் பெறும் ஆத்மா மட்டுமே மிகவும் பிரியமானது."[1]

சிந்திப்பதை இயல்பாகக் கொண்ட நாம், நம்மைப் பார்த்துக் கொள்ளாமல், நம்மைப் பற்றி விசாரம் செய்யாமல் இருப்பது முட்டாள் தனத்தின் உச்சியாகும். "உணவு அருந்தினால் பசி போகும்" என்பது போன்ற அப்பட்டமாகத் தெரிந்த விஷயங்களைப் பற்றி விசாரம் செய்வதில் எந்தப் பலனுமில்லை. முற்றும் தெரியாத ஒன்றைப் பற்றி எந்த விசாரமும் செய்ய முடியாது. "நாம் இருக்கிறோம்" என்று நமக்குத் தெரிகிறது. ஆனால் நமது உண்மைத் தன்மையை நாம் புரிந்து கொள்ளவில்லை. எனவே, இதைப் பற்றி விசாரம் செய்வோம்.

---

[1] *சதச்லோகீ 10*

இப்படி விசாரம் செய்ய வேண்டும் என்றால், அதற்குப் பொருத்தமான ஒரு வழிவகை வேண்டும். சொல்லப் போனால், வழிவகை இல்லாமல் செயல்வகை இல்லை. உதாரணமாக, நடக்க வேண்டுமெனில் கால்கள் தேவை; காற்றில் பறக்க வேண்டுமென்றால் விமானம் தேவை. விமானம் செய்யும் திறன் ஒருவனுக்கு இருந்தால், அவன் ஒரு விமானத்தைச் செய்து, அதில் ஏறி, வானில் பறக்க வேண்டும் என்ற தனது ஆசையை நிறைவேற்றிக் கொள்ளலாம். விமானங்கள் பல விதமாக இருக்கலாம்; அவைகளை இயக்குவதற்கான செலவும் வேறு படலாம். இவை எப்படி இருந்தாலும் “பறப்பதற்கான ஓர் ஊர்தி” என்ற தகுதியைப் பெறுவதற்கு அது வானில் பறக்கும் திறன் பெற்றதாய் இருக்கவேண்டும். விமானம் செய்யும் திறனற்றவன் இன்னொருவனின் விமானத்தில் ஏறித்தன்னுடைய ஆசையைப் பூர்த்தி செய்து கொள்ள முடியும். எனவே, ஏதோ ஒரு வழிவகை இன்றியமையாதது என்பது நமக்குத் தெரிகிறது. அது நமதாக இருக்கலாம், அல்லது மற்றவர்களால் அளிக்கப்பட்டதாக இருக்கலாம்; அந்த வழிவகையின் மூலமாகவே நாம் நாடுவதை அடைய முடியும்.

சங்கர பகவத்பாதர் ஆக்கிய நூல்கள் நாம் விசாரம் செய்வதற்கு நமக்கு வழிவகைகளாக அமைகின்றன. அந்நூல்களில் ஆத்மாவின் இயல்பைப் பற்றி விளக்கியுள்ளார். பரம்பொருளைப் விளக்குவதற்குச் சான்றோர் மேற்கோண்ட அணுகுமுறைகள் குறித்து ஸுரேச்வராசார்யர் இவ்வாறு கூறியுள்ளார்: “உள்ளிருக்கும் ஆத்மாவைப் பற்றிய அறிவு ஒருவனுக்கு எந்த விளக்கத்தினால் ஏற்படுகிறதோ, அதுவே இங்கு பொருத்தமானது. “இவ்வாறு தான் அது இருக்க வேண்டும்” என ஏதும் கட்டாயமில்லை.”[1]

## ஆத்மாவின் தன்மை

“விழிப்பு, கனவு, ஆழ்ந்த உறக்கம் ஆகிய மூன்று நிலைகளிலும் எது நன்கு வெளிப்படுகிறதோ, உள்ளே இருந்து கொண்டு எப்பொழுதும் ‘நான்’, ‘நான்’ என்று ஒரே விதமாய் (’இது’ என்று விஷயமாகாமல்) ஒளிர்கிறதோ, பல ரூபங்களையும், திரிபுகளையும் கொண்ட அஹங்காரம் முதலியவற்றை எது பார்த்துக் கொண்டிருக்கிறதோ, அதை உள்ளத்தில் ஒளிர்கிற சுயம்பிரகாசமான, அழிவற்ற ஆனந்த வடிவான உனது ஆத்மா என அறிவாய்.”[2] நமது அனுபவமோ இந்த உபதேசத்திற்கு நேரெதிராக இருப்பதால் இது நமக்கு மிகுந்த வியப்பளிக்கிறது. நாம் இன்பம், துன்பம், இறப்பு, மறுபிறப்பு இவற்றிற்கு உட்பட்டவர்கள். ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதெய்விகம் என்ற மூவகைத் துன்பங்கள் பல தமது பிடியில் நம்மை வைத்துக் கொண்டிருக்கின்றன. ஆகவே, பிச்சைக்காரன்

---

[1] *பிருஹதாரண்யக உபநிஷத்; பாஷ்ய வார்த்திகம் 1.4.402*
[2] *விவேகசூடாமணி 219*

ஒருவனை பேரரசன் எனக்கூறி அவனைக் கேலி செய்வது போல் நம்மை இந்தச் சுலோகம் பரிகாசம் செய்கிறது என்று நமக்குத் தோன்றலாம். ஆனால், இந்தச் சுலோகம் நம்மைக் கேலி செய்ய எழுதப்பட்டதல்ல என்று நிச்சயமாகக் கூற முடியும். எப்படியென்றால், இது 'விவேக சூடாமணி' என்ற நூலில் காணப்படும் சுலோகம். அந்நூலை எழுதிய சங்கர பகவத்பாதர் இத்தகையவர்: "சாந்த குணம் கொண்ட மஹான்கள், இளவேனிற்காலம் போல இந்த உலகத்திற்கு நன்மை செய்து கொண்டு இருக்கிறார்கள். அச்சுறுத்தும் பிறவிப் பெருங்கடலை அவர்கள் தாங்கள் தாண்டிவிட்டு, ஒரு காரணமுமின்றிப் பிறரையும் கடக்கச்செய்கிறார்கள்."[1]

"பிச்சைக்காரனைப் பேரரசன் என்று கேலி செய்வது போல்" என்ற உதாரணம் இங்கே சற்றும் பொருந்தாது. வேறொரு உதாரணம் இங்கே மிகப் பொருத்தமாக இருக்கும். ஓர் இளவரசன் ஏதோவொரு சூழ்நிலை காரணமாக காட்டு மக்களோடு வளர்ந்து வந்தான். ஒரு நாள், கைரேகை பார்க்கும் ஜோதிடன் ஒருவன் இளவரசனின் கையைப் பார்த்து, "நீ உண்மையில் ஓர் இளவரசன்; விரைவில் நீ அரசனாவாய்" என்றான். அவன் கூறியது அப்போது பரிகாசம் செய்வது போல் இருந்தாலும், பிற்காலத்தில் அதுதான் சரி என்பது தெளிவாயிற்று. அது போல், நமது உண்மையான ஸ்வரூபத்தை எடுத்துக்கூறும் இந்த சுலோகத்தின் சொற்களும் அப்படியே தான்; நாம் உண்மையில் யார் என்பது நமக்குத் தெரியாத வரையில், நமது தவறான கருத்துக்களுடன் ஒத்துப்போகும் சொற்களே நம்மை ஈர்க்கின்றன.

### நாம் வேறானதற்கான காரணம்

நாம் சச்சிதானந்த வடிவினர்களாக இருந்தாலும் இந்த பிரபஞ்சத்தை ஏன் அனுபவிக்கிறோம்? இதற்கு விடையாக சங்கர பகவத் பாதாள், "ஒருவன் அறிவுடையவனாக இருப்பினும், சாஸ்திரங்களைக் கற்றுத் தேர்தவனாக இருப்பினும், மதிநுட்பம் மற்றும் நுணுக்கமானவற்றையும் அறியும் திறன் படைத்தவனாயினும், ஆத்மாவைப் பற்றிப் பலவாறாக உபதேசிக்கப்பட்டும் தமஸினால் மூடப்பட்டு அதன் காரணத்தினால் அவன் ஆத்மாவைத் தெளிவாக அறிவதில்லை. மோஹத்தின் காரணமாக எது ஆரோபணம் செய்யப்படுகிறதோ, அதையே உண்மை எனக்கருதி அதன் தன்மைகளுடன் பற்றுக் கொள்கிறான். அந்தோ! பெருந்துன்பம் தரும் தமோ குணத்தின் மறைக்கும் சக்தி மிக வலிமையானது."[2]

---

[1] விவேகசூடாமணி 39
[2] விவேகசூடாமணி 116

*அவித்யை என்பது நம்முடைய உண்மையான தன்மையை அறியாமல் இருப்பதே. அவித்யைக்கு இரண்டு சக்திகள் உள்ளன: "ஆவரணம்" அதாவது மறைப்பது மற்றும் "விக்ஷேபம்" அதாவது வேறு தோற்றத்தை ஏற்படுத்துவது. ஆத்மாவைப் பற்றிய சரியான அறிவை ஆவரணம் மறைக்கிறது. மறைக்கப்பட்ட ஆத்மாவில் விக்ஷேபத்தினால் பல்வேறு தோற்றங்கள் தெரிகின்றன. ஜீவனாக இருக்கும் நிலை, செய்பவன், அனுபவிப்பவன், அஹங்காரம், "இது எனது" போன்ற எண்ணங்கள் விக்ஷேபத்தினால் ஆத்மாவில் தோன்றுகின்றன. இவை துன்பத்தை விளைவித்துப் பிறவிச் சுழலுக்குக் காரணமாகின்றன. ஸம்ஸாரம் என்னும் பிறவிச் சுழலுக்கு முடிவு கட்ட ஏதாவது இருக்கிறதா? ஸம்ஸாரத்தை நீக்கிக்கொள்ள முடியுமா? இவ்விஷயத்தை ஆராய்வோம்.*

### பந்தத்தின் பொய்த்தன்மை; ஞானம் அதன் முடிவு

*உலகத்தில் உள்ளவை அனைத்தும் இருவகையே: உண்மையானவை, பொய்யானவை. அதே போல், நம்முடைய அறிவும் இரு வகைப்படும்: ப்ரமை அல்லது சரியான அறிவு, பிரமை அல்லது தவறான அறிவு. ஒரு முத்துச்சிப்பியை வெளிச்சம் சரியாக இல்லாத சூழ்நிலையில், ஒருவன் வெள்ளி என்று தவறாக நினைக்கையில் அங்கு பொய்யான வெள்ளி தோன்றி பார்க்கப்படுகிறது என்பது வேதாந்திகளின் கருத்து. இக்கருத்து ஏன் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருக்கிறது என்றால் இந்த வெள்ளியைப் போக்கடிப்பது சிப்பியைப் பற்றிய சரியான அறிவு மட்டுமே; உடலினால் செய்யப்படும் செயலோ, உபாஸனையோ அல்ல.*

*"பிறவிச்சுழல் என்ற இந்த ஸம்ஸார பந்தம் அவித்யையினாலேயே எழுகின்றது. அது ஞானத்தினால் மட்டும் நீங்குகிறது; வலைகளைப் போல் உள்ள செயல்களால் அல்ல. தவறான அறிவின் காரணமாக ஒரு மாலையில் பார்க்கப்படும் பாம்பு, நமஸ்காரம், மந்திரம், மருந்து முதலியவற்றினால் விலகுகிறதா என்ன?"[1]*

*ஆத்மாவின் தற்போதைய பந்தம் உண்மையாகவோ அல்லது அதன் தன்மையாகவோ இருந்தால், அது ஞானத்தினால் அழிக்கப்பட முடியாது. "ஒளிமயமானவனை அறிந்தவுடன், எல்லாத் தளைகளும் அழிகின்றன."[2] "அவனை இவ்வாறு புரிந்து கொள்வதால், ஒருவன் இங்கே சாவற்றவன் ஆகிறான்."[3] போன்ற வேத வாக்கியங்கள், ஞானத்தினால் மட்டுமே பந்தத்திலிருந்து விடுதலை கிடைக்கிறது என்று காட்டுகின்றன.*

---

[1] *ஸ்வராஜ்யஸித்தி 1.7*
[2] *சுவேதாச்வதர உபநிஷத் 1.11*
[3] *தைத்திரீய ஆரண்யகம் 3.12.7*

ஒன்று உண்மையானது என்றால் அது எப்பொழுதும் இருக்க வேண்டும். ஆனால் செய்பவன், அனுபவிப்பவன் என்ற பாவனைகள், விழிப்பு, கனவு, ஆழ்ந்த உறக்கம் ஆகிய நிலைகள் போன்றவை ஆத்மாவுடன் எப்போதும் உடனிருப்பதில்லை. விழிப்பு நிலையில் கனவு நிலை இருப்பதில்லை; கனவு நிலையில் விழிப்பு நிலை இருப்பதில்லை. இவை இரண்டுமே ஆழ்ந்த உறக்கத்தில் மறைந்துவிடுகின்றன. எப்பொழுதும் இருப்பது ஆத்மா மட்டுமே.

"எது முதலிலும் முடிவிலும் இல்லையோ, நடுவிலும் அதே போல் (இல்லை)."[1] விழிப்பு, கனவு, ஆழ்ந்த உறக்கம் என்ற நிலைகள் ஒரு கணத்தில் காணப்படுகின்றன, அடுத்த கணத்தில் மறைகின்றன. எனவே, அவை உண்மையல்ல. ஆத்மாவோ எப்பொழுதும் உள்ளது; ஆகவே உண்மையானது. ஆத்மா இருப்பதைத் தெரிவிக்க வேறெதுவும் தேவை இல்லை. தான் இருக்கிறேனா என்று வேறொருவனைக் கேட்டு ஒருவன் தெரிந்து கொள்ளத் தேவையில்லை அல்லவா?

ஆழ்ந்த உறக்கத்தின் போது புறப்பொருட்களின் சம்பந்தமில்லை. ஆனால் அப்போதும் ஆனந்தம் இருக்கிறது. உலகத்தில் எவ்வளவு வேலைகள் இருந்தாலும், இந்த ஆனந்தத்தை அனுபவிக்கவே நாம் ஆழ்ந்து உறங்குகிறோம். ஆழ்ந்த உறக்கத்தின் போது நமக்கு ஏற்படும் அனுபவம் தனித்தன்மை வாய்ந்தது என்று தெளிவாகத் தெரிகிறதல்லவா? அப்போது எப்பொருளும் இல்லை; புலன்களும் செயல்படுவதில்லை. இவ்வாறு புறப்பொருட்களின் சம்பந்தமின்றி ஆனந்தம் அனுபவிக்கப் படுகிறது. ஆத்மாவே ஆனந்த வடிவாக இல்லாவிடில் இது எப்படிச் சாத்தியமாகும்?

அப்படியானால் ஆத்மாவை அடைய ஆழ்ந்த உறக்கமே போதாதா? இல்லை. ஏனென்றால், ஆழ்ந்த உறக்கத்தின் போது விக்ஷேபம் (பலவித தோற்றம்) இல்லையென்றாலும், ஆத்மாவை மறைக்கும் திரையான ஆவரணம் (மறைவு) நிச்சயம் இருக்கிறது. விக்ஷேபம் மட்டுமின்றி ஆவரணத்தையும் நீக்க ஆத்ம ஞானம் அவசியமாகிறது.

"அவித்யையினால் உண்டான தளைகளின் பிடியிலிருந்து விடுபடுவதன் மூலம் ஸத்ய ஞான ஆனந்த வடிவான ஆத்மாவை அறியும் விஷயத்தில் சாஸ்திரம், யுக்தி (ஆய்ந்து தெளிதல்), குரு உபதேசம், உறுதிப்பாடுடன் கூடிய சொந்த அனுபவம் என்ற இவை பிரமாணங்களாகும்."[2]

---

[1] கௌடபாதகாரிகை 2.6

[2] விவேகசூடாமணி 475

இங்கு ‘சாஸ்திரம்’ என்பது, இதுபோன்ற வாக்கியங்களைக் கொண்ட உபநிஷத்துகளைக் குறிக்கிறது: “எவன் இங்கே மனிதனுள்ளும் அங்கே சூரியனுள்ளும் இருக்கிறானோ, அவன் ஒருவனே.”[1] “பிரம்மத்தை அறிந்தவன் பரம்பொருளை அடைகிறான்.”[2] “எப்பொழுது சாதகன் அதில் துளியும் வேற்றுமை காண்கிறானோ, அவனுக்கு அச்சம் ஏற்படுகிறது.”[3]

அடுத்ததாகச் சொல்லப்பட்டது யுக்தி – தர்க்கத்தைக் கொண்டு ஆத்மா ஸத் சித் ஆனந்த வடிவானது என்று நாம் முன்னர் உறுதி செய்தது இதற்கு உதாரணம். அடுத்து, குருவின் உபதேசங்கள். விஷயங்கள் சிலவற்றை கற்றுக் கொள்ளப் புத்தகங்களுடன் செய்முறைப் பயிற்சியும் தேவைப்படுகிறது. சில நுண்ணறிவாளர்கள், நவீன அறிவியலையோ தொழில் நுட்பத்தையோ அது சம்பந்தமான புத்தகங்களைத் தாமாகவே கற்றும், ஆராய்ந்து பார்த்தும் அதில் தேர்ச்சி பெறுகிறார்கள். ஆனால் பலருக்கும் பிறரிடமிருந்து கற்பது தேவையாகிறது. எப்படிக் கைதேர்ந்த சமையற்காரர் ஒருவர் மாவு உருண்டை பிடிப்பதைப் பார்ப்பதும், அல்லது அவரைக் கேட்டுத் தெரிந்து கொள்வதும் மற்றவரும் அதே தின்பண்டத்தைச் சமைக்கக் கற்றுக் கொள்வதற்கு உதவி புரிகின்றதோ அது போல், ஆத்மஞானம் அடைந்த பெரியோர்களின் வாழ்க்கைச் சரிதமும், அவர்களுடைய உபதேசங்களும் மற்றவர்கள் ஞானம் அடைய வழி செய்கின்றன.

சாஸ்திரம், யுக்தி, குருவின் உபதேசம் இவற்றைத் தவிர ஒருவனுக்கு ஆத்ம அனுபவம் தனக்கே ஏற்படுவதும் அவசியம். அதுவே அவன் ஆத்மாவை அறிந்தவனா இல்லையா என்பதைக் காட்டுகிறது. குருவின் உபதேசம் மற்றும் சாஸ்திரத்தால் அடிப்படையில் ஏற்படும் (நேரடியான அறிவு ஆகாத) பரோக்ஷ ஞானம் மட்டுமே ஒருவன் இப்பிறவிச் சக்கரத்திலிருந்து விடுபடுவதற்குப் போதுவதில்லை. “உலக இன்பத்தில் பற்று வைத்துக் கொண்டு “நான் பிரம்மம்” என்று வலியுறுத்துபவன், பிரம்மம் கர்மம் ஆகிய இரண்டிலிருந்தும் வழுவினவன்; அவனை இழிந்தவனாக ஒதுக்க வேண்டும்.”[4] “பேச்சுத் திறன், அருவி போல் கொட்டும் சொற்கள், சாஸ்திரத்தை விரித்துரைப்பதில் பேராற்றல், இவை தன்னுடைய போகத்திற்கு மட்டுமே வழி வகுக்கும்; மோக்ஷத்திற்கல்ல.”[5]

ஆத்மாவை நேரடியாக அறிந்தவர்களே பெரும்பேறு பெற்றவர்கள். அவர்களே விசாரம் செய்வதில் தம்மை முழுவதுமாக அர்ப்பணித்துக்

---

[1] *தைத்திரீய உபநிஷத் 2.8.5*

[2] *தைத்திரீய உபநிஷத் 2.1.1*

[3] *தைத்திரீய உபநிஷத் 2.7.1*

[4] *கருடபுராணம் (வேங்கடேஸ்வரா ஸ்டீம் பிரஸ் பதிப்பு) 2.49.64*

[5] *விவேகசூடாமணி 60*

கொண்டவர்கள். இயற்கையிலேயே மனிதருக்கு இருக்கும் விசாரம் செய்யும் திறன் இவர்களிடம் தான் முழுமையடைகிறது. அவர்களின் வாழ்க்கை எத்தகையது? "மனதையும் புலன்களையும் அடக்கிப், புறச்செயல்கள் எல்லாவற்றிலிருந்தும் உள்வாங்கி, (வெப்பம், குளிர் போன்ற) இரட்டை எதிர்மறைகளைப் பொறுமையுடன் சகித்து, எப்பொழுதும் நிர்விகல்ப ஸமாதியில் அமர்ந்து கொண்டிருக்கும் துறவி ஸர்வாத்ம பாவத்தை அனுபவிக்கிறான். அவித்யை என்ற இருட்டினால் உண்டான தவறான கல்பனைகளை நிர்விகல்ப ஸமாதியினால் முழுதாக எரித்துச், செயலற்றவனாய், எவ்வித வேற்றுமையும் காணாது, ஆனந்தம் நிறைந்து பிரம்மமாகவே இருக்கிறான்."[1]

ஸத்புருஷர்களை நினைவு கூர்வது மிகுந்த நன்மை தரும் என்று கூறப்படுகிறது. ஸத்புருஷர் என்றால் யார்? உண்மையில் ஒரே ஒரு பொருள் தான் "ஸத்" அல்லது முற்றிலும் உண்மையானது. அது பிரம்மம் ஆகும். எனவே, "ஸத்புருஷர்" என்றால் "பிரம்மத்தில் நிலை பெற்றவர்" என்று பொருள். "பிரம்மத்தை அறிந்தவன் பிரம்மம் ஆகிறான்."[2] ஸத்புருஷர்கள் தாம் பிரம்மத்துடன் ஒன்றிய நிலையை உணர்ந்துள்ளதால், அவர்களுக்கு இந்த வேத வாக்கியத்தின் உட்கருத்து தெளிவாகப் புரிகிறது. சில சமயங்களில் நல்லோரை நாம் "ஸத்புருஷர்" என்கிறோம். ஆனால், அங்கே இச்சொல் ஆகுபெயராக மட்டுமே பயன்படுத்தப் படுகிறது. அவ்வாறல்லாமல் உண்மையான ஸத்புருஷர்கள் ஆவதற்கு நாம் அனைவரும் முயற்சிக்க வேண்டும். உடலைத் துறந்து விட்ட முக்தரைப் பற்றி, வேதம் பின்வருமாறு உரைக்கிறது: "அவனுடைய செல்வம் அவனது புத்திரர்களையும், நற்செயல்கள் அவனிடம் அன்பு கொண்டவரையும், தீய செயல்கள் அவனை வெறுப்பவர்களையும் சென்றடைகின்றன."[3]

ஆத்மஞானியின் லட்சணங்களாக இக்கட்டுரையில் சொல்லப்பட்டவை அனைத்தும் எனது குருவினிடத்தில் இருந்தன. அவரைப் பக்தியுடன் நினைந்து இக்கட்டுரையை இங்கு முடிக்கிறேன்.

---

[1] விவேகசூடாமணி 356

[2] முண்டகோபநிஷத் 3.2.9

[3] பிரம்ம சூத்திரம் 3.3.26 பாஷ்யத்தில் இது சாட்யாயனிகளின் சுருதியாகக் கூறப்பட்டுள்ளது;

சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தின் 35வது ஜகத்குருவாக விளங்கிய ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் 1917ம் ஆண்டு நவம்பர் 13ம் தேதி பெங்களூரு நகரத்தில் பிறந்தார். ஸன்யாசம் பெற்றுக்கொண்ட நாள் முதலாகவே குரு மற்றும் இறைவனுடைய நேரடி வழிகாட்டுதலுடன் அவர் தீவிரமான ஆன்மிகப் பயிற்சிகளில் ஈடுபட்டு வந்தார். அவை 1935ம் ஆண்டு டிசம்பர் 12ம் தேதி அவரது ஆத்மஞானத்திலும் ஜீவன்முக்தியிலும் முடிவுற்றன.

அப்பழுக்கற்ற நடத்தை, சீரிய பண்புகள், தீவிர வைராக்யம், ஆழ்ந்த இறை மற்றும் குரு பக்தி, வேதாந்தத்தில் புலமை, யோகத்தில் மேன்மை, ஜீவன்முக்தி ஆகிய இவையனைத்தும் தன்னகத்தே ஒருங்கே வாய்க்கப்பெற்றிருந்த குருநாதர், ஞானமடைந்த முனிவர்களைப் பற்றி சாஸ்திரங்களில் கூறப்படும் வாக்கியங்களுக்கு ஒரு வாழும் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார். மிகுந்த கருணையுடனும் எவ்வித பாரபட்சமுமின்றி அனைவருக்கும் அணுகுவதற்கு எளியவராக விளங்கினார் குருநாதர். தன்னை நாடி வந்த ஆயிரக்கணக்கான பக்தர்களுடைய துயரங்களைத் துடைத்து, அவர்களுக்கு இன்பத்தை அளித்து அருள் பாலித்தார் ஜகத்குரு.

சிஷ்யர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளின் பதில்கள், ஜகத்குருவின் ஆன்மிகத் தெளிவுரைகள் மற்றும் கட்டுரைகள் இந்தப் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கின்றன. குருநாதரின் அருள்மொழிகள் மிகத் தெளிவாகவும் ஆணித்தரமாகவும் இருப்பதோடு மட்டுமின்றி அவருடைய ஆத்ம ஞானம், யோகத்தில் திறமை, சாஸ்திரங்களில் தன்னிகரற்ற புலமை ஆகியவற்றைப் பறைசாற்றுவனவாகவும் உள்ளன.அவரது சொல்லமுதம் பிறவிப்பிணியை வேருடன் அழிக்கும் அருளமுதம் என்பதில் ஐயமொன்றுமில்லை.

ISBN: 978-81-944382-7-4